
www.padippakam.com

# நேர்

சமூக ஆய்விதழ்



1

படிப்பகம்

www.padippakam.com

உண்மையில் பெயரளவில் ஜனநாயகத்தை வணங்குபவர்களாக நாம் ஒரு போதும் இருந்ததில்லை. சோசலிசம் அல்லது மார்க்சியம் ஆகியவற்றை வழிபடுகிறவர்களாகவும் நாம் இருந்ததில்லை. அவ்வாறு இருந்திருப்பின் நாமும் கனோவ், லெஞ்ச் மற்றும் பர்வஸ் ஆகியோரைப் போன்று சோசலிசத்தையும், மார்க்சியம், அவை நமக்கு அசௌகரியம் ஆகும்போது குப்பை மேட்டில் தூக்கியெறிந்து விடுவோம் அல்லவா? ............ நாம் ஒரு போதும் பெயரளவிலான ஜனநாயகத்தை வழிபடுவர்களாக இல்லை. இதன் பொருள் நாம் எப்போதும் முதலாளித்துவ ஜனநாயக அரசியல் வடிவிலிருந்து, சமூக உட்கருவைப் பிரித்துப் பார்த்திருக்கிறோம். பெயரளவில் சமத்துவம், சுதந்திரம் என்னும் இனிய மேற்பூச்சின் கீழ் உள்ள சுதந்திரமின்மை சமத்துவமின்மை என்னும் கசப்பான பகுதியினை நாம் எப்போதும் வெளிப்படுத்தியிருக்கிறோம். அந்த இனிய மேற்பூச்சினை புறக்கனிப்பதற்காகவல்ல; மேற்பூச்சில் திருப்தி அடைந்துவிடாமல் அரசியல் அதிகாரத்தை வென்றெடுத்துப் புதிய சமூக உள்ளடக்கங்களை நிரப்ப வேண்டுமென உழைக்கும் வர்க்கத்திற்கு உணர்த்துவதற்காகவே. ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றியவுடன் பாட்டாளி வர்க்கம் செய்ய வேண்டிய வரலாற்றுப் பணி, முதலாளித்துவ ஜனநாயகத்தின் இடத்தில் சோசலிச ஜனநாயகத்தை நிறுவுவதே அன்றி, ஜனநாயகத்தையே ஒழித்துவிடுவதல்ல.

–ரோசா லுக்சம்பர்க்

நேர்

சமூக ஆய்விதழ் – காலாண்டு

தொடர்புக்கு

பழுதுகார பதிப்பகம்

தமிழக மக்கள்சோசலிச வளர்ச்சி ஆய்வுமய்யம்
18, திருநகர் முதல் தெரு,
திருவொற்றியூர்,
சென்னை – 600 019.

முன்அட்டையில் : 1997 இல் அங்ககோலாவில் நடந்த போரில் அகதியான பெண் குழந்தையின் நிழற்படம். நன்றி : செபாஸ்டியோ சல்கடோ & யுனிசெப்

பின்அட்டையில் : ஸ்பெயின் நாட்டு ஓவியர் கோயாவின் ஓவியம்

படிப்பகம்

www.padippakam.com


# நேர்

சமூக ஆய்விதழ் - காலாண்டு

2002

ஜூலை - செப்டம்பர்

மலர் - 1 இதழ் - 1

**ஆசிரியர்**

ராயன்

**ஒளி அச்சு**

ஸ்ரீ விக்னேஷ் பிரிண்ட்ஸ்
சென்னை - 33

**அச்சகம்**

மணி ஆப்செட்
சென்னை - 5

தனி இதழ் ரூ. 40

ஆண்டு சந்தா ரூ. 160

**தொடர்புக்கு:**

விழுதுகள்

விழுதுகள் பதிப்பகம்
18, திருநகர் முதல் தெரு
திருவொற்றியூர்
சென்னை - 600 019.


## இந்த இதழில்...

பக்கம்

## நேர் கொண்டவை


1. **சிறப்பு கட்டுரை** 7
பிந்திய கால மார்க்சும் : முதலாளியத்தின் (ரஷ்ய) ஓரப்பகுதியும் - *தியோடோர் ஷானின்*

2. **வரலாறு** 17
இந்திய வரலாற்றில் சாதி - *இர்ஃபான் அபிப்*

3. **அரசியல்** 29
அமில்கார் கப்ராலின் வர்க்கத் தற்கொலைக் கோட்பாடும் புரட்சிகர சோசலிசமும் - *டாம் மெய்சனெல்டர்*

4. **பொருளியல்** 34
முதலாளியம் என்னும் நெருக்கடியும் முதலாளியத்துக்கு வந்த நெருக்கடியும் - *சமீர் அமின்*

5. **சமூகவியல்** 41
இந்துத்வா வளர்ச்சியும், பிறரைக் கொன்று தின்னும் தேசபக்தியும் - *திபங்கர் குப்தா*

6. **உளவியல்** 50
மார்க்சியக் கோட்பாட்டுடன் மனிதநலம் சார்ந்த உளவியல் பகுப்பாய்வு முறையைப் பொருத்துதல் - *எரிக் ப்ராம்*

7. **கல்வி** 60
முதலாளியப் பல்கலைக் கழகத்தின் மாறிவரும் பாத்திரம் - *எர்னஸ்ட் மேன்டல்*

8. **பெண்ணியம்** 67
படைப்பின் கர்த்தாக்கள் - *பார்பரா டெய்லர்*

9. **தலித்தியம்** 72
நவீனத்துவத்தைத் தேடும் முயற்சியில் தலித்துகள் - *கோபால் குரு*

10. **கலை இலக்கியம்** 81
சீனத்தில் நடைபெறும் மார்க்சிய இலக்கிய விமர்சனம் - *ஃபெங்லென் வங்*

11. **சுற்றுப்புறச் சூழலியல்**
தொழில் துறை சார்ந்த மாசு - *நித்தியானந் ஜெயராமன்* 88
ஓர் அரும் பெரும் முயற்சி - *லெஸர் ஆர் பிரௌன்* 93

12. **அறிவியல் - தொழில்நுட்பம்** 95
புதிய தொழில் நுட்பங்களும் மனிதவளமும் - *டி.கே. ஓமன்*

13. **வன்முறையை வளர்க்கும் அமெரிக்க டாலர்கள்** 98
- *ராபர்ட் ஜென்சன்*


படிப்பகம்

www.padippakam.com



## அன்புள்ள நாகரீக மாந்தரே!

இரத்தம் ...
யாருடையதாக வேண்டுமானாலும் இருக்கட்டும்
நம்முடையதோ அவர்களுடையதோ
மானுடம் குருதி வடிக்கிறது.

கிழக்கிலோ மேற்கிலோ
யுத்தம் எங்கு நடந்தாலும்
அமைதி காக்கும் பூமி
குருதி சிந்துகிறது.

குண்டுகள் எங்கு விழுந்த போதும் -
வீடுகள் மீதாயினும் எல்லையின் மீதாயினும்
கட்டமைக்கும் ஆன்மா காயம் படுகிறது.

வயல்கள் கருக்கப் பட்டால்
நம்முடைய வயலானாலும் சரி -
அயலவர் வயலானாலும் சரி
பஞ்சத்தால் வாழ்வு பாதிக்கப் படுகிறது.

பீரங்கி வண்டிகள்
முன்னேறினால் என்ன? பின்னேறினால் என்ன?
பூமித் தாயின் கருப்பை மலடாக்கப் படுகிறது.

வெற்றியின் பூரிப்பானால் என்ன?
தோல்வின் சோக கீதமானால் என்ன?
உயிரோடு இருப்பவர்கள் தான்
சுமக்க வேண்டும் பிணங்களை.

எனவே தான், ஓ ... நாகரீக மாந்தரே
யுத்தங்கள் ஒத்தி போடப் படுவதே
நன்மை பயக்கும்.
உங்கள் வீட்டிலும் சரி, எங்கள் வீட்டிலும் சரி,
தீபங்கள் தொடர்ந்து ஒளி விடட்டும்!

□□

## இடுகாட்டு அமைதி


இன்று நாம் பேசத் தவறினால்
இடு காட்டு அமைதி கவிந்து விடும்.

ஒவ்வொரு குடும்பமும் கருகிப் போகும்
ஒவ்வொரு வீடும் சாம்பல் குவியலாகும்.

அமைதிக்கு அப்பால் இருந்து
அவலக் குரல் மீண்டும் வரும்.

இங்கு யாரும் இல்லை
யாருமே இல்லை -
யாருமே இல்லை!

□□



**மூலம் : சாகீர் லூதியான்வி**
**தமிழாக்கம் : புதுவை ஞானம்**



படிப்பகம்

www.padippakam.com



## நேர் கொண்டவை

இந்தியாவில் வர்க்க முரண்பாடுகள் அதிகரித்து வருகின்றன, ஆனால் தொழிலாளர்வர்க்கம் அதை உணர்ந்த பாடில்லை, ஏனெனில் அதனிடம் உள்ள வர்க்க சமரச தன்மையே அதற்குக் காரணம். இடது சாரி தொழிற்சங்கங்களும் தொழிலாளர் வர்க்கத்தை சமரசப் பாதையிலேயே வழிநடத்துகின்றன. இது வரையிலும் பாட்டாளி வர்க்கத்துக்கு, நம் மண்ணுக் கேற்ற உண்மையான புரட்சிகரத் தலைமை இல்லாததும் ஒரு முக்கியக் காரணமாகும். ஆனால், பொதுவாக மக்கள் வாழ்வின் நெருக்கடியில் சிக்கித்தவிக்கின்றனர். எதிர்காலம் பற்றிய நிச்சய மின்மை, அவர்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. எல்லா வகையான (சமய, அரசு) பயங்கரவாதங்களும் மக்களைக் கதி கலங்கச் செய்கின்றன. எல்லா மக்கள் விரோத சக்திகளும் அரசின் ஆதரவோடு பவனி வருகின்றன. சட்டம் நீதியெல்லாம் மக்கள் பணத்தைக் கொள்ளையடிக்கும் அயோக்கிய அரசியல்வாதி களுக்கும், சமுதாய குற்றவாளிகளுக்கும் ஆதரவாக இருக்கின்றன. இந்திய ஜனநாயகத்தில் தண்டனைக் குரியவர்கள் அப்பாவி மக்கள் மட்டுமே. இவ்வாறு முதலாளித்துவத்தின் பிடியில் மூச்சுத்திணறிக் கொண்டிருக்கும் மக்களுக்கு 'விடுதலை' கேள்விக் குறியாகவே இருக்கிறது. மாற்றுச் சமுதாயத்திற்கான போராட்டக்களம் மக்களுக்குச் சாதகமாகவே இருக்கிறது. ஆனால் மக்கள் விடுதலைக்குப் போராட வந்த இடதுசாரி அரசியல் கட்சிகள் வர்க்க சமரச சிம்மாசனத்தில் அமர்ந்துவிட்டன. மக்கள் தங்கள் விடுதலை சாத்தியமல்ல என்றுணர்ந்து, இந்தக் கொடுமைகளைச் சகித்துக் கொண்டு, அடிமைகளாய் வாழப்பழகிக் கொண்டனர். இன்று, மக்களை விரிந்த பண்பாட்டுச் செயல்கள் மூலமே இச்சிறையிலிருந்து மீட்டெடுக்க முடியும். அப்போதுதான் அவர்களை அரசியல் களத்துக்குக் கொண்டு போக முடியும்.

அதனால், இந்த இடதுசாரிக் கட்சிகளுடன் சங்கமிக்க முடியாதவர்கள், அதேசமயம் விலகி யிருக்கவும் முடியாத, சமூகத்தின் மீது அக்கறை யுள்ளவர்கள் பண்பாட்டுத் தளத்தில் தங்கள் சமூகப் பணியைச் செய்யத் தீவிரம் கொள்கின்றனர். அதன் வெளிப்பாடுகளுள் ஒன்று ''சிற்றிதழ்கள்''. எண்பது களுக்குப் பிறகு, சமுதாயத்தின் அமைப்பை பற்றிய ஆய்வுகளையும், சமுதாய மாற்றத்துக்கான தீவிர சிந்தனைகளையும் தாங்கி வந்த இதழ்கள் படிப் படியாகக் குறைந்து தொண்ணூறுகளில் இல்லாமலாகி விட்டன. அந்த வெற்றிடத்தை நிரப்பும் முயற்சியாக, சோசலிசத்தில் நம்பிக்கையுள்ள இதழாக ''நேர்'' வெளிவருகிறது.

## ஏகாதிபத்தியமும் மூன்றாம் உலகநாடுகளும்

இருபத்தொன்றாம் நூற்றாண்டின் தொடக்கம் : அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அழிவுப்பணியுடன், ஆப்கானிஸ்தானின் துயரத்துடன். இன்றைய ஏகாதிபத்தியம் உலகமயமாதல் நிகழ்ச்சியின் மூலம் தன்னை ஒரு பேரரசாக உருவாக்கிக் கொண்டு வருகிறது. அதற்காக ''உலகவர்த்தக நிறுவனம்'', உலக வங்கி ஆகியவற்றின் வாயிலாக மூன்றாம் உலக நாடுகளைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறது. அதே சமயம் அவைகளின் உள்நாட்டு விவகாரங்களிலும் தலை யிட்டு தன் உலகத் தலைமையை உறுதி செய்கிறது.

மேலும் மூன்றாம் உலக நாடுகளின் அந்தந்த நாட்டிற்கே உரிய பாரம்பரிய அறிவியல் - தொழில் நுட்பத் திறனை வளரவிடாமல் அழித்து, ஏகாதி பத்தியம் தனது அறிவியல் - தொழில் நுட்ப விதை களை அந்நாடுகளில் விதைத்ததனால் அவற்றின் மூல ஆதாரங்கள் அழிந்து போயின. தொடர்ந்து இது நிகழ்ந்து கொண்டிருக்கின்றது. இதன் மூலம் ஏகாதி பத்தியம் மூன்றாம் உலக நாடுகளைத் தன்னிடம் எப்போதும் கையேந்தி நிற்கும் நிலைக்குக் கொண்டு வந்துள்ளது.

நாம் மேலைநாட்டு அறிவியல் - தொழில் நுட்பத்தை எந்தவித ஆய்வும் இன்றி அப்படியே ஏற்றுக் கொண்டோம். அதனால் ஏற்பட்ட மோசமான விளைவுகளை நாம் அனுபவித்துக் கொண்டிருக் கிறோம். ''நமக்குச் சுயமான அறிவியல் தொழில் நுட்பம் ஏதுமில்லை, வெறும் மூட நம்பிக்கையைத் தவிர'', என்கின்ற சிந்தனை (முற்போக்காளராகிய) நம்மிடமிருக்கிறது. இது ஆங்கில காலனியாதிக்கத் தினால் நம் சிந்தனையில் ஏற்பட்டப் பாதிப்பு. மேலும் இப்படிச் சிந்தித்திருப்பதற்கு அடிப்படை நம்முடைய அடிமைப்புத்தியும், அறியாமையும்தான் என்பதில் சந்தேகமில்லை. ஆகவே இன்று நாம் நம்முடைய பாரம்பரிய அறிவியல்தொழில் நுட்பங் களில்கவனம்செலுத்தவேண்டும். குறிப்பாக நம்முடைய சுற்றுப் புறச் சூழலைப் பாதுகாக்கவும், நம்முடைய விவசாய முறை, மருத்துவ முறை ஆகியவற்றை வளர்ப்பதற்காகவும் ஆன முயற்சிகளை நாம் மேற்கொள்ளவேண்டும்.

ஏகாதிபத்தியம் வெறும் பொருளாதார வலைப் பின்னலால் மட்டும் நம்மைச் சிறைவைக்கவில்லை. அதுதன் அதிகார விரிவை தன் மேலாண்மையை நீடித்த அதன் இருப்பை பண்பாட்டு வலைப்பின்னல் மூலம் உறுதிசெய்கிறது. அதுவும் சந்தையோடு பிரிக்கமுடியாதபடி இணைந்துள்ளது. அதனால் தான் பண்பாடு என்பது ''வணிகப்பண்பாடாக'' நிலைத்து



படிப்பகம்

www.padippakam.com



கொண்டிருக்கிறது. ஆகவே ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போர், பண்பாட்டுக் களத்திலிருந்து ஆரம்பிக்கவேண்டும். இதற்கு நம் மொழிவழிச் சிந்தனை அவசியம், தமிழர்களாகிய நாம் நம் மொழிவாயிலாக பல உலக விஷயங்களையும் பலதுறைச் சிந்தனைகளையும் சிந்திக்க முடியாமலிருக்கிறோம். அதற்கு யார் காரணம் என்ற விவாதம் இப்போதைக்குத் தேவையில்லை, உடனே நாம் செயலாற்றவேண்டும். பல்துறைச் சிந்தனைகளையும் நாம் தமிழில் கொண்டுவர வேண்டும். உடனே பயன் படுத்தக்கூடிய பல்துறைக் கலைச்சொற்களை தமிழில் உருவாக்கவேண்டும். வெறும் பண்டிதத்தனமான சிந்தனை இதற்குப் பயன்படாது. தமிழ் மொழியானது இலக்கிய மொழி, பேச்சுமொழி, மட்டுமே என்கிற எல்லைகளை உடைத்தெறிய வேண்டும். நாம் விரும்பும் சமுதாய மாற்றத்துக்கு மொழியின் வளர்ச்சி அடிப்படையாக இருக்கிறது. தமிழர்களாகிய நம்முடைய வளர்ச்சியை நம் மொழி வாயிலாகத்தான் நாம் நிரந்தரப்படுத்த முடியும்.

நாம், மொழிக்காகவும், சமுதாய மாற்றத்திற்காகவும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், சாதியத்திற்கு எதிராகவும், பெண்களுக்காவும், தலித்துகளுக்காவும், சுற்றுப்புறச் சூழலுக்காகவும், கல்வியின் விடுதலைக்காகவும், சமய அடிப்படை வாதத்திற்கு எதிராகவும் பல போராட்டங்கள் நிகழ்த்த வேண்டியுள்ளது. நாம், நம்முடைய மொழியைக் கொண்டு மட்டுமே இவைகளைச் செய்யமுடியும். வேற்று மொழியால் அல்ல.

### மக்களுக்குச் சுமையாகிப்போன அரசு

ஜெயலலிதா மீண்டும் முதலமைச்சர் ஆகிவிட்டார். மீண்டும் அதிகாரம் (Power) அவர் கைக்கு வந்து விட்டது, அதைக்கொண்டு அவர் கருணாநிதியை / தி.மு.க.வைப் பழிவாங்குவது தன்னுடைய தலையாயப் பணியாகக் கருதி செயல்பட்டு வருகிறார். வீரப்பனை பிடிப்பது அடுத்த சமூகப் பிரச்சினையாக அவருக்குத் தெரிகிறது. இவைகளால் தமிழக மக்களின் பிரச்சனைகள் தீரப்போவதில்லை. அது அவருக்குத் தெரியும். ஆனால் என்றுமே அவருக்கு மக்கள் பிரச்சனை முக்கியமல்ல. அவர்களின் பிரச்சனைகள் பிரச்சனைகளே அல்ல. ஆனால் முதல்வர் ஜெயலலிதாவின் சொந்தப் பிரச்சனைகள்தான் மக்கள் பிரச்சனை என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே எல்லோரையும் ஒடுக்கும், திரும்பப் பெற்ற அளவற்ற அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்ள அவர் என்ன வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருப்பவர். இதுதான் இப்போது நிகழ்ந்து கொண்டிருக்கிறது.

பஸ்கட்டண உயர்வு, பால் விலையேற்றம், மின் கட்டண உயர்வு என தமிழக மக்களுக்கு அன்னையின் பரிசளிப்புத் தொடங்கியது. இந்த பட்ஜெட்டில் தமிழகத்தில் முதல் முறையாக அரிசிக்கு வரி விதித்து ஒரு புரட்சியை ஏற்படுத்திவிட்டார். கோதுமை, பருப்பு, வெல்லம், மிளகு, என உணவுப் பொருட்களுக்கு வரி போடப்பட்டுள்ளது. அதாவது நாம் அன்றாடம் உண்ணும் உணவுக்கு வரிசெலுத்துகிறோம். அரசு போக்குவரத்தை தனியார் துறைக்கு விற்பது. அரசின் நெல் இருப்புக் கூடங்களை மூடி, விவசாயிகளின் வயிற்றலடித்தது, சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்குக் கொடுத்து வந்த முட்டையை நிறுத்தியது என்று இப்படியே சொல்லிக் கொண்டு போகலாம். அதற்குச் சொல்லப்படும் ஒரே காரணம் கஜானா காலி என்பதே. மக்கள் பணத்தைக் கொள்ளையடித்துள்ள அரசியல் கட்சிப் பிரமுகர்கள், மந்திரிகள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோரின் சொத்துக்களையும் வரிகட்டாத, கள்ளப்பணம் வைத்துள்ள முதலாளிகளின், சினிமாக்காரர்களின் சொத்துக்களையும் பறிமுதல் செய்தாலே போதும். அடுத்த இருபதாண்டுகளுக்கு வரி போடாமலே நாட்டை செழிப்புடன் உருவாக்கிவிட முடியும்.

ஆனால் இது நடக்கப் போவதில்லை. மக்கள் இலவு காத்த கிளியாக எப்போதும் இருந்து கொண்டு இருப்பார்கள். ஆனால் மக்கள் பணத்தைக் கொள்ளையடிக்கும் இவர்கள் மக்களை விட உயர்ந்தவர்களாகத் தங்களை உருவாக்கிக் கொள்கிறார்கள். அப்பாவி மக்களும் அதை ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் இந்திய அரசியலமைப்புப்படி எல்லோரும் சமம். எல்லோருமே இந்தியக் குடிமக்கள் தாம். **காந்தி, நேரு, காமராஜர், அண்ணா, இவர்கள் யாவருமே மக்களைவிட உயர்ந்தவர்கள் இல்லை.** இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிய மரியாதைதான் அவர்களுக்கும். மக்கள் பிரதிநிதிகளாக அவர்கள் முழு நேரம் செயல்படுகிறார்கள் என்பதற்காக அவர்களுக்குச் சில சலுகைகள் அளிக்கப்படுகிறது. அதனாலேயே அவர்கள் மக்கள் தலைமேல் உட்கார்ந்த கொண்டு மக்களை விட அவர்கள் மேம்பட்டவர்களாக உருவாகிவிட அனுமதிக்கக் கூடாது. ஆனால் அதுதான் நடக்கிறது. அவர்கள் மக்களைவிட மேம்பட்டவர்களாக தங்களை உருவாக்கிக் கொண்டு எல்லா வகையிலும் மக்களை அவமானப்படுத்தி வருகிறார்கள். பதவிக்கு வருவதற்கு மக்களின் செருப்பைத் தொட்டு வணங்கியவர்கள், பதவிக்கு வந்தபின் அந்த செருப்பாலேயே மக்களை அடிக்கின்றனர். ஒவ்வொரு முறையும் இவ்வாறு நிகழ்ந்தும் மக்கள் நிமிர்ந்தபாடில்லை, என்பது வருத்தமாகவும், அவமானமாகவும் இருக்கிறது.

முதல்வர் ஜெயலலிதாவின் கருணாநிதியை / தி.மு.க.வை பழிவாங்கும் நோக்கம் நிறைவேறிக் கொண்டிருக்கும் போது, மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை தீர்க்கத் தெரியாத அவர் மக்களை திசைதிருப்ப புதிய பிரச்சினைகளை உருவாக்குகிறார். 5 ஆம் வகுப்புக்குப் பொதுத்தேர்வு, பிறகு 7 விருந்து 9 ஆம் வகுப்புவரை பொதுத்தேர்வு, கண்ணகி சிலை அகற்றல் என்று பிரச்சினைகளை உருவாக்கி மக்களின், எதிர்க்கட்சிகளின் கவனத்தை மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளிலிருந்து திருப்பிவிடுகிறார். இது போன்ற முதல்வர்களைப் பார்க்கும்போது, காமராஜ், தெய்வமாகி விடுவார் என்பதில் சந்தேகமில்லை.

### இந்துத்துவமும் போடோ சட்டமும்

புலி (போடோ சட்டம்) வந்துவிட்டது. புலி மீதமர்ந்து இராமர் அயோத்தி சென்றடைந்து விடுவார். மக்கள் இனி பயமின்றி வாழலாம்.



படிப்பகம்

www.padippakam.com



வீரப்பனை பிடித்து விட்டால் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்ந்துவிடுவதுபோல், இந்தச் சட்டத்தின் மூலம் நாட்டின் எல்லாப் பிரச்சினை களையும் தீர்த்து விடலாம். இதற்குக் காஞ்சி ஜெயேந்திரரின் ஆதரவு உபயம். ஏனெனில் இராமர் கோயில் கட்டும் பணிக்கு வரும் தடைகள் நீக்கப்படும் என்பதால் இந்தச் சட்டத்தைக் கொண்டுவர பி.ஜே.பி எவ்வளவு கடுமையாக உழைத்திருக்கிறது!

இந்துத்துவத்தின் பாசிச செயல்களை விரிவு படுத்துவதற்கும் பி.ஜே.பி தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கும் பாசிசப் பண்பாட்டுத் தளத்திலிருந்து, பாசிச அடக்குமுறைச் சட்டத்திற்குள்ளும் புகுந்து கொண்டது. இந்துத்துவ (பி.ஜே.பி) அரசியல் முதலில் இந்தியமயமான சுதேசியத்துக்காகத் தன்னை அர்ப் பணிக்கப் போவதாகத் தம்பட்டம் அடித்துக் கொண்டது. பில்கிளிண்டன் இந்தியா வந்தபோது மொத்த சுதேசியமும் அவரிடம் கொடுத்து அமெரிக் காவுக்கு அனுப்பப்பட்டது. ஏனெனில் அரபு நாடுகளுக்கு எதிராக ஒரு பாசிச இஸ்ரேலை உருவாக்கியது போல், இந்தியாவும் அவ்வாறு உருவாக அமெரிக்கா உதவி செய்யும் என்பதில் அசை யாத நம்பிக்கை கொண்டு அதன்படி செயல்பட்டு வருகிறது வாஜ்பேயி அரசு, அதனால் விதேசியத்தை சுதேசியமாக ஏற்றுக் கொண்டனர். ஆகவே அன்பு டனும், ஆதரவுடனும் அந்நிய பொருட்கள் இந்திய சந்தையில் புற்றீசல் போல் குவிந்துவிட்டன.

இவர்களின் சுதேசியத்துக்கும், காந்தியின் சுதேசியத்துக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. காந்தியின் சுதேசியம் ''மக்கள் பொருளாதாரத்தை'' ''சுய சார்பு பொருளாதாரத்தை'' அடிப்படையாகக் கொண்டது. ஆனால் இவர்களின் சுதேசியம் இந்து மதத்தை (இந்துத்வத்தை) அடிப்படையாகக் கொண்டது. காந்தி தன்னுடைய சுதேசியக் கொள்கையை யாருக்காகவும் விட்டுக் கொடுக்கவில்லை. ஆனால் இவர்கள் இந்துமதத்தை / இந்துத்துவத்தை சர்வாதி காரச் சக்தியாக உருவாக்க சுதேசியத்தை தூக்கி யெறிந்து மட்டுமல்ல, நாட்டை மறுகாலனியாதிக்கத் திற்குட்படுத்திவிட்டனர். காங்கிரஸ் பாதியில் விட்ட பணியை நிறைவு செய்துள்ளனர். இந்த இந்துத்துவம் என்பது உயர்ந்த சாதிக்காரர்களின் கருத்தியல். இந்தக் கருத்தியல் அடிப்படையில் தான் இவர்களின் சுதேசியம் பிறந்தது, இறந்தது. ஆகவே இவர்களின் இந்தியமயம், சுதேசியம் என்பதெல்லாம் வெளி வேடம். இந்துப் பேரரசை / இந்து வல்லரசை உருவாக்க இவர்கள் வரலாற்றைத் திருத்துவதிலிருந்து எல்லா வகையான வன்முறைகளையும் கையாள் வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

## இந்தியத் தொழிலாளர்வர்க்கம்?

தென் கொரிய தொழிலாளர் வர்க்கமும் விவசாய வர்க்கமும் மிகுந்த சுரணை உள்ளவர்கள். அதேபோல் அர்ஜண்டய்னாமக்களும். தெருவில் இறங்கி மக்கள் விரோதக் கொள்கையை மேற்கொள்ளும் அரசுக்கு எதிராக மாபெரும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். தென் கொரியாவில் சமீபத்தில் பொதுத்துறையைத் தனியார் மயமாக்கலுக்கு எதிராகத் தொழிலாளர் வர்க்கம் தெருவிலிறங்கி பெரும் சண்டையை நிகழ்த்தியுள்ளனர். நம் தொழிலாளர் வர்க்கத்திற்கு இதைப் பார்த்தால் கூட சுரணை வராது. 1000 பேர் வேலை செய்யும் தொழிற்சாலையை அதன் முதலாளி நினைத்தால் இழுத்து மூடி தொழிலாளி வயிற்றலடிக்கலாம் என்று பட்ஜெட்டில் உறுதிசெய்த வாஜ்பேயி அரசுக்கு எதிராக இந்த வர்க்கம் என்ன செய்தது? இன்னும் ஐந்து வருடத்தில் பெரும் பான்மையான தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் பிச்சைக்காரர்களாக அலையப் போகிறார்கள். அப்போது கூட முதலாளித்துவத்துக்கு எதிராகப் போராட மாட்டார்கள். தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டு மடிவார்கள், ஆனால் இன்றைய மூன்றாம் உலக நாடுகளின் தொழிலாளர், விவசாய வர்க்கங்கள் ஒன்றிணைந்து இந்த ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போராட வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இந்த மாபெரும் போராட்டத்தை ஒருங்கிணைத்து நடத்தக்கூடிய புரட்சிகர அமைப்புகள் எவை என்பது கேள்விக்குறியே.

## குஜராத் இனப்படுகொலை : சமயங்கள் ஒழியட்டும்

குஜராத் இனப்படுகொலைகள், (சமய அடிப்படை வாதிகளின் கொலைக்கரங்கள் நீண்டு கொண்டே போகின்றன) இந்திய வரலாற்றில் இதுபோன்ற நிகழ்ச்சிகளின் கறைகள் நிறைகின்றன. இதற்கு நிரந்தரத் தீர்வு என்பது கேள்விக்குறியே. சமயங்கள் இருக்கும் வரை இது இருந்தே தீரும். கூடி வாழும் பல சமயங்களைச் சார்ந்துள்ள மக்கள் பெரும்பான் மையோர் அமைதியாக வாழவே விரும்புகின்றனர். சமய ரீதியான சண்டையை அவர்கள் விரும்புவ தில்லை. ஆனால் சமய அடிப்படைக் குழுக்கள் ஒரு சிறு சம்பவத்தைக் கூட ஊதிப் பெருக்கித் தங்கள் சமய மக்களை விஷமாக்கி விடுகின்றனர். இதனால் அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர். இந்தச் சமய அடிப்படைவாதத்திற்கு எதிராக எல்லா சமயங்களைச் சேர்ந்த மக்களும் ஒன்றிணைந்து போராட வேண்டும். சமய அடிப்படைவாதக் கொள்கை மீதும், அதன் பிரசாரத்தின் மீதும் நம்பிக்கை இழக்கவேண்டும். மக்களுக்குத் தீங்கிழைக்கும் எந்த சமயத்தினரானாலும் அவர்களை அந்தந்தச் சமயத்தினர் சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும். ஆனால் இது சாத்தியமா?

இதைத்தவிர வேறொரு வழியுமுண்டு. அது நிரந்தரத் தீர்வுக்கு இட்டுச் செல்லும். அது மக்கள் அனைவரும் சமயங்களைத் தூக்கியெறிய வேண்டும். கடவுள் நம்பிக்கையுள்ளவர்கள், கடவுள் எந்தச் சமயத் தையும் சாராதவர் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். கடவுள் சமய மற்றவர் என்பதைப் புரிந்து கொண்டாலே போதும் மற்றவர்கள் மீது அன்பும், மரியாதையும் தானாகவே தோன்ற ஆரம்பித்துவிடும். இந்தச் சமயச் சண்டைகள் ஒழிந்துபோகும்.

சமயங்கள் தோன்றிய உடனே ஸ்தாபனங்களாகி விட்டன. தங்களுடைய சட்ட, திட்டங்களால் மற்ற சமயங்களுக்கு எதிராக இறுகிவிட்டன. மனிதத் தன்மை அற்றவையாகிவிட்டன. ஆகவே எப்போதும்



படிப்பகம்

www.padippakam.com



இந்த சமய ஸ்தாபனங்கள் தங்களுக்குரிய கருத்தியல் களை (ideologies), அரசியலைக் கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. எப்போதும் ஒன்று மற்றொன்றைவிட மேம்பட்டதாகவே தன்னைக் கருதிக் கொண்டு மற்ற சமயத்தினரை ஒடுக்க நினைக்கிறது. (ஒரு நாட்டின் பெருவாரியான மக்கள் எந்தச் சமயத்தைச் சார்ந்திருக்கிறார்களோ அந்த மக்களின் சமய அடிப்படைவாதமே மற்ற சமய மக்களை ஒடுக்குகிறது. இதற்கு உதாரணம் ''இந்தியாவும், வங்காளதேசமும்''.)

வரலாற்றில் இதைத் தொடர்ந்து காணமுடிகிறது. ஏனெனில் சமய ஸ்தாபனங்கள் அடிப்படையில் கடவுளை மறுத்து சமய ஸ்தாபனத்தையே முதன்மைப் படுத்துகின்றன. சமய ஸ்தாபனமே இப்போது கடவுளின் சின்னமாகிவிட்டது. ஆனால் மக்கள் நினைக்கும் உண்மையான கடவுள் சமயத்துக்கு வெளியேதான் இருக்கிறார். ஆகவே மக்களின் நம்பிக்கை கடவுளிடம் இருக்கட்டும். சமயத்திடம் இருக்கவேண்டாம். சமயம் என்பது கடவுள் அல்ல. அது மக்கள் விரோத ஸ்தாபனம் அது கொலைக்களம் என்பதை மறக்கவேண்டாம். இதற்குத் தீர்வு அளிக்க இந்துத்துவவெறி கொண்ட பி.ஜே.பி. யாலோ காங்கிரஸாலோ ஒருபோதும் முடியாது என்கிற உண்மையை மறந்து விடக்கூடாது. தீர்வு மக்கள் கையில்தான் இருக்கிறது.

## இலங்கைத் தமிழர்களின் விடுதலை?

25 லட்சம் தமிழர்களின் தலைவிதியை நிர்ண யிக்கும் போராட்டத்தை வெறும் LTTE பிரபாகரன் பிரச்சினையாக, ஒரு வரலாற்று நிகழ்வை, தேசிய இன விடுதலைப் போராட்டத்தை ஒரு கொலைகாரக் கும்பலின் பிரச்சினையாகப் பார்க்கிறார் முதல்வர் ஜெயலலிதா. இதற்குக் காரணம் ராஜீவ் காந்தியின் கொலை. இந்தக் கொலையை யாரும் நியாயப்படுத்த வில்லை. ஆனால் இன்றைய இலங்கைச் சூழலில் அதை முதன்மைப்படுத்தி பிரச்சினையாக்கினால், மீண்டும் இலங்கைத் தமிழர்களின் நலன் பின்னுக்குத் தள்ளப்படும். அமைதிப்பேச்சுக்கு நிச்சயமாகத் தடையாக அமையும் என்பதை எல்லோரும் அறிவர்.

இதுவரை சிங்கள இனவெறி அரசால் தமிழர் களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு எதிராக இப்போர் நிகழவில்லை யென்றால் இன்றைய அமைதிப் பேச்சு நிகழவே வாய்ப்பில்லை. இன்று தமிழர்கள் தங்களின் உரிமையைப் பெற்றுத் தாயகம் திரும்பி நிம்மதியாக வாழக் கூடிய சூழ்நிலை உருவாகிவருகிறது. இலங்கைத் தமிழனின் துயரம் இங்குள்ள தமிழனைவிட, இந்தியனை விட, நார்வே நாட்டுக்காரனுக்குதான் அதிகம் தெரிந்திருக்கிறது. அதனால்தான் இப்பிரச்சினைக்கு முடிவுகாண முயற்சிக்கிறான். ஆனால் இலங்கயில் அமைதியை உருவாக்க ராஜீவ்காந்தி பிரதமராக இருந்த போது அவரால் அனுப்பப்பட்ட ''இந்திய அமைதிப்படை'', சிங்கள இனவெறி அரசுக்கு ஆதரவாகச் செயல்பட்டு LTTE க்கு எதிராகச் செயல்படுகிறோம் என்ற பெயரில் அப்பாவி தமிழ் மக்களைக் கொன்றும், தமிழ்ப் பெண்களை அவமானப்படுத்தியும், பாலின வன்முறைக்குட்படுத்தியும் பல வன்கொடுமைகளை நிகழ்த்தியதை வரலாற்றிலிருந்து அழித்துவிட முடியாது. இந்திய அமைதிப்படை இவ்வாறு ஏன் நடந்து கொண்டது? இந்திய ஆளும்வர்க்கம் இங்கு எவ்வாறு தேசிய சிறுபான்மை இனங்களை ஒடுக்கி ஆளுகிறதோ, அதுவே அண்டை நாட்டிலும் நிகழ விரும்புகிறது. அதானல்தான் அமைதிப்படை என்கிற பெயரில் இலங்கைச் சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கு எதிரான போரை நிகழ்த்தியது. தமிழ் மக்களைப் படுகொலை செய்தது. இந்தப் படுகொலை களுக்கும், பெண்களுக்கு இழைத்தக் கொடுமை களுக்கும் இந்தியா பொறுப்பேற்குமா? இந்தக் குற்றங்கள் நிகழ்ந்ததையாவது ஒத்துக் கொள்ளுமா? இதுவரை இது பற்றிய இந்தியாவின் மௌனம் தன் செயலை நியாயப்படுத்துவதாகவே இருக்கிறது. அப்படியிருக்க இந்தியா இந்த அமைதிப் பேச்சு வார்த்தையில் எப்படிக் கலந்து கொள்ளும்?

தற்கால இலங்கை வரலாற்றில் தமிழர்களின் வரலாறு இரத்தம் தோய்ந்த வரலாறே. இதிலிருந்து, இந்தச் சிங்கள அரசின் இன பயங்கரவாத நடவடிக்கையிலிருந்து விடுதலை பெறுவது என்பது எத்தகைய மகத்தான பணி? LTTE-னர் தவறுகள் செய்யாமலில்லை. அவர்கள் விமர்சனத்திற்குட் பட்டவர்கள் தாம். ஆனால் அவர்களின் வரலாற்றுப் பணியான விடுதலைப் போரை தியாகத்தை யாரும் மறுத்துவிடவோ, மறைத்துவிடவோ முடியாது.

இந்தியாவில் தேசிய இன பிரச்சினைகளுக்குத் தீர்வு இதுவரையிலும் ஒடுக்குமுறைதான். இனச் சிறு பான்மையினர் பற்றிய பார்வையில் காங்கிரசுக்கும், பி.ஜே.பிக்கும், முதல்வர் ஜெயலலிதாவுக்கும் கொள்கை வேறுபாடு ஏதுமில்லை. சிறுபான்மை யினர் பெரும்பான்மை யினோருக்கு / மய்ய அரசுக்குக் கட்டுப்பட்டு அனுசரித்துப்போக வேண்டும் என்பதே அவர்களின் கொள்கை. இப்பார்வையிலிருந்துதான் இலங்கைத் தமிழர் பிரச்சினையைப் பார்க்கின்றனர். ஆகவே இவர்களுக்குத் தமிழர்களின் விடுதலை குறித்தோ, அவர்களின் அமைதியான வாழ்க்கைக் குறித்தோ அக்கறை ஏற்பட வாய்ப்பில்லை.

இப்போது நடக்கும் அமைதிப் பேச்சு வார்த்தையை இவர்கள் ஆதரிக்கவில்லையென்றாலும் பரவாயில்லை, அதற்கு ஊறுவிளைவிக்காமலிருந்தால் போதும். இந்த நேரத்தில் பிரபாகரனைக் கைது செய்யவேண்டும். அதற்காக இராணுவத்தை அனுப்பவேண்டும் என்று சொல்வதும், செய்வதும், மீண்டும் பல லட்சக்கணக் கான தமிழர்களின் நலனை சீர்குலைக்கும் முயற்சி யாகவே அமையும். இது பிரபாகரனின் பிரச்சினை யல்ல. அகதிகளாக, நாடோடிகளாக நாடற்று அலையும் லட்சக்கணக்கான தமிழர்களின் பிரச்சினை; ஈழத்தில் இன்றும் சிங்கள இனவெறிக்குப் பயந்து வாழ்ந்துகொண்டு இருக்கும் தமிழர்களின் பிரச்சினை என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

**-ஆசிரியர்.**



படிப்பகம்

www.padippakam.com



# பிந்தியகால மார்க்சும் 'முதலாளியத்தின் (ரஷ்ய) ஓரப்பகுதியும்'

தியோடோர் ஷானின்[1]

இளம் மார்க்சுக்கும் முதிர்ந்த மார்க்சுக்கும் இடையிலான வேறுபாடுகள் (அல்லது வேறுபாடு களின்மை) பற்றி கடந்த பல பத்தாண்டுகளில் நிறைய எழுதப்பட்டுள்ளன. ஆனால் மார்க்சின் கடைசிப் பத்தாண்டுக் காலத்தில் அவரது சிந்தனையில் ஏற்பட்ட மாற்றம் பற்றிய ஆய்வு இதுவரை புறக்கணிக்கப்பட்டுள்ளது. இந்த நாட்களில் மார்க்ஸ் பொது வாழ்வில் மேற்கொண்டிருந்த நீண்டகால மௌனம் பற்றிய ஆய்வும் - பலமுறை திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டுள்ள மெஹ்ரிங்கின் கூற்றைப் போதுமான விளக்கம் என்று ஒப்புக் கொண்டாலன்றி – புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது என்றே கூற வேண்டும். மார்க்சின் இந்த நீண்ட கால மௌனத்தைப் பற்றிக் குறிப்பிட்ட மெஹ்ரிங்[2] இது மார்க்சுக்கு ''மெல்ல மெல்ல நேரிட்ட சாவு'' என்றார். ஆனால் மெஹ்ரிங் காலத்திற்குப் பிறகு கண்டுபிடிக்கப் பட்டுள்ள சான்றுகளுக்கு முன்னால் - அதாவது 3000 பக்கங்களுக்கு மேலான குறிப்புகள், விரிவான உரைகள் முதலியனவற்றுக்கு முன்னால் - மெஹ்ரிங்கின் கூற்று தாக்குப்பிடித்து நிற்காது. இதனை அறியாம லிருப்பது வருந்தத்தக்கது. ஏனெனில், 1867ல் 'மூலதனம்' நூலின் முதல் பாகம் வெளியிடப் பட்டதைத் தொடர்ந்து, அந்த நூலின் ஆசிரியரான மார்க்ஸ், தாம் உருவாக்கிய சூத்திரங்களுக்குள் கட்டுண்டுக் கிடக்காமல் இருந்தார் என்பதற்கும், புதிய நிலைமைகளுக்கும் தொடர்ந்து மேற் கொண்டிருந்த ஆய்வுக்கும் ஏற்ப அவரது கருத்துகள் புதிய திசைகளில் மாற்றமடைந்து வந்தன என்பதற்கு மான முக்கிய சான்றுகளை நாம் காண்கிறோம்.

மார்க்சின் பிந்திய ஆண்டுகளில் அவரது சிந்தனை யின் அரசியல், அறிவுப் பின்புலத்தில் நான்கு முக்கிய நிகழ்வுகள் திருப்புமுனைகளாக இருந்திருக்கின்றன: (1) 1871 ஆம் ஆண்டின் பாரிஸ் கம்யூன். இது பிரமிக்கத் தக்க ஒரு படிப்பினையை வழங்கிற்று; முன்னர் அறிந்திராத ஒரு புரட்சிகர ஆட்சி வகையை முன்னிறுத்திற்று. (2)1860 களிலும் 1870 களிலும் சமூக விஞ்ஞானங்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க ஒரு பெரும் மாற்றம். ஏடறிந்த வரலாற்றுக்கு முந்திய கால கட்டங்கள் பற்றிய ஆய்வுகள் தோன்றி, பல நூற்றாண்டுகளுக்கு முந்திய காலகட்டம் பற்றி புதிய தகவல்களை வெளிக்கொணர்ந்தன. (3) இந்த ஆய்வுகளுடன் தொடர்புடைய வகையில் முதலாளிய உலகுடன் பின்னிப் பிணைந்திருந்த கிராமிய முதலாளியமல்லாத சமூகங்கள் (குறிப்பாக இந்தியா) பற்றிய அறிவில் ஏற்பட்ட வளர்ச்சி. (4) ரஷ்யாவும் ரஷ்யர்களும் மேற்சொன்ன அனைத்தையும் பற்றி வழங்கிய வலுவான அறிவு; அதாவது (புராதனமான ஆனால் முதலாளியத்தின் வெற்றிகளுக்கிடையிலும் நிலைத்து நிற்கிற) கிராமிய கம்யூன்கள் பற்றிய வளமான சான்றுகள்; நேரடி புரட்சிகர அனுபவம் ஆகிய இவையனைத்தையும் ரஷ்யப் புரட்சிகர நரோத்னிக் வாதத்தின் கோட்பாடும் நடைமுறையும் உள்ளடக்கியிருந்தது.

ஐரோப்பியப் பிற்போக்கின் குவிமையம் எனத் தன்னால் பலமுறை தாக்கப்பட்ட பிற்போக்குத் தனமான, அதிகாரபூர்வ ரஷ்யாவிற்குப் பக்கத்தி லேயே, தனது படைப்புகளால் மேன்மேலும் ஈர்க்கப்பட்டு வந்த புரட்சிகர நட்புச் சக்திகளும் முற்போக்கு அறிவாளிகளும் அடங்கிய மற்றொரு ரஷ்யா உருவாகியிருந்ததை மார்க்ஸ் 1860களின் இறுதியில் பார்க்கலானார். 'மூலதனம்' நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளிவருவதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்பே அதன் ரஷ்யமொழி பெயர்ப்பு வெளிவந்துவிட்டது. பாரிஸ் கம்யூன் ஒடுக்கப்பட்டபின், மேற்கு ஐரோப்பாவில் புரட்சிக் கான எதிர்பார்ப்புகள் வீழ்ச்சி கண்டிருந்த நேரத்தில், ரஷ்யாவில் புரட்சிகர நடவடிக்கைகள் கூர்மையாகப் புலப்பட்டன. ரஷ்ய மொழியிலேயே ஆய்வுகளையும் விவாதங்களையும் மேற்கொள்வதற்காக மார்க்ஸ் 1870-72இல் ரஷ்ய மொழியைத் தாமே கற்பதில் மூழ்கினார். இதுகுறித்து மார்க்சின் மனைவி எங்கல்சுக்கு எழுதிய கடிதத்தில் 'ஒரு ஜீவமரணப் போராட்டம் போல' மார்க்ஸ் ரஷ்ய மொழியைக் கற்கத் துவங்கியுள்ளதாகக் குறிப்பிட்டார். ரஷ்ய மொழியிலிருந்த மூல நூல்களை முனைப்புடன் கற்கத் தொடங்கிய மார்க்ஸ், ஒரு நூலகமே வைக்குமளவிற்கு ஏராளமான குறிப்புகளைச் சேகரித்திருந்தார். தமது வாழ்நாளில் மார்க்ஸ் அவற்றில் எதனையுமே பிரசுரிக்கவில்லை. ஆயினும் அவரது சிந்தனை எத்திசையில் சென்று கொண்டிருந்தது என்பதற்கான கணிசமான சான்றுகளை அவர் விட்டுச் சென்றுள்ளார்.

மார்க்ஸ் எழுதி வைத்துள்ளதைப்பற்றி ஹருகி வாடா[3] அண்மையில் செய்துள்ள ஆய்வில் மார்க்சின் சிந்தனையில் ஏற்பட்ட புதிய வளர்ச்சிகளுக்கும் ரஷ்ய நிகழ்வுகளுக்கும் உள்ள உறவு நுணுக்கமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மார்க்ஸ் எத்திசை நோக்கிச் சென்று கொண்டிருந்தார் என்பது அவரது கடிதங்கள்,



படிப்பகம்

www.padippakam.com



குறிப்புகள், 'மூலதனம்' நூலின் புதிய பதிப்புகள் ஆகியவற்றில் காணலாம். இந்நூலின் 1873, 1875ஆம் ஆண்டுப் பதிப்புகளில் ஹெர்ஸன்[4] பற்றி அவர் முன்பு எழுதியிருந்த இகழ்வுரையை நீக்கிவிட்டு, ரஷ்ய புரட்சிகர இயக்கத்தின் முக்கிய நபராக விளங்கிய செர்னிஷெவ்ஸ்கியை உயர்வாகக் குறிப்பிடும் பத்தியொன்றைச் சேர்த்தார். தமது 'மூலதனம்' மூன்றாம் பகுதிக்கான குறிப்புகளில், குறிப்பாக நிலஉடைமை பற்றிய பகுதியில், ரஷ்யாவிற்கு அதிக இடம் ஒதுக்கினார். 'மூலதனம்' முதல் பகுதியில் ரஷ்யா உள்ளிட்ட எல்லா நாடுகளும் பின்பற்றக்கூடிய ஒரு பரிணாம வளர்ச்சிப்பாதையைக் குறிப்பிட்டிருந் தார். பின்னர் 1877இல் ஒரு கடிதத்திலும், 1881இல் ரஷ்ய விவசாயிகள் கம்யூன் பற்றி நடத்திய விவாதத்திலும் மார்க்ஸ் இக்கருத்தை நிராகரித்து விட்டார். மார்க்சின் இத்தகைய இறுதிக்கால எழுத்துக்கள், அவரது சிந்தனையில் ஏற்பட்ட புதிய திருப்பத்தைக் காட்டும் சான்றுகளாகும்.

**மார்க்சின் ரஷ்யத் தொடர்பு**

மார்க்சின் புதிய அக்கறைகளையும், புதிய நண்பர்களையும் மேற்கத்திய வாசகர்கள் புரிந்து கொள்ள ரஷ்யப் புரட்சிகர நரோத்னிக்வாதம் பற்றிய விளக்கம் ஒன்று இங்கு அவசியமானது. 'நரோத்னிக்' என்ற பதம் 'மார்க்சியன்' என்ற பதத்தைப் போலவே துல்லியமாக வரையறுக்க முடியாதது; ஏனெனில் மார்க்சிய, நரோத்னிக் முகாம்கள் இரண்டிலுமே முறையே பல்வேறு வகை மார்க்சியர்கள், நரோத்னிக்குகள் இருப்பதுதான். ரஷ்யப் பேச்சு மொழியில் 'நரோத்னிக்' என்பது புரட்சிகர பயங்கரவாதி என்பதிலிருந்து தயாள குணம் படைத்த கனவான் என்பது வரை பல்வகை அர்த்தங்கள் கொண்டதாகும். லெனினின் முக்கியப் படைப்பான 'ரஷ்யாவில் முதலாளியத்தின் வளர்ச்சி' என்ற நூலிலிருந்துதான் ஒரு தலைமுறையைச் சேர்ந்த சோசலிஸ்டுகள் ரஷ்யக் கலைச்சொற்களைக் கற்றுக் கொண்டனர். இந்த நூலில் 'நரோத்னிக்வாதம்' என்ற சொல், 'நரோத்னிக்' இயக்கத்தின் மிகை-வலதுப் பிரிவிலிருந்த இரு எழுத்தாளர்களைக் குறிக்கக்கூடிய அடையாளச் சீட்டாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. அதாவது ரஷ்யாவில், 'சட்ட ரீதியான மார்க்சியர்'களைக் குறிக்க 'மார்க்சியம்' என்ற சொல்லைப் பயன்படுத்தியதற்கு இணையானது இது. நரோத்னிக்குகளுக்கு எதிராக 1898இல் லெனின் நடத்திய விவாதங்களுக்கு இது வசதியாக இருந்தது. ஆனால் இன்றைய வாசகர்களைப் பொறுத்தவரை நரோத்னிக்வாதம் பற்றிய தெளிவின்மையை இது அதிகரிக்கவே செய்கிறது.

புரட்சிகர நரோத்னிக்வாதம், ரஷ்யாவிற்கே உரிய புரட்சி மரபாகும். செர்னிஷெவ்ஸ்கி[5] அதன் முக்கிய கோட்பாட்டாளர். மார்க்ஸ் காலத்தில் அதன் உணர்ச்சி மிக்க வெளியீடாக 'மக்கள் சித்தக்கட்சி' (People's Will Party) விளங்கிற்று. அது 1879-89 காலப் பகுதியில் ரஷ்ய அரசியல் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திற்று. பின்னர் மரண தண்டனைகள், சிறைத் தண்டனைகள் மூலம் அரசு அதை நசுக்கிவிட்டது. நரோத்னிக்குகள் தம் காலத்தில் நிலவிய முக்கியமான இரு சிந்தனைப் போக்குகளை நிராகரித்தனர். அவை : (1) ரஷ்யாவின் தனிச்சிறப்புத் தன்மையையும் (அல்லது) அதன் மேன்மையையும் வலியுறுத்தும் ஸ்லாவியச் சார்புக் கொள்கை; (2) மிதவாதிகளாலும் பிறராலும் ஆதரிக்கப்பட்ட மேற்கு ஐரோப்பிய முதலாளியம்.

சமூக சமத்துவத்தை அதிகரிப்பதும் பெரும்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதலுமே சரியான சமூக முன்னேற்றத்திற்கான அளவுகோல்கள் எனக் கருதிய நரோத்னிக்குகள் அந்த அடிப்படையி லேயே ரஷ்யாவிற்கு முதலாளிய வளர்ச்சி தேவை யில்லை என நிராகரித்தனர். ஜார் அரசுதான் ரஷ்ய மக்களின் முதன்மையான எதிரி, அது ஒடுக்கும் தன்மை கொண்டது, ரஷ்ய சமுதாயத்தின் மீது வளர்ந்துள்ள ஒரு பொருளாதார ரீதியான ஒட்டுண்ணி, மாபெரும் சொத்துடைமையும் தொழில் உடைமை யும் கொண்டது அதுவே என்று நரோத்னிக்குகள் வழக்காடினர். உழைக்கும் வர்க்கங்களான விவசாயி கள், தொழிலாளர்கள், உழைக்கும் அறிவு ஜீவிகள் ஆகியோர் ஒன்றிணைந்து அந்த அரசை ஒரு வர்க்கப் போரின் மூலம் தூக்கியெறிய வேண்டும் என்றும், அப்புரட்சியின் மூலம் ஜார் அரசின் அரசியல், பொருளாதார வலிமையும் அதன் பழங்காலப் படைப்புகளான ரஷ்யப் பிரபுத்துவ வர்க்கமும், புதிய வளர்ப்புப் பிள்ளைகளான முதலாளியச் சுரண்டல் வாதிகளும் முதலாளிய உறவுகளும் அகற்றப்பட வேண்டும் என்றும் நரோத்னிக்வாதம் கருதியது. ஜார் அரசுக்கு எதிராக நடத்தப்படவேண்டிய மிகக் கடுமை யான சண்டையை எதிர்பார்த்தது அது. அச்சண்டை யில் வெற்றியடைந்த பின் சோசலிசத்தை நோக்கிய மேலும் துரிதமான வளர்ச்சிக்கான வாய்ப்புகள் இருப்பதாகவும் கருதியது. சமச்சீரற்ற வளர்ச்சி (uneven development) என்ற கருத்துருவாக்கமே மேற்காணும் பகுப்பாய்விற்கான கோட்பாட்டின் மையக்கூறாக இருந்தது. சமச்சீரற்ற வளர்ச்சியானது ரஷ்யாவை (முதலாளிய மேற்கு நாடுகளுக்கு மாறாக) ஒரு பட்டாளி வர்க்க நாடாக மாற்றக் கூடியதாய் இருக் கிறது என்றும் அதே சமயத்தில் ரஷ்யாவுக்குள்ளேயே வர்க்கங்கள் எதிரெதிர் நிலைகளில் ஒன்று குவியச் செய்து கொண்டிருக்கிறது என்றும் நரோத்னிக்வாதம் கருதியது. ரஷ்யாவின் பின்தங்கிய நிலையானது, முதலாளியக் 'கட்டத்'தைத் தொடாமலேயே சோசலிசத்தை நோக்கிய புரட்சிகரப் பாய்ச்சலை மேற் கொள்ளும் வாய்ப்பை உருவாக்கியுள்ளது என்றும் கருதியது. ஜாராட்சியைப் புரட்சிகரமாகத் தூக்கி யெறிந்து, உள்ளூர் மட்ட மக்கள் அதிகார அமைப்பு களும் தேசம் முழுவதிலும் நாட்டு விவகாரங்களில் தலையீடு செய்யக் கூடிய ஒரு ஜனநாயக அரசாங்கமும் இணைந்து செயல்படுகிற ஒரு புதிய ஆட்சியை நிறுவதுதான் தனது உடனடிக் கடமை என்று மக்கள் சித்தக் கட்சி கருதியது.

ரஷ்ய விவசாயிகள் கம்யூன் பற்றிப் புரட்சிகர நரோத்னிக்குகள் கொண்டிருந்த அணுகுமுறை,



படிப்பகம்

www.padippakam.com



அவர்களின் உலகக் கண்ணோட்டத்தின் பிரிக்க முடியாத பகுதியாகும். அன்றைய ஜார் ரஷ்யாவின் ஐரோப்பியப் பகுதியிலிருந்த சாகுபடி நிலத்தில் ஐந்தில் மூன்று பங்கு, விவசாயிகள் கம்யூன், கொசாக்கியர்கள் கம்யூன்[6] ஆகியவற்றின் வசம் இருந்தது. கம்யூனுக்குள் ஒவ்வொரு குடும்பமும் சிறு அளவு நிலத்தையே நிபந்தனை ஏதுமின்றிப் பெற்றிருந்தது. அந்தச் சிறு அளவு நிலம் ஒரு வீடு, தோட்டம், கால்நடைகள், கருவிகள் ஆகியன இருக்கக்கூடிய அளவுக்கே இருந்தது. சாகுபடிக்கான நிலத்தைக் கம்யூன், ஒவ்வொரு குடும்பத்திற்கும் நீண்டகாலத் தவணையின் பேரில் வழங்கி வந்தது. புல்வெளிகள் ஆண்டுதோறும் குடும்பங்களுக்கு முறை வைத்து மாற்றி மாற்றி வழங்கப்பட்டன. பலசமயங்களில் அவற்றில் விவசாயிகள் கூட்டாகவே வேலை செய்தனர். மேய்ச்சல் நிலங்களையும் காடுகளையும் அனைவரும் பயன்படுத்தினர். கிராமக் கால்நடை மேய்ச்சல், ஊர்க்காவல், ஆதரவற்றோர் பராமரிப்பு ஆகியன மட்டுமின்றி பல சமயங்களில் பள்ளிக்கூடம், தேவாலயம், ஆலை ஆகியவற்றை நடத்துதல் போன்ற முக்கியமான சேவைகளுக்கும் கம்யூனே கூட்டாகப் பொறுப்பேற்றிருந்தது. குடும்பத் தலைவர்கள் இணைந்த சபை கம்யூனை நடத்தியது. அச்சபை, கம்யூன் மேற்கொள்ள வேண்டிய சேவை யினைத் தீர்மானித்தல், அலுவலர்களைத் தேர்ந் தெடுத்தல், முறைசாரா வரிகளையும் பாக்கிகளையும் வசூலித்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டது. ரஷ்யாவின் மேற்கிலுள்ள சில பகுதிகள் தவிர (அவை முன்னர் போலந்துக்குச் சொந்தமான பகுதிகள்), பிற அனைத்துப் பகுதிகளிலும் கம்யூன், குறிப்பிட்ட காலந்தோறும் குடும்பங்களின் அளவில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப சாகுபடி நிலங்களை மறுபகிர்வு செய்து கொடுத்தது. பல கம்யூன்கள் ஒன்று சேர்ந்து 'வோலாஸ்டு' (Volost) என்ற அமைப்பை உருவாக்கின. அந்தந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள், அரசு அதிகாரிகளின் ஒப்புதலுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உட்பட்டு, அந்த அமைப்பின் அலுவலர்களாக இருந்தனர்.

புரட்சிகர நரோத்னிக்குகளைப் பொறுத்தவரை, அந்த விவசாயிகள் கம்யூன், பெரும்பாலான ரஷ்ய மக்களால் பகிர்ந்து கொள்ளப்பட்ட கூட்டுவாழ்க்கை முறைக்குச் சான்றாக விளங்கியது. அரசின் அடக்கு முறை முயற்சிகளையும் மீறி உயிர் பிடித்து வந்தது அம்மரபு. ஜாரிசத்துக்கு எதிரான போராட்டத்தில் விவசாயிகளை அணி திரட்ட கம்யூன் ஒரு சாதனமாகப் பயன்பட்டது. வருங்காலத்தில் ஜனநாயகரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தேசிய அரசாங்கத்துடன் இணைந்து உள்ளூர் மட்ட அதிகார அமைப்பு ரஷ்யாவை ஆட்சி செய்யும் என்றும், அந்த உள்ளூர் மட்ட அதிகாரத்தின் ஒழுங்கமைக்கப்பட்ட அடிப் படை வடிவம் கம்யூனாகத்தான் இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. கம்யூன், புரட்சிக்குப் பிந்திய ரஷ்யாவில் கூட்டுப் பண்ணைக்குரிய வலுவான சட்டகமாக இருக்கும் என்று செர்னிஷெவ்ஸ்கி கருதினார். எதிர்காலத்தில், கூட்டு விவசாயம், பொதுவுடைமையாக்கப்பட்ட தொழிற்சாலைகளுடனும் சிறு அளவில் (தற்காலிகமாக) இயங்கும் தனியார் துறைத் தொழில் முயற்சிகளுடனும் இணைந்து செயல்படும் என்றும் அவர் கருதினார். 1921 - 27 ஆம் ஆண்டுக் காலகட்டத்தில் ரஷ்யாவில் செயல்படுத்தப் பட்ட புதிய பொருளாதார கொள்கையின் சில திட்டங்களும், அப்போது இருந்த எதார்த்தங்களும் காட்சிகளும் செர்னிஷெவ்ஸ்கியின் இக்கருத்துடன் பெரிதும் ஒத்திருந்தன.

1880களின் பிற்பகுதியில் நரோத்னிக்வாதம் வீழ்ச்சியுற்றதற்கு முக்கியமான காரணம் அரசு அடக்குமுறைதான். விவசாயிகளின் எழுச்சிக்கான நம்பிக்கை சிதைந்தது. மரண தண்டனை, சிறைவாசம், சைபீரியாவுக்கு நாடு கடத்துதல் போன்ற அரசுக் கொடுமைகளால் 'மக்கள் சித்தக் கட்சி'யினரில் பெரும்பகுதியினர் மௌனம் பூண்டனர். அவர்களை விமர்சித்தவர்கள் பின்னர் அரசியல் தளத்திற்கு வந்தனர். புரட்சிகர நரோத்னிக்வாதத்துக்கு எதிராக விமர்சனத்தை முன் வைத்தவர்கள் 'ரஸ்க்கோயே பொகாட்ஸாவோ' (Russkoe Bogatsova) என்ற சஞ்சிகையை நடத்திய செல்வாக்குமிக்க குழுவின ராவர். ஆனால் அவர்களோ மேலும் மிதமான பரிணாமவாத நரோத்னிக்வாதத்தை முன்வைத்தனர். சீர்திருத்தங்களுக்கான முக்கியமான பாதை கல்வியே என்று கூறிய அவர்களுக்கு நல்லெண்ணம் படைத்த, ஆனால் செயல் திறனற்ற கிராமப்புற, சிறுநகர்ப்புற அறிவாளிகள் ஆதரவும் உதவியும் கிடைத்தது. 1890களிலும் (1905 ஆம் ஆண்டுப் புரட்சியின் தோல்விக்குப் பிறகு 1907-17 ஆம் ஆண்டுகளில் மீண்டும் ஒருமுறையும்) நரோத்னிக் இயக்கத்தில் பெரும் செல்வாக்குச் செலுத்திய அப்போக்கு அவ்வியக்கம் நீர்த்துப் போகச் செய்து கடைசியில் அதன் அழிவுக்கு இட்டுச் சென்றது.

புரட்சிகர நரோத்னிக்வாதம் பற்றிய மற்றொரு விமர்சனம் ''கறுப்பு மறுபங்கீட்டாளர்'' (Black Repartition) என்ற பெயரில் இயங்கிய குழுவிடமிருந்து வந்தது. அவர்கள், மக்கள் சித்தக் கட்சி நடத்தத் திட்டமிட்டிருந்த எழுச்சி பற்றிய விஷயத்தில் கருத்து வேறுபாடு கொண்டு வெளியேறியவர்கள். பிளாக்கானோவ், அக்ஸெல்ராட், ஜூட்ஷ், ஸாசுலிச் போன்ற இதன் தலைவர்கள் ஸ்விட்சர்லாந்துக்குச் சென்று அங்கு 1883இல் 'உழைப்பாளர் விடுதலை' (Emancipation of labour) என்ற குழுவை அமைத்தனர்.[7] தான் மார்க்சியத்தை ஏற்பதாகவும், பாட்டாளி வர்க்க (சோசலிஷ) புரட்சிக்கு முன்பாக, ஒரு கணிசமான அளவிற்கு முதலாளியக் கட்டம் இருக்க வேண்டியது அவசியம் என்றும் இக்குழு கூறியது. ஜெர்மனியின் பொருளாதாரமும், ஜெர்மானிய சமூக ஜனநாயகக் கட்சியின் துரித வளர்ச்சியும் இவர்களைக் கவர்ந்தன. ரஷ்யாவும் இப்படியொரு பாதையைப் பின்பற்று மென அவர்கள் எதிர்பார்த்தனர். ரஷ்ய விவசாயிகள் கம்யூனும் பின்னர் 1890களில் விவசாயி வர்க்கம் முழுவதும் கூட, இனி ஒரு போதும் சாதகமான அம்சமாக இருக்கப்போவதில்லை என்றும், மாறாக



படிப்பகம்

www.padippakam.com



அவை தேக்க நிலைக்கும் பின்தங்கிய நிலைக்குமான மூலாதாரமாகவே இருக்கின்றன என்றும் அவர்கள் கருதினர். இந்நிலைமையின் அழிவும் முதலாளிய வளர்ச்சியுமே சோசலிசத்திற்கான முன் நிகழ்வு என்று கருதினர். இப்பார்வையைத்தான் மார்க்ஸ் 1881இல் ''ரஷ்ய முதலாளியத்தின் காதலர்களின்'' பார்வை என்று கேலியாகக் குறிப்பிட்டார். மார்க்சின் கருத்தோ, இதற்கு நேரெதிரானதொரு திசையில் சென்று கொண்டிருந்தது.

***மாற்றங்களை வரிசைப்படுத்துதல்***

19 ஆம் நூற்றாண்டின் அறிவுலகின் பிரதான முன்மாதிரியாக இருந்தது பரிணாமவாதமாகும். இது டார்வினின் படைப்புகளில் மட்டுமல்லாது, ஸ்பென்சரின் தத்துவம், கொம்தேயின் நேர்க் காட்சிவாதம், ஃபூரியே, ஷான்சிமோன் ஆகியோரின் சோசலிசம் ஆகியவற்றிலும் மேலோங்கி நின்றது. பெரும் மாற்றங்கள் ஏற்பட்டு வந்த நிலையில், பல்வேறு வகையானவை உலகில் இருப்பது மென் மேலும் தெளிவாக வந்த நிலையில், உலகிலுள்ள பல்வேறு வகைப்பட்ட வடிவங்கள் - இயற்பியல், உயிரியல், சமூக வடிவங்கள் - வரிசைப்படுத்தப்பட்டு, அவை கட்டம் கட்டமாக தவிர்க்க முடியாதபடி வளர்ச்சியடைகின்றன என்ற அனுமானத்தைக் கொண்டு விளக்கப்பட்டன. இவ்வளர்ச்சியை விஞ்ஞான முறை கொண்டு அறிய முடியும் எனச் சொல்லப்பட்டது. மார்க்ஸ், பொருள் முதல்வாத அறிவுத்தோற்றவியலை ஏற்றவர். ஒரு சமூகத்திற்குள் இயங்குகிற தவிர்க்கமுடியாத முரண்பாடுகளை இயங்கியல் நோக்கில் ஒத்துக்கொண்டவர், ஆனால் அவர் நம் தலைமுறையினர் பகிர்ந்து கொண்ட அடிப்படையான அனுமானத்தை ஒதுக்கித் தள்ளி விட்டார் என்று கொள்ள முடியாது. எப்படியும் அவர் அதை உடனடியாக ஒதுக்கித் தள்ளாமல் இருந்தார் என்றாவது கூறமுடியும். 'ஜெர்மானிய சித்தாந்தம்' *(1846)* என்ற நூல் இந்தச் சூழலிலேயே பெரிதும் எழுதப்பட்டுள்ளது. 'மூலதனம்' முதல் பாகத்தில்கூட *(1867)* வளர்ச்சி குன்றிய நாடு தனது வருங்காலத்தில் தொழில் ரீதியாக அதிக வளர்ச்சியடைந்த நாட்டின் சாயலிலேயே இருக்குமென சித்திரிக்கப்பட்டுள்ளது. அதாவது, ''ஊழ் போன்று செயல்படும் இயற்கை விதிகளின்'' தவிர்க்க முடியாத விளைவு எனக் கூறப்படுகிறது.

ஆனால், பரிணாமவாதிகளின் மிக எளிமைப் படுத்தப்பட்ட, வளர்ச்சி நேர் கோட்டில் செல்கிறது என்ற சிந்தனை முறையில் மார்க்ஸ் நிறைவு காண வில்லை. மார்க்ஸ் ஆய்வு செய்த ஏராளமான சான்று களும் அவரது இயங்கியல் பயிற்சியும் பரிணாம வாதத்துக்கு எதிராக இருந்தன. மேலும், முதலாளிய உற்பத்தி முறை முதன் முதலாக ஐரோப்பாவின் வட மேற்குப் பகுதியில் தோன்றியதற்கான காரணத்தைக் கண்டறிய வேண்டிய தேவையிருந்தது. அது தற்செயலாக அங்கு தோன்றியது என்ற விளக்கம் ஒரு சமூக விஞ்ஞானத்திற்கான மார்க்சின் கோரிக்கை களுக்குப் போதுமானதல்ல. எனவே 1853இலும் பின்னர் மேலும் திட்டவட்டமான முறையில் 1857இல் 'கிரண்ட்ரிஸ்' என்ற நூலிலும் மார்க்ஸ், 'கீழைத்தேய வல்லாட்சி' (oriental despotism) என்ற கருத்தாக்கத்தை வகுத்தளித்தார் ('ஆசிய உற்பத்தி முறை' (Asiatic mode of production) என்ற கருத்துருவாக்கமும் 'கீழைத்தேய வல்லாட்சி' என்ற கருத்தாக்கமும் ஏறக்குறைய ஒரே பொருள் தரக் கூடியவை). இந்தக் கருத்துருவாக்கம் நேர்கோட்டு விளக்கங்களைச் செழுமைப்படுத்தக் கூடியதும் (அல்லது) அவற்றுக்கு மாற்றாக இருக்கக் கூடியதுமான ஒரு முக்கியமான கோட்பாட்டுப் பங்களிப்பாகும்.

முற்போக்கான வளர்ச்சிக்கான சாத்தியப்பாடுகள் கொண்ட சமூக உருவாக்கங்களும் அடிப்படையில் தேங்கிப்போன 'வரலாற்றுத் தன்மையற்ற' சமூக உருவாக்கங்களும் உலகெங்கும் ஒன்றுக்கொன்று அருகருகே நிலவுவதாக மார்க்சுடைய இந்தப் புதிய, மேலும் செழுமைப்படுத்தப்பட்ட கோட்பாடு அனுமானிக்கிறது. இத்தகைய தேங்கிப்போன சமுதாயங்களின் தன்மையை சுற்றுச்சூழல் காரணிகள், சமூகக் காரணிகள் ஆகியவற்றைக் கொண்டு இக்கோட்பாடு வரையறுத்தது. அதாவது பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் தேவைப்படுகிற பரந்த வறட்சி நிலம், நீர்ப்பாசனத்தின் மூலம் செய்யப்படும் வேளாண்மை. வலுவான அரசு, நிலம், நீர் ஆகிய வற்றின் மேல் அரசுக்குள்ள முன்னுரிமை, சுயநிறை வுள்ள ஏராளமான கிராம சமுதாயங்கள் / கம்யூன்கள் (இவை அரசுக்குத் திறை செலுத்துபவை)- இத்தகைய கூறுகளைக் கொண்டு தேங்கிப்போன சமுதாயங்களின் தன்மையை வரையறுத்தது மேற்சொன்ன கோட்பாடு. உலகை ஒன்றிணைக்கும் முதலாளியம் கீழைத்தேய வல்லாட்சியின் தேங்கிப்போன சமுதாயங்களை வளர்ச்சிப் பாதைக்கு இழுத்து வருகின்றது என்றும் தடைகள் அகற்றப்பட்டதும், மாற்றமுடியாத பரிணாமவிதிகள் கடைசியில் உலகம் முழுவதிலும் அங்கிங்கெனாதபடி ஒரே கதியில் செயல்படும் என்றும் மேற்சொன்ன கோட்பாடு ஒரு அனுமானத்தைக் கொண்டிருந்தது. இந்த அனுமானம்தான் மார்க்ஸ் தம் காலத்திலேயே கிராமியக் கம்யூன்கள் பற்றி நடத்திய ஆய்வுகளின் வழியாக அவரது மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

ஏற்கனவே மார்க்ஸ், தனது 'கிரண்ட்ரிஸில்'[8] முதலாளியத்துக்கு முந்திய உற்பத்தி முறைகளின் விவசாயம், நில உடைமை, கிராம சமூக அமைப்பு ஆகியன பற்றிய விரிவான ஒப்பாய்வை மேற்கொண்டிருந்தார். அந்நியமாதல் நிலவுகின்றதும், சமுதாயத்தில் மேனிலையில் இருப்பவர்கள் கூடுத லான சலுகைகளும் கீழ்நிலையில் இருப்பவர்கள் குறைந்த சலுகைகளும் அனுபவிக்கின்றதுமான முதலாளிய சமுதாயத்தைவிட, மானுடத் தேவை களுக்குக் கவனம் குவிக்கின்றதும் உள்ளார்ந்த ஜனநாயகத்தைக் கொண்டிருக்கிறதுமான பழங்காலக் குலச் சமூகங்கள் (Tribal Communities) மேன்மை யானவை என்ற மார்க்சின் கருத்து 1870களில் மாரெர், மார்கன்[9] போன்றவர்களின் எழுத்துக்களால் வலுப்பெற்றது. 'புராதன' கம்யூன்களின் பலவீனங்கள்



படிப்பகம்

www.padippakam.com



குறித்து மார்க்சுக்கு சந்தேகம் ஏதும் இருக்கவில்லை. அதன் பொருள்வகை வறுமை, குறுகிய கண்ணோட்டம், சுரண்டும் வெளிச்சக்திகளை எதிர்த்துத் தாக்குப்பிடிக்க முடியாதநிலை ஆகியனவே அப்பலகீனங்கள். ஆனால் மார்க்சைப் பொறுத்தவரை, இத்துடன் எல்லாம் முடிந்து விடவில்லை. இப்போது கம்யூன் பற்றிய அவரது சிந்தனையில் பாரிஸ் கம்யூன் அனுபவம் இடம் பெற்றுவிட்டது. பாரிஸ் கம்யூன் என்பது ஒரு புதிய சோதனை முயற்சி; பாமர மக்களின் ஜனநாயகத்திலும் புரட்சிகர ஆட்சியமைப்பு முறையிலும் முதல்முதலாக மேற்கொள்ளப்பட்ட ஒரு முயற்சி. முதலாளியத்துக்குப் பிந்திய ஆட்சிக்கான இந்த முதல் பரிசோதனையை வரலாற்றுச் சான்றாகக் கொண்டு மார்க்ஸ், தான் மிகவும் விரும்பிய எதிர்கால சமுதாய அரசியல் அமைப்பின் உண்மையான தன்மை பற்றி முன்னைக்காட்டிலும் கூடுதலான கவனம் செலுத்தினார். ஒரு புதிய மேம்பட்ட பொருள்வகைச் செல்வத் தளத்திற்கும், உலகளவில் தொடர்பு கொண்டு செயல்படும் தளத்திற்கும், புராதனக் கம்யூனை இயங்கியல் வகையில் கொண்டு செல்தல் என்பது எதிர்காலக் கம்யூனிச சமுதாயம் பற்றிய மார்க்சியப் பார்வையில் இடம் பெற்றது.

முதலாளிய சமூக வடிவங்களும், முதலாளியமற்ற சமூக வடிவங்களும் ஒன்றையொன்று சார்ந்து நின்று சகவாழ்வு நடத்துவது பற்றிய மார்க்சின் ஆய்வும், ரஷ்யா குறித்த விவரங்களையும் விவாதங்களையும் அவர் மேன்மேலும் புரிந்து கொண்டமையும் *'சமச்சீரற்ற வளர்ச்சி'* என்ற கருத்துருவாக்கத்தை அதன் அனைத்து அம்சங்களோடும் அவர் தனது கவனத்தில் கொள்ளுமாறு செய்தன. மேலும், ரஷ்ய அரசின் வலுவான பாத்திரத்தையும் அங்கும் பிற இடங்களிலும் இருந்த முதலாளியத்தின் பிற்போக்கான அம்சங்களையும் மார்க்ஸ் மென்மேலும் புரிந்து கொண்டிருந்தார். சமூக வளர்ச்சியின் தவிர்க்க முடியாத பரிணாமக் கட்டங்கள் குறித்த கருத்துருவாக்கம் - நேர்கோட்டு வளர்ச்சி பற்றிய கருத்துருவாக்கம் - மார்க்ஸிடமிருந்து விடை பெற்றது. அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டது எது?

**புராதன கம்யூனும் முன்னோடி என்ற கோட்பாடும்**

*1881*இல் மார்க்ஸ், ரஷ்ய விவசாயிகள் கம்யூன் குறித்த ஒரு கடிதத்திற்குப் பதிலெழுத மூன்று வாரங்கள் யோசனையில் ஆழ்ந்திருந்தார். ஏன், பதிலெழுவதற்காக ஒரு போராட்டமே நடத்தினார் என்று கூடச் சொல்லலாம். அக்கடிதத்தை எழுதியவர் வேரா ஸாஸலிச் (Vera Zazulich). அவர் முன்னாள் பயங்கரவாதி. அச்சமயம் 'கறுப்பு மறுபங்கீட்டாளர்' அமைப்பில் உறுப்பினராக இருந்தவர். மார்க்சிய ஏடான 'இஸ்க்ரா'வின் எதிர்கால இணை ஆசிரியராகப் போகிறவர். அக்கடிதத்திற்கு மார்க்ஸ் எழுதிய பதிலின் நான்கு முன்வரைவுகளும் (drafts) அவருடைய கடின உழைப்பிற்கும் சிந்தனைக்கும் சான்று பகர்கின்றன. மார்க்ஸ் ஆய்வு செய்த முந்திய பத்தாண்டுக் காலம் முழுவதும் அக்காலத்தில் எழுதப்பட்ட *30000* பக்கக் குறிப்புகளுடன் இங்கு ஒரு சேர வந்து சேர்ந்தன எனக் கூறலாம். இவ் வரைவுகள், மலைப்பேற்படுத்துவன மட்டுமல்ல; புதியதொரு பிரச்சனைக்குரிய புதியதொரு அணுகுமுறை இவற்றில் தோன்றியுள்ளது. அறிவின் புதிய பிரதேசமொன்றில் தனது தலைமுறையினரை வழி நடத்திச் சென்ற முன்னோடியான மார்க்சின் சிந்தனா 'ஆய்வுக் கூடத்தின்' வெளிப்பாடு இது.

விவசாயிகள் கம்யூன் பற்றிய ரஷ்ய அறிவு ஜீவிகளின் கண்டுபிடிப்பு, அக்கம்யூனின் இயல்பு, வரலாறு ஆகியன பற்றிய கூர்மையான விவாதத்தைத் தோற்றுவித்தது. நாட்டுப்புறங்களைக் காவல் காக்கவும் அங்கிருந்து வரி வசூல் செய்யவுமே கம்யூனை ஜார் அரசு பேணி வந்துள்ளது என்றும், ரஷ்ய விவசாயம், அரசியல் பொருளாதாரம் ஆகிய வற்றிலுள்ள பிற்போக்குக் கூறுகளைப் பாதுகாக்கும் உத்தியே இந்தக் கம்யூன் என்றும் அதை விமர்சிப்பவர்கள் கூறினர். ஆனால் நரோத்னிக்குகளும் அவர்களை ஆதரித்த அறிவாளிகளும் கம்யூன் என்பது வர்க்க சமுதாயத்திற்கு முந்திய சமுதாய அமைப்பின் எச்சமே என்பதில் சந்தேகமில்லை என்றாலும் நிகழ் காலத்தில் அது வகிக்கும் பாத்திரமும் எதிர்காலத்தில் அது வகிக்கக்கூடிய பாத்திரமும் ஆக்கபூர்வமானவைதான் என்றும் வழக்காடினர். ரஷ்யாவைப் போலவே, மார்க்சுக்கும் இவ்விஷயம் பற்றிய சர்ச்சை, முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பட்டது. இது மிகப் பெரும் கோட்பாட்டு, அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனைகளுக்கான நுழைவாயிலாக இருந்தது. முதலாளிய உலகுக்குள்ளேயே விவசாயி வர்க்கம் இருப்பது, இத்தகைய ''ஏறுமாறான தன்மையால்'' உருவாக்கப்படக்கூடிய துணைப் பொருளாதார வகைகள், சோசலிசப் புரட்சியின் இயல்பு ஆகியனவே இப்பிரச்சனைகள். மார்க்ஸ், வேரா ஸாசுலிச்சிற்கு ரஷ்யக் கம்யூன் பற்றி எழுதிய கடிதத்தின் நான்கு வரைவுகளிலும் செய்யப்பட்டிருந்த விவாதம், இப்பிரச்னைகள் அனைத்தையும் வெளிக் கொணர்ந்தது. இதன் சுருக்கத்தை மார்க்சின் சொற்களிலேயே தருவது சிறப்பானது:

''ரஷ்யக் கம்யூனின் வாழ்வை அச்சுறுத்துவது வரலாற்றின் தவிர்க்க முடியாமையோ அல்லது கோட்பாடோ அல்ல. அரசு அடக்குமுறையும், விவசாயிகளுக்கு இழிவேற்படுத்தி அது வளர்த்து விடும் முதலாளிகளுடைய சுரண்டலும்தாம்''. விவாதத்துக்கு எடுத்துக்கொண்ட சமுதாயத்தின் சர்வதேசப் பின்னணியை மார்க்ஸ் எடுத்துரைத்தார்: ''அயல்நாட்டின் வெற்றிக்குப் பலியான இந்தியா போல் அல்லாத'' ரஷ்ய சமுதாயத்தின் ''குறிப்பிட்ட வரலாற்றுச் சூழல் பற்றிக் கூறுவதானால், அது மேலும் வளர்ச்சியடைந்த கலாச்சாரங்கள் நிலவிய அதே காலத்தை ஒட்டியதாக இருந்தது. முதலாளிய உற்பத்தி ஆதிக்கம் புரிந்த உலகச் சந்தைகளுடன் அது பிணைக்கப்பட்டிருந்தது.'' ''அரசு... வணிகர்கள்... நிலப் பிரபுக்கள் (கம்யூனுக்கு உள்ளேயிருந்த) லேவாதேவிக்காரர்கள் ஆகியோரை, விவசாயிகள் எண்ணிக்கையில் மேலோங்கியிருந்த சமுதாயங்களில் இருந்த



படிப்பகம்

www.padippakam.com



அதிகார வட்டம் - விவசாயிகளை அழிக்கும் வர்க்கக் கூட்டணி'' என மார்க்ஸ் வரையறுத்தார். அந்த சமுதாய அமைப்பு முழுவதுமே ''விவசாயிகளுக்கு இழப்பை ஏற்படுத்தி அரசால் தோற்றுவிக்கப்பட்ட முதலாளிய அமைப்பின் தனிவகை'' என்று மார்க்ஸ் குறிப்பிட்டார்.

ரஷ்யக் கம்யூனின் ஓரளவிற்கு வளர்ச்சியடைந்த நிலையும் (இந்த வளர்ச்சி ரத்த உறவின் அடிப் படையில் இல்லாமல் வட்டார அடிப்படையில் அமைந்தது) கம்யூனிலிருந்த இரட்டைத் தன்மையும் (நிலம் தனியுடைமையிலும் கம்யூனின் பொது வுடைமையிலும் இருந்தமை) மார்க்சுக்கு இரு வேறு வளர்ச்சிப் பாதைகளுக்கான சாத்தியப்பாட்டை உணர்த்தின. அரசும், அரசால் ஊட்டி வளர்க்கப்பட்ட முதலாளியமும் கம்யூனைத் தாக்கி, அதில் ஊடுருவி, அழித்துக் கொண்டிருந்தன. ஆனாலும் கம்யூன் ஒரே யடியாக மறைந்து போய்விடுவதற்கான ''ஊழ்வினை'' ஏதும் இருக்கவில்லை. கம்யூனுக்கு எதிரான சக்திகள் புரட்சியால் அகற்றப்பட்டு, மேற்கத்திய முதலாளி யத்தால் வளர்க்கப்பட்ட தொழில்நுட்பமானது உற்பத்தியாளர்களின் பொதுவான உடைமையின் கீழ் புதிய பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்படும்போது கம்யூனின் கூட்டுறவு அம்சம் நிலைக்கவே செய்யும். இத்தகைய தீர்வு ரஷ்யாவின் சோசலிச எதிர் காலத்திற்குத் தேவை. கிராமப்புறக் கம்யூன்கள் தனிமைப்பட்டிருப்பதானது, அவற்றின் பலகீன மாகும். இதனால்தான் அவை 'மத்தியப்படுத்தப்பட்ட வல்லாட்சி'க்கு இரையாகின்றன. இப்பலகீனத்தை, புரட்சிகர எழுச்சியினாலும், பின்னர் இதன் தொடர்ச்சியாக, 'வோலாஸ்ட்' என்ற அமைப்பிற்குப் பதிலாக ''கம்யூன்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளை'' ஏற்படுத்துவதன் மூலமும் போக்க முடியும். இச்சபைகள் கம்யூனின் நலன்களைப் பேணுவதற்கான பொருளாதார நிர்வாக அமைப்பு களாகும். இச்சபைகளின் மூலம், ஒரு சோசலிச சமுதாயத்தில், விவசாயிகள் தங்கள் காரியங்களைத் தாங்களே சுதந்திரமாக நிர்வகித்துக் கொள்ள முடியும். கூட்டு வாழ்வில் பழகிப்போயிருந்த ரஷ்ய விவசாயிகள் ''மிக எளிதாக, தனித்தனியான துண்டுநிலச் சாகுபடிப் பொருளாதாரத்திலிருந்து ஒரு கூட்டுப் பொருளா தாரத்திற்கு மாறிச் செல்ல'' முடியும். இதற்கான ஒரே நிபந்தனை ''இதுகாறும் கிராமிய கம்யூன்களைச் சுரண்டி வாழ்ந்து வந்துள்ள ரஷ்யசமுதாயம், மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு வேண்டிய ஆரம்பகால மூலாதாரங்களை கம்யூன்களுக்கு வழங்கத் தயாராக இருக்க வேண்டும்'' என்று மார்க்ஸ் கருதினார். ''தொடக்க மூலதனத்திரட்டல்'' (Primitive Accumulation) பற்றி மார்க்ஸ் தமது 'மூலதனம்' நூலின் முதல்பாகத்தில் முன்வைத்த 40 ஆண்டுகளுக்குப் பின்னர், 'சோசலிச தொடக்ககால மூலத்தனத்திரட்டல் பற்றிய விதி' என சோவியத் ரஷ்யாவில் ப்ரியோ பிரஷென்ஸ்கியால் முன் வைக்கப்பட்ட[10] விளக்கத்திற்கு நேர் மாறானது. மேலும், ''படிப்படியான மாற்றத்தைப் பற்றி மட்டுமே பேசிக்கொண்டிருக்கின்றனர். ஆனால் நமது ஆய்வு கம்யூனின் இப்போதைய கட்டமைப்பை அப்படியே வைத்துக் கொண்டு அதை அதன் இயல்பான (சுரண்டலற்ற) பின்னணியில் நிறுத்திப் பார்ப்பதிலிருந்து தொடங்க வேண்டும்'' என்றார் மார்க்ஸ்.

முடிவாக, சரியான காலத்தில் கிட்டுகிற புரட்சிகர வெற்றி, ரஷ்ய கம்யூனை ''சமுதாய மறுவளர்ச்சிக்கான சாதனமாக'' ஆக்கி விட முடியும். இது ''(சோசலிச) பொருளாதார முறைக்கான உடனடித் துவக்க முனையாக இருக்கும்''. ''நவீன எந்திர சாதனங் களைப் பயன்படுத்துவதற்கேற்ற பெருமளவிலான கூட்டு உழைப்பிற்''கான அடித்தளமட்ட சட்டகமாக இருக்கும். இப்படிப்பட்ட வளர்ச்சி, விவசாயிகள் பெரும்பான்மையாக உள்ள சில நாடுகளை ''முதலாளியத்தால் ஆளப்படும் சமுதாயங்களை விட மேன்மையானவையாக'' ஆக்கிவிடலாம். அதனால் தான் ''மேற்கு நாடுகளின் முன்னுதாரணம் எதையும் நிருபித்து விடுவதில்லை'', தற்போதுள்ள கேள்வி, தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சனை பற்றியதல்ல, அழிக்கப்படவேண்டிய ஒரு எதிரி பற்றியதாகும்... ''ரஷ்யக் கம்யூனைக் காப்பாற்ற ஒரு ரஷ்யப் புரட்சி தேவை''. இவையனைத்தையும் புரிந்து கொள்ள ''வெறும் கோட்பாட்டு உச்சிகளிலிருந்து இறங்கி ரஷ்ய எதார்த்தத்தைப் பரிசீலிக்க வேண்டும்''. மேலும் 'புராதன' (archaic) என்ற வார்த்தையைக் கண்டு அஞ்சுவதை நிறுத்த வேண்டும். ஏனெனில் எந்த புதிய அமைப்பை நோக்கி நவீன சமுதாயம் நகர்ந்து கொண்டிருக்கிறதோ, அந்த புதிய அமைப்பானது, ஒரு பழைமையான சமூக வகையின் மேன்மையான மறுவடிவமாகும்.''

இவ்வாறு ரஷ்ய விவசாயிகள் கம்யூன் என்ற விஷயம், விரிவான பிரச்சனைகள் பலவற்றைப் பரிசீலிப்பதற்கான ஒரு சாதனமாக மார்க்சால் கையாளப்பட்டது. இப்பிரச்சனைகள் அவரது தலைமுறையைச் சேர்ந்தவர்களுக்குப் புதியவை. ஆனால் இன்று அவை எளிதாகப் புரிந்து கொள்ளப் படக் கூடியவையாக உள்ளன. ''வளரும் சமுதா யங்கள்'', ''நவீனமயமாக்கல்'', ''சார்புநிலை'', ''உலக முதலாளியம் சமச் சீரற்ற வகையில் 'ஓரநாடுகள்' முழுவதிலும் பரவுதல்'' என்பனவே இப்பிரச்சனைகள். மார்க்சின் புதிய புரிதலில் இத்தகைய கூறுகள் பல இருந்தன; ஆனால் இவற்றில் எதனையும் மார்க்ஸ் முழுமையாக ஆய்ந்து கூற வில்லை. இந்த ஆய்வுகளின் மையத்தில் இருந்தது, 'சமச்சீரற்ற வளர்ச்சி' என்ற புதிய கருத்தாகும். இக்கருத்தை, சில சமுதாயங்கள் பிற சமுதாயங்களை விட வேகமாக நகர்கின்றன என்ற அளவுரீதியான அர்த் தத்தில் அல்லாது உலகளவில் சமூக உருவாக்கங்கள் ஒன்றையொன்று சார்ந்திருந்து சமூக மாற்றங்கள் ஒன்றையொன்று பாதிக்கின்றன என்ற பொருளில்தான் மார்க்ஸ் பயன்படுத்தினார். ஹருகிவேடா எடுத்துக் காட்டியது போல, ''பின்தங்கிய முதலாளியத்துக்கே உரிய கட்டமைப்பை'' ('கட்டமைப்புகள்' என்பது மேலும் பொருத்தமானது எனக் கூறலாம்) ''மார்க்ஸ் பார்க்கத்'' தொடங்கினார் என்பது உண்மை.



படிப்பகம்

www.padippakam.com



''சார்புநிலை முதலாளியம்'' என்ற கருத்தினை இன்று நாம் அறிந்துள்ளது மாதிரி அன்று ஒரு கருத்து இல்லை என்பது உண்மைதான். ஆனால் அதற்கான அடிப் படையை மார்க்ஸ் உருவாக்கியிருந்தார். 'கிரண்ட் ரிஸ்' நூலில் காணப்படுவது போல, மார்க்ஸ் முதலாளியத்துக்கு முந்திய சமுதாயங்களைப் பொறுத்தவரை சமுதாய மாற்றங்களுக்கான பல விதமான பாதைகளை அனுமானித்திருந்தது மட்டு மல்ல, முதலாளிய யுகத்தில் ஏற்படும் சமுதாய மாற்றங்களுக்கான பல்வேறு பாதைகளையும் அனுமானித்திருந்தார். இக்காரணத்தால்தான், 'மூலதனம்' முதல் பாகத்தில் உள்ள தொடக்க மூலதனத்திரட்டல் (Primitive Accommulations) பற்றிய விவாதத்தை பொதுமைப்படுத்தி எல்லா சமுதாயங் களுக்கும் பிரயோகிப்பதானது இவ்வளவு வெளிப் படையாக நிராகரிக்கப்படுகிறது.

மிகச் சுருக்கமாகக் கூற வேண்டுமானால், மார்க்ஸ் அறிந்திருந்த தொழில் வளர்ச்சி மிகுந்த இங்கிலாந்து, ''குறைவளர்ச்சியடைந்திருந்த ரஷ்யாவின், எதிர்கால இலட்சிய உருவாக'' இனி தன்னைக் காட்டிக் கொள்ளும் நிலை இல்லாது போய்விட்டது. ஆனால் ஒரு நூற்றாண்டுக் காலத்துக்குப் பிறகும் ''வளர்ச்சி யடைந்த நாடானது குறை வளர்ச்சி நாட்டின் எதிர்கால இலட்சிய உருவாகத் தன்னைக் காட்டிக் கொள்கிறது'' என்ற கருத்துக்கு நேர்மாறான கருத்தொன்றை நம்மால் இன்னும் கைவிட முடியவில்லை என்பது வரலாற்றின் முரண்களில் ஒன்றாகும். நமது காலத்தின் எல்லா இங்கிலாந்துகளுக்கும் அவற்றின் சோசலிச எதிர்காலத்துக்கான இலட்சிய உருவாக இருப்பது ரஷ்யாதான் என்ற கருத்துதான் இது!

**மார்க்சைப் படித்தல்: கடவுள்களும் கைவினைஞர்களும்**

மார்க்சின் சிந்தனையின் பிந்தியகட்ட வளர்ச்சி பற்றிய விவாதத்திற்கு முக்கியத்துவம் சேர்க்கக் கூடிய விஷயம், அவ்வளர்ச்சி மார்க்சின் அறிவுத்திறன் பற்றியும் ஒரு மனிதஜீவி என்ற வகையில் அவரது தனிப்பட்ட பண்புகள் பற்றியும் நமக்கு என்ன கற்பிக்கின்றது என்பதாகும். மார்க்சின் பகுப்பாய்வில் ஏற்பட்ட மாற்றங்கள், அவர் நீண்ட காலம் சாதித்த மௌனம், அவருடைய அறநிலைப்பாடு ஆகியன விவாதத்துக்குரியவை.

மார்க்சைக் கடவுளாக வழிபடுவோர்க்கு, மார்க்சின் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றம் அதிர்ச்சியளிக்கும். அவர் ஒரு கடவுளா? அல்லது மனிதரா? கடவுள் களுக்கு மாறாக மனிதகுலத்தவர் சூழல்களால் கட்டுப்படுத்தப்படுவார்கள்; அவர்களது கருத்துக்கள் மாறக் கூடியன; அவர்கள் தவறு செய்யும் இயல் புடையவர்கள். இதற்கு மாறாக, கடவுளின் பார்வையோ எல்லையற்றது; மாறாதது; தவறே செய்யாதது. மேலும், அது அறநெறிகளுக்கு அப்பாற் பட்டது; ஏனெனில் கடவுளின் அறநெறிகள் பற்றித் தீர்ப்புச் சொல்ல ஒரு வழியும் இல்ல; அவர் வார்த்தையே அறக்கோட்பாடு. சிறந்த சிந்தனையும் செயலும் படைத்த சான்றோர்களைத் தெய்வாம்சம் கொண்டவர்களாக ஆக்கும் பலகீனம் மனிதருக்கு ஏற்பட்டுவிடுகிறது; குறைந்த பட்சம் இந்தச் சான்றோர்களை, சூழல், வரலாறு, பாவபுண்ணியம் போன்றவற்றுக்கு அப்பாற்பட்டவர்களாக்கி, அவர்களை வழிபடுபவர்களுக்கும் விளக்கவுரை கூறுபவர்களுக்கும் அனாதியின் கணநேரத் தரிசனத் தையும் முழு முதல் உண்மையுடன் ஒரு இணைப் பையும் தர வேண்டியுள்ளது!

பரிணாமவாத ரீதியில் விளக்கப்பட்ட மார்க்சை தெய்வீகத் தன்மைவாய்ந்தவராக்கும் போக்கு இரண்டாம் அகிலத்தில் ஆழமாக வேரூன்றியிருந்தது. 1917இல் ரஷ்யாவில் ஈட்டப்பட்ட வெற்றி, போல்ஷ வியத்தை மிகச் செல்வாக்கு செலுத்திய மார்க்சிய விளக்கமாக ஆக்கிற்று. 1930களில் ஸ்டாலினியம் இதை எளிமைப்படுத்தி கொடுமையானதாக்கி சித்தாந்த ரீதியான அடக்குமுறைக் கருவியாக்கியது. ஸ்டாலின் சொல்வது சரி, ஆகவே லெனின் சொல்லிய கருத்தும் சரியானது. இதனால் மார்க்சின் கருத்தும் சரியானது. இல்லாவிட்டால்.... என்ற வகையில் மார்க்சிய விளக்கம் இருந்தது. தவறே செய்யாத தலைமையினால் வரையறுக்கப்பட்ட அரசியல் அனுபவம், சர்ச்சைக்கிடமில்லாத அறநெறிகளால் தூக்கி நிறுத்தப்பட்ட இறுதி உண்மையோடு ஐக்கியமாயிற்று. புதிய வைதீக நெறிக்கு இணங்க, 'ஆசிய உற்பத்தி முறை' என்ற கருத்தாக்கம், 1930களில் ஆணைகளின் மூலம் அகற்றப் பட்டது.

மேற்குலக மார்க்சியர்களைப் பொறுத்தவரை, 1950களும் 1960களும் முனைப்பான ஸ்டாலினிய மறுப்புக் காலகட்டமாகும். புதிய நம்பிக்கைகள் உருவாகி அவற்றின் உச்சகட்டமாக 1968ஆம் ஆண்டின் தீவிர (மாணவர்) கிளர்ச்சி வெடித்துக் கிளம்பிய காலகட்டமாகும். அக்காலத்தில் மார்க்சினுடைய இளமைக்கால எழுத்துக்கள் பெரும் கண்டுபிடிப்பாக அமைந்தன. அவற்றின் உடனடி அக்கறை, குறிக்கோள், விளக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்ட மொழி போன்ற அம்சங்களில் அவை, 'மூலதனம்' நூலிலிருந்து கூர்மையாக வேறுபட்டன. சமூகக் கட்டுப்பாடுகள், அரசு ஒடுக்குமுறை ஆகியவற்றை எதிர்கொண்ட சோசலிச, சோசலிசமல்லாத நாடுகளின் மக்கள் பற்றி மார்க்சியர்கள் கொண்ட அக்கறைக்கு, மார்க்சின் இளமைக்கால எழுத்துக்கள் நியாயம் வழங்கின. மனித அந்நியமாதலுக்கான காரணங்கள் யாவை என்பது பற்றி நடந்த விவாதங்கள், மனித விடுதலை பற்றிய முக்கிய அம்சங்களை ஆழமாக உணர்த்துவதற்கான ஒரு முக்கியமானதும் ஆற்றல் மிக்கதுமான பகுப்பாய்வுக் கருவியை வழங்கின. அதனால்தான், முற்றுப்பெறாததும் எளிதில் புரியாத முறையில் எழுதப்பட்டதுமான 'பொருளாதார, தத்துவக் கையெழுத்துப்படிகள் (1844)' மேற்கத்திய, கிழக்கத்திய ஐரோப்பாவின் 1968ஆம் ஆண்டுத் தலை முறையினருக்கு ஒரு அகத்தூண்டுதலை வழங்கின.

மேற்தோற்றத்திற்கு, மார்க்சின் துவக்ககால எழுத்துக்கள் பற்றிய இக்கண்டுபிடிப்பு அவரது



படிப்பகம்

www.padippakam.com



கருத்துகள் வளர்ச்சியடைந்து மாற்றம் பெற்றன என்பதற்கான எடுத்துக்காட்டாக இருக்கலாம். ஆனால் ஆச்சரியம் என்னவென்றால், மார்க்சின் எழுத்துக்களின் வகை வகையான தன்மைக்குச் சான்றாக வந்தமைந்த இந்தக் கண்டுபிடிப்பு, மார்க்சை தெய்வமாக்கும் போக்கில் மற்றொரு புதிய திருப்பத்தை ஏற்படுத்திற்று. மார்க்சின் சிந்தனை வளர்ச்சிப் போக்கில் ஒரு ''அறிவுக் கோட்பாடு முறிவு'' ஏற்பட்டது என பாரிசில் முடிவு செய்யப் பட்டது. 1844இன் மார்க்ஸ் (இளைய, ஓரளவு ஹெகலியத் தன்மை வாய்ந்த மார்க்ஸ்) என்றும் சுத்தமான, முதிர்ந்த மார்க்ஸ் என்றும் பாகுபாடு செய்யப்பட்டது. முதிர்ந்த மார்க்சுடைய சிந்தனை கறாரானது, திட்டவட்டமானது, இறுதியானது என்று கூறப்பட்டது. என்ன இருந்தாலும் மார்க்ஸ் தவறு செய்யாதவர்தான். ஆனால் தவறு செய்யாத தன்மை அவருடைய பிந்திய கால கட்டத்தில்தான் ஏற்பட்டது எனக் கூறப்பட்டது. முதிர்ச்சி, விஞ்ஞானத் தன்மை, புனிதத்தன்மை ஆகியவை நோக்கி, மார்க்சின் சிந்தனையில் பாய்ச்சல் ஏற்பட்டது என்ற இப் பார்வை, மார்க்சுடைய பகுப்பாய்வுக்கும் அவரது இலக்குகள், நம்பிக்கைகள் ஆகியவற்றிற்கும் இடையேயுள்ள தொடர்பை அகற்றுவதற்குக் கூட பயன்பட்டுள்ளது. பின்னர், 'மனிதநேயம்' என்பது ஒரு பூர்ஷ்வா கருத்துருவாக்கம் என்றும் இதற்கும் முதிர்ந்த, விஞ்ஞானபூர்வமான மார்க்சிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும் அறிவிக்கப்பட்டது ('மூலதனம் நூல் வாசிப்பு' - அல்தூசர், பாலிபர்)

இத்தகைய கருத்துக்களை எதிர்கொண்டு மறுக்க வேண்டுமானால் முதலில் நாம் மார்க்சுடைய படைப்பில் உள்ள தொடர்ச்சியையும் தொடர்ச்சி யின்மையயும் அடையாளங் காண வேண்டும். மார்க்ஸின் படைப்பில் குறைந்தது மூன்று கட்டங்கள் உள்ளன: (1) 1840களின் தொடக்ககால மார்க்ஸ்; (2) 1850, 60களின் இடைக்கால மார்க்ஸ். (3) 1870, 80களின் பிந்தியகால மார்க்ஸ். இறுதியாகக் குறிப்பிட்ட கால கட்டத்தின் படைப்புகள் முற்றுப் பெறாதவை; ஆனால் வளமான உள்ளடக்கமுடை யவை. இவை உலகில் காணப்படும் உலகளாவிய முதலாளியம், இதனுடைய அளவிற்கு முதலாளிய வளர்ச்சி பெறாத பிற கூட்டாளிகள் ஆகியன பற்றியும் அதேபோல சோசலிசத்தின் எதிர்கால வாய்ப்புகள் பற்றியுமான அணுகுமுறைக்கான அடிப்படைகளை இட்டுள்ளன.

ஆனாலும், மேலே குறிப்பிட்டுள்ள காலப் பாகுபாட்டை நெகிழ்ச்சியற்றதாக, இறுக்கமானதாக ஆக்குவதில் பயனில்லை. ஏனெனில் பல சந்தர்ப் பங்களில் மார்க்ஸ், தம்முடைய தொடக்க காலப் படைப்புகளுக்குத் திரும்பச் சென்று, அவற்றை மீண்டும் ஆய்ந்து புதிய வழியில் அவற்றைச் செரித்துக் கொள்ளவும் செய்துள்ளார் (எடுத்துக்காட்டாக, 'மூலதனம்' (1867) முதல் பாகத்தில் காணப்படும் 'சரக்கு வழிபாடு' பற்றிய விவாதம்). எனவே மார்க்சுடைய பத்து அல்லது இருபதாண்டுக்கால கடினமான உழைப்பையும், சிந்தனையையும் உள்ளடக்கிய படைப்புகளை ஒதுக்கி விட்டு செயற்கையாகத் தொகுத்துக்கொண்ட ''மார்க்சின் பார்வை'' ஒன்றைத் தூக்கி வழிபடும் மடைமையை இனியாவது கைவிட வேண்டும். மார்க்ஸ் தவறு செய்யலாம். ஆனால் அவர் ஒருபோதும் மார்க்சியரல் லாதவராக இருக்க முடியாதே! பிந்திய கால மார்க்சுடைய தனித்த குணாம்சத்தை ஒத்துக் கொள்வது என்பது, மார்க்ஸை அவரது படைப் பாற்றலின் ஊடாகக் காண்பதும் ஆகும்.

இங்கும் கூட நாம் மார்க்ஸ் தமது இறுதிப் பத்தாண்டு கால வாழ்வில் மேற்கொண்ட நீண்ட மௌனத்திற்குரிய சாத்தியமான விளக்கத்தைக் காண முடியும். இக்காலத்தில் அவர் உடல்நலம் குன்றியிருந்தார். ஆனால் அவர் ஒருபோதுமே மிகவும் ஆரோக்கியமாக இருந்ததில்லை. களைத்துப் போயிருந்தார். ஐரோப்பாவில் 1871க்குப் பிந்திய புரட்சி மீது விழுந்த அடக்குமுறையால் சில சமயங்களில் தளர்ந்து போயிருந்தார். ஆனால் சோர்வும் தோல்வியும் அவருக்குப் புதியவை அல்ல. 'மூலதனம்' முதல்பாகத்தை வெளியிட்டதை ஒட்டிய காலகட்டத்தில், முதலாம் அகிலத்தின் பெரும்பணி களிலிருந்து விடுபட்டிருந்தார். இக்காலத்தில் மீண்டும் மார்க்ஸ் தம்மை ஆய்வுகளில் ஈடுபடுத்தியிருந்தார். தமது கருத்துகளுடன் முழுமையாகப் பொருந்திவராத, ''வசப்படுத்த முடியாத விவரங்கள்'', விமர்சன உரைகள் ஆகியன வந்து குவிந்ததை உன்னிப்பாகக் கவனித்து வந்தார். இவையனைத்தையும் அவர் செரித்துக் கொள்ள வேண்டியிருந்தது. தமது தத்துவார்த்தக் கட்டுமானங்களை அவர் மீண்டும் மறுபரிசீலனைக்குட்படுத்தி புதிய துறைகளை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். புதிய பாதையைத் திறந்து விடும் முயற்சியில் ஆழமான, காத்திரமான முயற்சியில் ஈடுபட்டுள்ளவர், அதற்குத் தரவேண்டிய விலை தனது பேனாவை நிதானமாகக் கையாள்வது தான். ஒரு அறிவாளி புதிய தத்துவார்த்த நுழை வாயிலைத் தாண்டிக் கொண்டிருக்கையில் தமது எழுத்துக்களை 'அச்சிட்டு வெளியிட அவசரப் படாமலிருப்பது' அவரது நோயின் காரணமாகவா? அல்லது முதுமைத் தளர்ச்சியின் காரணமாகவா?

மார்க்சின் நிலைபாடு, கருத்து ஆகியவற்றின் மற்றொரு பரிமாணத்தை அணுகுவதற்கு மார்க்சின் தத்துவம் குறித்து எரிக் ஹாப்ஸ்பாம் கூறியவற்றுடன் துவங்குவது பயன் தரும். ஹாப்ஸ்பாம் கூறினார்: ''மார்க்சுடைய தத்துவத்தின் பன்முகப் பரிமாணத் தன்மையானது, மந்த புத்தியுடையோர், காழ்ப் புடையவர்கள் தவிர மற்ற அனைவரையும், அவர்கள் மார்க்சுடன் உடன்படாதபோதும் கூட, மார்க்சை ஒரு சிந்தனையாளர் என மதிக்கத் தூண்டும்''. அதே சமயம் நாம், மார்க்ஸ் மேற்கொண்ட பகுப்பாய்வு என்ற விஷயத்தை மட்டும் ஆராய்வதில்லை என்பதை மனதில் கொள்ளவேண்டும். மார்க்ஸ் தமது தனிப்பட்ட முயற்சி, அறவொழுக்க நிலைபாடு, அறிவுச் செயல்பாடு என்ற மூன்று நிலைகளிலும்



படிப்பகம்

www.padippakam.com



ஒருவராகவே இருந்தார். 1844க்குப் பின் அரசியல் தோல்விகள், சிதைந்த நம்பிக்கைகள், கொடிய வறுமை ஆகியவற்றின் ஊடாக வளர்ந்த மார்க்ஸ் தமது இளமைக்காலம் முதலாகவே தரிசித்திருந்த சோசலிசப் புரட்சிக்குச் சேவை செய்தல் என்ற இலக்கிலிருந்து ஒரு போதும் விலகிச் சென்றதில்லை. 1863 ஆம் ஆண்டுப் பனிக்காலத்தில் வீட்டு வாடகை பாக்கி, மனைவியின் நோய், காலணிகள் அடமானத்தில் கிடந்ததால் அவரது பெண்மக்கள் பள்ளிக்குப் போக முடியாமை போன்ற கொடிய நிலைகளுக்கு மத்தியில் தமது ஆய்வுகளையும் அரசியல் செயல்பாட்டையும் தொடர்ந்து ஆற்றியபடியே இருந்தார். இதுபோன்ற அநேக பனிக்காலங்களில் மார்க்ஸ் பல்வேறு தொந்திரவு இல்லாத வேலைகள், பகுதி அரசாங்க வேலைகள், வசதியான பத்திரிகைத் துறைப் பணி யாளர் போன்றன வழங்கப்பட்டபோது அவற்றை மறுத்து விடாப்பிடியாகத் தம் பணியைச் செய் துள்ளார். இப்படிப்பட்ட ஒரு தனி மனிதரின் வரலாற்றைக் குறுகிய தர்க்கத்தால் விளக்கி விட முடியாது. ஆனால் இத்தகையதொரு வரலாறு தனக்கேயான தர்க்கத்தைக் கொண்டுள்ளது. இது இல்லாமலிருந்தால் மார்க்சுடைய வாழ்க்கைக்கு அதிக அர்த்தமிருந்திருக்காது.

ஒரு தத்துவார்த்தத் தளத்தில் வைத்துப் பார்த்தால் மார்க்சுடைய எழுத்துக்கள், சமூகம் பற்றிய விஞ்ஞானம் குறித்த அவரது புரிதல்களுக்கும் மனித வறுமை, ஒடுக்குமுறை ஆகியவற்றுக்கு அவர் தனிப்பட்ட முறையில் காட்டிய எதிர்ப்புக்குமான தடயங்களாக மட்டுமல்லாது, அவரது தத்துவரீதியான மானுடவியலுக்கான, அதாவது மனித வாழ்வின் சாராம்சம் பற்றிய அவரது கருத்துக்களுக்கான தடயங்களாகவும் உள்ளன. இறையியல் அல்லது சமய சந்தர்ப்பந்துக்கேற்ற குறுகலான அரசியல் நோக்கம் (எடுத்துக்காட்டாக, கட்சியில் அவ்வப் போது மேலோங்கி நிற்கும் குழு அல்லது தலைவரால் வரையறுக்கப்படும் கட்சி மார்க்கம்) என்பதற்கு மாற்றாக சோசலிச அறநெறிகளுக்குக் கிடைக்கக்கூடிய ஒரே அடிப்படையை இன்னும் வழங்குவது மார்க்சின் தத்துவ ரீதியான மானுடவியல்தான். இப்பிரச்சனை யானது, நடப்புக்கால சோசலிசச் சிந்தனையில் எவ்வளவு குறைத்து மதிப்பிடப்பட்டு வருகிறதோ அவ்வளவு அவசரமானதுமாகும். ஏனெனில் இது உணர்ச்சிக்கும் விவாதத்துக்கும் உரிய பிரச்சனை மட்டுமல்ல; அரசியல் செயல்பாட்டுக்கும் இப்போது 'மெய்யாக நிலவும்' சோசலிசங்களுக்கும் உரிய பிரச்சனையுமாகும்.

சாரமற்ற மிகையுணர்ச்சியைச் சற்றும் சகியாத மார்க்ஸ், ஒரு மனிதநேயர்; அறிவொளி மரபின் வாரிசு; அம்மரபில் ஊறியிருந்தவர் அவர். 'மனித சாரத்தை' இயற்கையிலிருந்தும், வர்க்கப் பிரிவினை கள் கொண்ட சமுதாயம் என்ற மனிதனால் உருவாக் கப்பட்ட சிறையிலிருந்தும் விடுவித்தல் என்ற ஒரு மகத்தான அறத் திட்டத்திற்குச் சேவை புரிவதற்காக அவரால் தெரிவு செய்யப்பட்ட கருவிதான் அவரது மேதமை. மார்க்சின் இந்தப் பகுதிக்குச் சான்றாக விளங்குவது, இன்றும் மங்காது நிற்கும் அவரது கவர்ச்சிதான். இதற்கும் அவரை வெறுமனே பூசிப்பது அல்லது வாய்ப்பாடுகளுக்கு அடிமையாவது என்பதற்கும் சம்பந்தமில்லை.

முடிவாக, மார்க்சின் துவக்ககாலச் சிந்தனையில் 'அறிவுக் கோட்பாட்டு முறிவு' என்பது ஏதும் இல்லை; அவரது சிந்தனையில் இடைவிடாத மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன; இம்மாற்றங்கள் இத்தகைய இயக்கப் போக்குகளில் இருப்பதுபோல சமச்சீரற்றவை. அவரது கடைசிப் பத்தாண்டு காலத்தில், ஒரு கருத்தாக்கப் பாய்ச்சல் உருவாகி வந்தது. அது உலகளாவிய முதலாளியங்களுக்கு சமகாலத்தவையாக இருந்த பிற சமுதாயங்களுக்கும் அவரது பகுப்பாய்வு எல்லையை விரிவுபடுத்தும் முயற்சியாகும். இம்முயற்சியில் அவரது மரணம் குறுக்கிட்டு அதை நிறுத்தி விட்டது. மார்க்ஸ் ஒரு அறிவாளி மட்டுமல்ல, சமூக நீதிக்கான வேட்கை மிகுந்த மனிதருமாவார். இந்த மிகப் பெரும் புரட்சிகர அறிவாளிக்கு உரிய மரியாதையை நாம் வழங்க வேண்டுமானால், அவர் எப்படி இருந்தாரோ அப்படியே பார்க்க வேண்டுமேயன்றி அவரை ஒரு விக்கிரகமாக்கியல்ல. அவரை அறிந்து கொள்வது என்பது அவரில் மாற்றத்தைக் காண்பதே. அவர் ''பக்கம் சார்பு கொள்வது'' என்பது அவரிடத்திலுள்ள மிகச் சிறப்பானவற்றை சுவீகரித்துக் கொள்ள முயற்சிப்பதுதான். புதிய உலகங்களின் வருகை பற்றிய அவரது கிரகிப்பு, விமர்சன, சுய விமர்சனத் திறன், ஈவிரக்கமற்ற அறிவுலக நேர்மை, உறுதி, அறப்பற்று ஆகியவைதான் மார்க்சிடமிருந்த மிகச் சிறப்பான அம்சங்கள்.

## குறிப்புகள்

1. தியோடர் ஷானின் (Teodor Shanin): மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் பேராசிரியராகப் பணிபுரிந்த தியோடர் ஷானினின் இக்கட்டுரையின் வாதுரைகள் விரிவுபடுத்தப்பட்ட வடிவங்களில் அவரது 'பிந்திய மார்க்'சும் ரஷ்யப் பாதையும் ('Late Marx' and the Russian Road, Monthly Review Press, New York, 1983) என்ற நூலில் இடம் பெற்றுள்ளன. இக்கட்டுரை யின் ஆங்கில மூலம் Monthly Review: Vol. 35, No.2 (June 1983) இதழில் வெளிவந்தது. அவரது பிற நூல்களில் குறிப்பிடத்தக்கவை: The Awkward Class; Peasants and Peasant Societies; The Rules of the Game; Medals in Scholarly Thought.
2. மெஹ்ரிங் (Franz Mehring, 1846 - 1919): ஜெர்மானிய சோசலிச (சமூக) ஜனநாயகவாதி; இலக்கிய விமர்சகர், எழுத்தாளர், வரலாற்றாசிரியர், ஜெர்மானிய இடது சாரிப் பிரிவின் தலைவர். ரோஸா லுக்ஸம்பர்க்கின் ஸ்பார்டகஸ் கழகத்தில் உறுப்பினராக இருந்த மெஹ்ரிங் ஜெர்மானியப் பொதுவுடைமைக் கட்சியை நிறுவதில் துணைபுரிந்தார்.
3. ஹருகிவாடா (Haruki Wada) 'மார்க்சும் புரட்சிகர ரஷ்யாவும்' (Marx and Revolutionary Russia) என்ற நூலை எழுதிய ஜப்பானிய மார்க்சியவாதி.



படிப்பகம்

www.padippakam.com



4. ஹெர்ஸன் (கெர்ட்ஸென்) - Alexander Ivonovich Herzen 1812 - 70): ரஷ்ய நரோத்னிக்வாதத்தின் முக்கியத் தத்துவவாதி. முற்போக்கான பத்திரிகையாளர். ஜார் ஆட்சியை வன்முறையின் மூலம் தூக்கியெறிய முயன்ற 'டிசம்பரிஸ்டுகள்' என்ற குழுவினரைப் போற்றியவர். இயங்கியலை நன்கு கற்றவர். 'புரட்சிக்கான இலக்கணம் இயங்கியல் ஆகும்' (Dialectics is the algebra of revolution) என்பது அவரது புகழ்பெற்ற கூற்று. 1846இல் ரஷ்யாவை விட்டு வெளியேறிய அவர் பின்னர் தாயகம் திரும்பவேயில்லை. 1848ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சியில் பங்கேற்றார். ரஷ்யா, முதலாளியக் கட்டத்தை அடைவதைத் தவிர்த்து விட்டு நேரடியாகவே சோசலிசத்தை அடைய முடியும் என்றும் அதன் பொருட்டு விவசாயிகள் கம்யூன் போன்ற அமைப்புகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கருதியவர். அவரைக் குறித்து லெனின் In Memory of Herzen என்ற கட்டுரையில் மதிப்பீடு செய்துள்ளார்.

5. செர்னிஷெவ்ஸ்கி (Nikolai Gavrilovich Chernyshevski 1828 - 1899): ரஷ்ய நரோத்னிக்வாதத்தின் முக்கியத் தத்துவாசிரியர், எழுத்தாளர், பத்திரிகையாளர். வரலாறு, பொருளாதாரம், சமூகவியல், அழகியல் முதலானவற்றைக் குறித்து விரிவாக எழுதியவர். 1862இல் ஜார் அரசாங்கத்தால் சிறையிலடைக்கப் பட்டிருந்த போது 'செய்ய வேண்டியது என்ன?' என்ற நாவலை எழுதினார். (புரட்சிகர மார்க்சியக் கட்சி, முன்னணிப்படை ஆகியன குறித்து லெனின் எழுதிய நூலின் தலைப்பும் 'செய்ய வேண்டியது என்ன?' என்பது குறிப்பிடத்தக்கது) இலட்சியக் குறிக்கோளும் புலனடக்கமும் எளிய வாழ்க்கையும் மேற்கொண்ட நாயகர்களும் நாயகிகளும் இடம் பெறும் அந்த நாவல் பல தலைமுறைகளைச் சேர்ந்த புரட்சியாளர்களுக்கு ஆதர்சமாக விளங்கியது. சைபீரியச் சிறைகளிலும் நாடு கடத்தப்படுதலிலும் அவரது எஞ்சிய வாழ்நாட்கள் கழிந்தன.

6. கொசாக்கியர்கள் (Cossacks): ரஷ்யாவின் தென் பகுதி, உக்ரையன், சைபீரியா ஆகியவற்றைச் சார்ந்த இனத்தவர். மத்திய காலத்திலிருந்தே குதிரையேற்றம், போர்க் கலை ஆகியவற்றில் தேர்ச்சி மிகுந்த இவர்களைக் கொண்ட தனிப்படைப் பிரிவுகள் ரஷ்யாவின் எல்லா ஆட்சிக் காலங்களிலும் இருந்து வந்துள்ளன.

7. உழைப்பாளர் விடுதலை (Emancipation of Labour): ஜாராட்சியின் கொடுமைக்குத் தப்பி ஜெனிவாவில் வாழ்ந்த ரஷ்யப் புரட்சிகரச் சிந்தனையாளர்களால் உருவாக்கப்பட்ட முதல் ரஷ்ய மார்க்சிய அமைப்பு ஆகும். அதனை நிறுவியவர்களில் முக்கியவரான ஜார்ஜி பிளாக்கானோவ் (Georgi Valentinorich Plakhanov 1856 - 1918) பின்னர் ரஷ்ய சோசலிச (சமூக) ஜனநாயகக் கட்சியில் (RSDP) சேர்ந்தார். அக்கட்சி 1903இல் பிளவுண்டபோது லெனின் 'போல்ஷ்விக்' (பெரும் பான்மையினர்) பிரிவுக்கும் பிளக்கானோவ் 'மென்ஷ்விக்' (சிறுபான்மையினர்) பிரிவுக்கும் தலைவர்களாயினர்.

8. கிரண்ட்ரிஸ் (Grundrisse: Foundations of the Critique of Political Economy (Rough Drafts) : 1857-58ஆம் ஆண்டுக்காலப் பனிக்காலத்தில் மார்க்ஸ் தனது சுய தெளிவுக்காக ஏழு நோட்டுப் புத்தகங்களில் எழுதிய செழுமைப்படுத்தப்படாத வரைவுக் குறிப்புகள். அந்தக் கையெழுத்துப்படிகள், இதுவரை சரியாக விளக்கப்படாத காரணங்களால் காணாமல் போய்விட்டன. பின்னர் அது ஜெர்மானிய மூலத்தில் முதன்முறையாக 1953இல் முழுமையாகப் பிரசுரிக்கப் பட்டது. இதற்கிடையே 1939, 1947ஆம் ஆண்டுகளில் அது இரண்டு பகுதிகளாக மாஸ்கோவிலிருந்த மார்க்ஸ் - ஏங்கல்ஸ் - லெனின் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. அந்நிறுவனம் மிகக் குறைவான பிரதிகளையே அச்சிட்டதால், 3 அல்லது 4 பிரதிகள் மட்டுமே மேற்கு நாடுகளுக்கு சென்றதாகக் கூறப் படுகிறது. அதன் முழுமையான ஆங்கில மொழி யாக்கம் 1980களில் மாஸ்கோ முன்னேற்றப் பதிப்பகத் தாலும் 1993 இல் இலண்டனில் பெங்குவின் பதிப் பகத்தாலும் வெளியிடப்பட்டது. 'கிரண்ட்ரிஸ்' வெளிவந்த பிறகு அதுவரை மார்க்சியம் குறித்துத் தரப்பட்டு வந்த விளக்கங்கள் அனைத்தும் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

9. (அ) மாரெர் (George Ludwig Von Maurer) 1790-1872 : ஜெர்மானிய வரலாற்றாசிரியர். நிலத்தில் பொது வுடைமை குறித்த வரலாற்றையும் மத்திய காலத்தில் நகரங்கள் உருவான வரலாறு, சமூக உறவுகள் ஆகியன குறித்தும் எழுதியவர்.

(ஆ) மார்கன் (Henry Morgan) 1818-1881 : பண்டைய சமுதாயங்கள், தொல் குடிமக்கள் ஆகியோர் பற்றி எழுதிய வரலாற்றறிஞர். 1877இல் வெளியான அவரது 'தொல் சமுதாயம்' (Ancient Society) என்ற நூல், பல ஆண்டுகளுக்குப் பின் ஏங்கல்ஸ் எழுதிய 'குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்ற புகழ்பெற்ற நூலுக்கு ஆதர்சமாக அமைந்தது.

10. தொடக்க சோசலிச (மூலதன) திரட்டல் (Primilive Socialist Accumulation) : புரட்சிக்குப் பிந்திய ரஷ்யாவில் சோசலிசத்தைக் கட்டுவதற்காகத் தேவைப்படும் மூலதனத்தை எவ்வாறு திரட்டுவது என்ற கேள்வி எழுந்தது. முதலாளியம் தோன்றிய நாடுகளில் முதலாளிவர்க்கம் கையாண்ட ஈவிரக்கமற்ற சுரண்டல், கப்பற் கொள்ளை, காலனிய நாடுகளைச் சுரண்டுதல், விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியேற்றுதல் போன்ற முறைகளை சோசலிச அரசால் செய்ய முடியாததாகையாலும், உள்நாட்டிலிருந்து மட்டுமே மூலதனத்தைத் திரட்ட முடியும் என்பதாலும் விவசாயி களிடமிருந்து உபரியை (surplus) பெறுவதற்கான ஒரு திட்டத்தை போல்ஷ்விக் கட்சியிலிருந்த யெவ்கனி பிரியோப்ரெஸென்ஸ்கி (Evgeny Preobrazhensky) என்ற பொருளாதார அறிஞர் முன்வைத்தார். அவரது திட்டமே 'தொடக்க சோசலிச மூலதனத் திரட்டல்' என அழைக்கப்பட்டது. அவர், ஸ்டாலினுக்கு எதிரான குழுவில் இருந்தார். அவரது கோட்பாட்டை நிராகரித்த ஸ்டாலின் பின்னர் 'ஒரு நாட்டில் சோசலிசம்' என்ற முழக்கத்தின் கீழ் கூட்டுப்பண்ணை முறையைக் கொண்டு வந்து விவசாயிகளைக் கசக்கிப்பிழிந்து உபரியைத் திரட்டி நாட்டைத் தொழில் மயமாக்கு வதைத் தொடங்கினார். அவர் கடைப்பிடித்த வழிமுறைகள், பிரியோப்சிரஸென்ஸ்கி பரிந்துரைத்த மென்மையான திட்டத்திற்கு நேர்மாறானவை.

தமிழாக்கமும் குறிப்புகளும்:
**எஸ்.வி.ராஜதுரை**

நன்றி: Monthly Review, June 1983.



படிப்பகம்

www.padippakam.com



# இந்திய வரலாற்றில் சாதி

இர்ஃபான் அபிப்

இந்தியாவின் மிகவும் தனித்தன்மை வாய்ந்த சமூக நிறுவனமாக சாதி இருக்கிறது; இதைப்போன்ற இன்னொன்று இல்லை என்றே பலரும் சொல்வார்கள். நம் வரலாற்றையும் பண்பாட்டையும் பற்றிய எந்த விளக்கமும், சாதி முறையைப் பற்றிய விளக்கம் அதில் இல்லாவிட்டால் உரிய கவனிப்பைப் பெற முடியாது. டி.டி.கோசாம்பியுடைய புலமையின் நிலைத்துநிற்கும் சாதனைகளில் ஒன்று, வரலாற்றுப் பரிமாணத்தைப் பற்றிய விமர்சன ரீதிப் பகுப்பாய்வுடன் மானுடவியல் கள ஆய்வின் உயிர்த்துடிப்பான உணர்வை இணைப்பதில் அவருக்கிருந்த திறமையாகும். இந்திய வரலாற்றில் சாதியின் பாத்திரம் என்னும் கருப்பொருளை இந்த சொற்பொழிவுக்குத் தலைப்பாக தேர்ந்தெடுத்ததன் மூலம், கோசாம்பியின் மதிப்புமிக்க ஆழமான புரிதல்கள் சிலவற்றை இதில் தொடமுடியும் என்று நம்புகிறேன்.

இப்படிப்பட்ட முயற்சி எதுவும் முதலில் வரையறைச் சிக்கலை எதிர்கொண்டாக வேண்டும். இது கடினமாகவே இருக்கும் என்பதில் வியப்பொன்றும் இல்லை; ஆனாலும் ஒரு புறப்பாட்டு நிலையாகப் பயன்படக்கூடிய உடனடி நடைமுறை வரையறைக்கு முயலமுடியும். சாதி என்பது தெளிவாக இனம்பிரித்துக் காட்டப்பட்டுள்ள ஒரு தனி சமூகமாகும்; அதன் உறுப்பினர்கள் அகமணம் (மற்றும் பலமணம்) வழியாக ஒருவருக்கொருவர் கட்டுண்டிருக்கிறார்கள்; மேலும் பெரும்பாலும், நிசமான அல்லது கருத்தளவான ஒரு பொது மரபுவழி வேலை அல்லது கடமையாலும் அவர்கள் கட்டுண்டிருக்கிறார்கள் என நாம் கூறலாம். இருந்தாலும் இந்த வரையறை அவ்வளவு நிறைவானதல்ல என்றே பல சமூகவியலாளர்களும் கருதுவதாகத் தெரிகிறது. மற்ற சாதிகளுடனான உறவில் ஒரு சாதியின் தகுதிபற்றிய ஒரு பார்வை இருப்பதையும் நாம் தெளிவுபடக் கூறியாக வேண்டும் என்றும் அவர்கள் கூறுவார்கள்: இந்த தகுதி/தரம், தன் சாதியுடன் ஒப்பிடும்போது பிற சாதிகளுக்குள்ள 'சுத்த' 'அசுத்த' மட்டத்தில் வெளிப்படுகிறது; மேலும் ஒவ்வொரு சாதியும் கடைப்பிடிக்கிற அல்லது அதற்கு விதிக்கப்பட்டிருக்கிற குறிப்பான மதச்சடங்குகள் மற்றும் நடைமுறைகளிலும் அது வெளியிடப் படுகிறது.[1] ஹோமோ ஹயரார்க்கிக்கஸ் என்னும் தன் நூலில் லூயி தியுமோ(ன்) (நூலின் தலைப்பே காட்டுவதுபோல்) ஏற்றத்தாழ்வு/ கோபுர தத்துவமே சாதிமுறையின் நடுமையமும் இதயமுமாக இருக்கிறது, அஃதில்லாவிடில் சாதியே இருக்காது என்று கருதுகிறார்.[2]

நாம் முன்வைத்துள்ள மிக எளிய வரையறையையே நாம் எடுத்துக்கொள்ளலாமா அல்லது தியுமோ(ன்) ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு வரையறைத்தான் நாம் ஏற்க வேண்டுமா என்பது வெறும் சொல்பொருள் ஆய்வுசார்ந்த விசயமல்ல; சாதி அமைப்பின் வரலாற்றையும் நமது நாகரிகத்தின் வரலாற்றையும் புரிந்துகொள்ள அடிப்படையான முக்கியத்துவமுடைய விசயம் அது. எனவே, தியுமோ(ன்)-இன் கருத்துகளை சற்றுவிரிவாக ஆராய்வதில் வாசகரின் ஈடுபாட்டை வேண்டுகிறேன்.

தியுமோ(ன்)-ஐப் பொறுத்தவரை, சாதி அமைப்பை தன் சாரமாகிய ('இந்து') மதக் கருத்தியலின் அடிப்படையிலேயே புரிந்து கொள்ள வேண்டும், அது வெளிப்படுத்தும் அளவற்ற விதங்கள் அனைத்திலும் அது பரவுகிறது. தகுதிகளின் முடிவற்ற- சிக்கலான-ஒன்றுக்கொன்று முரண்படக் கூட செய்கிற தர ஏற்பாடுகளில் அது பிரதிபலிக்கிறது: உயர்தகுதி எப்போதும் பிராமணர்களுக்கே சொந்தமானது, இவர்களே 'உயர்தூய்மை' ஆனவர்கள்; அதன் சடங்குமுறைகள் பெரும்பான்மையானவற்றின் மேல் அதிகாரமுடையவர்கள்.[3] அதிகாரமோ செல்வமோ நடைமுறையில் பகிரப்பட்டுள்ள முறையிலிருந்து தராதரம் தோன்றுவதுமில்லை, அதற்கு ஒத்து அமைவதுமில்லை; மாறாக - சொல்லப்போனால் - தூய்மை அல்லது தீட்டு என்னும் அடிப்படைக் கொள்கையின் பிரிவாக்கத்திலிருந்தே அது எழுகிறது. இவ்வாறு சாதிகள் என்பவை வர்க்கங்களின் ஒரு 'அதீத' வடிவமும் அல்ல,[4] அல்லது சாதிமுறையானது ஒரு சமூக அடுக்கமைப்பு முறையும் அல்ல: செல்வ அல்லது அதிகார அளவுக்கு இணையாக அது அமைவதுமில்லை, அதற்குத் தேவையுமில்லை.[5] சாதியை ''முழுமையின் பகுதி''யாக புரிந்துகொள்ள வேண்டும் என தியுமோ(ன்) வலியுறுத்துகிறார் (இது அவருக்குப் பிடித்தமான தொடர்). இதன் பொருள், சமுதாயம் முழுவதும் சாதிகளாகப் பிரிக்கப்பட்டாக வேண்டும், சமூகப் பகுதி ஏதும் கணிசமான அளவில் மீதமாகக்கூடாது; அதாவது சமூக அமைப்பின் ஒரே வடிவமாக அல்லது ஆதிக்க வடிவமாக சாதிமட்டுமே நிலவ வேண்டும் அல்லது அது நிலவவே முடியாது என்பதே.[6]

இதை எல்லாம் ஏற்றுக்கொள்ளலாம் என்றால்; அதாவது 'தூய்மை' என்ற கருத்தியலில் இருந்தே சாதி எழுந்தது - ஒப்பீட்டளவிலான 'தூய்மை' என்னும்



படிப்பகம்

www.padippakam.com



அடிப்படையிலான படிவரிசை முறை என்னும் விரிவாக்கமாக அது வெளிப்பட்டது -- அதற்கும் பொருளியல் நிகழ்வுகளுக்கும் எந்த நேர்ப் பொருத்தமும் இல்லை என்றால்; பின் இந்திய சமுதாயத்தில் பொருளியல் முனைப்பு நிச்சயமாக மிகவும் வலுவற்றதாகவே இருந்தாக வேண்டும். மேலும் சாதிமுறையானது இந்தியாவுக்கு ஒரு மாறாத படிநிலை அமைப்பைத் தந்திருக்கிறது என்றால், வரலாறென்று பொதுவாக ஒருவர் அங்கீகரிக்கக்கூடிய விதமான வரலாறு இந்தியாவுக்கு இருக்க முடியாது. இவ்விரு நிலைபாடுகளையும் தியுமோ(ன்) விருப்ப மாக ஏற்கிறார்.

''பொருளியல் என்னும் துறையே இந்திய மரபுடன் பொருந்துமா என்னும் கேள்வியையே நான் எழுப்ப விரும்புகிறேன்'' என்கிறார் அவர். அதை நியாயப்படுத்துவதற்காக பின்வரும் 'எளிய' உண்மையை சுட்டிக் காட்டுகிறார். அதாவது, ''நமது (மேலை) சமுதாயத்தில் கூட 18ஆம் நூற்றாண்டின் முடிவில்தான் அரசியலிலிருந்து விடுபட்ட தனித்த துறையாக பொருளியல் தோன்றியது.''[7] இந்த வாதம் எந்த அளவுக்கு குதர்க்கமாக இருக்கிறது என்றால் தியூமோனை சரியாகத்தான் புரிந்திருக்கிறோமா என்ற தயக்கம் நமக்கு ஏற்படுகிறது. ஒரு காலத்தில் சமூகவியல் என்ற அறிவியல் இருக்கவில்லை என்பதால் அந்த இயல் வருவதற்கு முன்பு சமூகங்களே இருந்ததில்லை என்று ஆகிவிடுமா? அதுபோலவே 18ஆம் நூற்றாண்டுக்கு முன்பு பொருளியல் ஒரு அறிவியலாக இருந்ததில்லை என்பதால் ஆங்கிலேய உள்நாட்டுப் போரின் பின்னணியில் இருந்த பொருளியல் காரணிகளைப் பற்றி பேசுவதை நாம் தவிர்த்து விடுகிறோமா? அல்லது வேறெந்த பழைய வரலாற்று நிகழ்ச்சியை அல்லது நிகழ்முறையைப் பற்றியும் பேசாமல் விட்டுவிடுகிறோமா?

அப்படியே இந்தியாவை வரலாறு அற்றதாகவும் ஆக்கவேண்டி வருகிறது:

> இந்திய இலக்கியத்திலும் நாகரிகத்திலும் பொதுவாக காலத்தைப்பற்றி - நிகழ்வைப்பற்றி - வரலாற்றைப்பற்றி நிலவும் அக்கறையின்மை யால் வரலாற்றாளரின் பணி மிகவும் கடினமான தாகிறது. ஆனால் இத்தகைய நிலைமைகளில், திறித்தவ நாகரிகத்தின் வரலாற்றுடனோ சீனாவின் வரலாற்றுடனோ கூட (!) ஒருவாறு ஒப்பிடத்தக்க தான இந்திய வரலாறு என்ற ஒன்று இருக்கிறதா?[8]

வேறுவிதமாகச் சொன்னால், தன் வாழ்க்கை வரலாற்றை தானே எழுதியிராத எவரின் வாழ்க்கை வரலாற்றையும் நாம் எழுத முடியாது என்று கூறிவிட முடியுமா?

இந்தியாவின் வரலாறின்மையை ஒருவர் எவ்வாறு விளக்க முடியும் என்பதற்கு ஆங்காங்கு சில காட்டுகளைத் தருகிறார் தியுமோ(ன்). அவற்றில் மிகுந்த தாக்கம் ஏற்படுத்தும் காட்டு, புத்தத்தின் எழுச்சியையும் வீழ்ச்சியையும் பற்றிய அவரது விளக்கமாகும். சாதிமுறைக் கருத்தியலுக்கு, தனி நபர்கள் சமூகத்தைத் துறப்பது தேவைப்படுகிறது என்கிறார் அவர்[9]. 'துறவி'களில் சிலர் பிராமணர் களுடன் போட்டியிடத் தொடங்கினார்கள். அந்தப் போட்டியிலிருந்து புத்தர்களும் சமணர்களும் அகிம்சைக் கோட்பாட்டை விளக்கினார்கள். விலங்கு களை கொல்வதையும் மாமிசம் உண்பதையும் அசுத்தமான செயல்கள் எனக் கண்டித்தார்கள். பார்ப்பனர்கள் விலங்குப்பலி வேள்வியை கைவிடு வதற்கும், தம்மை எதிர்த்து நின்றவர்களைவிடவும் அதிக அளவிலும் முறைப்படியாகவும் சைவ உணவை வலியுறுத்துவதற்கும் இது இட்டுச் சென்றது.[10] இவ்வாறு பவுத்தர்கள் வெல்லப்பட்டார்கள். மரக்கறி உணவு, சுத்தத்துக்கு மேலுமொரு அடையாள மாகியது. அடுத்த சுற்று துறவிகள் (காட்டாக, லிங்காயதர்கள்) வேறு ஏதாவது மாறுபட்ட போட்டிக் கருத்துகளுடன் திரும்ப வரும்வரை பிராமணர்களும் அதிக சிக்கல் இல்லாமல் காலம் தள்ளினார்கள். ஆரம்பகால புத்தத்தின் வெற்றியை விளக்க, மேய்ச்சல் வாழ்விலிருந்து விவசாய வாழ்வுக்கு ஏற்பட்ட நிலைமாற்றத்தை கோசாம்பி காரணமாகக் காட்ட லாம்; நகரங்களின் தோற்றத்தையும் வணிகத்தின் வளர்ச்சியையும் ஆர்.எஸ்.சர்மா காரணமாகக் காட்டலாம். ஆனால் அவர்களின் முயற்சிகள் எல்லாம் வீண். அதன் பின்னுள்ள ஒரே காரணி, 'தூய்மை எனும் மரபுக்கு விடுக்கப்பட்ட மிக வெற்றிகரமான சவால்தான்; மேலும் அப்படிப்பட்ட ஒரு சவாலை சாத்தியமாக்கியதே, மறுபடியும், 'துறவு' என்ற நிகழ்வுதான்.

சாதி அமைப்பபைப்பற்றிய சமகால மேலை சமூகவியல் அறிவர் ஒருவரின் கற்பனைக்குப் பொருத்தமான இந்திய வரலாறு இப்படித்தான் இருக்கும் என்றால், இந்திய வரலாற்றைவிட இந்தக் கற்பனையில்தான் ஏதோ கோளாறு இருக்க அதிக வாய்ப்புள்ளது அல்லவா? உண்மையில் சாதியைப் பற்றிய தியுமோ(ன்)-இன் மிகவும் குறுகிய பார்வைக்கு தாராளமாக ஒரு சிறந்த வரலாற்று விளக்கம் இருக்கலாம். கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேலாக பாரம்பரிய வேலைப்பிரிவினை தகர்க்கப் படாவிட்டாலும் பெருமளவு உலுக்கப்பட்டிருக்கிறது.[11] அதன் விளைவாக எஞ்சியுள்ள சாதியமைப்பின் ஒதுக்குப்புறத்துக்கு அதிகரிக்கும் அளவில் இந்த அம்சம் பின் தள்ளப்பட்டு விட்டது;[12] ஆயினும் முற்றிலும் மதச்சார்பானதும் தனியாள் சார்ந்ததுமான அம்சங்கள் அவ்வளவாக பாதிக்கப்படவில்லை. (ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தை நியாயப்படுத்தும் தன் வேலையைச் செய்யும் ஒரு குறிப்பிட்ட மதத்தின் கருத்தியலானது, அந்தச் சமுதாயம் மறைந்து நீண்ட காலம் ஆன பின்பும் உயிர் பிழைத்திருக்கிறது - இதுவோ எவ்வகையிலும் இந்தியாவுக்கு மட்டுமே யான தனித்தன்மை அல்ல என்பதை நாம் காண



படிப்பகம்

www.padippakam.com



முடியும்). இந்நிலையில் (மதக்கூறுகளையே முதன்மையாய்க் கொண்ட) சாதி அமைப்பின் எச்சங்களையே, அதன் மொத்தமான - அடிப்படைக் கூறுகளாக எடுத்துக் கொள்ளவும், அதன் மறைந்து வரும் (பொருளியல்) கூறுகளை இரண்டாம் பட்சமாக்கவும், கொஞ்சம் விட்டால் தொடர்பற்றவை யாகக்கூட கொள்ளவும் தூண்டுதல் ஏற்படுவது இயல்பே. இந்தத் தூண்டுதலுக்கு பலியாகிவிட்டது மட்டுமல்ல, இந்தியாவின் நிலையை விளக்க இந்த ஒரு தவறான ஊகத்தின் மீது ஒரு முழுக் கோட்பாட்டு கட்டிடத்தையே எழுப்பி விடுகிறார் தியுமோ(ன்). ஆனால் அதன்பின் இந்தியாவின் ஏற்றத்தாழ்வான மனிதரைப் பற்றிய உண்மையாக அவர் முன் வைப்பது, (அவரது இன்னொரு நம்பிக்கையான, 'இன்றைய மேலைச் சமுதாயம் சமத்துவமானது' என்பதைப் போலவே) ஏற்றுக்கொள்ள கடினமான ஒன்றாகவே உள்ளது.

## II

ஆக, நம் கருத்தை மாற்றுவதற்கு ஹோமோ ஹயராக்கிக்கஸ் தவறிவிடுமாயின் இனி நாம் எங்கிருந்து தொடங்குவது? கோசாம்பி வெளிப் படையாகவும் நிலை உறுதியுடனும் கடைப்பிடிக்கும் அணுகுமுறையை - கார்ல் மார்க்ஸ் அறிமுகப்படுத்திய அணுகுமுறையை - பயன்படுத்துவது நலம்பயக்கும் என்பது என் கருத்து. சங்கிலித் தொடரான வளர்ச்சிப் போக்கில் எழுந்துள்ள வெவ்வேறு சமூக அமைவு களில் சாதியின் பாத்திரம் என்ன என்னும் முறையி லேயே முதன்மையாக அது அணுகப்படவேண்டும். 'உழைப்பு நிகழ்முறை' என்னும் வடிவை அடிப் படையாகக் கொண்டிருக்கும் அளவில் ஒரு சமூக அமைவானது, சமூகத்திலுள்ள உற்பத்தியாளர்கள் ஒரு 'உபரியை' உருவாக்க முடிந்தபிறகே உருவாகிறது. இந்த கட்டம் எட்டப்படும் முன்பாகவே சாதியைப் போன்ற ஒரு சமூக நிறுவனம் நிலவ வேண்டும் என எதிர்பார்ப்பது வீணானதாகும். உண்மையில் தியுமோ(ன்) இதை அங்கீகரிக்கிறார்: ஏனெனில் சாதிகளின் தோற்றத்துக்கு உழைப்பில் பிரிவினை ஒரு முன்தேவையாகும், பண்டைச் சமுதாயங்களில் அதைக் காணமுடியாது என்பதை அவர் ஏற்கிறார்.[13] ரிக்வேதத்தில் வரும் புருச சூக்தம், நான்கு வருணங்களைப் பற்றிய அந்த முதல் அறிக்கை, சாதிகளைப் பற்றியது என்பதைவிடவும் அதிகமாய் (பின்வரும்) சமூக வகுப்புகளைப்பற்றிய விவரணை யாகவே இருக்கிறது; **ராஜன்யர்** எனப்பட்ட பிரபுக்குலம், **பிராமணர்** எனப்பட்ட புரோகித வகுப்பு, **விஸ்** எனப்பட்ட பெருங்குடிகள் (பெரிதும் விவசாயிகள்) மற்றும் **தஸ்யுக்கள்** எனப்பட்ட சேவக குடிகளிலிருந்து உதித்த சூத்திரர்கள். வேத காலத்தில் இன்னும் மரபுவழி வேலைப் பிரிவினை அல்லது சுகமான வடிவம் எதைப்பற்றிய குறிப்பும் இல்லை. இவ்வாறு, பின்னால் வளர இருந்த சாதிமுறையின் அறிகுறிகளை தொடக்கத்தில் வருணங்கள் அதிகம் வெளிக்காட்டவில்லை.

''அன் இன்ட்ரக்ஷன் ட்டுத ஸ்ட்டடி ஆவ் இண்டியன் ஹிஸ்ட்ரி'' என்னும் தன் நூலில் கோசாம்பி ஒரு பார்வையை வழங்குகிறார். ஆதி வேதிய சமூகத்தில் நிலவிய வருணங்களில் உட்பிரிவினை ஏதும் நடந்து அதிலிருந்து சாதிகள் எழவில்லை, மாறாக முற்றிலும் ஒரு புற நிகழ்முறையில் இருந்தே அது எழுந்தது என்கிறார்: 'ஒரு பொதுவான சமுதாயத்துக்குள் பழங்குடிக் கூறுகள் ஒன்றிணைத்துக் கொள்ளப்படுவதையே இந்திய வரலாற்றுப் போக்கு முழுவதும் காட்டுகிறது. இந்த நிகழ்வே ... இந்திய சமூகத்தின் மிக எடுப்பான அம்சமாகிய சாதியின் அடித்தளமாக அமைகிறது.'[14] இந்த அறிவார்ந்த கருத்தை உறுதிப்படுத்த ஜாதி என்னும் சொல்லின் பயன்பாட்டிலிருந்தே சான்றுகாட்ட முடியும். புத்தர் சாக்கிய ஜாதியைச் சேர்ந்தவர் எனறு பேசும்போது, ஜாதி என்ற சொல் வெளிப்படையாகவே ஓர் இனக் குழுவைத்தான் (பழங்குடியைத்தான்) குறிக்கிறது. அதே நூலிலேயே 'உயர்' மற்றும் 'கடை' ஜாதிகளைப் பற்றியும் நாம் வாசிக்கும்போது அவை சாதிகளையே தெளிவாக குறிக்கின்றன.[15] இனக்குழுக்கள் பெரும் பாலும் அகமணத்தையே தீவிரமாகக் கடைப்பிடிக் கின்றன: அதனால்தான் குலத்துக்கு வெளியில் மணம் முடிப்பதைத் தவிர்ப்பதற்காக தம் சொந்த சகோதரி களையே மணம்முடித்த சாக்கிய சகோதரர்களைப் பற்றி புத்தர் கூறுகிறார்.[16] இனக்குழுக்கள் (பழங் குடிகள்/ குலங்கள்) 'பொதுநிலை சமுதாய'த்தில் நுழைந்த போது தம் அகமண வழக்கங்களையும் அந்த சமுதாயத்துக்குள் அவை எடுத்துச்சென்றன என நாம் கொள்ளலாம் அல்லவா? அப்படியே, இனக் குழுவானது ஏற்கெனவே ஒரு விவசாய குடியாக இருந்திருந்தால், பின் வெறுமனே அது தன் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு விவசாய சாதியாக ஆகிக்கொள்ளும்.

இருந்தாலும், 'பொது சமூகத்தில் நுழையும்' பழங்குடிகளில் காடுகளில் வாழ்ந்துவரும் தொன்மை யான வேட்டை / உணவு சேகரிப்புக் குலங்களும் அடங்கும். முன்னேறி வந்த விவசாய குலங்களால் இவை கீழ்ப்படுத்தப்படும். சாக்கியர்களுக்கும் கோளிகளுக்கும் இடையில் நடந்த போராட்டத்தை இதற்கு சான்றாகக் காட்டலாம்.[17] காட்டு மக்களாகிய நாகர்கள்பற்றிய நீண்ட பகுதியை கோசாம்பி தந்துள்ளார். ஆரியர் முன்னேறும் முன்பே இவர்கள் பின்வாங்குகிறார்கள், ஆனால் பார்ப்பனிய அறிவு மரபிலும் பின் வேதச் சடங்குகளிலும் தம் தடங்களைப் பதித்தே செல்கிறார்கள்.[18] உணவு சேகரிப்போர் ஒடுக்கப்பட்டவுடன் மிகவும் கீழ் சாதிகளாகிய அவர்கள் தாழ்த்தி வைக்கப்பட்டார்கள்; எந்த அளவுக்கு தாழ்வாக என்றால் நால்வருண அமைப்புக்கு வெளியிலேயே அவர்கள் நிறுத்தப்



படிப்பகம்

www.padippakam.com



பட்டார்கள்.[19] மனுஸ்மிருதி கூறும் 'கலப்பு சாதி'களின் கணக்கெடுப்பு, அத்தகைய சாதிகளே பெருமளவா யிருந்ததை காட்டுகிறது: சேர் ஆந்திரர் விலங்குகளை கண்ணி வைத்து பிடிக்கிறவர்கள்; கவர்த்தர்கள் படகோட்டிகள்; நிசாதர்கள் மீன் பிடிப்போர்; மேதர்கள், ஆந்திரர்கள், சுஞ்ச்சுக்கள், உக்கிரர்கள், புக்காசர்கள் ஆகியோர் 'வளைகளில் வாழும் பிராணிகளைப் பிடித்துக் கொல்வோர்'; கரவாரரும் திக்வனரும் தோல்வேலை செய்வோர்; பாண்டு சோபகர் பிரம்பு வேலை செய்வோர் (மனு, X, 32, 34, 36-37, 48-49). புத்த ஏடுகளில், சண்டாளர்களும் நிசாதர்களும் வேட்டைக்காரர்களாகக் காட்சியளிக் கிறார்கள். இவர்களே ஆதி 'தீண்டத் தகாத' சாதிகள்.[20] உழவுத் தொழிலில் ஈடுபடாதபடி இவர்கள் தடுக்கப் பட்டதாலும், அவர்களின் சொந்த பழைய அல்லது மாறிப்போன வேலைகளும் அற்ப அல்லது பருவ கால அளவிலான முக்கியத்துவமே பெற்றிருந்தாலும் சுதந்திரமில்லாத - அடிமைகளான - நிலமற்ற உழைப்பாளிகளின் பெரும் கையிருப்பாக அவர்கள் ஆனார்கள்; விவசாயிகளுக்கும் அவர்களைவிடவும் பெரிய நிலவுடைமையாளர்களுக்கும் மிகக் குறைந்த கூலிக்கு வேலைசெய்ய எளிதாகக் கிடைப்பவர்களாக ஆனார்கள். இந்த தொண்டூழிய சாதிகள் மீது மக்கள்தொகையின் மீத பகுதியினர் காட்டிய கசப்பான பகைமையானது, இந்த அடிப்படையான நல முரண்பாட்டிலிருந்தே எழுகிறது என்கிற பார்வையை தவிர்த்தல் கடினம். 'தூய்மை', 'தீட்டு' என்னும் கருத்துக்கள், இந்த அடிப்படையான பொருளியல் நிலவரத்தை நியாயப்படுத்துவதற்கான கருத்துக்களே.

விவசாய மற்றும் ஊழிய சாதிகளுக்கிடையிலான இந்த பிரிவினை, மிகப் பொதுப்படையான ஒரு உழைப்புப் பிரிவினை வடிவத்தை குறிக்கிறது. ஆனால் புத்த மதம் தோன்றுவதற்கு முன்பு நடைபெற்ற இரண்டாம் நகரப் புரட்சிமீது கவனத்தை ஈர்க்கிறார் ஆர்.எஸ்.சர்மா. (முதல் நகரப் புரட்சி ஹரப்பா நாகரிகத்துடையது).[21] உற்பத்தித்திறன்கள் பன்மடங்காய் பெருகியிருக்க வேண்டும் என்பதை இது குறிப்பால் உணர்த்துகிறது. 'புதிய, முழுநேர வல்லுநர்கள் ஏராளமான பேர்' இருக்க வேண்டு மானால் அதற்கு 'ஏ்ளைகுறடுகள், வெட்டுக் கத்திரிகள், அரிவாள்கள், சுழல் திரிகைகள் போன்ற உடலுழைப்பைக் குறைக்கும் புதிய கருவிகளும் எந்திரங்களும் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது, எவ்வளவு இன்றியமையாதது என்பதை கோர்டன் ச்சைல்டு வலியுறுத்துகிறார்.[22] இந்தக் கருவிகளில் சில (வெட்டுக் கத்திரிகள், சுழல் திரிகைகள்) கி.பி. முதலாம் நூற்றாண்டில் தட்சசிலத்தில் தோன்றின.[23] கொல்லர்களும் தச்சர்களும் குடியிருந்த 'உற்பத்தி யாளர் கிராமங்களை' **ஜாதகங்கள்** (புத்த ஜாதகக் கதைகள்) நமக்கு அறிமுகம் செய்கின்றன.[24] பழங்குடி களை கூட்டம் கூட்டமாக பொது சமுதாயத்துக்குள் கொண்டு வந்ததால், உருவாகிவந்த உழைப்புப் பிரிவினையின் அழுத்தத் தால், குழுக்கள் / பிரிவுகள் உருவாகத் தொடங்கியது இயல்பே. மூல இனக்குழுவில் இருந்து பிரிக்கப்பட்ட வெவ்வேறு கைத்தொழிலாளிகள் குறிப்பிட்ட சாதிகளாக உருவானார்கள். இத்தகைய 'கலப்பு சாதி'களில் தச்சர்கள், தேரோட்டிகள், மருத்துவர்கள் ஆகியோரையும் சேர்க்கிறான் மனு (X, 47-48). வணிக வளர்ச்சியால் உருவான இதே மாதிரியான ஒரு பாகுபாடு, வணிக சாதிகள் உருவாவதற்கு இட்டுச் சென்றது. இவையே ஜாதகங்களில் மலிந்து காணப்படுகின்றன. காலப்போக்கில் இவை வைசிய வருணத்தை முழுக்க தமதாக்கிக் கொள்ளும்.

சாதிச் சட்டகத்தில் பார்ப்பனர்களின் தகுதி அவர்களின் புரோகித செயல்பாடுகளிலிருந்தும் சாதி முறையைக் காக்கும் தர்மத்தின் காவலர்கள் என்ற அவர்களின் பொறுப்பிலிருந்துமே இயல்பாக வருகிறது. அவர்களின் தகுதிக்கு இன்னொரு காரணம் அவர்களுக்கிருந்த பஞ்சாங்க அறிவு; விவசாய வேலைகளை முறைப்படுத்த இது இன்றியமையாத தாய் இருந்தது என்று தெரிவிக்கிறார் கோசாம்பி.[25]

சாதி அமைப்பில் மிக எளிதாக மாறுதலுக்கு உட்பட்ட ஒரு பகுதி, ஆளும்-போரிடும் சத்திரிய வகுப்பாகும் (ராஜன்யர்). ஆயுதம் தாங்கிய அதிகாரம் ஒரே குலத்தின் மரபுரிமையாக தொடர்வதை, படையெடுப்புகளும் கிளர்ச்சிகளும் மிகவும் கடினமாக்கின. புராணங்கள் இதற்கு போதிய சான்றாக விளங்குகின்றன. எனவே தர்க்கரீதியாக எந்த இடத்தில் சாதிமுறை மிகவலுவாக இருந்திருக்க வேண்டுமோ அந்த இடத்தில்தான் - அதாவது ஆளும் வகுப்பில்தான் - நடைமுறையில் அதன் நிலைப்புத் தன்மை மிகவும் வலுவற்ற தாயிருந்தது. ஆக சாதிக் கட்டமைப்பு முழுவதும், ஒரு சுரண்டல் அமைப்பு முறையையே முன்நிபந்தனையாகக் கொண்டுள்ளது; அதன் முதன்மைப் பயனாளிகள் - அதன் விதிமுறை களின்படியே - பெரும்பாலும் அடாவடி ஆட்சியாளர் களும் அந்நிய ஆக்கிரமிப்பாளர்களாகவுமே இருந்திருக்கிறார்கள்.

### III

இந்தியாவுக்குள் சாதிமுறையை ஏகபோகமாக்கி யதில் பார்ப்பனர்கள் தலைமைப் பாத்திரம் வகித்தார்கள் என்பதை ஏறக்குறைய அனைவருமே ஒப்புக் கொள்வதாகத் தெரிகிறது; மேலும் சாதிக் கோட்பாட்டை தர்மத்துடன் ஒன்றிணைத்ததன் மூலம் சாதியத்தையும் பார்ப்பனியத்தையும் பிரிக்க முடியாத ஒன்றாக்கி விட்டார்கள் பார்ப்பனர்கள் என்பதையும் ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த பார்வைகளின் ஒரு விளைவாக, சாதிகள் உருவானதில் பவுத்தத்தின் பங்கு பெரிதும் கவனத்திலிருந்து நழுவி விடுகிறது.

**வருண** முறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும் கவுடில்யரின் ***அர்த்தசாத்திரத்தை*** படித்துவிட்டு அசோகரின் ஆணைகளை வாசிக்கும் எவருக்கும் அவற்றுகிடையிலான வேறுபாடு பளிச்செனப் புலப்படுகிறது. **வருணம்** (அல்லது



படிப்பகம்

www.padippakam.com



**ஜாதி)** என்ற சொல் அசோகரின் ஆணைகளில் ஒருபோதும் வருவதில்லை. அசோகர் பரப்பிய தர்மத்தில், அதன் கொள்கைகளை பாறைகளிலும் தூண்களிலும் அவர் பொறித்து வைத்ததில், வருண விதிகளுக்கு கீழ்ப்படுவது பற்றி மறைமுகமாகக் கூட குறிப்பிடப்படவில்லை. பார்ப்பனரின் மத மேலாண்மையை புத்தம் மறுத்ததால், வேதங்களிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட வருண பிரிவினையின் சட்டபூர்வ தன்மையை அவசியமாகவே அது கேள்விக்குள்ளாக்கியது.

இருந்தாலும் சாதிமுறையின் வளர்ச்சிக்கு புத்தத்தின் சொந்த பங்களிப்பென்று ஏதும் இருந்ததில்லையா என்று கேட்கலாம். புத்த தத்துவத்தின் மூலக் கோட்பாடாக அமைந்த **கரும** (வினை) கோட்பாடு அல்லது ஆன்மாக்கள் கூடுபாய்தல் மீதான நம்பிக்கையானது சாதிமுறையை அருமையாக நியாயப்படுத்தியது. சாதியத்தால் மாபெரும் பாதிப்படைந்தவரிடையில் கூட அதன் சமநோக்கில் ஒரு நம்பிக்கையை அது உருவாக்கியது. இதற்குள் மனுஸ்மிருதியிலும் (XI, 24-26) சாதிக் கோட்பாட்டின் ஓர் உறுதியான பகுதியாக அது (வினைக் கோட்பாடு) இடம் பெறுகிறது.

இரண்டாவது (பங்களிப்பு), **அகிம்சைக்கு** தரப்பட்ட முக்கியத்துவம். நாடோடி மேய்ச்சல் வாழ்க்கை முறையிலிருந்து ஓரிடத்தில் நிலைபெற்ற விவசாய வாழ்க்கை முறைக்கு சமுதாயம் மாறியதும், அதற்குத் தேவைப்பட்ட கால்நடைகளை யாகங்களுக்காக பார்ப்பனர்கள் பெருமளவில் கொன்று குவித்த அறிவுகெட்ட தனத்தை தடுப்பதற்காகத்தான் விலங்குக் கொலையை தவிர்க்குமாறு புத்தம் வலியுறுத்தியது என்கிறார் கோசாம்பி.[26] அதே நேரத்தில் நேர்மையைக் குறைத்துக்கூறும் உள்நோக்கம் கோசாம்பிக்குக் கிடையாது. (மேலும் அசோகரே கலிங்கத்தில் தன் படை இழைத்த படுகொலைகளைக் கண்டித்தவர்தான்).[27] அவர் கூறியதன் உட்கருத்து, பெருமளவில் விலங்குகளைப் பலியிடுவதுபற்றிய விமர்சனம், கால்நடை வளர்க்கும் **வைசியர்** நடுவிலேயே பெருவாரியாகப் புழங்கும் என்பதே. ஆனால் **அகிம்சை** ஏன் மக்களிடையில் செல்வாக்குப் பெற்ற கோட்பாடாக ஆகியிருக்க வேண்டும் என்பதற்கு இன்னும் பொருத்தமானதாக எனக்கு தோன்றுகிற ஒரு காரணத்தை பணிவுடன் தெரிவிக்க விரும்புகிறேன்: உணவு சேகரிக்கும் சமூகங்களை அடக்கி ஒடுக்கவும் அவமானப்படுத்தவும் அது ஒரு சாக்கை வழங்கியது. வேட்டையாடுவதற்கும் மீன் பிடிப்பதற்கும் எதிரான தடை உத்தரவுகள் அசோகரின் ஆணைகளில் அடங்கியுள்ளன.[28] அத்துடன் 'விலங்குகளை கொல்லும் சாதிகளை' பார்ப்பன ஏடுகள் பார்ப்பது போலவே பவுத்த ஏடுகளும் இழிவாகவே பார்க்கின்றன.

உண்மையில் இந்த இடத்தில் புத்தமதம் **வருண** அமைப்பிலேயே மிகவும் தாழ்ந்த இடத்தையே விவசாய வகுப்புக்கு அளித்திருக்கிறது. **வைசிய** வருணத்தை அல்ல, **சூத்திர** வருணத்தை சேர்ந்தவர்களாகவே விவசாயிகள் கருதப்படும் நிலை வந்தது என்னும் ஆர். எஸ். சர்மாவின் விளக்கம் நடைமுறையிலேயே உறுதியாக தெரிகிறது.[29] இப்படி இழிவுபடுத்துவதற்கு அகிம்சைக் கோட்பாடும் ஒரு காரணமாகும்படி செய்யப்பட்டது. கலப்பைக் கொழுவின் இரும்பு முனை உயிர்ப் பிராணிகளுக்கு ஊறு விளைப்பதால் கலப்பையை பயன்படுத்துவதை கண்டிக்கிறான் மனு (X, 84). பிற்கால புத்தமதத்தில் இது பிரதிபலிக்கிறது; உழுவதனாலும் வயலுக்கு நீர்விடுவதனாலும் உயிர்கள் அழிக்கப்படுவதால் துறவிகள் உழவுத்தொழிலில் ஈடுபடுவதை புத்தர் தடுத்ததாக இ-ட்சிங் கூறுகிறது.[30]

எனவே சாதிக் கருத்தியல், தன் வளர்ச்சியில் முற்ற முழுக்கவும் பார்ப்பனியம் சார்ந்ததே என்ற கருத்து தவறானதாகும்.

## IV

ஆக, புத்தமதம் உதித்த காலகட்டம்முதல் (தோரா.கி.மு.500) குப்தர்காலம்வரை (கி.பி. 4 & 5 ஆம் நூற்றாண்டு Century என்பதன் குறியீடான C-யைக் குறிப்பது). ஆன காலமே இந்திய சாதி அமைப்பும் அதனை ஆதரிக்கும் 'கருத்தியலும்' உருவானதாக கருதப்படும் காலகட்டமாகும். அயலார், இந்த அமைப்பின் படிநிலை வரிசையால் கவரப்பட்டதை விடவும் அதன் மரபுவழி வேலை முறையாலேயே அதிகம் கவரப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த விசயத்தில் மெகஸ்தனிசு (தோரா.கி.மு.300 இவர் ஏழு சாதிகளைப் பட்டியலிட்டார்), யுவான் ச்சுவாங் இருவருமே தகுதிபெறாத அறிவிப்புகளையே செய்துள்ளார்கள். பிற்காலத்து வெளிநாட்டு அவதானிகளான பாபரும் பெர்னியே-வும் கூட அப்படித்தான் செய்துள்ளார்கள்.[31]

ஒப்பீட்டளவில் இறுக்கமான வேலைப் பிரிவினை வடிவம் கொண்ட சாதிமுறை, உற்பத்தி உறவுகளின் பகுதியாக அமைந்துள்ளது. ஆனால் சாதிமுறையானது இரண்டு வெவ்வேறு உழைப்புச் சூழல்களில் இயங்குகிறது. ஆயின், சாதி முறையையும் அதனை தன் பகுதியாகக் கொண்டுள்ள சமூக அமைவையும் நன்கு புரிந்துகொள்ள வேண்டுமானால் அந்த இரண்டு உலகங்களையும் பகுத்துப் பார்த்தாக வேண்டும். ரிச்சர்டு ஜோன்சிடமிருந்து மிக முக்கியமான ஒரு புரிதலை எடுத்துக் கொண்ட மார்க்ஸ், கிராமத்தால் பரமாரிக்கப்படும் கைவினைஞரையும், சந்தையின் தாறுமாறான விளங்காப் போக்குகளையே முற்றிலும் சார்ந்திருக்கும் நகர்ப்புறக் கைவினைஞரையும் வேறுபிரித்துக் கண்டார். முதல் விசயத்தில் சாதி உழைப்பு, ஒரு இயற்கைப் பொருளியலை சேர்ந்ததாக உள்ளது, மற்றதில் சரக்கு, பணப் பொருளியலை சார்ந்து உள்ளது.[32]

இந்திய கிராம சமுதாயத்தைப்பற்றிய மார்க்சின் எழுத்துகளில் பரிச்சயமுள்ளோர், அதன் பொருளியலை அவர், அக்கம்பக்கமாக நிலவும் எதிரும்புதிருமான இரு கூறுகளின் அடிப்படையில் அமைக்கிறார்



படிப்பகம்

www.padippakam.com



என்பதை நினைவு கூறலாம். அவை: 1)'விவசாய மற்றும் தொழில் உற்பத்தித் தேட்டங்களின் உள்ளூர் அளவிலான ஒன்றிப்பு' - இதனால் பரிமாற்றத்தின் பிரதேசம் கிராமத்துக்குள் மட்டுப்படுகிறது. 2) 'மாறாத வேலைப் பிரிவினை' - இதில் குறிப்பிட்ட சாதிகளைச் சேர்ந்த கைவினைஞர்களும் வேலைக் காரர்களும் கிராமம் முழுவதற்கும் பணியாட்களாக இருப்பார்கள்; வழக்கமாக கூலியைப் பொருளாக தந்துவிடுவதன் மூலமோ நிலம் ஒதுக்கிவிடுவதன் மூலமோ இவர்கள் பேணப்படுகிறார்கள், இங்கும் சரக்குப் பரிமாற்றத்துக்கு தேவையில்லாமல் உள்ளது.[33] இப்படி சாதியால் நிர்ணயிக்கப்படும் உழைப்புக்கு மாக்ஸ் வெபர் Demiurgical labour என பெயரிட்டார்.

டபிள்யு.எச். வைசர் முதலான நவீன சமூகவியலார், மேற்படி பார்வையை மறுத்துக் கொண்டிருக் கிறார்கள். அவர்களைப் பொறுத்தவரை உள்ளபடி யான முறை Demiurgical labour அல்ல, **ஜாஜ்மனி** முறையே அதாவது கைத்தொழிலாளர்கள் குறிப்பிட்ட குடும்பங்களுக்கு மட்டுமே சேவகம் செய்யும் முறை. லூயி தியுமோ(ன்)-ஐப் பொறுத்தவரை - நாம் எதிர்ப்பார்ப்பதைப் போலவே - உடனடியாக இது குறிப்பிட்ட மேல்சாதி குடும்பங்களுக்கும் 'சுத்த' நிபுணர்களுக்கும் இடையிலான ஒரு சடங்கு வகைப் பட்ட உறவாகிவிடுகிறது; காட்டாக பார்பனருக்கும் நாவிதருக்கும் இடையில். இது, பின் மற்ற கைத் தொழிலாளர்களுடனும் உழைக்கும் சாதிகளுடனும் ஆன உறவுகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது. ஆக நமக்கு சொல்லப்படுவது: ''இறுதி ஆய்வில், உழைப்புப் பிரிவினையானது மதக் கடமைகளையும் மதம் சாராத அல்லது 'பொருளியல்' பணிகளையும் பெரிதும் வேண்டுமென்றே அக்கம்பக்கமாக வைத்ததாக காட்டுவதில்லை; மாறாக மத அடிப்படையையும் பரஸ்பரச் சார்பின் மதரீதி வெளிப்பாட்டையுமே காட்டுகிறது. மேலும் அது மதத்தில் இருந்து பரஸ்பர சார்பு என்பதை எடுத்துக்கொள்கிறது.''[34] நடப்பு வரலாற்று ஆய்வின்மீது அதிகக் கவனம் செலுத்தாமலே தன் நூல் பதிப்பை தொடர விட்டிருக்கிறார் தியூமோன் என்பது வெளிப்படை. 18-ஆம் நூ. ஆவணங்களில் (மகாராஷ்டிரத்தில் இவை ஏராளமாக உள்ளன) தான் மேற் கொண்ட விசாராணைகளின் முடிவுகளை 1972 இல் இரோஷி ஃபுக்காஸவா வெளியிட்டார். ஆவண ஆதாரத்தையே பெரிதும் அடிப்படையாகக் கொண்ட அவரது ஆய்வின் உறுதியான முடிவு, **ஜாஜ்மனிக்** கோட்பாடு குடும்பப் புரோகிதத்துக்கு மட்டுமே உரியது என்பதாகும்; பாரம்பரிய **பலுத்தர்கள்** 12 பேரும் (தச்சர், கொல்லர், குயவர், சக்கிலி, நாவிதர், ...) அடிப்படையில் கிராம சேவகர்கள்; நில ஒதுக்கீடுகள் **(வட்டன்)** மூலமும் விவசாய விளைச்சல்மூலமும் ஊதியம் தரப்பட்ட வர்கள். ஃபுக்காஸவாவின் சாட்சியம் வலுவாக உள்ளது- எந்த அளவுக்கெனில், தற்கால கிராமக் கைவினைஞர்கள், குறிப்பிட்ட குடும்பங்களின் சேவகர்களாக மட்டுமே தெரிகிறார்கள் என்றால், அதற்குக்காரணம், நவீன நிலைமைகளில் பழைய முறையானது சிதைந்து கொண்டிருப்பதுதான் என்னும் ஆழ்ந்த பார்வைகொண்ட கருத்துக்கு அது அவரை இட்டுச் சென்றுள்ளது.[35]

கிராம ஊழியர்கள் பற்றிய வரலாற்று ஆதாரம் உண்மையில் இன்னும் பழைய காலத்துக்குப் போகிறது. வட இந்திய ஊர்களில் தச்சர்களுக்கு நிலங்கள் ஒதுக்கப்பட்டதை உறுதிசெய்யும் கல்வெட்டு ஆதாரம் - 5 ஆம் நூற்றாண்டு அளவுக்குப் பழைய ஆதாரம் - கிடைத்துள்ளதை கோசாம்பி எடுத்துக் காட்டுகிறார்.(36) அதுபோலவே, லேக்கப் பத்தி ஆவணங்களின்மீது (குசராத், தோரா.1000) கவனத்தை ஈர்க்கிறார் பி.என்.எஸ். யாதவர். தச்சர், கொல்லர், குயவர், நாவிதர், வண்ணார் என்னும் கிராமக் கைவினைஞர் ஐவரைப்பற்றிக் குறிப்பிடும் போது (பஞ்ச்ச காருகா), விவசாயிகளிடமிருந்து கைநிறைய தானியங்கள் பெற இவர்களுக்கு உரிமை அளிக்கப்பட்டிருந்ததைப்பற்றி அந்த ஆவணங்கள் பேசுகின்றன.[37] அலாவுதீன் கில்ஜியின் வரிவிதிப்பு முறைப்பற்றிய பருனியின் விவரணையில் (14 ஆம் நூ. தொடக்கம்), பலஹர் அல்லது ஊர்ச்சேவகன், மிகக்குறைந்த நிலஉடைமை பெற்றவனாகக் காட்சியளிக்கிறான்.[38]

ஆக, கிராமத்தின் தன்னிறைவைப் பேணுவதிலும் கிராமத்தினுள் இயற்கைப் பொருளியலைப் பேணுவதிலும் மரபுக் கைவினைஞரும் ஊழியரும் அடிப்படையான முக்கியத்துவம் பெற்றிருந்தார்கள். இத்தகைய தன்னிறைவு, கிராமத்தை தனிமைப் படுத்தியது மட்டுமல்ல; தன் சொந்த இறக்குமதி களுக்குப் பரிமாற்றிக் கொள்வதற்காக கூடுதலான மிகை உற்பத்தி எதுவும் அதற்குத் தேவைப்படாத தால், உபரியின் பெரும்பகுதியை ஆளும் வகுப்புக்கு வழங்குவதில் அதற்குள்ள திறனையும் விரிவு படுத்தியது.

ஊரைவிட்டு உபரி வெளியே உறிஞ்சப்பட்டதும், சரக்குப் பரிமாற்ற பிரதேசத்துக்குள் அது வந்து விடுகிறது. இதைத்தான், மூலதனம் முதல் - பாகம் I இல் இந்திய கிராம சமூகம்பற்றிய (ஏற்கெனவே சொன்ன) தன் புகழ்பெற்ற நூல் பகுதியில் மார்க்ஸ் குறிப்பிட்டார். கிராமத்துக்கு வெளியில் கைவினைஞர், சந்தையில் தன் பொருள்களை விற்கும் தனிமனிதராகத் தோன்றுகிறார். 'சிறப்புத் திறனை தலைமுறைகள் வழியாக சேகரித்துக் கொள்வதை' சாத்தியப்படுத்த, சாதி ரீதியிலான மரபுத் தொழில் தேவையானது.[39] மரபுரீதி கைமாற்றம் திறமையை தக்க வைத்தாலும், (சாதிகளின்) கிடைமட்ட இயக் கத்தைக்கூட தடுத்துவிட்டது. இத்துடன், பல கைவினைச் சாதிகளுக்கும் மிகவும், தாழ்ந்த ஒரு தகுதியை அளித்ததன்மூலம் சாதியம், ஆளும் வகுப்புக்கு மேலுமொரு சாதகத்தையும் உருவாக்க முடிந்தது. ஏற்கெனவே மனுவில் கலப்புச் சாதி



படிப்பகம்

www.padippakam.com



களிடையே கைத்தொழில் சாதிகள் காட்சியளிக் கின்றன; 11-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அல்பெருனி, நெசவாளர் - செருப்பு தைப்பவர் உள்ளிட்ட 8 தொழிலினரை புறச்சாதி **அந்த்யஜர்**களுக்குள் வகைப்படுத்துகிறார்.[40] அவர்களின் தாழ்த்தப்பட்ட தகுதியும் சாதியை மாற்றிக் கொள்வதற்கு வழி இல்லாத நிலைமையும், நிச்சயமாக கைவினைஞரின் எதிர்ப்பு ஆற்றல்களை ஒடுக்கவும் அதன்மூலம் கூலிகளை குறைத்தே வைத்திருக்கவும் உதவியிருக்க வேண்டும்.

எனவே சாதிமுறையானது தன் மரபு வடிவில் ஒரே நேரத்தில் ஒரு இயற்கைப் பொருளியலிலும் ஒரு சந்தைப் பொருளியலிலும் எளிதாக செயல்பட முடிந்தது. இரண்டு இடத்திலும் அடிப்படையில் ஒரு கற்பனையான தூய்மையைக் காப்பற்ற அது உதவ வில்லை (அப்படி நடந்திருந்தாலும் அது தற்செய லானதே), மாறாக வேறெங்கும் இருந்ததைப் போன்றே கடுமையான ஒரு வர்க்கச் சுரண்டலுக்கு அது உதவியது.

**V**

பல வழிகளிலும் 13 ஆம் நூற்றாண்டின் தொடக்கமானது இந்திய வரலாற்றில் ஒரு 'மாறுதலை' குறிக்கிறது. இசுலாம் ஊடுருவியதால் மட்டும் இந்த மாற்றம் ஏற்படவில்லை: கோசாம்பியும் ஆர்.எஸ். சர்மாவும் விளக்கிக்காட்டிய 'இந்திய நிலக்கிழமை' என்னும் முந்திய யுகத்துக்கு மாறுபட்டு ஒருவழியாய் மார்க்ஸ் சொன்ன 'கீழை எதேச்சாதி காரத்'துக்கு நெருங்கிவருகிற ஒரு சமூக அமைவை நாம் காணத் தொடங்குகிறோம். இருந்தாலும் காலனியத்துக்கு முற்பட்ட இந்தியாபற்றி மார்க்ஸ் கருதியதாக தோன்றுவதைவிடவும் கூடுதலான அளவில் சரக்கு உற்பத்தியும் நகரமயமாதலும் இருந்தன என்பதையும் நாம் ஒத்துக் கொண்டாக வேண்டும்.

கிராமங்களிலும் நகரங்களிலும் நிலவிய சாதி அமைப்பானது முந்திய கட்டத்தில் நிலவியதிலிருந்து அடிப்டையில் மாறாமலே தொடர்ந்தது. கிராமங் களிலும் நகரங்களிலும் மரபுவழி சாதி ரீதி உழைப்பு நிலவியதற்கான சான்றுகள், நடை முறையில் பண்டை இந்தியாவிலிருந்து 18 ஆம் நூற்றாண்டு வரை தொடர்ச் சியாக காணப்படுவதை முன்பகுதியில் சொன்னவற்றி லிருந்து அறிய முடியும். இசுலாம் அதன் சட்டத்தில் சுதந்திர மனிதருக்கும் அடிமைக்கும் இடையிலான வேறுபாடுகளை (மற்றும் ஆண்-பெண் வேறுபாட் டையும்) மட்டுமே அங்கீகரிக்கிறது என்பது மெய்தான்; எனவே சாதி என்பது இசுலாமிய சட்டமுறைக்கு புறம்பானதுதான். இருந்தாலும் சாதிமுறையைப் பற்றிய முசுலீம்களின் மனோபாவம் எவ்வகையிலும் அதற்கு மறுப்பு தெரிவிப்பதாய் இல்லை. 711-14 இல் சிந்துவை அராபியர் வென்ற போது அவர்களின் தளபதியான முகம்மது பின் காசிம், முந்திய ஆட்சியின்கீழ் ஜாட்டுகளுக்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் எல்லாம் அப்படியே நீடிப்பதற்கு ஒப்புக்கொண்டான்; இவை சண்டாளர்களுக்கு மனுஸ்மிருதி விதிக்கும் கட்டுப் பாடுகளை மிகவும் ஒத்தவை.[41] இடைக்காலம் நெடுக இந்து மதத்தின் மேல் முஸ்லீம்கள் சாட்டிய குற்றச் சாட்டு, அதன் பல தெய்வவழிபாடு மற்றும் சிலை வழிபாடு எனப் படுவதை மையப்படுத்தியதாகவே இருந்ததே தவிர, சாதி ஏற்றத்தாழ்வு என்ற பிரச் சனையை ஒருபோதும் அது தொடங்கவில்லை. அதைப்பற்றி .லேசாக விமர்சித்த ஒரே ஆள் அல்பெருனி (தோரா.1030) என்னும் அறிவியலாளர் தான் (இறையியலாளர் அல்ல); ''முஸ்லீம்காளகிய நாங்கள் முற்றிலும் சிக்கலின் அக்கரையில் நிற்கிறோம், மத நம்பிக்கை விசயத்தில்தவிர மற்றபடி மனிதர்கள் எல்லாரும் சமமே என மதிக்கிறோம்'' என்றார் அவர்.[42] ஆனால் இத்தகைய சமத்துவ அறிவிப்பு ஏறக்குறைய இது ஒன்றுதான். 14 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வரலாற் றாளரான பெருனி தன் **தாரிக் -இ ஃபிருஸ் - ஷாஹியில்** பிறப்பின் அடிப் படையிலான ஒரு ஏற்றத்தாழ்வான அமைப்பை அதி தீவிரமாக ஆதரிக்கிறார்; ஆனாலும் அவர் சாதிகளை அல்ல, வர்க்கங்களையே மனதில் கொண்டிருந்தார், மேலும் தன் கருத்துக்கு பொருத்த மான காட்டாக இந்து முறையை அவர் ஏற்கவில்லை.

கிராமப்புறத்திலிருந்து பெருமளவான நிதி களைப் பெறவும், நகரங்களில் கூலிச் செலவுகளைக் குறைக்கவும் சாதி அமைப்பு உதவியது என்று பார்த்தோம். அந்த வகையில் இந்தோ - முஸ்லிம் ஆட்சிகள் சாதிமுறையைப் பாதுகாக்கவே எல்லா வாய்ப்பும் இருந்திருக்கிறது. முதன்மையான சிலை வழிபாட்டாளர்களான பார்பனர்களிடம் அதற்காக அவர்கள் பகைமை பாராட்டும் அளவுக்கு இல்லா விட்டாலும் அலட்சியம் காட்டியிருக்கலாம் என்பது வேறு. (இதிலிருந்து, சாதிமுறை தொடர பார்ப்பன மேலாதிக்கம் இன்றியமையாதது அல்ல என்பதும் தெரியவில்லையா?) இருந்தாலும் சாதிமுறை சில சீர்திருத்தங்களுக்கும் மாறுதல்களுக்கும் உட்படவே வேண்டியிருந்தது. இவை முக்கியமானவையே என்பதை ஏற்றே ஆகவேண்டும். இவையும் சுல்தான்கள் கடைப்பிடித்த கொள்கையின் விளைவால், புதிய சூழ்நிலைகளின் விளைவே.

அவற்றில் முதன்மையானது; புதிய ஆளும் வகுப்பினரும் அவர்களைச் சார்ந்தோரும் தம் நடு மற்றும் மேற்காசிய பின்னணிகளில் இருந்து புதுவிதமான சரக்குகளுக்கும் சேவைகளுக்கும் ஆன கிராக்கியைமட்டும் கொண்டு வரவில்லை, அத்துடன் புதிய கைவினைத் தொழில்நுட்பத்தின் புதியபுதிய கண்டுபிடிப்புகளையும் வரிசையாக கொண்டு வந்தார்கள். கோசாம்பி தன் வழக்கமான கூரிய பார்வையுடன் கூறியதாவது; ''புதிய தொழில் உத்திகளைத் தழுவுவதிலும் பரப்புவதிலும் நிலவிய குறுகிய மனப்போக்கை இசுலாமியப் படையெடுப்



படிப்பகம்

www.padippakam.com



பாளர்கள் உடைத்தெறிந்தார்கள்.'[43] தொடக்கத்தில் (13, 14 ஆம் நூற்றாண்டுகளில்) வந்த தொழில்நுட்ப சாதனங்களில், செங்கோண பல்லிணை அமைப்பு (நீர் ராட்டினத்தின் திருந்திய வடிவம்), கைராட்டை, தாள் உற்பத்தி, கவிகை மோட்டுக் கட்டுமானம், நிலக்கீல் மற்றும சுண்ணக்காரை பயன்பாடு, இரும்பு லாடம் மற்றும் பலவும் அடங்கும்.[44] இவை சில இடங் களில் புதிய தொழில்கள் உருவாகவும் காரணமாயின (காட்டாக காகிதத் தொழில், கல்வை அரைப்பு); வேறு இடங்களில் புதிய சாதனங்களை உருவாக்கவும் காரணமாயின. பொதுவாக கைவினைஞர் கூட்டம் கணிசமாய் பெருக தேவை ஏற்பட்டது என்று கூற முடியும்; உண்மையில் இதனோடு சேர்ந்து, இந்திய வரலாற்றில் ஏற்பட்ட மூன்றாவது 'நகரப் புரட்சி' என அழைக்கப்படக்கூடிய நிகழ்வும் நிகழ்ந்தது என்றும் கூறமுடியும்.

புதிய சூழ்நிலைமைகளின் அழுத்தம் முதலில் பெருமளவு அடிமை வணிகத்துக்கு இட்டுச் சென்றது; 13, 14 ஆம் நூற்றாண்டுகளின் போது நகர்ப்புறத் தொழிலாளர்களில் அடிமைகள் உழைப்பின் பங்கு கணிசமாக இருந்தது. சுல்தான்களின் நிறுவனங்களில் இருந்த அடிமைகளின் எண்ணிக்கை மிகப் பெருமள வானது ஆகும். (அலாவுதீன் கில்ஜியின்கீழ் 50, 000 பேரும் ஃபிருஸ் துக்ளக்கின்கீழ் 1, 80, 000 பேரும் இருந்தார்கள்). விலை வாசியை அடிமைகளின் விலையைக் கொண்டு மதிப்பிடுகிறார் பெருனி. அங்கிங்கெனாத படி ஏறக்குறைய எங்கெங்கும் அடிமைகளே பயன்படுத்தப்பட்டனர். நடைமுறை யில் அடிமைகளுக்கு சாதியில்லை, இசுலாமுக்கு மதம்மாற்றப்பட்டனர், ஏறக்குறைய எந்தப் பணி யிலும் அவர்களை அமர்த்தவும் எந்தத் தொழிலையும் அவர்களுக்குக் கற்பிக்கவும் முடிந்தது. காலப் போக்கில் விடுவிக்கப்பட்ட அவர்களே, பிற வந்தேறி கைத்தொழிலாளிகளுடன் சேர்ந்து பல முஸ்லீம் கைத்தொழில் மற்றும் உழைப்பாளிச் சமூகங்களாக உருவானார்கள். காலப்போக்கில் சுதந்திர குடிகளிலும் ஒரு மதமாற்றம் ஏற்பட்டது. பெரும்பாலும் இவர்கள் உயர் தகுதியைத் தேடி தம் சாதி சமூகங்களிலிருந்து உடைத்துக்கொண்டு வந்த பிரிவினராக இருக்க முடியும், அல்லது முன்பு தமக்கு அனுமதிக்கப் பட்டிராத தொழில்களிலோ நடைமுறைகளிலோ ஈடுபடத் தயாரான பிரிவினராக இருக்க முடியும். இவ்வாறு காலப் போக்கில் முஸ்லீம் மக்கள் தொகையில் கணிசமான ஒரு பெருக்கம் ஏற்பட்டது.[45]

இந்த சமூகங்களிலும் சாதி தன் செல்வாக்கைத் தொடர்ந்து செலுத்தியது என்பதில் ஐயமில்லை. சென்ற நூற்றாண்டிலிருந்து பதிவு செய்யப்பெற்ற அவர்களின் நடைமுறைகளைக் கொண்டு முடிவு செய்வதானால், நெசவாளிகள், கசாப்பர்கள், நாவிதர்கள் முதலியோர் அகமண வழக்கத்தையே விடாமல் கடைப்பிடித்திருக்கிறார்கள். முஸ்லீம் களுக்குள் தம்மை **கம்மின்** வகுப்புகளாக நிலை மாற்றிக்கொண்ட தொண்டூழிய சாதிகள், தீண்டப் படாதவர்களாக இல்லை, ஆனாலும் இன்னமும் ஒதுக்கிவைக்கப்பட்டும் இழிவாகவுமே நடத்தப் பட்டார்கள். இருந்தாலும்கூட இப்பவும் முஸ்லீம் மக்கள்பிரிவுகள் தம் மிகத்தொடக்க வடிவிலும் கூட சாதிச் சட்டகத்துக்கு வெளியிலேயே இருந்தார்கள் என்று கூறுவது சரியாகவே இருக்கும்; மேலும் எப்படியும் அந்த சட்டகம் பலவீனமாகவே இருந்தது-ஏனெனில் வேலைகளை மாற்றிக் கொள்வதும் அக மணத்திலிருந்து வெளியேறுவதும் நிகழ முடிந்தது.[46] வேறுவிதமாகச் சொன்னால், முன்னிலும் கூடுதலான இடப்பெயர்ச்சிக்கான வாய்ப்பு எப்போதும் இருந்தது.

ஒப்பீட்டளவில் சாதியற்ற இந்த மக்கள் கூட்டங்களின் இருப்பே சாதிமுறைக்கு குழிபறித்து விட்டதா என்பது கேள்வி. ஏற்கெனவே நிலவும் சாதிகளின் அமைப்புக்கு எவ்வித பாதிப்பும் விளைக்காமலேயே புதிய தொழில்களுக்கும் வேலை களுக்குமான திரண்ட உழைப்பை வழங்கியதன்மூலம் இத்தகைய மக்கள் கூட்டங்கள் உண்மையில் சாதியை மேலும் வலுவாக்கி இருக்கவே கூடும். ஆனால் மாக்ஸ் வெபர் கருதுவதுபோல் சாதி அமைப்புக்கு அறவே இயங்கு திறன் கிடையாதா என்பதும் ஐயத்துக்குரியதே. ஏட்டில் எழுதியிருப்பதன் அடிப்படையில், அல்லது தியுமோ(ன்) கூறும் அதன் 'கருத்தியலின்' அடிப்படையில் சாதிமுறை எவ்வாறு இயங்கியிருக்க வேண்டும் என்பதைப்பற்றி ஒருவர் நினைப்பதிலிருந்து மிகப்பெருமளவில் வேறு பட்டதாக இருந்திருக்கிறது நடைமுறையில் அது செயல்படும் விதம் என்று மோரிஸ் டி. மோரிஸ் என்பவர் தன் குறிப்பிடத்தக்க கட்டுரை ஒன்றில் வாதிடுகிறார்.[47] ஒரு பிரிவு புதிய வேலைகளை மேற் கொள்ள வாய்ப்பாக சாதிகள் பிரிந்துள்ளன: 18 ஆம் நூ. மகராஷ்டிரத்திலிருந்து நன்கு ஆவணப்படுத்தப் பெற்ற ஓர் உதாரணத்தைக் காட்டுகிறார். ஃபுக்காஸவா: தையலர்களின் ஒரு பிரிவினர் சாயம் தோய்ப்பதற்கும் இன்னொரு பிரிவினர் அவுரிச்சாயம் தோய்ப்பதற்கும் மாறி, அகமான உள்சாதிகளை நிறுவிக் கொண்டனர்.[48] வரலாற்றில் இருந்து அசாதாரணமான ஓர் உதாரண மாக ஜாட்டுகளைக் கூறலாம். இவர்கள் 18 ஆம் நூ. சிந்துவில் சண்டாளரை ஒத்த ஒரு மேய்ச்சல் இனக்குழுவாக இருந்தார்கள். 11 ஆம் நூற்றாண்டில் சூத்திரத் தகுதியை அடைந்தார்கள் (அல்பெருனி). 17 ஆம் நூற்றாண்டிலோ (வைசிய தகுதிபெற்ற) மிகச் சிறந்த குடியானவர்களாக ஆகிவிட்டார்கள் (தபிஸ்த் தானி - இ மஸாஹிப்).[49] விவசாயத் தொழிலுக்கு மாறியதுடன்' சமஸ்கிருதமயமாக்க'மும் சேர்ந்தே நடந்தது; 17 ஆம் நூற்றாண்டில் நடந்த ஜாட்டு கிளர்ச்சியுடன் ஜாட்டுகளில் ஒரு பிரிவினர் சமீன்தார் தரத்துக்கும் ராஜபுத்திரர்களின் தரத்துக்கும் உயர முனைய ஆரம்பித்த போது அந்த நட்பு தொடர்ந்தது.

மேலும் சமஸ்கிருத மயமாக்கம் வெற்றிபெறாத அல்லது வேகம் பெறாத இடங்களில் 'ஒன்றே கடவுள்'



படிப்பகம்

www.padippakam.com



என்னும் இயக்கங்கள் கவனிப்புப்பெறத் தொடங்கின. இவை சாதி முறையின் 'கருத்தியலை' கண்டித்தன. இசுலாமின் ஏக கடவுள் நம்பிக்கையும் முசுலீம் சமூகத்தின் சட்டரீதி சமத்துவமும், இந்த இயக்கங்களின்மேல் குறிப்பிட்ட அளவு செல்வாக்கு செலுத்தி இருக்கலாம். ஆனால் சமத்துவத்துக்கு அவர்கள் கொடுக்கும் முக்கியத்துவமும் சாதிக்கும் சடங்கு ஆச்சாரத்துக்கும் அவர்கள் தரும் கண்டனமும், சமகால இசுலாமிய போதனை எதிலும் காணப்படுவதைவிடவும் நிச்சயமாக எவ்வளவோ அதிகமாயிருந்தது. அதன் போதகர்கள் பெரும்பாலோர் கீழ் சாதிகளிடமிருந்து வந்தவர்களே: நாமதேவர் சீட்டித் துணியில் அச்சிடுபவர்; கபீர் ஒரு நெசவாளர்; ரெய்தாசர் ஒரு தோட்டி; செயின் ஒரு நாவிதர்; தாது, பருத்தி நூலில் சிக்கெடுப்பவர்; தன்னா, ஒரு ஜாட்டு விவசாயி. தன்னா ஜாட்டின் பெயரால் இயற்றப்பட்ட அழகிய கவிகளில் சீக்கியரின் ஐந்தாம் குரு (அர்ஜுன்), அப்படிப்பட்ட தாழ்ந்த நிலையிலுள்ள பக்தர்களின் மேல் கடவுளின் தனிக் கருணை பொழிய வேண்டுகிறார்.

இந்த சமூகங்களில் எல்லா சாதி மக்களுக்கும் வீட்டுக்குள் இடம் தரப்பட்டது. (17ஆம் நூற்றாண்டில் உருவானதும் கபீருக்குக் கொஞ்சம் கடப்பாடு உடையதுமான) சத்நாமி பிரிவில், ஒரு பதிவின்படி, பொற்கொல்லர், தச்சர்கள், தெருக்கூட்டுவோர், தோல் பதனிடுவோர், ஆகியோர் இருந்தார்கள்.[50] இன்னொரு பதிவின்படி, விவசாயிகளும் சிறு வணிகரும் இருந்தார்கள்.[51] 17 ஆம் நூற்றாண்டிலிருந்த சீக்கிய சமூகத்தில் ஜாட்டு விவசாயிகள் ஏராளமாக இருந்தார்கள். அடுத்த நூற்றாண்டின் ஆரம்பத்தில், இந்துஸ்தானத்திலேயே அவனைவிட அசுத்தமான இனம் இல்லை என்னுமளவுக்கு கடைகெட்ட தெருக் கூட்டிக்கும் தோல் வேலைக்காரனுக்கும் அதிகாரம் வழங்கப்பட முடிவது பற்றிய புகார் வந்து கொண்டிருந்தது.[52] இந்த ''பந்த்''களின் நடைமுறைகள், தம் சமூகத்துக்குள் சாதிப்பாகுபாடு காட்டுவதை தடுத்தன, மேலும் - சத்நாமிகளிடையே இருந்ததைப் போலவே- அகமண முறையராகும் போக்கே அந்த சமூகங்களில் இருந்தது. (சத்நாமிகளுக்கு இது சாத்திரத்தாலேயே விதிக்கப்பட்டது).[53] சாதிச் சட்டகத்திலிருந்து தமக்கான உறுப்பினர்களை தேர்ந்தெடுத்து மத சமூகங்கள் உருவாக்கப்பட்டதும், தாம் கிளம்பி வந்த போது தமக்கிருந்த தகுதியைக் காட்டிலும் பெரும்பாலும் உயர்வான ஒரு தகுதியுடன்தான் என்றாலும், கடைசியில், அதன் உறுப்பினர்கள் அந்த சட்டகத்துக்கே திரும்பிவிட்டதுமே இதன் நிகரவிளைவு. இதற்கு முன்னரும் இது நடந்திருந்தது - காட்டாக கர்நாடகத்தைச் சேர்ந்த லிங்காயதர்கள்; மேலும் 16, 17 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த இந்த இயக்கங்கள், சாதி அமைப்பைக் கவிழ்க்காவிட்டாலும் அதில் தேவையான திருத்தங்களைச் செய்தன.

ஆக, இடைக்கால இந்தியாவில் வர்க்கச் சுரண்டல் முறையின் முக்கியமான தூணாக சாதிமுறை தொடர்ந்து நிலவியது. ஏற்கெனவே நாம் சொன்னது போலவே அதனால் முதன்மையாக பலன் அடைந்தோர், ஆளும் வகுப்புகளாக மட்டுமே இருக்க முடியும். இடைக்காலத்தைப் பொறுத்த வரையில் இவர்கள், முதலாவதாக பிரபுக்குலமும் இரண்டாவதாக கிராம மேலாண்மை வகுப்பாகிய சமீன்தார்களும் ஆவர். அரசியல் கட்டமைப்பை நிலைநிறுத்தியவர்கள் சமீன்தார்கள் என்ற அளவில், மறுபடியும் சாதியே முக்கியத்துவம் பெற்றது; ஏனெனில் சமீன்தார்கள் பெரும்பாலும் 'ஆதிக்க சாதி'களைச் சேர்ந்தவர்களாகவே இருந்தார்கள் - இவை வன்முறையில் தம் தகுதியை காப்பாற்றிக் கொண்டன. **அயின் - இ அக்பரியில்** (1595 - 96) முகலாய பேரரசு பற்றிய விரிவான தன் புள்ளிவிவர அட்டவணைகளில் அபுல் -ஃபசல், ஒவ்வொரு பிரதேசத்தின் சமீன்தார்களுடைய சாதிகளையும் கூறும்போது, அந்த விவரம், அவர்கள் வைத்திருந்த நிலப்பரப்பின் அளவை தெரிவிப்பதில்லை; அவர்கள் வைத்திருந்த குதிரைப்படை மற்றும் காலாட்படை ஆண்களின் எண்ணிக்கையையே தெரிவிக்கிறது.[54] எனவே சாதிக்கும் அதிகாரத்துக்கும் இடையில் ஐயத்துக்கிடமில்லாமல் ஒரு தொடர்பு நிலவியது.

முகலாய இந்தியப் பொருளியலைப்பற்றிய தன் விரிவான வர்ணனைகளில் டபிள்யு.எச்.மோர்லண்டு, சாதியைப் பற்றிக் கூற அதிகம் ஏதும் இல்லாமல் போனதுபற்றி சற்று வியப்பு தெரிவிக்கிறார், இளைய பாரிங்டன் மூர்.[55] -ன் படைப்புகள் சிலவற்றுக்கும் இது பொருந்தும். இதற்கான காரணம் ஒருவேளை, உழவருக்கும் வரிபறிப்பவருக்கும் அல்லது சிறு உற்பத்தியாளருக்கும் வணிகருக்கும் இடையிலான குறிப்பான உறவுகளை ஒருவர் பார்க்கும்போது, சாதி உடனடியாக புலப்படுவதில்லை. சாதியின் முதன்மையான பணி என்னவென்றால் இந்த உறவுகள் நிலவுவதற்கான ஒரு சூழ்நிலையின் பெரும்பகுதியை அது வழங்கியது. சாதி உழவர்கள் என்றும் சேவக தொழிலாளர்கள் என்றும் பகைமையுள்ள இரு முகாம்களாக விவசாய வகுப்புகளை அது பிரித்தது; சிறுரக உற்பத்தியில் உழைப்புப் பிரிவினையை அது நிலைப்படுத்தியது. ஆனால் இடைக்கால இந்தியாவில் (தோரா 1200 - 1750) உழைப்பு நிகழ்முறையின் வடிவத்தை சாதியே வரையறுத்தது என்ற கருத்தை நாம் முன்வைக்க இந்த செயல்பாடுகள் போதிய அடிப்படை கொண்டவை தாமா என்பது கேள்விக்குரியதே. நாம் பார்த்ததுபோல், குறிப்பிட்ட அளவு பெயர்ச்சிக்கும் போட்டிக்குமான கூறுகள் நிலவவே செய்தன. இடைக்காலத்தில் தன் பொருளியல் & அரசியல் அமைப்பில் ஈரான் இந்தியாவை மிகவும் ஒத்ததாக இருந்தது; ஆனால் சாதிமுறையின் பலன் அதற்கு இருக்கவில்லை. இருந்தாலும் ஒன்றில் சாதி நிலவி மற்றதில் அது நிலவாததாலேயே முகலாய இந்தியாவும் சஃபாவிதின் ஈரானும் இரு வெவ்வேறான சமூக அமைவுகளைச் சேர்ந்தவை என்று நாம்



படிப்பகம்

www.padippakam.com



கூறமுடியுமா? இந்த விசயத்தின் மீதான எந்த விமர்சனமும் தற்போதைக்கு தற்காலிகமானதாக மட்டுமே இருக்க முடியும்; இத்தலைப்பின் மீது மேலுமான விவாதத்தை நாம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம்.

ஆனால் 'இடைக்கால இந்தியாவில் சாதி' என்னும் சிக்கலை விட்டு நாம் நீங்குமுன் கடைசியாக ஒரு சொல். இடைக்கால இந்திய சமுதாயத்தை ஒத்த எந்த வர்க்க அமைவும் உள்ளுக்குள் கொந்தளிப்புகளை உருவாக்கியே திரும், ஒடுக்கப்பட்டோரின் போராட்டங்களில் குறிப்பாக அது வெளிப்பட்டே திரும். உழவர் எழுச்சிகளின் ஒரு வரலாறு இந்தியாவுக்கு இருக்கிறது. இது 11 ஆம் நூற்றாண்டில் வங்கத்தில் இருந்த எருமைச் சவாரி செய்யும் கைவர்த்தகர்களின் கலகம் வரைப் பின்னோக்கிப் போகிறது.[56] ஆனால் 17 ஆம் நூற்றாண்டிலிருந்து நடந்த உழவர் எழுச்சிகள் பற்றிய நிறைய ஆதாரங்கள் நமக்குக் கிடைக்கின்றன. ஐரோப்பா அல்லது சீனத்துடன் ஒப்பிடும்போது இந்த எழுச்சிகளின் ஒரு பெரிய பலவீனம், கிளர்ச்சியாளர்களின் வர்க்க உணர்வு மிகமிகப் பின்தங்கி இருந்ததாகும்: விவசாய கிளர்ச்சியாளர்கள் சமீன்தார்களைப் பின்பற்றுவோராய் தோன்றுகிறார்கள் (மராத்தர்கள்) அல்லது மத சமூகங்களின் உறுப்பினர்களாகத் தோன்றுகிறார்கள் (சீக்கியர், சத்நாமிகள், ) அல்லது சாதிகள் / இனக்குழுக்களின் உறுப்பினர்களாகத் தோன்றுகிறார்கள் (ஜாட்டுகள், ஆப்கானியர்); தம்மை விவசாயிகளாகக் காணவோ விவசாயிகளின் எந்தப் பிரிவினரதும் பொருளியல் / சமூகக் கோரிக்கைகளை எழுப்பவோ இவர்கள் தவறுகிறார்கள். இந்தத் தவறுதலுக்கான பகுதி காரணமாக சாதியம் விளங்குவதாக எனக்குத் தோன்றுகிறது. ஒரு சாதியைச் சேர்ந்த உழவர்கள் இன்னொரு சாதியை சேர்ந்தவர்களுடன் பொதுவான அடிப்படையை காணாதபடி இது தடுத்தது; இதனால் ஒரு வர்க்கம் என்ற முறையில் உழவர் வர்க்கத்தின் தன் உணர்வு வளர்வதற்கு எப்போதும் இது கேடு சூழ்ந்தது.

## VI

முன் பக்கங்களில் கூறப்பட்ட சாதியின் வரலாறு, நவீன காலத்துக்குப் பக்கம் வரை கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதை இதற்குமேலும் தொடர நான் விரும்பவில்லை; ஆனாலும் இன்னும் ஒரு சில குறிப்புகளுடன் முடிக்கலாம்.

1853ஆம் ஆண்டு, பிரிட்டிஷ் ஆட்சியின் விளைவுகளை விவாதித்த போது மார்க்ஸ் முன்னறிவித்ததாவது: 'மரபுவழி உழைப்புப் பிரிவினைகளின் அடிப்படையில்தான் இந்திய சாதிகள் நிற்கின்றன; இந்தியாவின் முன்னேற்றத்துக்கும் அதிகாரத்துக்கும் இவையே தீவிரமான தடைகளாக உள்ளன. இவற்றை, ரயில் பாதை அமைப்பதன் விளைவான நவீன தொழில்துறை ஒழித்துவிடும்.' இந்த அறிவிப்பானது மிகையான நம்பிக்கையைக் காட்டுகிறது என ஏளனம் செய்வது வழக்கமாகி விட்டிருக்கிறது (லூயிதியுமோ(ன்) காண்க).[57] ஆனால் சாதி முறையின் பொருளியல் அடிப்படையை நவீன நிலைமைகள் மிகக் கடுமையாக உலுக்கியிருப்பதை மறுப்பது வீணானதாகும். இதற்குக் காரணம், பல்வேறு சாதிகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் தொழிலகப் பணியிடத்தில் ஒன்று கூடுகிறார்கள் என்பது மட்டுமல்ல; இது நிகழும்போதே மரபுவழி வேலைப் பிரிவினை குலைய ஆரம்பிக்கிறது. அதை விடவும் முக்கியம், தொழிற்சாலை உற்பத்தியானது பலதரப்பட்ட தொழில்முறைச் சாதிகளின் அல்லது கைத்தொழில் சாதிகளின் திறன்களையே அழித்துவிட்டது என்பதும் உண்மையாகும். இந்த நிகழ்முறை, இதைப்பற்றி மார்க்ஸ் எழுதுவதற்கும் முன்பே, லங்காஷயர் துணி இறக்குமதியுடனேயே தொடங்கிவிட்டது. சாதி ரீதி உழைப்புப் பிரிவினையின் அடிப்படையானது மேலுமொரு காரணத்தாலும் பலவீனப் பட்டிருக்கிறது. சுரேந்திரா ஜே.பட்டேல் சுட்டிக்காட்டி இருப்பதுபோல, விவசாயத்தை வணிகமயமாக்கியதால் பெரும் எண்ணிக்கையிலான உழவர்கள் நிலமற்ற தொழிலாளிகளாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். இதனால் இனியும் நிலமின்மை என்பது 'ஊழிய' சாதிகளுக்கு மட்டுமே உரிய நிலைமையாக இல்லை; இப்போதும் அதன் மிகப் பெரிய பகுதியினராக பெரும்பாலும் அவர்களே இருக்கிறார்கள் என்பது வேறு.[58]

ஆனால் சாதி அமைப்பின் பொருளியல் அடித்தளம் உலுக்கப்பட்டிருக்கிறது என்றாலும் அதன் கருத்தியலைப் பற்றியும் இதையே கூறமுடியுமா? அகமண முறையானது தொடர்ந்து சாதியை வலுப்படுத்தியே வருகிறது; மேலும் பரஸ்பர ஒற்றுமை உணர்வுமூலமும் உள்வாங்கல்மூலமும் பிரதேச வாரியாக சாதிகள் பெருகிவரும் நிகழ் முறையும் நடந்து வருகிறது. ஒருவகையில் நவீன மயத்தால் வன்மையாக ஊக்குவிக்கப்படும் 'சமஸ்கிருதமயமாக்கம்' இதுவரை அமைப்பின் பலிகடாக்களாக இருந்தவர்களையும் அதன் ஆதரவாளர்களாக கட்சிமாற்றுகிறது. நிலமற்ற உழைப்பாளிகளுக்கும் நிலமுடைய வகுப்புகளுக்கும் இடையிலான நல முரண்பாடு நடப்பிலிருக்கும் காலம் வரைக்கும், 'மங்கல வழக்காக' நாம் அட்டவணை சாதிகள் என பெயர்மாற்றி அழைக்கும் தீண்டப்படாதவர்களுக்கு எதிராக எல்லா சாதிகளும் ஒன்றுசேர்ந்து கொள்வதற்கு ஆன ஊக்குவிப்பு / உந்துதல் இருந்தே தீரும். சாதியே இன்னும் நம் நாட்டின் தனிப்பெரும் முக்கியமான தீர்மான காரணியாக தொடர்ந்து இருக்கிறது எனலாம்.

இந்திய மக்கள் தம் பொருள்வகை மற்றும் ஆன்மீக விடுதலைக்கான போராட்டத்தில் சாதியானது தொடர்ந்து செலுத்திவரும் ஆதிக்கத்தைத் துடைத்தொழிக்க புது ஊக்கத்துடன் முயற்சி மேற்கொள்ள வேண்டியது உச்சபட்ச முக்கியத்துவம் உடையதாகும். அப்போது மட்டுமே இந்திய முன்னேற்றத்தின் தீர்மானகரமான தடை என மார்க்ஸ் குறிப்பிட்ட சாதியத்தை அகற்ற முடியும்; அகற்றி, முறைப்படி அதற்குரிய இடமாகிய வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் அதைப்போட்டு ஒரேயடியாகப் புதைக்க முடியும்.

***தமிழில்: சிங்கராயர்***



படிப்பகம்

www.padippakam.com



**அடிக்குறிப்புகள் :**

1. காண்க: ஜெ.எச்.ஹுட்டன், காஸ்ட் இன் இண்டியா, 4 ஆம் பதிப்பு, பம்பாய், 1969, (மறுபதிப்பு), பக். 71 மற்றும் பல இடங்கள்.
2. என் மேற்கோள்கள் அனைத்தும் 1972 ஆம் ஆண்டு பலாமன் (லண்டன்) பதிப்பிலிருந்து எடுக்கப் பட்டுள்ளன.
3. ஹோமோ ஹயரார்க்கிக்கஸ், பக். 300. (படி வரிசை / கோபுரம் பார்ப்பானில் உச்சமடைகிறது.)
4. அதே, பக்.288 மற்றும் அதைத் தொடர்ந்த பக்கங்கள்.
5. அதே, பக்.300.
6. அதே, பக்.262, 274.ஆகவே டியூமோனைப் பொறுத்த வரை ''இந்துக்களும் முஸ்லீம்களும் இரண்டு தனித் தனி சமூகங்களாக அமைகிறார்கள்.''
7. அதே, பக்.209.
8. அதே, பக்.242.
9. அதே, பக்.230-31.
10. அதே, பக்.192-95.
11. அதே, பக்.265-66 இல் மாற்றமில்லாத சாதிய சட்டகம் பற்றிய தன் குறிப்புகளில், இந்த வளர்ச்சிபற்றிய விவரம் தனக்கு ஏறக்குறைய அறவே தெரியாதிருப் பதை காட்டிக்கொள்கிறார் தியுமோ(ன்)
12. எனவே இப்போது தியுமோ(ன்) இப்படிச் சொல்ல முடியும்: 'சாதி முறையில் அரசியல் பொருளியல் அம்சங்கள் ஒப்பீட்டளவில் இரண்டாம் பட்சமாகவும் தனித்த செய்திகளாகவுமே உள்ளன' அதே நூல், பக். 283.
13. அதே, பக்.260, 331-32. 'தொல்கால உற்பத்தி நிலையில் சாதியே வர்க்கமாக இருந்தது' என்னும் கோசாம்பியின் வாசகத்தை ஒப்பிட்டுக் காண்க.

    கல்ச்சர் அண்டு சிவிலிசேஷன் ஆவ் ஏன்சியன்ட் இண்டியா இன் ஹிஸ்ட்டாரிக்கல் அவுட்லைன், லண்டன், 1965, பக்.50.
14. டி.டி.கோசாம்பி, அன் இண்ட்ரக்ஷன் ட்டு த ஸ்டடி ஆவ் இண்டியன் ஹிஸ்ட்ரி, பம்பாய், 1956, பக். 25.
15. நரேந்திர வக்ளே, சொசைட்டி ஆவ் த ட்டைம் ஆவ் த புத்தா, பம்பாய், 1966, பக். 122.23.
16. அதே, பக்.103-4.
17. கோசாம்பி, இன்ட்ரடக்ஷன், பக்.122.
18. அதே நூல், பக்.121-23.
19. காண்க: கோசாம்பி, கல்ச்சர் அண்டு சிவிலிசேசன் ஆவ் ஏன்சியன்ட் இண்டியா, பக்.15.
20. காண்க: விவேகானந்த ஜா, இண்டியன் ஹிஸ்ட் டாரிக்கல் ரெவ்யூ (ஐ எச் ஆர்) II (1) பக்.22-23.
21. ஏ. கோஷ் பற்றிய ஆர். எஸ். சர்மாவின் மதிப்பீடு, த சிட்டி இன் யேர்லி ஹிஸ்ட்டாரிக்கல் இண்டியா (சிம்லா, 1973), ஐ எச் ஆர் I (1) இல் வெளிவந்தது, பக்.98-103.
22. வி. கோர்டன் ச்சைல்டு, சோசல் எவலூஷன், பர்: சர். மார்ட்டிமர் வீலர், 1963, பக்.110.
23. காண்க: சர். ஜான் மார்ஷல், தக்சிலா, II, கேம்பிரிஜ், 1952, பக்.486 (சுழல் திரிகை) & 555 (கத்திரி).
24. ஆர். ஃபிக், த சோசல் ஆர்கனைசேஷன் ஆவ் நார்த் ஈஸ்ட் இண்டியா இன் புத்தாஸ் ட்டைம், ஆங்கில பெயர்ப்பு, கல்கத்தா, 1920, பக்.280-85.
25. சோசாம்பி, இன்ட்ரடக்ஷன், பக். 236-37.
26. அதே, பக்.158-59.
27. கல்வெட்டு ஆணை XIII இல் பதிவாகியுள்ளது.
28. சிறப்பாக, பி.இ.வி. மற்றும் இருமொழிகளில் பொறித்துள்ள காந்தஹார் கல்வெட்டு.
29. ஆர்.எஸ்.சர்மா, சூத்ராஸ் இன் ஏண்சியன்ட் இண்டியா, டெல்லி, 1958, குறிப்பாக பக்.232-34.
30. ய ரெக்கார்டு ஆவ் த புதிஸ்ட் ரெலிஜன் ஆஸ் பிராக்ட்டிஸ்டு இன் இண்டியா அண்டு த மலாய் ஆர்ச்சிபெலகோ, மொர்: ஜே. தக்காக்குசு, ஆக்ஸ்போர்டு, 1986, பக்.62.
31. மெகஸ்தனிசைப் பற்றிக் காண்க: ஆர்.சி.மஜூம்தார், த கிளாசிக்கல் அக்கவுண்ட்ஸ், ஆவ் இண்டியா, கல்கத்தா, 1960, பக்.224-26, 263-68; யுவான்ச்சுவாங், புதிஸ்ட் ரெக்கார்ட்ஸ் ஆஃப் த வெஸ்ட்ர்ன் வர்டு, I, மொ-ர்: எஸ்.பியல், லண்டன், 1884, பக்.82; பாபர், பாபர் நாமா, மொ-ர்: ஏ.எஸ்.பிவரிட்ஜ், லண்டன், 1921, பக்.520; பிரா(ன்)சுவா பெர்னியே, ட்ராவல்ஸ் இன்த மொகல் எம்ப்பயர், 1655-68, மொ-ர்: ஏ.கான்ஸ்ட்டபிள், ப-ர்:வி.ஏ.ஸ்மித், ஆக்ஸ் போர்டு, 1916, பக்.259.
32. கார்ல் மார்க்ஸ், தியரீஸ் அவ் சர்ப்ளஸ் வேல்யூ, தொகுதி III, ஆங்கில பெயர்ப்பு, மாஸ்கோ, 1971, பக்.435.
33. கேப்பிட்டல், I, ப-ர்: டோனா டார், மொ-ர்: மூர் & ஏவ்லிங், லண்டன், 1938, பக்.351.
34. தியுமோ(ன்), ஹோமோ ஹயரார்க்கிக்கஸ், பக்.150.
35. எச். ஃபுக்காஸவா, ரூரல் சர்வன்ட்ஸ் இன் தி எயிட்டீன்த் செஞ்ச்சுரி மகராஷ்ட்ரியன் வில்லேஜ் - டெமியர்ஜிக் ஆர் ஜாஜ்மனி சிஸ்ட்டம், ஹிட்டோட்ஸூ பஷி ஜ(ர்)னல் ஆவ் எக்கனாமிக்ஸ் (எச் ஜேஈ), XII 2. 1972, பக்.14-40.
36. கோசாம்பி, இன்ட்ரடக்ஷன், பக்.312.
37. பி.என்.எஸ்.யாதவா, சொசைட்டி அன்டு கல்ச்சர் இன் நார்த்தர்ன் இண்டியா இன் த ட்வெல்த் சென்ச்சுரி, அலகாபாத், 1973, பக்.267.
38. ஸியாவுதின் பருனி, தாரிக் - இ ஃபிருஸ் -ஷாஹி, பர்: எஸ்.ஏ.க்கான், டபிள்யு.என்.லீஸ் & கபிருதின், Bib.Ind.) கல்கத்தா, 1860-62, பக்.287. பலஹர் பற்றி அறிய: எச்.எம். எலியட், மெம்மாயிர்ஸ் ஆவ் த ஹிஸ்ட்ரி ஃபோ(ல்)க்லோர் அன்டு டிஸ்ட்ரி பியூஷன் ஆவ் ரேஸஸ் இன் த வெஸ்டர்ன் ப்ராவின்ஸஸ், II, ப-ர்: ஜான் பீம்ஸ், லண்டன், 1869, பக்.249; மற்றும் இர்ஃபான்ஹபிபு, அகுரேரியன் சிஸ்ட்டம் ஆவ் முகல் இண்டியா, பக்.120-21.



படிப்பகம்

www.padippakam.com

39. மார்க்ஸ், கேப்பிட்டல், I, பக்.331-32.

40. எடுவர்டு சி.சாச்சங், அல்பெருனிஸ் இண்டியா, I லண்டன், 1910, பக்.101.

41. எழுதியவர் பெயர் தெரியவில்லை, சாச்சா நாமா, 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பெர்சிய பெயர்ப்பு. ப-ர்: உ-தௌத்போத்தா, ஐதராபாத் டிவிசன், 1939, பக்.214-16, 47-48. ஜாட்டுகள் தமக்கு ஒரு அடையாளமாக தம்முடன் எப்போதும் நாய்களை வைத்திருக்க வேண்டும் என வற்புறுத்தினான், பின்னானில் வந்த ஒர் அரபு ஆளுநர். காண்க. எலியட் & டவ்சன், ஹிஸ்ட்ரி ஆவ் இண்டியா ஆஸ் ட்டோல்டு பை இட்ஸ் ஒன் ஹிஸ்ட்டாரியன்ஸ், I, லண்டன், 1867, பக்.129.

42. அல்பெருனிஸ் இண்டியா, I, பக்.100.

43. கோசாம்பி, இன்ட்ரட்க்ஷன், பக்.370.

44. காண்க: இர்ஃபான் ஹபிபு, ச்சேஞ்சஸ் இன் டெக்னாலஜி இன் மெடீவல் இண்டியா' ஸ்ட்டடீஸ் இன் ஹிஸ்ட்ரி, II, எண் I (1980), பக்.15-39.

45. இந்த பத்திக்கு அடிப்படையான ஆதாரங்களை ஏற்கெனவே என் காம்பிரிஜ் எக்கனாமிக் ஹிஸ்ட்ரி ஆவ் இண்டியா, தொகுதி1, காம்பிரிஜ், 1982, பக்.89.93இல் தந்திருக்கிறேன். விரிவு ஆங்கு காண்க.

46. 'பார்ப்பனியத்தை பெரிய அளவில் இசுலாம் வெற்றிகொண்ட' மேற்கு பஞ்சாபில் நிலவிய நிலைமைகள் பற்றிய டி.இபட்சனின் குறிப்புகள் காண்க, பஞ்சாப் காஸ்ட்ஸ், லாகூர், 1916, பக்.10-11.

47. மோரிஸ் டி. மோரிஸ், 'வேல்யூஸ் ஆஸ் அன் ஆப்ஸ்ட்டக்கிள் ட்டு எக்கனாமிக் குரோத் அன் சவுத் ஏசியா, 'ஜர்னல் ஆவ் எக்கனாமிக் ஹிஸ்ட்ரி (ஜே இ எச்), XXVII, பக்.588-607.

48. எச்ஜேஈ, IX (1), (1968), பக்.39 முதலானவை.

49. 'ஜாட்ஸ் ஆவ் பஞ்சாப் அன்டு சிந்து' என்ற கட்டுரையில் இந்த ஆதாரத்தை நான் ஆராய்ந்திருக்கிறேன், பஞ்சாப் ப்பாஸ்ட் அன்டு பிரசன்ட் : எஸ்ஸேய்ஸ் இன் ஹானர் ஆவ் டாக்டர் காந்தா சிங், பர்: ஹர்பன்ஸ் சிங் & என்.ஜி.பாரியர், பாட்டியாலா, 1976, பக்.14-15.

50. சாக்வி முஸ்த்தாயித் கான், மா'அசிர்.இ ஆலம்கிரி, ப-ர்: ஆகா அகமது அலி, கல்கத்தா, 1870 - 73, பக்.14-15.

51. கஃபி க்கான், முண்ட்டக்கபுல் லுபாபு, ப-ர்: கபிருதின் அகமது, கல்கத்தா, 1860-70, தொகுதி II, பக்.252.

52. முஹம்மது ஷஃபி வரித், மிராத்துல் வரிதாத், பிரிட்டிஷ் நூலகம் (லண்டன்) எம். எஸ். Add, 6579, F.117b.

53. இந்த உத்தரவுகளைக் கொண்ட சத்நாமி சாத்திரம், போதிகியான் பனி சாத்நாமி என்ற தலைப் புடையது. ராயல் ஏசியாட்டிக் நூலகம், லண்டன், எம் எஸ், ஹிந்த். இல் பத்திரப்படுத்தப் பட்டுள்ளது. படி எதுவும் இருப்பதாகத் தெரிய வில்லை.

54. ஜார்ரெட்டின் அயினிஅக்பரி மொழிபெயர்ப்பில் இந்த அம்சம் விடுபட்டு விட்டது, ஏனெனில் பத்திகளின் வரிசையை மொழிபெயர்ப்பாளர் மாற்றிவிட்டார். எனது அகுரேரியன் சிஸ்ட்டம் ஆவ் முகல் இண்டியா காண்க, பம்பாய், 1963, பக்.139.

55. சோசல் ஆரிஜின்ஸ் ஆவ் டிக்ட்டேட்டர்ஷிப் அன்டு டெமாக்ரசி, 1977, பக்.317-18ா.

56. ஆர். எஸ். சர்மா, இண்டியன் ஃபியூடலிசம், இரண்டாம், பதிப்பு, தில்லி, 1980, பக்.220.

57. ஹோமோ ஹயரார்க்கிக்கஸ், பக்.265.

58. சுரேந்திரா ஜே.பட்டேல், அக்ரிக்கல்ச்சுரல் லேபரர்ஸ் இன் இண்டியா அன்டு பாகிஸ்தான், பம்பாய், 1952, குறிப்பாக பக்.9-20, 63-65.



**வாழ்க்கைச் சுகங்கள்**

அதிகமாக ஆக, கலைகள்
பூரணத்துவமடைய அடைய,
ஆடம்பரம் பெருகப் பெருக,
உண்மையான வீரம்
தேய்ந்து போகிறது;
ஒழுக்கங்கள் மறைந்து
போகின்றன.

*ரூஸ்ஸோ*



படிப்பகம்

www.padippakam.com



# அமில்கார் கப்ராலின் வர்க்க தற்கொலைக் கோட்பாடும் புரட்சிகர சோசலிசமும்!

டாம் மெய்சனெல்டர்*

புரட்சிகர சோசலிஸ்டுகளுக்கு மிகவும் கடினமான ஒரு காலகட்டம் இது. சோவியத் ஒன்றியத்தின் விரைவான வீழ்ச்சியும் சிதைவும், சாந்தினிஸ்ட்டாக்களின் தேர்தல் தோல்வி, கியூபாவை எதிர்கொண்டுள்ள பற்பல சிக்கல்கள், ஆப்பிரிக்காவில் புரட்சிகர மார்க்சிய-லெனினியத்தின் மறைவு எல்லாம் சேர்ந்து அடிப்படைக் கோட்பாடுகளையும் போர்த் தந்திரங்களையும் தீவிரமான கேள்விக்குள்ளாகும்படி நெருக்குகின்றன. பன்னாட்டு மூலதனமானது உலகம் முழுவதையும் ஏறக்குறைய எவ்வித எதிர்ப்புமில்லாமல் ஆள்வதாகத் தோன்றுகிற ஒரு காலம் இது. புரட்சிகர சோசலிசத்துக்கு புத்துயிரூட்ட வேண்டுமானால் புரட்சிபற்றியும் சோசலிசம்பற்றியுமான உண்மைகள் என நடப்பில் உலவும் கருத்துகளை மறுஆய்வு செய்தாக வேண்டும். அடிப்படையான கேள்விகள் கேட்கப்பட்டாக வேண்டும். தோற்றுப்போன புரட்சிகள் பலவும் ஏன் ஏதோ ஒருவித மேட்டுக்குடி ஆட்சியை உருவாக்குவதிலேயே போய் முடிந்துள்ளன? இதுவரை இந்த கேள்விக்கு தரப்பட்டுள்ள பெரும்பாலான விடைகளும், முதலாளியம் புத்தெழுச்சி பெற்றுவரும் ஒரு உலக சூழலையே (இதற்கு காரணமென) புத்திசாலித்தனமான முறையில் வலியுறுத்திக் கூறுகின்றன; இருந்தாலும் சோசலிசப் புரட்சிகளை உள்ளிருந்து ஆராய்வதும் முக்கியமாகும்.

உலக முதலாளியத்தின் மையத்தைவிட பெரிதும் அதன் ஓரத்திலேயே சோசலிச புரட்சிகள் தோன்றி இருக்கின்றன. 1917-இல் முதல் மார்க்சியப் புரட்சி ருசியாவிலேயே நிகழ்ந்தது. மார்க்ஸ் எதிர்பார்த்ததாக தெரிவதுபோல் பிரிட்டனிலோ ஜெருமனியிலோ நிகழவில்லை. 1949-இல் சீனாவில் நிகழ்ந்தது. 1959-இல் கியூபாவில் நிகழ்ந்தது. மிக அண்மைக் காலத்தில் சோசலிசப் புரட்சிகள் எனப்படுபவை தென்கிழக்காசியா, ஆப்பிரிக்கா, மத்திய அமெரிக்கா ஆகிய இடங்களிலேயே வெற்றி பெற்றுள்ளன. முன்னேறிய ஏகபோக முதலாளியத்தின் ஒரு முதன்மை முரண்பாடு, முதலாளியத்தில் வளர்ந்த மைய நாடுகளுக்கும் முதலாளியத்தால் சுரண்டப்படும் ஓர நாடுகளுக்கும் இடையில் காணப்படுகிறது என்பதை லெனினும் புகாரினும், மிக அண்மையில் சமிர் அமினும் சுட்டிக்காட்டி இருப்பது சரியெனவே படுகிறது. வளர்ந்த நாடுகளில் பெரும்பான்மையினராக இருக்கும் தொழில்துறைப் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ்தான் சோசலிசப் புரட்சி நடைபெறும் என்பது மரபு மார்க்சியம் முன் வைக்கும் பார்வை. ஆனால் இதற்கு மாறாக புரட்சியானது ஓர நாடுகளில் வேறொரு விதமான சமூகத் தலைமையின் கீழ் நடைபெறுகிறது, இதில் பதிலி வர்க்கத்தின் தலைமை ஏற்படுவதற்கான தர்க்கத்தின் அபாயங்கள் நிரம்பியுள்ளன. முழுமையாக தொழில்மயப்படுத்தப் படாத இடங்களில், உற்பத்தி சக்திகள் பெரிதும் அப்போதுதான் வளர்ந்துகொண்டிருக்கும் இடங்களில், தொழில்துறைப் பாட்டாளி வர்க்கம் எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருக்கும் இடங்களில், மக்களில் பெரும்பாலோர் உழவர்களாகவும் கூலி உழவர்களாகவும் இருக்கும் இடங்களில்தான் சோசலிசப் புரட்சிகள் நடந்தேறியுள்ளன. தற்போதைய உலக முதலாளியத்தின் தன்மையும், கட்டமைப்பு ரீதியான சமாளிப்புப் பொருளியல் மற்றும் மறுகாலனியத்தின் விளைவாக அதிகரித்துவரும் வறுமையும், முதன்மையாகவும் முக்கியமாகவும் மூன்றாம் உலகிலேயே தொடர்ந்தும் புரட்சிக்கான சூழல்களை உருவாக்கி வருகின்றன. மறுபடியும், மார்க்சும் எங்கல்சும் அதிகமாக ஆராயாத உலகப் பகுதிகளிலேயே சோசலிசத்தின் எதிர்காலம் அமைகிறது. உலக முதலாளியத்தின் ஓரப் பகுதிகளில் நடந்தேறக்கூடிய ஒரு புரட்சிக்கான கோட்பாடு சோசலிஸ்டுகளுக்கு தேவைப்படுகிறது. நல்லவேளையாக, இத்தகைய சூழலுக்கு நேரடியாக பொருந்திப் போகும் கருத்துகளைக் கொண்ட ஒரு புரட்சிகர சோசலிச கோட்பாட்டாளர் இருக்கிறார். அவர்தான் அமில்கார் கப்ரால்.**

---

★ நாமஸ் மெய்சனெல்டர், சான் பெர்னார்டினோவிலுள்ள கலிபோர்னியா மாநில பல்கலைக்கழகத்தில் சமூகவியல் பேராசிரியராக இருக்கிறார்.

★★ கப்ராலையும் அவர் வாழ்வையும் பற்றிய அருமையான ஆய்வுகளுக்குக் காண்க: ஜோக் மக்கல்லாக்கின் இன் த ட்விலைட் ஆவ் ரெவலூசன் (1983) அல்லது Ufahama (1973)இல் வெளியான பென் மகியுபேனின் ''அமில்கார் கப்ரால்: எவலூசன் ஆவ் ரெவலூசனரி ந்நாட்''. கப்ராலின் சொந்த கருத்துகள் ரெவலூசன் இன் கினியா வில் (1969) சிறப்பாக முன்வைக்கப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com



**அமில்கார் கப்ரால்**

கினியா-பிசோ நாட்டை போர்த்துக்கல்லின் காலனிய அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த தேசிய விடுதலை இயக்கத்தின் புரட்சிகர சோசலிசத் தலைவராக விளங்கியவர் அமில்கார் கப்ரால். ஒரு குறிப்பிடத்தக்க வரலாற்று நாயகராக அவர் விளங்கினார் என்றாலும் ஏழை நாடுகளில் சோசலிசப் புரட்சியை ஏற்படுத்துவதுபற்றிய பொதுவான கோட்பாட்டை அவர் வளர்த்தெடுத்தது குறித்தே இங்கு நான் முதன்மை கவனம் செலுத்துகிறேன். போர்த்துகீசிய கினியாவில் 1924-இல் பிறந்தார் அமில்கார் கப்ரால். வெர்தே முனை தீவில் கல்வி கற்றார். லிஸ்பனில் ஊரக பொருளியல் படித்தார். காலனிய ஆட்சியில் ஊரக பொருளியலாளராக பணிபுரிய 1951-இல் கினியாவுக்கு திரும்பினார். தேசம்தழுவிய ஒரு வேளாண் கணக்கெடுப்பு நடத்தினார். இந்த பணி அவருக்கு கினியா-பிசோவிலிருந்த காலனிய சமூக பொருளியல் கட்டமைப்பு பற்றிய பரவலானதும் ஆழமானதுமான அறிவை அளித்தது. 1954 வாக்கில் கப்ரால் ஒரு விடுதலை இயக்கத்தைக் கட்ட உதவினார். இதுவே காலப் போக்கில் PAIGC (கினியா மற்றும் வெர்தே முனை சுதந்திரத்துக்கான ஆப்பிரிக்கக் கட்சி) ஆகியது. PAIGC ஒரு சிறு கட்சி. அதன் அடிப்படை உறுப்பினர்களாக சிறு முதலாளிய வகுப்பைச் சேர்ந்த அரசு பணியாளர்களும் மாதசம்பளம் வாங்கும் பிற ஊழியர்களும் இருந்தார்கள். பெரிய லட்சியக்கோட்பாட்டு விசயங்களைவிடவும் நடைமுறை சார்ந்த பொருள் வகை சிக்கல்களை சூழ்ந்து பொதுமக்களை அரசியல் ரீதியாக அணிதிரட்ட வேண்டும் என்பதையே கப்ராலின் புரட்சிகர போர்த்திட்டம் வலியுறுத்தியது. போர்த்துக்கீசியராலும் உள்நாட்டைச் சேர்ந்த எதிர்க் கருத்தினராலும் வகுக்கப்பட்ட கட்சிக்கவிழ்ப்பு முயற்சியின் ஒரு பகுதியாக, வருந்தத்தக்க முறையில் அரசியல் படுகொலை செய்யப்பட்டார் கப்ரால். எட்டு மாதங்களுக்குப் பிறகு 1962-இல் கினியா பிசோவுக்கு சுதந்திரம் வந்தது - ஆனால், அந்தோ, அதைப்பார்க்க அப்போது கப்ரால் உயிரோடு இல்லை.

**கப்ராலின் கோட்பாடு**

மார்க்சியத்தின் பொருள் முதல்வாத முறையியலில் இருந்து வழுவாத கப்ராலின் சோசலிசப் புரட்சிக்கோட்பாடானது, மூன்றாம் உலகின் மெய்யான சமூக பொருளியல் சூழ்நிலையைப் பற்றிய முழுமையான புரிதலை அடிப்படையாகக் கொண்டது ஆகும். உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியே வரலாற்றை இயக்கும் அடிப்படையான உந்துவிசை என வாதிடுகிறார் கப்ரால். குறிப்பிட்ட உற்பத்தி உத்திகளின் அடிப்படையில் அமைந்த ஒவ்வொரு உற்பத்தி முறையும் தொடர்ந்து ஒரு குறிப்பிட்ட சமூக வர்க்கக் கட்டமைப்பை விளைவிக்கிறது. காலனியப் பொருளியல்களும் உழவுக் கொள்கைகளும், விளைச்சலை யந்திரமயமாக்குதல் மூலமும் நில உடைமையின் குவிப்பு மூலமும், காலனியின் உள்நாட்டு நில வரத்தை அடியோடு மாற்றி அமைத்தன. அதாவது காலனியின் உற்பத்தி முறையை, சிறு அல்லது குழு உடைமைகொண்ட துண்டு நிலங்களில் கையால் உழுவதன் அடிப்படையில் அமைந்த உற்பத்தி முறையிலிருந்து, பெரிய தனியார் நில உடைமைகளில் யந்திரங்களைக் கொண்டு உழுவதன் அடிப்படையில் ஆன உற்பத்தி முறையாக மாற்றியதன் மூலம், உள்நாட்டு நிலவரத்தை அடியோடு மாற்றியமைத்தன. தனிஉடைமை முறையிலும் தொழில்நுட்ப அறிவிலும் சமுதாய வர்க்கங்கள் நிலை கொண்டன. பெரும் செலவு பிடிக்கும் யந்திரங்களும் ஏற்றுமதி சார்ந்த உற்பத்தியும், அந்நிய முதலாளிகளுக்கும் அவர்களின் தொழில்நுட்ப திறனாளிகளுக்கும், நாட்டின் பொருளியல் திசைவழி மீது ஆதிக்கம் செலுத்திய அவர்களின் உள்ளூர் கூட்டாளிகளுக்குமே அதிகாரமளித்தன. அத்துடன், சுதேச பண்பாடுகளையும் அடையாளங்களையும் மறுத்து ஒதுக்கி ஒரு ஐரோப்பிய வாழ்க்கை முறையை உள்வாங்கிக் கொண்டதன் விளைவாகவும் தான் காலனிய அடிமைத்தனம் வேரூன்றியது. வல்லரசியம் என்பது ஒரு சுரண்டல் கட்டமைப்பு. இதில் வல்லரசானது, வேறொரு சமுதாயத்தின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை தான் கட்டுப்படுத்துவதன் மூலம் அதன் வரலாற்றின் மீது தான் ஆதிக்கம் பெறுகிறது என்று வாதாடுகிறார் கப்ரால்.

தன் நாட்டில் செயல்பட்டு வந்த உற்பத்தி சக்திகளை வல்லரசியமானது உண்மையாகவே மாற்றி விட்டது என்பதை கப்ரால் அறிந்திருந்தார். அப்போது தேசிய பாட்டாளி வர்க்கம் மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே உள்ளது என்பதையும் அவர் அறிந்திருந்தார். கினியாபிசோவாக அமையவிருந்த நிலப் பகுதியைச் சேர்ந்த பெரும்பான்மையான குடிகள் உழவர்களாகவே இருந்ததை அவர் உணர்ந்தார். நகரங்களோ சரியான ஒரு உதிரிப் பாட்டாளி வகுப்பையும் நாட்டுப் புறத்திலிருந்து புதிதாக வந்து குடியேறிய இளம் குடியேறிகளின் ஒரு கூட்டத்தையும் கொண்ட 'வர்க்கம்கெட்ட' (declasse) கூறுடன் விளங்கின. நாட்டில் சிறுமுதலாளி வகுப்பும் ஒரு சிறு அளவில் இருந்தது. இவர்களை உயர்நிலை அதிகாரிகள் மற்றும் பணித்துறையினராகவும் கீழ்நிலை அதிகாரிகள் மற்றும் உழவர்களாகிய அடுத்த மட்ட பிரிவினராகவும் பிரிக்க முடியும். முதலில் சொன்ன ''உயர் நிலை'' சிறு முதலாளி வகுப்பானது வல்லரசுக்குச் சார்பான ஒரு காலனிவாத அரசியலையே தழுவி நடந்தது. ஆனால் ''கீழ்நிலை'' சிறுமுதலாளி வகுப்பானது தன் கல்வி காரணமாகவும், காலனியத்தின் பாகுபாடான நடத்துதலையும் வல்லரசியத்தின் கொள்ளையையும் தானே நேரடியாக அனுபவித்ததின்



படிப்பகம்

www.padippakam.com



காரணமாகவும், தேச விடுதலைக்கான ஒரு போராட்டத்தில் பங்கேற்க முன்வரலாம். மேல்குடி வகுப்பின் ஒரு சிறு பகுதி தரகுத்தன்மை கொண்டதாகவும் இருந்திருக்கலாம். ஆக, இதுதான் உலக முதலாளியத்தின் ஓர நாடுகள் நெடுகவும் பொதுவாயுள்ள வர்க்கக் கட்டமைப்பாகும். சிலருடைய வறட்டுக் கோட்பாடுகளைப் பொருட்படுத்தாவிட்டால், ஓர விளிம்பு நிலைச் சமுதாயங்கள் பெரிதும் உழவர்கள், ஓரம் கட்டப்பட்ட அரை நகர வாசிகள், சிறு முதலாளி வகுப்பு, ஒரு சிறு பிரிவு தேசிய மேட்டுக்குடி வகுப்பு ஆகியோரையே கொண்டுள்ளன. விளிம்பு நிலைச் சமுதாயங்களில் உழவர்களே பெரும்பான்மையினராக உள்ளனர், எனவே அங்கு நடக்கக்கூடிய எந்த ஒரு வெற்றிகரமான சமூகப்புரட்சியிலும், மிகப்பெரிய பவுதிக சக்தியாக கண்டிப்பாக இந்த வகுப்பே இருக்கும் என உணர்ந்து அங்கீகரித்தார் கப்ரால்.

ஏகபோக முதலாளிய யுகத்தில் வல்லரசியத்துக்கு எதிரான மூன்றாம் உலக இயக்கங்களே வரலாற்றின் மைய நிகழ்வாக ஆகிவிட்டுள்ளது என உய்த்தறிந்தார் கப்ரால். உற்பத்திச் சக்திகளின் மீது சுதேசியக் கட்டுப்பாட்டை வென்றெடுப்பதைப் பொறுத்தே நிசமான சமுதாய மாற்றம் ஏற்படுகிறது, வெறும் அரசியல் சுதந்திரம் வாங்குவது என்பது புதுக்காலனிய வடிவில் வல்லரசிய ஆதிக்கம் தொடர்ந்தும் நீடிப்பதற்குத்தான் உதவும். அரசியல் சுதந்திரம் பெறுவதாலேயே விடுதலைப் போராட்டம் நிறைவு பெற்று விடாது; அதன் ஒரு கட்டம் மட்டுமே முடிந்துள்ளது. வரலாறே கூட உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியால்தான் தீர்மானிக்கப்படுகிறது. எனவே ஒரு தேச மக்கள் தம் சொந்த உற்பத்தித் தொழில் நுட்பங்களின் மீது தம் சொந்த கட்டுப்பாட்டை அடையப்பெறுவதன்மூலம்மட்டும்தான்தம் வரலாற்றை மீட்டெடுக்க முடியும். இதற்குக் குறைவான எதுவும் காலனிய அடிமைத்தனத்தின் புதிய வடிவம்தான்.

கினியாவின் வர்க்கக் கட்டமைப்பைப் பற்றி தான் நடத்திய ஆய்வால் கப்ராலுக்கு தீர்மானமாக தெரியவந்த உண்மை என்னவென்றால், மூன்றாம் உலகுபற்றிய மார்க்சியத்தில் சில புரிதல்களுக்கு மாறாக, வெற்றிகரமான புரட்சியை சாதிக்கக்கூடிய ஒரு தனிப்பட்ட வர்க்கம் என்பது அங்கு கிடையாது என்பதாகும். ஓர சமுதாயங்களில் காணப்படும் அடிப்படையான வர்க்க முரண்பாடு என்பது, வல்லரசியத்தின் உள்நாட்டு வெளிநாட்டு ஆதரவாளர்களுக்கும் ''தேசவர்க்கம்'' ஆகிய பொதுமக்களுக்கும் இடையிலானதாகும் என வாதாடுகிறார் கப்ரால். உழவர் வகுப்பு, சிறுமுதலாளி வகுப்பு உட்பட்ட பலவேறு சமூக வகுப்புகளின் வல்லரசிய எதிர்ப்புக் கூட்டணியை அமைப்பதிலேயே புரட்சிக்கான உள்ளாற்றல் இருக்கிறது. இந்த ''தேச வகுப்பானது'' ஒட்டுமொத்தத்தில் அரசியல் சுதந்திரத்துக்கு மட்டுமே ஆசைப்படலாம், ஆனால் அதன் இன்னும் தீவிரமான பிரிவுகளால் தொடர்ந்து நடத்தப்படும் ஒரு சமூகப் புரட்சியில் போய் முடியக்கூடிய ஒரு நிகழ்முறையை தொடங்கிவைக்க அந்த தேசவகுப்பால் மட்டுமே முடியும். சுதந்திரத்துக்குப் பிறகு மட்டுமே ஒரு தேசிய முதலாளி வகுப்பு, பிற மேட்டுக்குடி வகுப்புகள் மற்றும் ''கீழ்நிலை சமூக வகுப்புகள்'' உருவாகும். இந்தக் கீழ்நிலை வகுப்புகளில், கீழ்நிலை சிறு முதலாளி வகுப்பு, அதனோடு தொடர்புடைய (கப்ராலைப் போன்ற) அறிவாளிகள் குழு ஆகியவையும் அடங்கும். இவர்களே புரட்சிக்கான தத்துவார்த்தத் தலைமையை வழங்குகிறார்கள். புரட்சிகர சோசலிச லட்சியங்களைக் கொண்ட ஒரு தொழிலாள வர்க்கம் பெரும்பான்மையாக நிலவாத ஒரு சூழ்நிலையில், இங்கு கடைசியாக சொன்ன குழு குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் உள்ளதாகும்.

கினியாவுக்கே உரித்தான தனிச்சிறப்பான சில தன்மைகளை மட்டும் தவிர்த்துவிட்டுப் பார்த்தால், கப்ரால் விளக்கியுள்ள ஒரு சமூக வர்க்கக் கட்டமைப்பு என்பது பெரும்பாலான மூன்றாம் உலக நாடுகளிலும் பொதுவாக நிலவுவதே என்பது தெளிவாக வேண்டும். அத்தகைய நாடுகளின் சோசலிச புரட்சிகள் ஒரு தொழிலாளி வர்க்கப் பெரும்பான்மை இல்லாமலேதான் கட்டப்பட்டாக வேண்டும். ருசியா முதல் நிகராகுவா வரை வரலாற்றில் நிகழ்ந்தேறிய சோசலிசப் புரட்சிகள் அனைத்திலும் இதுதான் நிலவரமாக இருந்து வந்துள்ளது. மூன்றாம் உலகப் புரட்சியாளர்கள் ''தொழிலாளி வர்க்கமற்ற ஒரு சமுதாயத்தில் ஒரு தொழிலாளி வர்க்க உணர்வைப் புகட்டியாக வேண்டி உள்ளது''. மக்கள் தொகையில் பெருமளவானோர் உழவர்களாக இருக்கிறார்கள். இவர்களே புரட்சியின் தலையாய 'பவுதிக' சக்திகளாக அமைகிறார்கள். அவர்கள் வல்லரசிய எதிர்ப்பாளர்களாக இருக்கலாம், ஆனால் சோசலிச புரட்சியாளர்களாக ஆகாமல் போகலாம் அதற்கான ஒரு சித்தாந்தமோ தலைமையோ இல்லாமல் இருக்கிறார்கள் அவர்கள். அத்தகைய ஒரு தலைமையை சிறு முதலாளி வகுப்பின் ஒரு புரட்சிகரப்பிரிவால் வழங்க முடியும் - (ஏனெனில்) இந்த வகுப்பே வல்லரசியத்துடனும் அதேசமயம் புரட்சிகர சோசலிசக் கோட்பாட்டுடனும் பரந்த அளவிலான நேரடித் தொடர்பு கொள்ள அதிக வாய்ப்புகளைப் பெற்றுள்ளது.

**''வர்க்கத் தற்கொலை''**

ஓரத்தில் புரட்சிகர சோசலிசம் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கான திறவுகோல், சுதந்திரத்துக்குப் பிறகு தேசிய இயக்கத்தின் சிறுமுதலாளிய தலைமை ஆற்றும் பாத்திரத்திலேயே உள்ளது என உணர்ந்தார் கப்ரால். புதுக்காலனியத்தின் வாக்குறுதிகளில் மதி மயங்கி வெறும் அரசியல் சுதந்திரத்துடன் அவர்கள் நிறைவு அடைந்துவிடுவார்களா? அரசை, ஆளும்



படிப்பகம்

www.padippakam.com

வர்க்கங்களின் ஒரு கருவியாக மாற்றுவதற்கு மட்டுமே தம் அரசியல் அதிகாரத்தை அவர்கள் பயன்படுத்துவார்களா? அப்படி நடந்தால், உற்பத்திச் சாதனங்கள் பொதுமக்களின் கட்டுப்பாட்டில் இருக்கக் கூடியதாக வரையறுக்கப்படும் மெய்யான விடுதலையை, அத்தகைய அரசியல் சுதந்திரம் கொண்டு வராது. உலக முதலாளியக் கட்டமைப்புக்குள்ளேயே, தன் சொந்த வர்க்க நலனுக்காக மட்டுமே செயல்படுவதாக தேசியவாத தலைமை நடந்து கொள்ளுமானால், சிறுமுதலாளி வர்க்கம் ஒரு சலுகைபெற்ற வர்க்கமாக தன்னை நிலைநிறுத்திக் கொள்ளவும் தொடர்ந்து தன்னை வளர்த்துக் கொள்ளவும் செய்யும்; ஒருவேளை ஒரு தேசிய போலி-முதலாளி வகுப்பாக அது ஆகவும் கூடும். இது சிறுமுதலாளி வகுப்புக்கு ஏற்படக்கூடிய ஒரு கடுமையான சபலம்தான். இதற்கு அவர்கள் ஆட்பட்டுவிட்டால் ஒரு தேசியவாத அரசியல் வெற்றிக்குப் பின் தலைமைப் பதவிகளையும் அதிகாரங்களையும் தக்க வைத்துக்கொள்ள அவர்களை அது அனுமதிக்கிறது. ஆனால் சுதந்திர இயக்கங்களின் சிறு முதலாளியத் தலைமையானது ஒரு வர்க்கம் என்ற வகையில் தற்கொலை செய்து கொள்வதுதான் சமூகப்புரட்சிக்குத் தேவைப்படுகிறது.

புரட்சிகர சிறுமுதலாளியத் தலைமையானது வர்க்க தற்கொலை செய்துகொள்ள வேண்டுமானால், ஒரு சமூக வர்க்கம் என்ற முறையில் தன் உடனடிப் பொருள்வகை நலன்களுக்காக அது செயல்படக் கூடாது; மாறாக தன் சொந்த புரட்சிகர உணர்வுகளுக்கே அது செவிமடுக்க வேண்டும், புரட்சிகரப் பண்பாட்டுக்கே இசைந்து செல்ல வேண்டும். உழைக்கும் வர்க்க மக்கள் திரளுடன் தன்னை அடையாளப்படுத்திக்கொள்வதன் வழியாக தன் வர்க்கத்தகுதி, சிறப்புச் சலுகைகள், அதிகாரம் ஆகியவற்றை அது தியாகம் செய்தாக வேண்டும். நடக்க வாய்ப்பில்லாத இந்த நிகழ்வு நடந்தேறுவது, சிறுமுதலாளி வகுப்பைச் சேர்ந்த பிரிவுகளின் புரட்சி உணர்வின் ஆற்றலையும் அதற்கான பொருள்வகை அடிப்படையையும் பொறுத்துள்ளது. புரட்சிக்கர தலைமையின் வர்க்கத் தற்கொலை என்னும் கருத்தே, இன்றைய சோசலிசப் புரட்சியாளர்களுக்கு கப்ரால் விடுத்துள்ள மிக முக்கியமான சேதியாகும். இந்த வர்க்க தற்கொலைத் தன்மை இன்மையால்தான், அடிப்படையில் சோசலிசப் பதாகையின்கீழ் தொடங்கி நடத்தப்பட்டப் பல புரட்சிகளின் முற்போக்கு உள்ளாற்றலானது முனை மழுங்கிப் போயிருக்கிறது. புரட்சிப் போராட்டங்களின் தலைவர்கள், நாடு சோசலிசத்துக்கு மாறிச்செல்லும் காலத்தில் தாமே ''உதிர்ந்து போவார்கள்,'' அதிகாரத்தை பகிர்ந்து கொடுத்து விடுவார்கள் என எதிர்பார்த்தால் அது நடைமுறை சாத்தியமற்ற வெறும் கற்பனையாகவே போய்விடமுடியும். ஒருபோதும் அது நடைபெறாமலும் போகலாம். ஆனால் அது நடைபெறாமல் போகுமானால் பின் சோசலிசப் புரட்சிகள் நிசமான சோசலிச ஜனநாயகங்களாக ஆவதற்குப் பதில் அரை சோசலிச அல்லது அரசு முதலாளியத் தன்மைகொண்ட ஒருயதேச்சதிகார அரசுவாதமாகவே பெரும்பாலும் ஆகக்கூடும் என்பது தெளிவாகத் தெரிகிறது. பன்னாட்டு முதலாளியப் பாதைதான் தேசியவாத சிறுமுதலாளிய வகுப்பின் பழமைவாதப் பிரிவின் சொந்த நலன்களை ஊக்குவிப்பதாய் உள்ளது. எனவே அந்தப் பாதையை பின்பற்ற தேர்ந்துகொள்ளும் அப்பிரிவின் அரசியலிலேயே உலக முதலாளிய அமைப்பின் அதிகாரம் அறுதியாகத் தங்கியுள்ளது.

முதல் பார்வைக்கு, சிறுமுதலாளிய தலைமையின் ''வர்க்கத் தற்கொலை'' என்னும் கருத்தானது நடைமுறை சாத்தியமற்ற கருத்தாக தோன்றலாம். ஆனால் மூன்றாம் உலகின் சோசலிச புரட்சி குறித்து மிக பரவலாகப் புழங்கும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட பல சித்தரிப்புக்களைவிட அது எவ்வளவோ சாத்தியமான கருத்தாகவே தெரிகிறது. காட்டாக, பொதுமக்களே தன்னெழுச்சியாக கிளர்ந்தெழுவதுதான் ''நிசமான'' சோசலிச புரட்சிகளாக இருக்க முடியும் என்று சிலர் கருத்துரைக்கிறார்கள். இத்தகைய கருத்துகள் பெரிதும், ஒரு முறையான அரசியல் அமைப்போ, தலைமைக்கும் பொதுமக்களுக்கும் இடையில் அரசியல் வேலைப் பிரிவினையோ ஏதுமின்றியே புரட்சிகள் நடந்துவிடும் என்னும் பொருளைத் தருவனவாகவே தோன்றுகின்றன. சோசலிசமானது அரசுக்கெதிரான ஒரு புரட்சி இயக்கமாக இருக்கிற போதோ அல்லது ஒரு நீண்ட நெடிய ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் போதோ கூட அது தீவிரமான ஜனநாயகத் தன்மை கொண்டதாகவே இருக்க வேண்டும் என்பதே அந்த வாதம். தன்னெழுச்சியாக செயல்படும் வெகுமக்களின் சனநாயகமாக சோசலிசப் புரட்சியைக் காட்டும் இந்த சித்தரிப்புதான், வர்க்க தற்கொலைக் கருத்தை விடவும் அதிகமாய் நடைமுறை சாத்தியமற்றதாகும். அமைப்பும் தலைமையும் இல்லாமல் எந்த ஒரு புரட்சியும் வெற்றிபெற இயலாது. தலைவர்களும் தொண்டர்களும், அமைப்பும் கொள்கையும், திசைவழியும் நடத்துதலும் இல்லாமல், தன்னெழுச்சியான பொதுசன இயக்கம் மூலமாகவே சோசலிசம் வரமுடியும் என்று கூறுவது, சோசலிசம் ஒருபோதும் வராது என்று கூறுவதற்கே சமமாகும்.

மூன்றாம் உலகின் சோசலிச புரட்சிகளைப் பற்றி முன்வைக்கப்படும் இரண்டாவது சித்தரிப்பு என்னவென்றால், தொழிலாளர்களில் இருந்தும் விவசாயிகளில் இருந்தும் மட்டுமே தேர்ந்து எடுக்கப்பட்டு உருவாக்கப்படும் ''ஒன்றிணைந்த தலைமை''யின் கீழ், தொழிலாளி-விவசாயி கூட்டணியால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படும் ஓர் இயக்கத்தின் விளை



படிப்பகம்

www.padippakam.com



வாகவே சோசலிசப் புரட்சி சாத்தியம் என்பதாகும். இத்தகைய சித்தரிப்பு எனக்கும் பிடித்தமானதுதான். ஆனால் வரலாற்றின் யதார்த்தத்துடன் பொருந்திவராத அளவுக்கு மிகையான புனைவியல் தன்மைகொண்ட தாக இருக்கிறது இது. விளிம்பு நாடுகளில் நடத்தப் பட்ட சோசலிச புரட்சிகளுக்கு சீனாவில் மாவோவும் வியத்நாமில் ஹோவும், கியூபாவில் காஸ்ட்ரோவும், சேவும், நிகராகுவாவில் ஓர்ட்டேகாவும், மொசாம்பிக்கில் மோன்டலேனும் மாச்சலும், ஜிம்பாப்வேயில் முகாபேயும் தலைமை தாங்கியதே வரலாற்றின் பாடமெனத் தோன்றுகிறது. அதிகபட்சம், பெரிய நில உடைமையாளர்கள் உடைமை கொண்டிருக்கும் நிலத்தை தான் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்று விரும்பும் அளவுக்கு மட்டுமே விவசாயிகளின் உணர்வானது புரட்சிகரமாக இருக்கிறது. அடுத்து, மூன்றாம் உலகிலுள்ள தொழிலாளி வர்க்கமானது புதிதாக உருவானதாகவும், அளவில் சிறியதாகவும், ஒரு வர்க்கம் என்னும் முறையில் தன்னை ஒரு ஆற்றலாக இன்னும் தானே உணராததாகவும், சோசலிசத்துக்கான சமூகமாற்றத்தில் தனக்கான பொருள்வகை நலனை இன்னும் கண்டுகொள்ளாத தாகவுமே இருக்கிறது. விவசாயிகள் மற்றும் தொழிலாளிகளின் இந்த நிலவரங்களைக் கணக்கில் கொள்ளும் மார்க்சிய வர்க்கப் பகுப்பாய்வும், தலைமை குறித்து மேற்சொன்ன நிலைமைதான் ஏற்படமுடியும் என்பதை எதிர்நோக்குகிறது.

சோசலிச கொள்கையை அறிந்திருக்கிற அதை மூன்றாம் உலகின் விவசாயிகளுக்கும் தொழிலாளி களுக்கும் வழங்கமுடிகிற ஒரு அரசியல் தலைமையை அந்த விவசாயிகளும் தொழிலாளிகளும் கண்டு கொண்டால் மட்டுமே சோசலிசத்துக்கான ஓர் உந்துசக்தியாக அவர்கள் மாறுவார்கள். பெரும் பாலான ஓர சமுதாயங்களில் ஓரளவு மார்க்சிய அறிவு உட்பட்ட படிப்பறிவையும், வல்லரசியத் தினதும் காலனியத்தினதும் கைகளில் தான் அனுபவிக்கும் ஒடுக்குமுறை உட்பட்ட பட்டறிவையும், உண்மை யாகவே ஒருங்கே பெற்றிருப்பது சிறு முதலாளி வர்க்கம்தான். எப்படியும் சோசலிசம் என்பது சொல்லித்தராமலும் எண்ணிப் பாராமலும் - ஏன் - விவாதம் பண்ணாமலும் கூட ஒரு சிலருக்கு கைவருகிற ஒரு ''அறிவியல்'' கோட்பாடும் மனோ பாவமுமே ஆகும். சிறு முதலளியப் பிரிவினரே மூன்றாம் உலகின் சோசலிச இயக்கங்களுக்குப் பெரிதும் தலைவர்களாதல் கூடும் என்பது ஒரு நடைமுறை உண்மை. இறுதியில் ஒருவித ''வர்க்கத் தற்கொலை'' செய்துகொண்டாக வேண்டிய சிறு முதலாளியத் தலைவர்களைக் கொண்ட அரசியல் அமைப்புகளின் வழியாகவே விளிம்பு நாடுகளில் சோசலிசம் வரும் என்று சிந்திப்பது நடைபெற முடியாதது அல்ல; இதற்கு நேர்மாறாக எண்ணுவதே நடைபெற முடியாததாகும். வர்க்க தற்கொலைக் கருத்து ஒரு யதார்த்தமாக ஆவதற்கான ஒரு பொருள் வகை அடிப்படை யதார்த்தத்தில் நிலவியாக வேண்டும். காட்டாக, சிறு முதலாளிய தலைமையை அதிகார சபலங்களில் இருந்து விடுவித்து, அதன் சலுகைநிலைகளை அதுவாகவே விட்டுக் கொடுப் பதை நோக்கி அதை வழிநடத்தக்கூடிய, அடிப்படையி லேயே புத்தம்புதிதான, சமுதாய நிறுவனங்கள் நடப்பில் இருந்தாக வேண்டும். பிரதிநிதிகள், அதிகாரிகள் தவறு செய்தால் அவர்களை உடனடியாக திரும்ப கீழிறக்குதல் - தொழிலாளர்களுக்கு வழங்கும் அதே அளவு சம்பளத்தையே அரசியல் தலைவர் களுக்கும் வழங்குதல் - நிர்வாகப் பணிச் சுழற்சி முறை - மக்கள் நீதிமன்றங்கள் - மக்கள் குடிப்படை போன்ற, மார்க்சும் ஏங்கல்சும் யோசனைகூறிய, நேரடி மக்களாட்சிக்கான அரசியல் உத்திகளின்* அறுதி முக்கியத்துவம் இதிலேயே உள்ளது என்றே நான் நம்புகிறேன். தலைவர்கள் தம் பதவியில் ஏதோ ஒருவித நிரந்தரத் தன்மையுடன் ஒட்டிக் கொண்டிருந் தால், பகட்டான ஊதியங்கள் பெற்றுக் கொண்டிருந்தால், சிறப்புத் திறமைகள் தம்மிடம் இருப்பதாக உரிமை கொண்டாடி வந்தால் அவர்களை உடனடியாக அப்பதவிகளில் இருந்து அகற்றியாக வேண்டும் என்பது வெளிப்படையாக வேண்டும். ''வர்க்கத் தற்கொலை'' என்பது திட சித்தத்தின் அல்லது உள் உணர்வின் ஆற்றலால் மட்டுமே நிகழ்ந்து விடாது; புரட்சிகர சோசலிச ஜனநாயகத்தின் நிறுவன கட்டமைப்புகளால் தலைவர்களின் அனுபவங்கள் கண்கூடாக வடிவமைக்கப்பட்டால் மட்டுமே அது நிகழ முடியும். ஆயுதப் போராட்ட கட்டத்திலோ அதிகாரத்தை வென்றெடுப்பதற்கு முற்பட்ட மற்ற கட்டங்களிலோ வேண்டுமானால் ராணுவவாத அமைப்பும் ஜனநாயக மத்தியத்துவமும் தேவைப் படலாம். ஆனால் புரட்சிக்குப் பிந்திய அரசியல் நிறுவனங்களின் வடிவமைப்பாலேயே அவை நிராகரிக்கப்பட்டாக வேண்டும்.

புரட்சி இயக்கத்துக்கு வெளியேயும் உள்ளேயும் இருக்கும் எல்லாவிதமான தனிச்சலுகைப் படிவரிசை களையும் ஒழித்துக்கட்டுவது, விடுதலை-சோசலிசம் இரண்டுக்குமே இன்றியமையாததாகும். ''இயல்பி லேயே சோசலிதத் தன்மை கொண்டது தொழிலாளி வர்க்கப் பெரும்பான்மை'' என்ற கற்பனைக் கருத்தைக் கொண்டு ''வர்க்கத் தற்கொலை'' என்ற யதார்த்தக் கருத்தை மறுக்க முனைவதைவிட, சுதந்திரத்துக்குப்பிறகு, 'வர்க்கத் தற்கொலை'யின் தேவையையும் தன்னுள்கொண்ட வர்க்கப் போராட் டத்தையும் எதிர்நோக்கி, அதற்குத் தயாராக இருக்கும் தலைவர்களையும் அமைப்புகளையும் புறநிலையில் பெற்றிருப்பதே மேலானதாகும்.

**தமிழில்: சிங்கராயர்**

★ பிரான்சில் உள்நாட்டுப்போர், கோதா செயல்திட்டம் பற்றிய திறனாய்வு ஆகிய நூல்களில் முன்வைக்கப்பட்டுள்ள விவாதங்கள் காண்க.



படிப்பகம்

www.padippakam.com



# முதலாளியம் என்னும் நெருக்கடியும் முதலாளியத்துக்கு வந்த நெருக்கடியும்

சமிர் அமின்

எந்த ஒரு சமூக நிகழ்வும் ஒரே சீரான - தொடர்ச்சியான - வரம்பற்ற விதத்தில் வளர்ச்சியடைவதில்லை. ஆக எந்த ஒரு சமுதாயத்தின் பரிணாமமும் கண்டிப்பாக விரிவாக்கம், தேக்கம் மற்றும் பின்னடைவுக் கட்டங்களின் வழியாகவே நிகழ்கிறது. திசைமாற்றம் ஏற்படும் கட்டங்கள் பின்னர் 'நெருக்கடிகள்' என பெயரிடப்படுகின்றன. வரலாறு நெடுகவும் இருந்த அனைத்து சமுதாயங்களுக்கும் இந்தப் பொதுவான கருத்தாக்கம் பொருந்தும். பொருளியல், அரசியல், பண்பாடு என சமுதாய வாழ்வின் எல்லா அம்சங்களுக்கும் இது பொருந்துகிறது. இந்த விரிந்த பொருளில் பார்த்தால், சமூகப் பரிணாமம்பற்றிய விவாதம்போலவே, நெருக்கடிகள் பற்றிய எவ்விதமான கருத்தாக்க விவாதமும் வரலாற்றின் தத்துவம்பற்றிய விவர்தத்தின் பகுதியாகவே இருக்கிறது. நவீன முதலாளிய அமைப்புக்கே உரித்தான பொருளியல் நெருக்கடி என்ற கருத்தை மட்டும் இங்கே நாம் பார்க்கப்போகிறோம். எனவே இந்த தத்துவ சிந்தனையின் ஒரு பகுதியை மட்டுமே இங்கு எடுத்துக்கொள்கிறோம்.

முதலாளியம் அறிமுகப்படுத்திய பெரும் முக்கியமான மாற்றத்தையே 'பொருளியல்' என்ற முன் அடை குறிப்பிடுகிறது: முந்திய அமைப்புகளில் அரசியல் கருத்தியல் பரிமாணங்களுக்கு தலையாய இடம் தரப்பட்டதற்கு மாறாக, முதலாளியத்தில் பொருளியல் பரிமாணத்துக்கே தலைமை இடம் தரப்படுகிறது. நிலைமைகளின் இந்த திசை மாற்றத்தைப் பற்றி இப்படிச் சொல்ல முடியும். அதாவது முதலாளிய அமைப்பில் பணமே அதிகாரத்தின் ஊற்றாக இருக்கிறது, அதற்கு முந்திய அமைப்புகளில் நிலைமை தலைகீழாக இருந்தது அல்லது இதையே இன்னொரு விதமாக சொன்னால், முதலாளியத்தில் மதிப்பின் விதியே சமுதாய வாழ்வின் பொருளியல் அம்சத்தை மட்டுமல்ல, அனைத்து அம்சங்களையுமே ஆளுகிறது எனலாம்.

இந்த வித முதலாளியம் சுமார் 1800-இல் தொடங்கிய தொழில்புரட்சியின் கூடவே தன் இறுதி வடிவை எடுத்தது. அப்போதிருந்தே முதலாளிய உற்பத்தி முறையில் உள்ளுறைந்த சமூக முரண்பாடு காரணமாக ''நுகர முடிவதற்கும் கூடுதலான அளவிலேயே உற்பத்தி செய்யும்'' போக்கே எப்போதும் அந்த அமைப்பின் உடன்பிறந்த போக்காக இருக்கிறது: கூலிகளை குறைப்பதால் அதன் லாபங்கள் கணிசமாக உயர்கின்றன. இது, போட்டிச் சூழ்நிலைமைகளின்கீழ், அமைப்பின் உற்பத்திகளுக்கான வலுவான கிராக்கியை நிறைவுசெய்ய தேவைப்படுமளவு முதலீட்டைவிட ஒப்பீட்டளவில் அதிகமாகவே முதலிடும் நிலைக்கு போகிறது. இந்த கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால் ஒப்பீட்டளவிலான தேக்கம் என்ற அச்சுறுத்தல் முதலாளியத்தின் தீராத தலைவலியாகவே இருக்கிறது. நெருக்கடியையும் தொழில் மந்தங்களையும் விளக்கக் காரணங்கள் எதுவும் தேவையில்லை. அதற்கு மாறாக விரிவாக்க கட்டங்கள் ஒவ்வொன்றும் தாமாகவே தமக்கே உரித்தான குறிப்பான சூழ்நிலைமைகளால் தமக்குப் பின் நெருக்கடிகளையும் மந்த நிலைகளையும் கொண்டுவருகின்றன.

நவீன முதலாளியத்துக்கே உரித்தான இந்த குறிப்பான தன்மையை முந்தைய காலகட்டங்களில் காணமுடியாது. 1500 முதல் 1800 வரையிலான மூன்று நூற்றாண்டுகளில் முதலாளியத்தை நோக்கி நடந்த நீண்ட நிலைமாற்ற காலத்திலும் – அதாவது வணிக முதலாளிய கட்டத்திலும் – அதைக் காணமுடியாது. அதற்கும் முந்திய கட்டங்களிலோ இதற்கான வாய்ப்பு இன்னும் குறைவு. ஆக, வணிக முதலாளியத்துக்கு மாறும் காலத்தில் ஏற்பட்ட பொருளியல் சுழற்சிகள், விரிவாக்கங்கள், நெருக்கடிகள் மற்றும் மந்தநிலைகளின் பிரச்சனைகள் வேறு; முழுவளர்ச்சியடைந்த முதலாளியத்தின் பிரச்சனைகள் வேறு. இங்கு நாம் விவாதிக்கப்போவது, முழுநிறை முதலாளியத்துக்கே உரிய பொருளியல் நெருக்கடி என்ற கருத்தாக்கத்தைப் பற்றி மட்டுமே.

1800 முதல் நடைமுறையில் இருந்து வரும் முதலாளியத்தின் வரலாறு என்பது, அதற்கு முந்திய யுகங்களோடு ஒப்பிட முடியாத அளவுக்கு உற்பத்தி சக்திகளில் ஏற்பட்ட மகத்தான முன்னேற்றத்தின் வரலாறாகும். முதலாளியத்தில் உடன்பிறந்த தேக்கப் போக்கு இருப்பது திரும்பத் திரும்ப வெல்லப்பட்டு வந்திருக்கிறது. இந்த உண்மையை புரிந்துகொள்ள வேண்டுமானால், தேசங்களின் அளவிலும் உலக அளவிலும் முதலாளிய அமைப்பில் நெருக்கடிகளை உருவாக்கிய பொருளியல் இயக்கப் போக்குகளையும் சமூக அரசியல் போராட்டங்களையும் ஒரே ஒட்டுமொத்த விளக்கத்தில் ஒருங்கிணைத்தல் தேவையாகும். இந்த வரலாற்று யுகத்தில் தெளிவாக



படிப்பகம்

www.padippakam.com



குறிப்பிடும்படியான ஒவ்வொரு கட்டத்துக்கும் உரிய முதலீட்டுக் குவிப்பு முறையை இயக்கிய கோட்பாடு களைக் கண்டறிந்து முன்வைத்தல் அதன்பின் சாத்திய மாகிறது. அரசு, அதன் இருத்தல் முறையை உருவாக்கும் மேலாதிக்க சமூக உறவுகள், பரஸ்பர போட்டி - ஆதிக்கம் - சார்புநிலை ஆகிய அதன் பன்னாட்டு உறவுகள் ஆகியவற்றை ஆராயும் கோட்பாடுகளின் அடிப்படையில் இது செய்யப்படுகிறது. எல்லாமே, வரத்துதேவையின் பிரதேசங்களில் செயல்படும் பெருவீதி பொருளியலின் சமனங்கள்-சமனக்குலைவுகள் மற்றும் உலக அளவு - வட்டார அளவு நலன்களிடை யிலான இருப்பு வேறுபாடு பற்றிய கோட்பாடுகளாக இணைக்கப்பட்டுள்ளது. பொருளியல் விரிவாக்கங் களுக்கான காரணங்கள் மற்றும் உத்திகள், நடுவில் அவை நின்று போவதற்கான காரணங்கள், ஒவ்வொரு விரிவாக்கத்தையும் நிறுத்திவிடும் நெருக்கடிகளின் குறிப்பான இயல்பு, நெருக்கடி தீர்ந்ததும் புதிய ஒரு விரிவாக்கத்துக்கான நிலைமைகளை உருவாக்கு வதற்கான போராட்டங்களிலும் கட்டமைப்பு ரீதியான மாறுதல்களிலும் அடங்கியுள்ள சிக்கல்கள் ஆகிய வற்றை விளக்குவதற்கே இந்தக் கோட்பாடுகள்.

நெருக்கடி பற்றிய இந்த பகுப்பாய்வுகளும் கோட்பாடுகளும் மூன்று முதன்மையான மட்டங் களில் பயன்படுத்தப்பட முடியும். அவற்றைப் பொது வாக **குறுகிய கால தொழில் சுழற்சி, நீண்ட அலை, அமைப்பின் பொதுவான அடிப்படையான நெருக்கடி** என குறிப்பிடலாம்.

## II

**குறுகிய கால தொழில்சுழற்சி** என்பது விரிவாக் கமும் மந்தமும் மாறிமாறி ஏற்படும் கட்டங்களைக் கொண்டது; முழு சுழற்சியும் பல்லாண்டுகளுக்கு நீடித்திருக்கிறது.

பொருளியல் அறிவியலின் கருத்தாக்கக் கருவிப் பெட்டி மொத்தமாக இப்போது நம் கையில் இருப் பதால், எல்லோருக்கும் தெரிந்த இரண்டு இயக்கப் போக்குகளான Manipulatorஐயும் (நுகர்வுக்கு செலவிடப்படும் போது இரண்டாம் கட்டமாக பெறப்படும் உபரி வருமானங்களால் சொந்த வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பு) acceleratorஐயும் (வருமான அதிகரிப்பால் எழும் மூலதன செலவு அதிகரிப்பிலிருந்து கிளைக்கும் தேவை அதிகரிப்பு) இயங்கச் செய்வதன்மூலம், உள்ளூர மாறுதலற்ற ஒரு சுழற்சியை உருவாக்கக் கூடிய ஒரு பொருளியல் மாதிரியை மிக எளிதாக நாம் நிறுவ முடியும்.

நிசமான கூலிகள் மற்றும் லாபங்களில் ஏற்படும் ஒப்பீட்டளவிலான மாற்றங்களிலும், வட்டி வீதங் களிலும் தூண்டப்படும் சுழல் மாறுபாடுகளை மேற்படி மாதிரியுடன் சேர்ப்பதன் மூலம் அதை மேம்படுத்த முடியும்; ஒரு மூடிய அல்லது திறந்த தேச அல்லது சர்வதேச பொருளியலின் சட்டகத்தில் அதை வெளிப்படுத்த முடியும். அதுபோலவே மரபு பொருளியலின் தூய அனுபவத்தின் அடிப்படையிலோ அல்லது மார்க்சியத்தின் மதிப்புவிதி அடிப்படை யிலோ, அதை நன்கு வெளிப்படுத்த முடியும். பொருளியல் அல்லது அரசியல் பொருளியலில் மேற்கொள்ளப்படும் இந்தப் பயிற்சிகள் அனைத்தும், முதலாளிய உற்பத்தி முறையின் முற்றிலும் அருவ மான சட்டகத்திலேயே வெளியிடப்படுகின்றன. அதுவே அவற்றின் மதிப்பைப் புரிந்துகொள்ளத் தேவையானதும் போதுமானதுமான நிலைமை யாகும். இந்த வழியில் பெறப்பட்ட முடிவுகள், (சராசரியாக ஏழு ஆண்டுகளில் நிகழும்) குறுகிய கால தொழில் சுழற்சியைப் பற்றிய ஓர் உருப்படியான அடிப்படை விவரத்தைத் தருகிறது – உண்மையான விவரத்தில் இது 1815 முதல் 1945 வரையான ஒரு நூற்றாண்டு நீளத்தைக் குறிப்பதாய் உள்ளது என்பதைக் காண்பது சுவையானதாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு தொழில் சுழற்சி அதிக அளவு கட்டுப்பாட்டுக்கு உள்ளாகி இருப்பதாகத் தோன்றுகிறது. கடன் வாங்கல், வட்டி வீதங்கள், வருமானப் பங்கிடு, பொதுச் செலவுகளுக்கு ஒதுக்கப் பட்ட தொகை முதலியவற்றில் அரசு அதிகத் தீவிரமாக தலையிட்டதும் கட்டுப்பாடு செலுத்தியதுமே அதற்குக் காரணம் ஆகும். (அது போலவே, சரக்குப் பட்டியை மையப்படுத்திய குறுகியகால ஏற்ற இறக் கங்களின் மாதிரிகளை உருவாக்குவதும் அதே அளவு எளிதாக இயலக்கூடியதே. இதுவும் நவீன தொழில் துறை முதலாளியத்தின்கீழ் நடைபெறும் பொருளியல் நடிவடிக்கைகளின் நிசமான பின்விளைவுகளுடன் சரியாக பொருந்துகிறது).

நடைமுறையில் ஏற்படும் பொருளியல் ஏற்றத் தாழ்வுகளை விளக்க இந்த பொருளியல் மாதிரிகள் ஏறக்குறைய 150 ஆண்டுகளுக்கு நன்றாகவே பயன் பட்டன. இதன் காரணம் அந்தக் காலகட்டத் துக்கே உரித்தான ஒரு கண்காணிப்பு உத்தி அன்று நிலவியதாகும். பல குறிப்பிடத்தக்க அம்சங்கள் அதில் இருந்தன. அவை: (அ) கூலிமட்டத்தை மேல்நோக்கியும் கீழ்நோக்கியும் ஏற்றி இறக்கியதன் வாயிலாக தொழில் நிறுவனங்களுக்கு இடையிலான போட்டியை ஒழுங்குபடுத்துதல் (இந்த வித கட்டுப்படுத்தலானது 1800 முதல் 1880 வரையான போட்டி முதலாளிய கட்டத் துக்கும் அதைத் தொடர்ந்த கூட்டு முதலாளிய கட்டத் துக்கும் பொதுவாகப் பொருந்துகிறது). (ஆ) முக்கிய மான தேசிய அமைவுகள் ஒவ்வொன்றுக்குள்ளும் நிலவிய ஆதிக்க சமூகக் கட்டமைப்புகளின் ஒப்பீட்டள விலான நிலைப்புத் தன்மை; (இ) பண அளிப்பு மற்றும் வட்டி வீதங்களை, அமைப்பானது தனக் குள்ளேயே சீரமைத்துக்கொள்ளும் தேசிய நிர்வாகம்; (ஈ) தொழில்மயப்படுத்தப்பட்ட மையங்களுக்கும் தொழில்மயப்படுத்தப்படாத ஓரங்களுக்கும் இடை



படிப்பகம்

www.padippakam.com



யில் இந்த காலகட்டத்தில் நிறுவப்பட்டு, அதன் நெடு கவும் இடைவிடாமல் ஆழப்படுத்தப்பட்டு வந்த பாகு பாட்டின் நிலையான தன்மை.

ஆனால் இரண்டாம் உலகப்பேரின் முடிவி லிருந்தே, போட்டி மூலமான கட்டுப்பாடானது அகற்றப்பட்டு, முதலுக்கும் உழைப்புக்குமிடை யிலான வரலாற்று ரீதியான சமரசம் அவ்விடத்தைப் பிடித்தது. இதனால் கெய்னீசின் கோட்பாட்டுக்கும் நல அரசுக்கும் ஆன அடிப்படை ஏற்பட்டபோது, தொழில்புரட்சியில் ஓர நாடுகளும் போட்டிபோடத் தொடங்கியபோது, சீரான கால அளவிலான தொழில் சுழற்சி இயக்கம் அகற்றப்பட்டு, இன்னும் குறுகிய கால அளவிலான, கூடுதலாக பூசி மெழுகப்பட்ட - ஆனால் அதேசமயம் அதிக சீரற்ற - சுழற்சி இயக்கம் அவ்விடத்தைப் பிடித்தது.

### III

முற்றிலும் பொருளியலான ரீதியில் சுழற்சிபற்றி இங்கு முன்வைக்கப்பட்ட ஆய்வுக்கு அப்பாலும் நமது கருத்தாக்க அறிவை விரிவுபடுத்தி வரலாற்றுப் பொருள்முதலியலின் அனைத்துப் பரிமாணங் களையும் சேர்த்துக்கொள்வது, **நீண்ட அலைகள்** பற்றிய ஆய்வுக்குத் தேவைப்படுகிறது.

தொழில்புரட்சியைத் தொடர்ந்த காலகட்டம் முழுவதிலும், முற்றிலும் மரபு பொருளியல் ரீதியில் வரையறுக்கப்பட்ட (உற்பத்தி, முதலீடு, விலைகள், வருமானங்கள் ஆகிய) பகுதியில் இத்தகைய 'நீண்ட அலைகளை' நிசமாகவே கண்கூடாக நாம் காண முடியும் (வழக்கமாக இவை கோண்டு – ராதியெவ் அலைகள் என வழங்கப்படுகின்றன). உண்மையில் விலை குறியீட்டு எண்கள் 1815 முதல் 1850 வரை ஓர் இறக்கப்போக்கையும் 1850 முதல் 1865 வரை ஓர் ஏற்ற போக்கையும் 1865 முதல் 1900 வரை ஓர் இறக்கப் போக்கையும், 1900 முதல் 1914 வரை ஓர் ஏற்றப் போக்கையும் காட்டுகின்றன. இருந்தாலும் மிகவும் ஏற்புடைய விளக்கத்துக்கும் சுழற்சிக் கருத்தாக்கத் துக்கும் உண்மையில் எந்த உறவுமில்லை. உண்மையில் நடந்ததைச் சொன்னால், 1850இதும் 1900இலும் ஏற்பட்ட திருப்பங்கள், வட அமெரிக்காவிலும் பின் தென் அமெரிக்காவிலும் இருந்த பெருமளவான தங்க இருப்புகள் புதிதாக உற்பத்தியில் இறக்கப்பட்டதுடன் பொருந்திப் போகின்றன. 1815 முதல் 1914 வரை நடப்பில் இருந்த நாணயமுறை ஓர் எளிய தங்க அளவீட்டின் அடிப்படையிலேயே இருந்தது. அந்த வகையில், பெயரளவு விலையளவின் நீண்டகால வளர்ச்சிப் போக்கானது உழைப்பின் உற்பத்தித் திறனின் சீரான அதிகரிப்புகளால் ஏற்பட்ட இறக்கப் போக்கால் கட்டுப்படுத்தப்பட்டது. தங்கச் சுரங்கத் தொழிலில் உற்பத்தித்திறன் அதிகரித்த போதெல்லாம் அந்தப் போக்கில் தவறாமல் ஓர் எதிர்ப்போக்கு ஏற்பட்டது. 1850-இல் கலிபோர்னியாவில் நடந்த தங்க வேட்டையிலும் 1900த்தில் க்ளோன்டிக்கிலும் ராண்டிலும் நடந்த தங்க வேட்டைகளிலும் இது திடு மென நிகழ்ந்தது. ஆனால் இந்தத் தங்க வரத்துகளால் ஏற்பட்ட விலை ஏற்றங்கள், நீண்டகாலமாக இறங்குமுகத்தில் இருந்த இந்த போக்கு தன் விஞ்சிய செல்வாக்கான (பழைய) நிலைக்குத் திரும்ப அனுமதித்து, 15 ஆண்டுகளுக்குள் வடிந்துவிட்டன.

நிசமான உற்பத்தி அளவின் வளர்ச்சி வீதத்துக்கும், அவசியமாகவே முதலீட்டின் வளர்ச்சி வீதத்துக்கும் பொருந்தக்கூடிய அந்த நீண்ட சுழற்சிகளை ஆராய்வ தற்கான ஏதாவது ஒரு சுழற்சிக் கோட்பாட்டை கைக்கொள்ளத் தேவையில்லை. இவ்விசயத்தில் பின்வரும் 4 அலைகளை நாம் பார்க்கிறோம். ஒவ்வொன்றும் ஏறக்குறைய அரைநூற்றாண்டு காலம் நீடித்துள்ளது:

| | |
|---|---|
| 1790 - 1814 (தொழில்) பெருக்கம் | 1814 - 1848 (தொழில்) மந்தம் |
| 1848 - 1872 பெருக்கம் | 1872 - 1893 மந்தம் |
| 1893 - 1914 பெருக்கம் | 1914 - 1945 மந்தம் |
| 1945 - 1968 பெருக்கம் | 1968 மந்தம் |

ஒவ்வொரு அடுத்தடுத்த பெருக்கக் கட்டமும், முக்கியமான தொழில்நுட்ப கண்டுபிடிப்பு அதனுடன் சந்தை விரிவாக்கத்துக்கான அரசியல் வளர்ச்சிகள் ஆகியவற்றின் சேர்க்கையுடன் மிகச் சரியாகவே பொருந்தியிருப்பது யார் பார்வையிலும் படாமல் போய்விட முடியாது. இந்த அடுத்தடுத்த சேர்க்கைகள் (அ) முதல் தொழில்புரட்சி - அதனுடன் பிரெஞ்சுப் புரட்சியும் பேரரசின் வன்முறையான வளர்ச்சியும்; (ஆ) ரயில்பாதையின் முழுமையான ஒருங்கமைப்புக் கட்டுமானம் - அதனுடன் இத்தாலி - ஜெர்மனி ஒன்றிணைப்பு; (இ) மின்மயம் – அதனுடன் காலனிய வல்லரசியம்; (ஈ) போருக்குப் பிந்திய ஐரோப்பா மற்றும் ஜப்பானின் மறுகட்டுமானமும் நவீனத் துவமும் – அதனுடன் 'தானியங்கி நாகரிகத்தின்' தோற்றம்.

இன்னொரு விதத்தில் சொன்னால், பொருளியல் சுழற்சிக் கோட்பாடுகளை அதனினும் பரந்து விரிந்த தான வரலாற்றுப் பொருள்முதல் வாதத்திலிருந்து செயற்கையாக பிரிப்பதற்கு இடமில்லை. ஏனெனில் புதிய மூலவளங்களை பயனுக்குக் கொண்டுவந்தது, நாடுபிடிப்பு மற்றும் வர்க்கப் போராட்டங்களின் விளைவுகள்கூட சுழற்சிக் கோட்பாட்டுடனேயே ஒருங்கிணைந்த காரணிகளாகவே உள்ளன. சமுதாய யதார்த்தத்தில் இந்த அம்சங்கள் மூலதனக் குவிப்பு நிகழ்முறையின் வெளிப்பாடுகளாகவும் இருக் கின்றன. இருந்தாலும் எந்த சுழற்சிக் கோட்பாடும் இந்த உறவினால் செயலாற்றத் தூண்டப்படவில்லை. ஏனெனில் பொருளியல் அளவுகளிலேயே கறாராக வரையறுக்கப்பட்ட மாறுதல்களின் அமைப்பு நன்கு



படிப்பகம்

www.padippakam.com



நிறுவப்பட்டாலும், சமூக யதார்த்தத்தின் பிற அம்சங்கள் அந்தளவு கறாரான ஒரு வரையறுப்புடன் வருவதில்லை. சுழற்சியின் பெருக்கக் கட்டத்திலோ மற்ற எந்த ஒரு கட்டத்திலோ புதுக் கண்டுபிடிப்புகள் கொத்தாக நிகழ்ந்துவிடுகின்றனவா என்பது ஐயத்துக் குரியது. அப்படியே நிசமான கூலி முதலியவற்றில் ஒரு முறையான அமைப்பு இருப்பதாக எந்த ஒரு கட்டமும் காட்டுகிறதா என்பதும் ஐயத்துக்குரியது. அல்லது, பரஸ்பர போட்டி அதிகார மையங்களின் நாடுபிடிப்பு முதலியவை பற்றி குறிப்பிடப்படும் உலக வணிக வளர்ச்சி குறித்த கறாரான விதி என்றும் ஏதுமில்லை.

தொழில்நுட்ப புத்தாக்கமானது கண்டிப்பாக சமூக ரீதியில் நடுநிலையானது அல்ல. ஏனெனில் அதன் பயன்பாடு லாப நோக்கத்தின் தர்க்கத்தையே சார்ந்துள்ளது. அதுபோலவே புது கண்டுபிடிப்பு என்பது ஒரு தொடர்ச்சியான நிகழ்முறையாகவும் இருக்கிறது, ஏனெனில் முதலாளிய நிகழ்முறையின் ஒரு அடிப்படை விதியிலிருந்தே - தனித்தனி மூலதனங்களுக்கிடையிலான போட்டியிலிருந்தே அது விளைகிறது. அடிப்படையான முக்கியமான பெரும் கண்டுபிடிப்புகள் பரவலான பயன்பாட்டுக்கு வருகிறபோது ஒரு தொலை வீச்சுள்ள விரிவாக்க நிகழ் முறையை அவை கட்டவிழ்த்து விடலாம், ஆனால் அது ஒரு கட்டாயமும் அல்ல. காட்டாக, ரயில்பாதை அமைத்தல் அல்லது வாகனமயத்தால் நகர்ப்பகுதி களை மாற்றி அமைத்தல் என்பது கனரக தொழிலில் பெரும் முதலீட்டை இறக்கி அதன்மூலம் தொழில் துறையின் முகத்தையே மாற்றியதுதான்; ஆனால் தற்போது கணினிமயத்தின் அடிப்படையில் நிகழ்ந்து வரும் புத்தாக்க அலையும் அதேபோன்ற விளைவை கொண்டுவரும் என்பதற்கு உறுதியில்லை. இந்த சமகால தொழில்நுட்ப புரட்சியானது, உபரி உறிஞ்சப் படுதல் என்னும் பிரச்சனைக்கு எந்த தீர்வும் வழங்குவ தில்லை. (ஆயின்) அதுவே பெருமளவான சொத்து வருமானங்கள் நிதி ஊக வாணிபத்தில் ஒழுகிப் போவதை பெரிதும் விளக்குகிறது. மற்ற காலங்களில் போட்டி கூர்மையடைவதன்மூலமே புத்தாக்கம் தொடர்கிறது; இது தொழில் நிறுவனங்கள் தம் உற்பத்திச் செலவுகளை குறைத்துக்கொள்ளும்படி நெருக்குகிறது. இதனால்தான் 'சுழற்சி'யின் மற்ற கட்டங்கள் ஒட்டுமொத்த விளைவில் ஒரு வளர்ச்சி வீதத்தையும் கொண்டதாக காணப்படுகின்றன. எனினும் உண்மையில் அந்த வளர்ச்சிவீதமானது விரிவுக் கட்டங்களில் பெறப்படும் வளர்ச்சி வீதத்தை விடவும் குறைந்ததாகவே இருக்கிறது.

சமூகப் போராட்டங்கள், நிர்ணயிக்க முடியாத பொருளியல் விளைவுகளையும் கொண்டதாயிருக் கின்றன. சுழற்சியின் கட்டங்களில் அவை மாறுபடும் இடங்களில் நிகழ்வது இதற்கு ஒரு காரணம். இதை விட அடிப்படையான தீர்மான காரணிகளும் உள்ளன. உதாரணமாக சமூக உற்பத்தியில் கூடுதல் பங்கை உறுதிசெய்துகொள்ள கூலி உழைப்பாளர்கள் தொடர்ந்து நடத்திவரும் போராட்டங்கள், சோஷலிசமென்னும் சவாலுக்கு எதிர்வினையாக பெருமுதலானது உழவர் வகுப்பு போன்ற பிற சமூக வகுப்புகளுடன் ஏற்படுத்திக் கொள்ளும் கூட்டணிகள் போன்றவை, எனவே ஒரு நீண்ட சுழற்சிக் கோட்பாட்டை உருவாக்கி வரலாற்று பொருள்முதல் வாதத்தை ஒரு கொச்சை பொருளாதார தீர்மான வாதமாக நிரவிவிட முயலும் எந்த முயற்சியையும் அது வீணானதாக ஆக்குகிறது. போட்டிபோடும் முதலாளிய மையங் களுக்கிடையிலான போட்டியின் விளைவுகளையும் நாடு பிடிக்கும் முயற்சிகளில் அவற்றின் வெற்றி தோல்விகளின் விளைவுகளையும் பொறுத்தவரை, இவையும் எவ்விதமான சுழற்சி இயக்கப்போக்காக சுருக்கிவிடக் கூடியவை அல்ல.

கடைசி மூன்று நீடித்த மந்த கட்டங்களில் ஒவ்வொன்றும், பல விதங்களில் தனக்கே உரிய தன்மையைப் பெற்றிருக்கிறது.

19-ஆம் நூற்றாண்டு முடியும் தருவாயில் ஏற்பட்ட மாபெரும் மந்தமும், உக்கிரமடைந்த போட்டிகளின் அழுத்தங்களும், மூலதனத்தை குவிக்கும் - மையப் படுத்தும் போக்கை விரைவுபடுத்தின; இதனால் முதலாளிய அமைப்பு தன்மை ரீதியாக மாற்றமடைந்தது: 1800 முதல் 1880 வரை ஆதிக்கம் வகித்த போட்டித் தொழில் முதலாளியமானது கூட்டு ஏகபோக முதலாளி யத்துக்கு வழிவிட்டது. இந்த ஏகபோகக் கூட்டுகளின் வெளிநாட்டு விரிவாக்க நடவடிக்கைகளும், சில நேரங்களில் அவற்றின் தந்திரோபாயங்களில் பரஸ்பர ஊடுருவலும் உலகளாவிய தன்மையும் இருந்தாலும், இன்னும் அவை அடிப்படையில் தேச அளவில் அமைக்கப்பட்ட குழுக்களாகவே இருந்தன. அந்த சமயத்தில் அவர்களின் போட்டியானது தேச அரசு களுக்கு இடையிலான போர்த்தன்மையை கூர்மைப் படுத்தியது; முன்பு பிரிட்டனுக்கு இருந்த ஆதிக்கத் தகுதிக்கு முடிவுகட்டியது. இந்த காலகட்டம் வல்லரசியப் போட்டி அரசுகளுக்கு இடையில் உலகம் பங்குபோடப்பட்ட காலகட்டமுமாகும். இந்த புதிய கட்ட ஏகபோக முதலாளியத்தின் குறிப்பான தன்மை பற்றி இல்பர்டிங், ஹாப்சன், லெனின் ஆகியோர் ஆய்ந்து மதிப்பிட்டனர். (ஜெர்மன் முதலாளியத்துக்கே உரித்தானதாக இருந்த நிதி மற்றும் தொழில் முதல்களின் பரஸ்பர ஊடுருவல்களை சுட்டிக் காட்டினார் இல்பர்டிங். பிரிட்டிஷ் முதலின் வங்கி சார்ந்த தன்மையையும் சர்வதேச விரிவாக் கத்தில் அதன் உலகுதழுவிய தந்திரத்தையும் மதிப் பிட்டார் ஹாப்சன். வல்லரசுகளுக்கிடையிலான போட்டிகளின் தீவிரமானது ஒரு உலக சோசலிச புரட்சிக்கான முன் நிபந்தனையாக உள்ளது என்னும் அரசியல் முடிவை வகுத்தார் லெனின்). பொருளியல் தேக்கம் என்பது பழைய முதலாளிய நாடுகளுக்கு மட்டுமே



படிப்பகம்

www.padippakam.com



உரியதாகயிருந்தது. ஜெர்மனி, ஐக்கிய அமெரிக்கா போன்ற இடங்களில் தொழில்துறை வளர்ச்சியானது வேகம்பெறவே செய்தது. இருந் தாலும் பொதுவாக மந்த நிலையானது தனியார் நிறுவன உடைமை வடிவங்களிலிருந்து பொது நிறுவன உடைமை வடிவங்களுக்கு மாறியதுடன் சேர்ந்துகொண்டது. இதன் வழியாக தொழில் முதலின் மீது நிதிமுதலானது தன் ஆதிக்கத்தை நிறு வியது. இதையே மார்க்சின் சொற்களில் சொன்னால், ப-ச-ப' (லாபம்) என்ற உற்பத்தி நிகழ்முறை மீது ப-ப' (வட்டி) என்ற நேரடி நிகழ்முறை ஆதிக்கம் செலுத்தியது.

வல்லரசியங்களுக்கு இடையிலான போட்டியே 1914-45 கட்டத்தின் மிக முக்கியமான அம்சமாக அமைந்தது என்பது வெளிப்படை (பிரிட்டனின் இடத்தில் அடுத்து யார் என்பதில் ஜெர்மனிக்கும் ஐக்கிய நாடுகளுக்கும் இடையில் நடந்த 30 ஆண்டு போர்). இரண்டு உலகப் போர்களாலும் 1930களின் மாபெரும் பொருளியல் பின்னடைவாலும் இது குறிக்கப்பட்டது. முதல் உலகப் போருக்கு முந்திய குறுகிய கால விரிவாக்கக் கட்டமோ (1893-1914) 1920களின் சுருக்கமான - சந்தேகத்துக்கிடமான செழிப்புக் கட்டமோ, சந்தை முதல்சார்ந்த கூட்டு ஏகபோக முறையிலான முதல் குவிப்பு நிலைபெற்ற தாக ஆவதற்கு அனுமதிக்கவில்லை. பங்குச் சந்தை யானது சிலரை பலிகொண்டுதான் பிறரை வளப் படுத்தியது. ஏனெனில் பொதுவான உற்பத்தி விரிவாக்கம் மட்டுமே, இந்த 'நிகரபலன் = பூச்சியம்' என்னும் ஆட்டத்திலிருந்து வெளியேற ஒரு வழியை வழங்கியிருக்க முடியும். இந்த 'வட்டிக்கார வாடகைக்கார முதலாளியம்' (புகாரினும் லெனினும் சூட்டிய பெயர்) உள்நாட்டிலும் உலக அளவிலும் வருமான பங்கிட்டில் இருந்த ஏற்றத்தாழ்வை அதிப்படுத்தியது. அதன்மூலம் ஏற்கனவே நிலவிய தேக்கத்தையும் பன்னாட்டு போட்டியையும் கடுமைப் படுத்தியது. மேலும், தொடர்ந்து போட்டியால் ஆளப் படுவதாகவும் கூலியைக் குறைக்க முனைவதாகவுமே அமைப்பு நீடித்தது. இவையே இக்கட்டம் முடியும் காலத்தில் கெய்னீஸ் ஆராய்ந்த பணச் சுருக்கச் சுழற்சியின் இயக்கப்போக்காக இருந்தன. இந்த ஆய்வின்மூலம் அடுத்த - போருக்குப்பிந்திய கட்டத் தின் விரிவாக்கக் கொள்கைகளுக்கான அறிவு அடித்தளத்தை அவர் வழங்கினார்.

இரண்டாம் உலகப் போரை அடுத்து உடனடி யாக தொடங்கிய ஒரு விரிவாக்கத்தைத் தொடர்ந்து 1960களின் முடிவில் தொடங்கிய நமது தற்கால நீடித்த மந்தமானது, பாசிசத்தின் தோல்வியிலிருந்து எழுந்த மூன்று காரணிகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது: (அ) வளர்ந்த முதலாளிய நாடுகளில் நிறுவப்பட்ட வரலாற்று ரீதியான மூலதன - உழைப்பு சமரசம் கெய்னீசின் தேசியக் கொள்கைகளால் ஆதரிக்கப்பட்ட இது, கூலியை ஒடுக்கும் போட்டிமுறை ஆட்சியின் இடத்தில் மூலதன குவிப்புக்கான புதிய ஆட்சி வடிவத்தை வைத்துள்ளது. (ஆ) சோசலிசத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிக்கு அறைகூவிய 'சோவியத்' அமைப்பு. உண்மையில் இது 'முதலாளிகள் இல்லாத முதலாளியத்தை'க் கட்டி எழுப்பும் முயற்சியாகவே இருந்தாலும், முதலாளியத்துக்கு ஒரு சவாலாக தன்னை நிலை நிறுத்தியுள்ளது- அதன்மூலம் அதைத் தட்டி எழுப்பியும் விட்டுள்ளது. (இ) ஒர நாடுகளின் தேசிய முதலாளிய வளர்ச்சியின் முனைப்புகள் தேசிய விடுதலை இயக்கங்களின் வெற்றிகளால் இவை சாத்தியமாகியுள்ளன.

இந்த மூன்று சமூக மாதிரிகளும் காலப்போக்கில் ஆற்றல் தீர்ந்து போயிருப்பதே நம்கால மந்த நிலைமையின் தோற்றுவாய் ஆகும். அவற்றின் வெற்றிகளே உலகளாவிய பரஸ்பர சார்பு நிலையை ஆழப்படுத்தி விட்டிருப்பதிலிருந்தும், வேறு நிலவரங்களிலிருந்தும் இது தெரிகிறது. இவ்வாறு உலகமயம் ஆழப்பட்டுவரும் ஒரு சூழ்நிலையில், இந்த மந்த நிலையானது அதிகரித்து வருகிறது; சோவியத்தின் மாற்றுவழி தகர்ந்துவிட்டதாலும், ஒர கண்டங்களை, மூன்றாம் உலகைச் சேர்ந்த தேசிய முதலாளியர்கள் தம் திட்டங்களைக் கொண்டு, (அவர்களை மறுபடியும் - தம்மைச் சார்ந்து நிற்கும் இடைத்தரகர்கள் என்ற பழைய நிலைமைக்கு கொண்டு வருவதிலேயே குறியாக இருக்கும்) ஆதிக்க முதலாளியங்களின் வலுத்தாக்குதலை எதிர்த்து நிற்கமுடியாததாலும் - அந்த மந்தநிலை இன்னும் கூடுதலாகியிருக்கிறது.

1872-1893 காலத்திய மந்த கட்டத்தில் அமைக்கப் பட்ட ஏகபோகக் கூட்டுகள் பெரிதும் அரசுக் கொள்கையின் கருவிகளாகவே இருக்கவேண்டி இருந்தது. ஆனால் தற்கால உலகமயம் அவற்றுக்கு மிகுதியான சுதந்திரத்தை வழங்கியிருக்கிறது. இன்றைய தொழில் நிறுவனங்கள் தேசிய நலன்களைப்பற்றிக் கவலையே படாமல் தம் சொந்த கொள்ளைவழிகளை வளர்த்தெடுக்கின்றன. பொதுத்துறைக் கொள்கையின் கருவிகளைத் தம்மிடம் வழங்குமாறு அரசுகளுக்கு அவை நெருக்கடி கொடுக்கின்றன. போருக்குப்பிந்திய அமெரிக்க மேலாதிக்கத்தின் நலிவால் தேச அரசு களுக்கு இடையிலான போட்டிகள் ஊக்கம் பெற்றிருந் தாலும், வல்லரசுகளுக்கு இடையிலான மோதல்களின் காலகட்டத்தில் நிலவியதற்கு முற்றிலும் மாறுபட்ட சூழ்நிலைமைகளிலேயே இன்று அவை திட்டமிடப் படுகின்றன.

தற்போதைய மந்த கட்டமானது - பொதுவாக எல்லா மந்த கட்டங்களையும் போலவே - உற்பத்தித் திறனின் விரிவாக்கத்தில் போதிய ஆதாய வழிகளை காணமுடியாத நிலையில் உபரி இருக்கும் நிலையிலேயே இருக்கிறது. எனவே இந்த மந்த



படிப்பகம்

www.padippakam.com



நிலையை சமாளிக்க முதலாளியம் நிதித்துறையில் லாபகரமான மாற்று வழிகளை வழங்குவதையே இலக்காகக் கொண்டிருக்கிறது. தனது இந்தச் செயல், பொருளியல் வளர்ச்சிக்குக் கேடு சூழும் என்னும் நிலையிலும் தனது அந்தச் செயல்மூலம் மூலதன மதிப்புகளை தக்கவைத்துக் கொள்வதற்கே அது முதலிடம் அளிக்கிறது. மூலதன சந்தைகளின் இந்தப் புதிய மேலாதிக்கமானது பல்வேறு வழிகளில் செயல்பட்டு வருகிறது - குறிப்பாக மாற்று செலாவணி வீதங்கள், உயர் வட்டி வீதங்கள், முன்னாள் அரசுடைமை நிறுவனங்களை தனியார் மயமாக்கல், அமெரிக்காவின் அயல்நாட்டு கொடுப்பு நிலையில் கடுமையான பற்றாக்குறைகள், மற்ற எல்லா கடமைகளையும் விட அந்நிய கடனை அடைப்ப தற்கே முன்னுரிமை அளிக்கவேண்டும் என மூன்றாம் உலக நாடுகளை வற்புறுத்தும் விதமான பன்னாட்டு நிதி நிறுவனங்களின் கொள்கைகள் போன்ற வழிகள். வழக்கம் போலவே இத்தகைய கொள்கைகளால் உலகப் பொருளியலானது ஒரு தேங்கிய நச்சுவட்டத் துக்குள் கட்டுண்டுள்ளது. அதிலிருந்த விடுபட எந்த வழியையும் அந்தக் கொள்கைகள் வழங்குவதில்லை. உண்மையில், விடாப்பிடியான இந்த தேக்கம், ஐக்கிய அமெரிக்காவும் ஐரோப்பாவும் ஜப்பானும், அவற்றின் சார்பு நாடுகளான லத்தின் அமெரிக்க, ஆப்பிரிக்க, மத்திய கிழக்கு நாடுகளும் ஆகிய உலகப் பகுதியை மட்டுமே பாதிக்கிறது. இப்பகுதிதான், மந்த நிலையை சமாளிக்க முதலாளியச் சந்தைகள் எடுக்கும், நடவடிக்கைகளுக்கு உட்படும்படி கட்டாயப்படுத்தப் படுகிறது. மாறாக கிழக்கு ஆசியாவும் (குறிப்பாகச் சீனாவும்) அதைத் தொடர்ந்து தென்கிழக்கு ஆசியாவும், ஓரளவுக்கு இந்தியாவும், தம் பொருளியல் வளர்ச்சி யில் விறுவிறுப்பைக் கண்டிருக்கின்றன; அந்த அளவுக்கு, மந்த நிலையின் தாக்கத்திலிருந்து அவை விடுபட்டிருக்கின்றன.

## IV

முந்திய அமைப்புகளின் நிலைப்புத் தன்மைக்கு மாறாக, நடப்பில் நிலவிவரும் முதலாளியத்தின் வரலாறானது தொடர்ச்சியான மந்த கட்டங்களின் வரிசையால் குறித்துக் காட்டப்படுகிறது. அவற்றில் சில குறுகியவை, சில நீண்டவை; சில மேலோட்ட மானவை, சில ஆழமானவை. ஆனால் முதலாளியத்தின் உள்ளார்ந்த நிலையின்மையே அதன் பலமுமாகும். மந்த கட்டங்களுக்கு இடையிலான விரிவாக்க கட்டங்களில் உற்பத்தி சக்திகளின் கூடுதலான விரிவுக்கு அது ஊக்கமளிக்கிறது. இதன் அளவு, முந்திய சகாப்தங்களில் நிலவிய மெதுவான வளர்ச்சி யுடன் ஒப்பிட முடியாத அளவுக்கு அதிகமானதாகும். நவீன முதலாளியத்தைத் தனியாக வேறுபடுத்திக் காட்டுகிற மிக விரைந்த ஆனால் சீரற்ற வளர்ச்சியின் பேரளவான அழிவுத்தன்மை அதற்கு இருந்த போதிலும், மிகக் குறுகிய வரலாற்றுக் கால அளவில் மனித வாழ்க்கை நிலைமைகளை மாற்றி அமைத் திருக்கிறது முதலாளியம். இருப்பினும் அதன் வளர்ச்சி மிகவும் விரைவாக இருப்பதனாலேயே (புற்றுநோய் போல, இடைவிடாத துரித வளர்ச்சியானது இறப்புக்கே இட்டுச் செல்லும்) அந்த வளர்ச்சியை இடையறாமல் முடிவின்றித் தொடர முடிவதில்லை. முதலாளியம் முடிந்துபோவது அதன் தலைவிதி. வரலாற்றில் முதலாளியமானது ஒரு குறுகிய கால மாறுதல் கட்டமே என்பது சந்தேகத்துக்கிடமின்றி தெளிவானதாகும். இந்த குறுகிய கால அளவில் உற்பத்தி சக்திகளின் குவிப்பானது இயற்கை மற்றும் சமூக வளர்ச்சி மீதான மேலும் மேன்மையான ஆட்சித்திறம் கைகூடுவதற்கான புறநிலை மற்றும் மனித நிலைமை களை உருவாக்கியிருக்கும்.

முதலாளியத்தை கடந்துசெல்ல, அமைப்பு சார்ந்தது - பொதுவானது அல்லது அடிப்படையானது என்று சொல்ல முடிகிற ஒரு நெருக்கடியினூடாக கண்டிப்பாக நாம் கடந்தாக வேண்டிவருமா? இந்தப் பிரச்சனையில் விமர்சன ரீதியான சமூக சிந்தனை - கற்பனாவாத சிந்தனை, சீர்திருத்தவாத சிந்தனை, மற்றும் மார்க்சிய சோசலிச இயக்கங்களுக்கு உரித்தான சிந்தனை – சிறப்பான கவனம் செலுத்தி யிருக்கிறது. அமைப்**பின்** நெருக்கடி என்பதற்கும் அமைப்**பில்** நெருக்கடிகள் என்பதற்கும் இடை யிலான பாகுபாட்டை அது அடிப்படையாகக் கொண்டுள்ளது.

முதலாளிய அமைப்பை ஆளும் மூலதனக் குவிப்பு விதியானது விரைவில் முழு உலகிலும் தன் ஆட்சியை விரிவுபடுத்தும், சமூக நிலைமைகளை ஒரே தரப்படுத்தும், அதன்மூலமே உலகளாவிய சோசலிசப் புரட்சிக்கான புறநிலைமைகளை அது நிறுவும் என்று எதிர்பார்த்தார் மார்க்ஸ். முதலாளி வர்க்கத்தின் புரட்சித்தன்மையை அவர் மிகையாக மதிப்பிட்டுவிட்டார். எனவே உற்பத்தி சக்திகளின் உலகளாவிய விரிவாக்கத்தை, முதலாளிய உற்பத்தி முறை உலகளவில் பரவுவதற்கு சமமானதாக மார்க்ஸ் பார்த்தார். ஆனால் இந்த உற்பத்தி முறைக்கு உரிய மதிப்பு விதியானது, சந்தைகள் தம் எல்லா பரிமாணங் களிலும் (மூலதன சந்தைகள், சரக்கு சந்தைகள், உழைப்பு ஆற்றல் சந்தை) ஒருங்கிணைக்கப்படுவதை தேவைப் படுத்துகிறது. உலக முதலாளிய அமைப்பின் அளவில் அத்தகைய ஒருங்கிணைப்புப் போக்குகள் முதலிரு பரிமாணங்களில் நிலவி இருக்கின்றன. ஆனால் மூன்றாவதில் அது நிலவியதே இல்லை. காரணம், உலகச் சந்தையின் இந்த குறுகல் தன்மை யின் அடிப்படையில் அது அமைந்துள்ளது; மதிப்பு விதியானது, அதன் உலகளாவிய வடிவில், மைய - ஓர பொருளியல்களுக்கு இடையிலான அணியாக்கத் துக்கு கீழ்ப்பட்டதாயிருக்கிறது. இந்த அணியாக்கம் முதலாளியத்தில் உள்ளார்ந்தது; ஏனெனில் வரலாற்று ரீதியாக அது வளர்ந்திருந்தது, எனவே முதலாளிய



படிப்பகம்

www.padippakam.com



சட்டகத்துக்குள் வைத்து அப்போக்கை வெற்றி கொள்ள முடியாது. முதலாளிய அமைப்பின் இந்த அடிப்படைத் தன்மை காரணமாக முதலாளியத்தைக் கடந்து மேற்செல்வது தொடர்பான நடைமுறைக் கேள்விகளை, (சோசலிசத்துக்கான நிலைமாற்றம் குறித்து மார்க்சுக்குப் பிறகு உருவான பல்வேறு கோட்பாடுகளில் முன்வைக்கப்பட்டத்திலிருந்து) மாறுபட்ட விதத்தில் முன்வைப்பது தேவையாகிறது.

ஏகபோகக் கூட்டுகள் அமைந்தது, ஏகாதிபத்தியங் களுக்கு இடையிலான போட்டிகள் பேரழிவு பயக்கும் வகையில் கடுமையடைந்தது ஆகிய இரண்டும் ஒருங்கே நிகழ்ந்தது கண்ட லெனின், ''ஏகாதிபத்தியம் முதலாளியத்தின் உச்சகட்டம்'' என்ற உறுதிக்கு வந்திருந்தார். அதன்படி அனைத்து நாடுகளைச் சேர்ந்த தொழிலாளிகளும் ஒரு புரட்சி மூலம் ஏகாதிபத்தியப் போருக்கு எதிர்வினை புரிவார்கள், அது அமைப்பின் ''பலவீனமான கண்ணியில்'' தொடங்கக்கூடு மாயினும் அமைப்பு முழுவதற்கும் பொதுவானதாக ஆகமுடியும் என்று கொண்டார். இந்த புரட்சி ருசியாவில் உண்மையாகவே நடைபெறவே செய்தது. ஆனால் மேற்கு நோக்கி பரவுவதற்குப் பதிலாக ஓரநாடுகளை நோக்கி இடம் பெயர்ந்தது- ஒரு தீவிர வடிவத்திலோ (சீனா) அல்லது தேசிய விடுதலை இயக்கங்கள் என்ற, தீவிரம் குறைந்த வடிவிலோ பரவியது- இவ்வாறு முதலாளிய அமைப்பு உருவாக்கிய மைய-விளிம்பு நாடுகளுக்கு இடை யிலான அணியாக்கத்தின் தீர்மானத் தன்மையை வெளிப்படுத்தியது.

தன் பங்குக்கு ஸ்டாலின், முன்கண்டிராத வரலாற்றுப் போக்கைப் பற்றிய ஒரு ஆய்வுரையை முன்வைத்தார். அதன் சூத்திரத்தில், முதலாளியத்தின் பொதுவான நெருக்கடி, ''ஒரு நாட்டில் சோசலிச'' கட்டுமானம், இரண்டு வித அமைப்பு முறைகளுக் கிடையிலான போட்டி என்பவை இடம் பெற்றன. போர்களுக்கு இடையில் நீடித்த மந்த கட்டம், கிழக்கு ஐரோப்பா மற்றும் ஆசியாவில் 'சோசலிச' அமைப்பு களின் பரவல் ஆகிய இரண்டு தரப்பிலிருந்தும் மேற்படி ஆய்வுரை ஒப்புதலைப் பெற்றதாகத் தோன்றியது. ஆனால் சோசலிச கட்டுமானம் என அழைக்கப்பட்ட திட்டத்தின் தன்மையையே அது தெரிவித்தது. அந்த திட்டத்தின் உண்மையான நோக்கம் 'முதலாளிகள் இல்லாத முதலாளியத்தை' கட்டுவதாகவே இருந்தது, (ஆனால்) இறுதியாக அது முதலாளிகள் **உள்ள** முதலாளியமாக மாறியது, மாறியாக வேண்டிவந்தது.

குறிப்பிடத்தக்கதும் தனக்கே உரித்தானதுமான நெகிழ்ச்சித் தன்மையை வெளிப்படுத்தி அதன்மூலம் முதலாளியம் தன் 'பொதுவான நெருக்கடியை' வென்றுவிட்டது. இரண்டாம் உலகப் போருக்குப்பின் கிழக்குடனான தன் போட்டியால் தூண்டப்பட்டும், தம் சுதந்திரத்தை மீண்டும் அடைந்துகொண்ட ஓரநாடுகளின் வளர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டும், பெருமளவான ஒரு புதிய விரிவாக்கக் கட்டத்தை அது தொடங்கியது. இந்த வெற்றி இருந்தாலும், மாற்றாக இருந்த சோவியத் வீழ்ச்சியால் அது இன்னும் பெரியதாக தெரிந்தாலும், போருக்குப் பிந்திய குறுகியகால கொழிப்பு - கடந்த கால் நூற்றாண்டாக - ஒரு புதிய, நீடித்த மந்த நிலையில் அமிழ்ந்ததாக ஆகியுள்ளது. இந்த மந்த கட்டத்தின் தனித்தன்மையாகிய நிதிச் சந்தைகளின் ஆதிக்கமானது புதிய ஒரு கொழிப்புக்கட்டம் உருப்பெற வெல்ல முடியாத தடையாக உள்ளதா? பின்னடைவின் உடன் இணைந்த தாழ்ந்த நிலையையும் வறிய நிலையையும் (இந்தத் தடவை முழு முழு கண்டங்களையே பீடித் துள்ளது - குறிப்பாக ஆப்பிரிக்காவை) கால வரம் பின்றித் தாங்க முடியுமா? ஒருபுறத்தில் மேற்கிலும், இடைத்தரகர்கள்மூலம் அது ஆதிக்கம் செய்யும் ஓரநாடுகளிலும் நிலவும் பொருளியல் பின்னடைவு, மறுபுறத்தில் கிழக்கு ஆசிய தொழில்மயமாக்கம் - இவற்றுக்கிடையிலான மாறுபாடு, தீவிரமடைந்து வரும் அணியாக்கம் குறைந்து கொண்டிருப்பதன் தொடக்கமா? அல்லது அது, வல்லரசிய மையங்கள் (தொழில்நுட்பங்கள் மீது - நிதி அமைப்புகள் மீது - உலக அளவிலுள்ள இயற்கை மூலவளங்களைக் கையகப்படுத்தல் மீது - தொடர்புசாதன, தகவல் அமைப்புகள் மீது மக்களை அழிக்கும் ஆயுதங்கள் மீது) கொண்டிருக்கும் 5 புதிய ஏகபோகங்களின் அடிப்படையிலான புதிய அணியாக்க வடிவங்களுக்கு இட்டுச் சென்று கொண்டிருக்கிறதா? முழு புவியிலும் சூழலியல் நாசம் என்னும் அபாயத்தை வெல்ல முடியக்கூடிய ஒரு புதிய மூலதன குவிப்புமுறை உரிய காலத்தில் உரிய இடத்தில் வைக்கப்படுமா? இவையே இன்று அமைப்பின் நெருக்கடியால் முன்வைக்கப்படும் பெரியகேள்விகள். முதலாளி யத்தின் நெகிழ்ச்சித் தன்மையானது அதன் கருத்தியல், நிறுவன வரம்புகளை வெல்லுமா? தன் சமூக ஆளுகைக்கு அப்பால் செல்ல முன் கண்டிராத வாயில்களை அது திறந்துவிடுமா? அல்லது அந்தத் தடைகள் ஒரு இறுதிப் பேரழிவுக்கே நம்மை திருப்பி விடுமா? புதிய புரட்சிகள் மற்றும் படைப்புத் தன்மையுள்ள தகவமைதல்களின் இன்னுமொரு புதிய அணியானது, தற்போதுள்ள நிலைமையில் கற்பனை செய்யவும் முடியாததாக தோன்றுகிற ஒரு புதிய வடிவிலான உலகமயமாதலை நோக்கிய நிலை மாற்றத்தை வழங்குமா?

**தமிழில் : சிங்கராயர்.**



படிப்பகம்

www.padippakam.com



# இந்துத்வத்தின் வளர்ச்சி பிறரைக் கொன்று தின்னும் தேசபக்தி

திபங்கர் குப்தா

இந்தியாவில், எல்லோரும் சமம் என்று கருதும் கண்ணோட்டம் மற்றும் நவீன உணர்வுகளின் வளர்ச்சிக்கு தொடர்ந்து இடையூறு செய்யக்கூடிய பிரிவினைக் கருத்தியல் (Ideology) சாதி மட்டும் அல்ல. இன்று நமது அரசியல் வாழ்வில், சமய ரீதியான பிரிவினைவாதம் பெருமளவு ஆதிக்கம் செலுத்தி வருகிறது. நவீன சமுதாயங்களிலே பாரபட்சக் கருத்துகளே இல்லை என்று கூறிவிட முடியாது. ஆனால், (நவீனத்துவச் சூழ்நிலையில் சமூக நடைமுறைகளில் குறுகிய மனப்பான்மையச் செயற்படுத்துவது அத்தனை எளிதல்ல). எனவே, ஒரு சிலர் எத்தனை பிற்போக்குத் தனமான கருத்துகளைக் கொண்டிருந்த போதிலும், அத்தகைய கருத்துகளைப் பொது அளவில் நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகளை நவீன சமுதாயம் தடை செய்கிறது. வருந்தத்தக்க வகையில், இந்த அம்சத்தில் இந்தியா இன்று பின்னோக்கிச் செல்வது போலத் தோன்றுகிறது. இன்று மதம் மற்றும் பிரிவுவாத அரசியல் சமூகரீதியாக வளர்ந்து காணப்படுகின்றது என்றால், நமது நாட்டின் அரசியல் அமைப்புக்கள் அதற்குப் பதில் சொல்லித்தான் ஆக வேண்டும். தற்கால இந்தியாவில், இந்து அரசியல் மேலோங்குவதை விளக்கப் பல காரணங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

இந்த அத்தியாயத்தில் அவற்றை நாம் விளக்க முற்படும் அதே சமயத்தில், கடந்த காலத்தில் இந்து உணர்வு அல்லது அதன் அடையாளம் இல்லாமல் இருந்தது என்று கூறி விட முடியாது. ஒரு மதச்சார்பற்ற கண்ணோட்டம் மாற்றாக அமைந்து இந்து அரசியலைப் பின் தள்ளி வைத்திருந்தது. மேற்படி மதசார்பின்மை அந்த காலக் கட்டத்தில் கொண்டிருந்த பொருளாதார மற்றும் சமூக அவசரத்தேவைகளை நிறைவேற்ற உகந்ததாகவும் நடைமுறை சாத்தியமானதாகவும் தோன்றியது. பாரதீய ஜனதா கட்சி மற்றும் அதன் கூட்டாளிகளின் இன்றைய ஆதிக்கத்தைப் புரிந்து கொள்ள வேண்டுமானால், சென்ற ஐம்பதாண்டுக் காலத்தில், மதசார்பற்றக் கொள்கைக்கான வாக்குறுதி என்னவாயிற்று என்பதை ஆய்வு செய்வது அவசியமாகிறது.

பிரிவுவாத அரசியல், புதிய பொருளாதாரக் கொள்கையான தாராளமயமாக்கலோடும் தொடர்புடையதாகும் இவையிரண்டும் தொடர்பு கொண்டுள்ளன என்று நான் கருதுகிறேன் - மதசார்பின்மை என்பது தோல்வியுற்ற ஒரு பின்னணியில் இந்துத்துவத்தை (உண்மையில் இந்துத் தன்மையை) வைத்துப் பார்க்க வேண்டும் என்ற நமது முந்தைய கூற்றுக்கு இட்டுச் செல்லும் ஒருவிதமான தொடர்பை இவையிரண்டும் கொண்டுள்ளன என்று நான் கருதுகிறேன். சாதியையும் மதத்தையும் ஒப்பிட்டு நோக்கும்போது, மதம் நிச்சயமாக மேலும் ஒரு மகத்தான விஷயமாக அமைகிறது. ஏனெனில், பிற வகுப்பு மற்றும் பிரிவுவாத செயல்பாடுகளைக் காட்டிலும் மதம் தேசிய அரசு உணர்வுகளை மிகப் பிரதானமாக முன்வைக்கின்றது. இந்திய நிலையின் விநோதமான தன்மை இதுதான். அது ஒருபுறம் இருக்கட்டும். ''பொருளாதாரத் தனியுரிமை'' அல்லது ''வறுமை ஒழிக!'' என்ற கோஷங்களைவிட, மொழி, மதம் மற்றும் சாதி இவற்றின் அடிப்படையிலான அணிதிரட்டுதல் என்பது அரசியல் சூழலில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது என்னும் உண்மை, இது ஏன் இவ்வாறு உள்ளது என்று நம்மைச் சிந்திக்க வைக்கிறது.

## தாராளமயமாக்குதலும் இந்துத்துவமும்

சமீப ஆண்டுகளில் சாதி ரீதியான கொள்கைகள் வளர்ச்சி பெற்றுள்ளதற்கு புதிய பொருளாதாரக் கொள்கையான தாராளமயமாக்கல் ஒரு நேரடிக் காரணமல்ல. ஆனால், இந்தக் கொள்கையின் உருவமைப்பு செயல்படுத்தப்பட்டுள்ள விதம், உயர்மட்டங்களில் சில மாற்றங்கள் உருவாகியுள்ளதைச் சுட்டிக் காட்டுகிறது. இந்திரா - சஞ்சய் - ராஜீவ் காலத்திற்கு முந்தைய ஆண்டுகளில், பொருளாதார உயர்வு மற்றும் சுயசார்பு ஆகிய கொள்கைகள், மதசார்பின்மை மற்றும் நமது அண்டை நாடுகளின் உள்விவகாரங்களில் குறுக்கிடாமை என்ற விதிமுறைகளுடன் இணைந்து வந்தது. இந்தியாவின் இத்தகைய சுய வரையறைகளுக்கெதிராக அமெரிக்காவில் ஊக்குவிக்கப்பட்ட விமர்சனங்கள் இருமுனைகள் கொண்டவையாக இருந்தன.

முதலாவதாக பொருளாதாரத்தில் திறமையற்று இருப்பதை ஊக்குவிப்பதாக இந்தியாவின் மீது குற்றம் சாட்டப்பட்டது. எந்த ஒரு அறிவுக்கு ஏற்றதான



படிப்பகம்

www.padippakam.com



கொள்கையும் இதை அனுமதிக்க முடியாது. நமது கடல்புற எண்ணெய் எடுக்கும் அமைப்புகள் சரியாக இயங்கவில்லை. நமது எஃகு ஆலைகள் தரமிக்கதாக இருக்கவில்லை. நமது அம்பாஸிடர் கார்கள் கற்கால எந்திரங்களாக இருந்தன. இந்தத் திடுக்கிட வைக்கும் குறைபாடுகளில் கவனம் செலுத்துவதை விடுத்து, சோம்பேறித்தனத்துக்குப் பெயர் பெற்ற சோவியத் நாட்டிற்குத் தலை வணங்கிக் கொண்டிருந்தது - தவறாகப் பொருள்படும் வகையிலான ஒரு சோசலிசப் புதுப்பித்தலை இதற்கான காரணமாகக் காட்டி, இப்போக்கை நியாயப்படுத்திய வண்ணம் இருந்தது. இரண்டாவதாக, பிறரது விஷயங்களில் தலையிடுவதில்லை என்று இந்தியா பெருமையடித்துக் கொண்டிருந்த கொள்கை, ஏமாற்றுவேலையாகக் கருதப் பட்டது. இந்த விமர்சகர்களின் கூற்றுப்படி, அணி சேராமை என்பது சோஷலிஸ்டு அணியை பலப் படுத்துவதற்கும், பிரதேச ரீதியில் தன்னைத் தானே பெரிதுபடுத்திக் கொள்வதற்கான லட்சியத்தை மறைப்பதற்குமான வேறு ஒரு வழி என்றே கருதப் படுகிறது.

சுதந்திரத்திற்கு பின் வந்த முப்பது ஆண்டுகளில் இந்த பசப்பு வார்த்தைகள் தேசிய மனோநிலையை பெரிதாக்க கவலைக்குள்ளாகவில்லை. சுயசார்பு, பொருளாதாரத் தனியுரிமை, காலனிய எதிர்ப்புவாதம் அல்லது புதிய காலனியவாதம் போன்ற இலட்சியங்கள் நேரடியாக எதிர்க்கப்படவில்லை. இந்த மதிப்பீடுகள் நல்லவையாக இருந்தது மட்டுமின்றி பல வழிகளில் செயல்படுத்தவும் பட்டன. உண்மையில் சோவியத் ரஷ்யாவுடனான நமது உறவு மற்றும் நமது அணிச்சேரா கொள்கை ஆகியவை சர்வதேச போட்டியாளர்கள் மத்தியில் நமது தேர்வுகளை அதிகப்படுத்தியதால் பொருளாதார ரீதியாக நம்பத் தகுந்தவை என்றே கருதப்பட்டன.

1975-ம் ஆண்டின் அவசரகால நாட்களிலிருந்தே காங்கிரஸ், இந்த தேசிய கொள்கை வரைவுகளை வெளிப்படையாகவோ, சட்ட ரீதியாகவோ ஒதுக்கி தள்ளாமல் நடைமுறையில் அவற்றை மறுக்கத் தொடங்கியிருந்தது. நடைமுறையில் முதன்முதலில் தலைகீழாய் மாற்றப்பட்ட முதல் கொள்கை இறக்குமதி மாற்றுக் கொள்கையாகும் இத்தோடு கூட பொதுத்துறை, தனது கொள்கை ரீதியான நியாயங்களை இழக்க நேர்ந்தது.

பொதுத்துறைக்கெதிரான பிரதான குற்றச்சாட்டு, பொருளாதார ரீதியாக அதனால் நிலைத்து நிற்க முடியவில்லை என்பதும் இலாபம் ஈட்டவில்லை என்பதுமாகும். இதைவிட பெரிய சமூகப்பணிகளான பொருளாதாரத் தனியுரிமையைக் காப்பாற்றுவதையோ அல்லது சமூக நீதியை மேம்படுத்துவதையோ இது செய்ததா? இல்லையா? என்ற கேள்விகளெல்லாம் தீவிர சிந்தனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

நேரு காலத்தைய மதச்சார்பின்மை அரசியல் லட்சியங்களால் ஊக்குவிக்கப்பட்ட செயல் திட்டத்துடன் இணைந்திருந்ததால் அதிக வெற்றிகரமாக இருந்தது. இந்த லட்சியங்கள் பொருளாதார ரீதியாக நம்பத்தகுந்தவையாக இருந்திருக்கலாம். அல்லது இல்லாமல் போயிருக்கலாம். ஆனால், இந்தியாவிற்கு சொந்தமாக இருப்பது மற்றும் இந்தியனாக இருப்பது என்ற கற்பனையை அவை தூண்டிவிட்டன. நல்லது நடக்கும் என்ற நம்பிக்கையுள்ள ஒரு சூழ்நிலையை அது உருவாக்கியது. இந்தியாவின் தன்முனைப்பான நவீனமயமாக்குதல் வேறு பல தொடர்புடைய கருத்துக்களையும் வளரச் செய்தது. அவற்றுள் ஒன்று அறிவியல் மற்றும் அறிவுரீதியான முன்னேற்றமான நாடுகளின் குழுவில் இந்தியாவை ஒரு மதிப்புமிக்க அங்கத்தினர் ஆக்கக் கூடியதாகும். இந்தியாவின் இலக்கு, உயர்ந்ததாக இருந்தது. வேறு எங்கோ செய்யப்பட்ட உதிரிப் பாகங்களை ஒருங்கிணைப்பதோடு அது திருப்தி கொண்டு விடவில்லை; ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தைச் சார்ந்துள்ள ஒரு நாடாக இருப்பதில் அது திருப்தியடையவில்லை. தனது தொழில் உற்பத்திப் பொருள்களுக்காக மேலைநாடுகளைச் சார்ந்திருப்பதால் பாகிஸ்தான் குறைவாக மதிப்பிடப்பட்டிருந்தது. கிழக்காசிய நாடுகளும், ஏற்றுமதியை இலக்காகக் கொண்டிருந்ததாலும், அதன் காரணமாக, பிற நாடுகளின் தேவைகள் மற்றும் வளர்ச்சி வேகத்தைச் சார்ந்தே அவற்றின் பொருளாதார அமைப்புகள் இருந்ததாலும், சிறப்பானமையாகக் கருதப்படவில்லை.

நேருவின் ஆட்சிக்காலத்தில், மதச்சார்புள்ள அரசைக் கொண்டிருந்தாலும், ஒரு சுதந்திரமான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்திக் கொள்ள முடியாததாலும் பாகிஸ்தான் இழிவாக பேசப்பட்டது. மேலை நாடுகளுடன் பாகிஸ்தான் அணி சேர்ந்திருந்தது இந்தியாவின் பார்வையில் அதன் மதிப்பை குறைத்தது. இன்று பிரதேசங்களைக் கைப்பற்றுவதில் குறியாக உள்ள ஒரு இஸ்லாமிய ஆக்கிரமிப்புவாதியாக மட்டுமே பார்க்கப்படுகிறது. இந்தியாவின்-நேருவின் மதச்சார்பின்மை ஒரு நம்பிக்கை அறிக்கை மட்டு மல்ல, மாறாக தன்னம்பிக்கையும் நல்லது நடக்கும் என்ற கண்ணோட்டமும் எதிர்காலத்தை இலக்காகக் கொண்டதுமான ஒரு பொருளதார மற்றும் சர்வதேச கண்ணோட்டத்தை அடித்தளமாகக் கொண்டிருந்தது.

### நேருவின் மாற்றுக் கருத்துக்கள்

நேருவின் காலத்தில் மதச்சார்புள்ள கருத்துக்கள் மற்றும் கருத்தோட்டங்கள் இல்லாமல் போகவில்லை. ஆனால் நேருவின் காலம் தெளிவாக காட்டியவாறு மதச்சார்பு சக்திகள் முழுமையான ஆதிக்கம் பெறாததால் அதனால் முன்னணிக்கு வரமுடியவில்லை. அதனிடம் ஒரு பொருளாதாரச் செயல்



படிப்பகம்

www.padippakam.com



திட்டமோ, பொருளாதார முன்னேற்றிற்கான வரையறையோ அல்லது சர்வதேச உறவுகள் பற்றிய ஒரு தெளிவான புரிதலோ இருக்கவில்லை. மேலும் நேருவாதி கொள்கைகள் இனவாதத்தை மிக வலிமையாக எதிர்த்ததால் அவற்றை ஏற்றுக்கொள்ளச் செய்யும் எந்த முயற்சியும் இனம் சார்ந்த அமைப்புகளை கொள்கை ரீதியாக பாதித்திருக்கும். இதனால், அரசியல் பிரிவுவாதிகளால் நேருவின் கொள்கைகள் மீது ஒட்டிக்கொள்ள முடியாமல் போயிற்று. இனவாதிகள், இனவாத மதிப்பீடு பற்றி மட்டுமே மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருந்தனர். இதன் காரணமாக தனிப்பட்ட முறையில் இனவாதத்தை அங்கீகரிப்பதும் வெளிப்படையாக நேருவாதத்தை ஏற்றுக்கொள்வதும் சாத்தியமாயிற்று. R.S.S.ன் கருத்துகள் சில பகுதிகளில் உள்நாட்டு ரீதியாக பின்பற்றப்பட்டன. ஆனால் பொதுக்கொள்கை பற்றிய கருத்துக்களில் குறிப்பிடப்பட்ட தாக்கத்தை அவை ஏற்படுத்தவில்லை. இந்தக் கருத்து வலியுறுத்தப்படுவது இங்கே அவசியமாகிறது. ஏனெனில் சமீப காலங்களில் மதச்சார்பின்மை என்பது அதற்குள்ளேயே வளர்க்கப்பட வேண்டிய ஒரு தெளிவற்ற மதிப்பீடாக முன் வைக்கப்படுகிறது. இந்த மதச்சார்பற்ற கருத்துக்கணைகள் சமயரீதியான சகிப்புத் தன்மையையோ அல்லது சரித்திர உண்மையையோ அல்லது இனரீதியான பழக்க வழக்கங்களையோ எதைக் குறிப்பதாக இருந்தாலும், நேரடியாக இனம் சார்ந்த நிலைப்பாடுகளை நோக்கியே ஏவப்படுகின்றன. சமகால மதச் சார்பின்மை வாதிகள் சுட்டிக்காட்டுவது போல இஸ்லாமியர்கள் பெரும்பாலும் ஒருதார மணத்தை பின்பற்றுபவர்களாகி உள்ளனர் என்பது உண்மை. அத்தோடு கூட அவர்களது மக்கட்தொகை வளர்ச்சி இந்துக்களின் வளர்ச்சியை விட குறைவாகவே உள்ளது. இன ரீதியாக உண்மையை திரித்துக் கூறுவதை எதிர்க்க இத்தகைய விஷயங்கள் விளம் பரப்படுத்தக் கூடாது என்பதில்லை. ஆனால், இவ்வாறு போலியை அழித்து உண்மையை வெளிப் படுத்துவதற்கான இத்தகைய பயிற்சிகளால் இன வாதத்தின் கவர்ச்சியை அதன் அடிப்படை ஆதாரத்தில் அழித்துவிட முடியாமல் போவதால் வெகு குறை வான பங்கையே இவை ஆற்றுகின்றன. இந்த மதச் சார்பற்ற உண்மைகள் இனவாதிகளின் வெறுப்புப் பிரச்சார இயந்திரத்தை வேலை செய்யவிடாமல் தடுத்து நிறுத்தப்போவதில்லை. அடுத்த பொய் எதை நோக்கி இருக்குமென்று சொல்வதற்கில்லை. மனிதர்களின் எதையும் எளிதில் நம்பும் தன்மைக்கு ஒரு எல்லையும் இல்லை. காங்கிரஸாலேயே பிரித்து கழட்டி விடப்பட்டுள்ள நேருவின் மதச்சார்பின் மைக்கு பதிலாக அமையக்கூடிய ஒரு மிக சரியான மாற்று மதச்சார்பின்மை இல்லாமல் போனதில்தான் இனவாதத்தின் புதுப்பித்தல் அமைந்துள்ளது. இதனால் தான், இனவாத செயல்முறை தன்னைத்தானே வளர்த்துக் கொண்டு வேறு ஏதும் இல்லாத காரணத்தால் ஒரு பெரிய இடத்தை கைப்பற்றிக் கொண்டுள்ளது. நிலைப்பாடுகளின் நேர்மறையான வரையறைகளால் அல்லாமல் பன்முனை கொண்ட மதச்சார்பின்மை செயல்திட்டத்தின் தோல்விகளைச் சுட்டிக்காட்டுவதாலேயே அவர்களது இனவாத நிலை ஒரு உலகக் கண்ணோட்டமாக ஆகிறது. தனது முந்தைய பொருளாதாரச் செயல்திட்டத்தை காங்கிரஸ் கைவிட்ட போது வேறு பல விஷயங்களோடு மதச்சார்பின்மை பற்றியும் பா.ஜ.க. சின்னத்தனமாக குறை காண்பதையும் நியாயப்படுத்தியது.

**பின்வாங்கும் மதச்சார்பின்மை:**

ஆர்.எஸ்.எஸ். மற்றும் பா.ஜ.க.வினர் தமது எல்லைகளை இப்போது விரிவுபடுத்திக் கொள்ள முடிந்ததால் இது அவர்களுக்கு உற்சாகமூட்டுவதாக அமைந்தது. ஏனெனில், ஒரு சில ஆர்வலர்களைத் தவிர யாருமே ஒரு முழு நேர இந்துவாகவோ, முஸ்லீமாகவோ, சீக்கியராகவோ இருப்பதில்லை. பாபரி மசூதி அழிக்கப்பட்டபின் இந்துக்களின் உத்வேகம் சிறிது காலம் திருப்தியடைந்தது. ஆனால், அதற்குப் பின் இந்துக்கள் எங்கே போகிறார்கள்? அவர்களுக்கு இன்னமும் வேலைகள் தேவையாய் இருந்தன, விலைவாசி தொடர்ந்து உயர்ந்து கொண்டிருந்தது. மருத்துவ கவனிப்பு கூடுதல் செலவை உருவாக்குவதாகவும் அதிக அக்கறையின்றியும் உள்ளது. மின்சார துண்டிப்புகள் தொடர்ந்து நிகழ்ந்தவண்ணம் உள்ளன. இன்ன பிற... இத்தகைய தொரு அன்றாட வாழ்க்கையில், மீண்டும் மீண்டும் அடக்கி ஒடுக்கும் நிலைமைகளில் இந்துத்துவம் முன் வைப்பது என்ன? ஒருவேளை நாம் இப்போது வாரணாசிக்கோ அல்லது வேறு ஏதாவது புதைந்து மறைந்துள்ள கோயில் தளத்திற்கோ நடை யாத்திரையாக செல்ல வேண்டியிருக்கலாம். ஆனால், இது போன்ற அசகாய சூரத்தனங்களும், நாடகபாணியிலான நிலைப்பாடுகளும், சாதாரண, அன்றாட வாழ்வின் தேவைகளை நிறைவேற்றுவதற்கான கண்ணோட்டத்தையோ, திட்டத்தையோ கொடுக்க முடியாது என்பதை அனைவரும் வெகு முனைப்பாக ஒப்புக் கொள்ளவே செய்வார்கள். (இத் தேவைகளில் சில மேலே பட்டியலிடப்பட்டுள்ளன). இதற்கு மாறாக, மதச்சார்பற்ற, சமூகத் திட்டங்கள், தமது கொள்கை ரீதியிலான பலத்தை இழந்து விட்டிருந்தால், இனவாத அமைப்புகளுக்கும், பழம் நழுவிப் பாலில் விழுந்தது போன்ற நிலைதான்! அவர்கள் செய்ய வேண்டியதெல்லாம், உண்மையில், இதுவரையில் செய்துள்ளதெல்லாமே, மதச்சார்பற்ற அணுகுமுறை நாட்டை வளர்த்தெடுப்பதற்கென இதுவரை கொடுத்துள்ள, தோல்வியடைந்துள்ள வாக்குறுதிகளினால் தமது இந்துத்துவ லட்சியத்தை கொழுக்க வைத்துக் கொள்வதுதான்!



படிப்பகம்

www.padippakam.com



முதன்முதலில் சஞ்சய்காந்தியால் ஏற்றுமதி ஊக்குவிக்கப்பட்டபோது, இறக்குமதி மாற்றுக்கான சட்ட ரீதியான கொள்கை பொது அளவில் மாற்றியமைக்கப்படவில்லை. எனினும், புதிய பொருளாதார அணுகுமுறையை புனிதப்படுத்தும் வகையில் பொதுவாகப் பேசப்பட்ட மாற்று தேசிய இலக்கு ஏதும் இல்லாமல், அது அவப்பெயர் கொண்டு, வலுவிழந்து வீழ்ந்தது. ராஜீவ் காந்தி, இலங்கைக்குப் படைகளை அனுப்ப முடிவெடுத்தபோது, பிற நாடுகளின் விஷயங்களில் குறுக்கீடு செய்யாமல் இருத்தல் என்பது ஒரு வெளிநாட்டுக் கொள்கை என்ற அளவில் மறுபடியும் பின்வாங்கிக் கொள்ளப்படவில்லை. இதன் விளைவாக, நேபாளம் அல்லது இலங்கை மீது இந்தியா தனது ஆதிக்கத்தை செலுத்தியது என்பது, கொள்கை ரீதியான காரணம் ஏதுமின்றியே செய்யப்பட்டது. இதனால் தான், காங்கிரஸின் செயல்பாடுகள், தம்மை ஒரு பெரிய நாடாகக் காட்டிக் கொள்ளும் அளவில் டாம்பீகமாக இருந்தபோதிலும், இந்தியாவின் அந்தஸ்து பிரதேச அளவில் ஒரு வல்லரசாக இருக்கிறது என்பதாக அது வெளியிட்டுக் கொள்வதை நிறுத்திக் கொண்டது. பிரதேச அளவில் இந்தியா ஒரு வல்லரசு போல் நடந்து கொள்ள வேண்டும் என்றால், கொள்கை அளவில் சில காலியிடங்கள் இட்டு நிரப்பப்பட வேண்டியது அவசியமாகிறது. இந்தக் காலியிடங்களில் பா.ஜ.க. தனது அடையாளத்தை வெகு முனைப்புடன் பொறித்தது. இதனால், ஓரளவு முரண்பாடான நிலை உருவானது. சர்வதேச விஷயங்களைப் பொறுத்த அளவில், சார்பு அரசியல் கண்ணோட்டத்தால் காங்கிரஸின் கீழ் இருந்த இந்திய அரசு கொள்கை ரீதியாக எதிர்க்கப்பட்டது. பா.ஜ.க. ஊக்குவிக்கப்பட்டது.

எனவே, தேசிய வாழ்வின் பிரதான பிரிவுகளில் எல்லாம் மையமாக உள்ள கொள்கை ரீதியான அர்ப்பணிப்புகள் தெளிவாக எடுத்துரைக்கப்பட்ட மதசார்பற்ற மாற்றுக் கருத்துகள் ஏதும் பதிலாக அமையாமலே கைவிட்டு விடப்படுவதை நாம் காண்கிறோம். 1970-களின் பிற்பகுதிகளிலிருந்தே, ஏற்றுமதி வளர்ச்சியை ஊக்குவித்தல், உலகச் சந்தையில் ஒன்றிணைந்து கொள்ளுதல், சர்வதேச அளவில் வலிமையைக் காட்டும் போட்டிகளில் ஈடுபடுதல், பஞ்சாப் மற்றும் அயோத்தியில் (உதாரணத்திற்கு இவ்விரண்டு இடங்கள் மட்டுமே இங்கே குறிப்பிடப்படுகின்றன) இனவாதத்தைப் பயன்படுத்துதல் போன்றவை, காங்கிரஸின் கொள்கையாக வெளிப்படத் துவங்கின. எனவே, 1980-களின் பிற்பகுதி வரையிலும் மதச்சார்பின்மை, சோஷலிஸம் மற்றும் அணிசேராமை போன்ற கோஷங்கள் தொடர்ந்து கொண்டிருந்த போதும், இந்தப் புதிய நடைமுறைகள் மாநிலக் கொள்கைகளின் இயல்பை மாற்றியமைத்தன. பா.ஜ.க. மற்றும் R.S.S. ஆகியோர் நேருவின் மதச்சார்பின்மையை போலி மதசார்பின்மை என்றும், நேருவின் சோஷலிஸத்தை திறமையற்ற முதலாளித்துவம் என்றும், அணிசேராமையை, ஒரு வலிமையற்ற தேர்வு எனவும் நம்பிக்கையூட்டும் வகையில் முன் வைக்க இது உதவியது. இவ்வாறு ஒரு எதிர்மறை அமைப்பில் வாதம் செய்வதன் மூலம், இனவா.தத் தொலைநோக்குப் பார்வையானது, சமூக வாழ்வில் பல்வேறு அம்சங்களையும் மேலும் விசாலமாகச் சென்றவடைவதன் மூலம் ஒரு பரந்துபட்ட கவர்ச்சியைப் பெற்றது.

### வீழ்ந்து விட்ட இலட்சியங்கள்

இவ்வாறு ஒரு சுற்றி வளைத்த பாணியில் தான் புதிய பொருளாதாரக் கொள்கை, பா.ஜ.க. மற்றும் R.S.S. ஆகியவற்றின்பாலான ஈர்ப்புக்கு தனது பங்களிப்பை ஆற்றியுள்ளது. காங்கிரஸின் முந்தைய பங்களிப்புக்களில் மதச்சார்பின்மை, பொருளாதாரம் மற்றும் சர்வதேசக் கொள்கைகள் சுயசார்பு என்ற இலட்சியத்தினால் இணைக்கப்பட்டிருந்தன. இந்த இலட்சியம் வெறும் பொருளாதாரம் பற்றி மட்டுமல்லாது, பல்வேறு அச்சுகளில் தன்னை விவரித்துக் கொண்டது. ஒரு நல்ல இலட்சியம் நிலைத்து நிற்க வேண்டும் என்றால், இவ்வாறு தான் இருக்க வேண்டும். நல்லொழுக்க நெறிக்கும் அதன் நடைமுறைப் பயிற்சிக்கும் இடையிலான பொருத்தமின்மை மிகவும் அகலமாகிப் போகாமல், நம்பத் தகுந்த அளவில் செயல்படுத்தப்பட்ட காரணத்தினாலேயே மக்கள் அதில் நம்பிக்கை வைத்தனர். 'தேசிய அரசு' என்பதன் இந்திய மாதிரி, உலகத்தின் முன் பெருமையாகக் காட்டிக் கொள்ளவென்று அதில் ஏதோ விஷயம் இருந்தது. பிற நாடுகள் கற்றுக் கொள்ளும் விதத்தில் அனைவருக்கும் வாக்குரிமை என்ற வகையில் நமது ஜனநாயகம் ஒரு பாடமாக அமைந்திருந்தது. மேலை உலக அமைப்பிலிருந்து அணிசேராமை என்பதும் கூட ஒரு குறிப்பிடத் தக்க வேறுபாடாக இருந்தது. எனவே, இந்தியாவின் இலட்சியம் என்பது பிற நாடுகளின் சாயம் மங்கிப்போன காப்பியாக இல்லாமல், மிகவும் தனித்தன்மையோடு கூடிய இந்திய முத்திரை பதிந்த ஒன்றாக இருந்தது.

இதைக் கருத்தில் கொண்ட வண்ணம், புதிய பொருளாதாரக் கொள்கையின் பங்களிப்புகளைக் கணிப்பது என்பது பொருத்தமானதே. இந்தக் கொள்கை, காங்கிரஸ் தனது முந்தைய பொருளாதாரத் தொலைநோக்குப் பார்வைகள் பற்றிய பேச்சு மற்றும் செயல்பாடு இவற்றிலிருந்து பின்வாங்கியதை முழுமைப் படுத்தியது. ஏற்றுமதியை மாற்றியமைத்தல், பன்னாட்டு நிறுவனங்கள் உள்நாட்டுச் சந்தையை எட்டுவதை இலகுவாக்குதல், உள் மற்றும் வெளிநாட்டு மூலதனங்களை இணைத்துச் செயல்படுத்துதல், மற்றும் இறுதியாக, உலக வங்கி மற்றும் பிற



படிப்பகம்

www.padippakam.com



சர்வதேச நிறுவனங்களிடமிருந்து தாராளமாக கட்டுப்பாடின்றி கடன் வாங்குதல் போன்றவை இக்கொள்கையின் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். இக் கொள்கையே நலமற்றது என்பது உண்மையாக இருக்கக் கூடும், எனினும், இங்கே அவ்வாறு வலியுறுத்தப்படவில்லை. ஆனால், IMF கடன்களும், வெளிநாட்டு தொழில் இணைப்புகளும் ஒருவரது தேசிய உணர்வுகளைக் கிளர்ச்சியுறச் செய்வன அல்ல என்பதே இங்கு சுட்டிக் காட்டப்படுகிறது. இவற்றில், சிறப்பாக இந்தியம் என்று எதுவும் கிடையாது. பாகிஸ்தான், சிங்கப்பூர், தென்கொரியா போன்றவை எல்லாமே இத்தகைய பொருளாதாரக் கொள்கைகளை முன் வைப்பன தான். வெகு விரைவில் செல்வந்தரா வதும், சுய ஈடுபாடுமே இன்றைய பிரதான மையக் கருத்துகளாக உள்ளபோது, தேசிய ஈடுபாட்டின் அடிப்படையிலான, ஒரு உயர்ந்த ஒழுக்க நெறியின் அடிப்படையில் பேராசையைக் கட்டுப்படுத்தக் கூடிய கட்டுகள் பாதையோரத்திலே விழுந்து விடுகின்றன.

IMFனாலோ அல்லது ஏற்றுமதிச் சந்தையி னாலோ, ஊக்குவிக்கப்பட்டு வரும் இத்தகைய உலகம் தழுவிய ஒன்றுபடுத்தப்படுதல், தமது சொந்த தனித்தன்மை வாய்ந்த இணைப்பை வெளிப்படுத்த விரும்பும் சுயாட்சி உள்ள தேச அரசுகளின் முயற்சிக்கு எதிராகச் செல்லுகிறது. இவ்வாறு பொருளாதார மட்டத்தில் பல இடங்களில் ஓரளவு ஒத்துப்போனா லும் சில தேசிய அரசுகளின் மத்தியில், தமது சுயாட்சியை மிகையாக வெளிப்படுத்திக் கொள்ள வேண்டி, வேறுபட்டுத் தோன்ற வேண்டியதற்கான ஒரு நிலைத்த தேவை இருக்கத்தான் செய்கிறது. இவ்வாறு பொருளாதாரக் கொள்கைகளை ஒரு குறிப்பிட்ட இந்திய முறையில் இணைக்கக் கூடிய ஒரு மதச்சார்பற்ற ஒட்டுதல் இல்லாமல் போகும்பட் சத்தில், இந்துத்துவம் உள்ளே புகுந்து தேசிய சிந்தனையை (கற்பனைத் திறத்தை) உயிர்ப்பூட்டு வதற்கான பாதை அகலத் திறந்து கிடக்கிறது. இனிமேலும் இந்துத்துவம் ஒரு தனிப்பட்ட செயல் பாடாக இருக்க வேண்டியதில்லை. மாறாக, எல்லோ ருக்கும் ஏதோ ஒரு வகையில் லாபமளிக்கக் கூடிய வகையில், அது இப்போது பொது அளவில் கொண்டாடப்படக்கூடிய விஷயமாகலாம்.

நேருவாதம் என்பதும் இந்துத்துவம் போலவே ஒரு இலட்சியமாகத் தான் இருந்தது. எனினும், நமது முதல் பிரதமரிடமிருந்து பெறப்பட்டது என்பதால், அதை அறிவியல் தவிர வேறு ஒன்று என்று பார்ப்பது பலரையும் வருத்தப்படுத்தும் ஒரு விஷயமாகக் கூடும். ஆனால் ஒரு இலட்சியம் ஒரு பொய்யாக இருக்க வேண்டும் என்பது அவசியம் அல்ல. மாறாக, அது ஒரு சக்தி வாய்ந்த, உணர்வு ரீதியாக ஒருங்கிணைக் கும் பொருளாக, தேசிய இலக்குகளுக்கு உத்வேகம் அளிப்பதாகவும், தேசிய ஆட்சியுரிமையைப் புனிதப் படுத்தும் ஒன்றாகவும் இருக்க முடியும். நேருயிஸத் தின் தொலைநோக்குப் பார்வையால், தான் உறுதி யளித்தபடி விளைவுகளை ஏற்படுத்த முடியவில்லை என்றால், காலப்போக்கில், அத்தோடு உடன்சென்ற இலட்சியமும் தாக்குதலுக்கு உள்ளாக வேண்டி யிருந்தது. சுயசார்பு என்ற இலட்சியம், நடைமுறை யில் நன்றாகச் செயல்படவில்லை. ஆனால், அதன் அழிவு பெருமளவில் காங்கிரஸால் ஏற்படுத்தப் பட்டதே, இனவாதிகளால் அல்ல. நடப்புக் கால கொள்கைகளும் செயல்பாடுகளும் மையம் கொண் டிருக்கக் கூடிய வகையிலான ஒரு முழுமையான தேசிய இலட்சியத்தை சுயமாக உருவாக்க இது வரையில் காங்கிரஸால் முடியவில்லை. இந்துத்துவம் இப்போதுள்ள சூழ்நிலைகளைத் தனக்குச் சாதகமாக அமைத்துக் கொள்வதில் வேறு எல்லா இலட்சியங் களையோ அல்லது புனை கதைகளையோ விடச் சிறப்பாகச் செயல்பட்டுள்ள காரணத்தினால் அல்லா மல், இந்த மட்டத்தில் உள்ள போட்டி பரிதாபகரமான முறையில் பலவீனப்பட்டுக் கிடப்பதாலேயே இன்று நல்ல முன்னேற்றம் பெற்றுள்ளது. இதன் மிக நெருங்கிய போட்டியாளர் V.P.சிங்கினுடைய மண்டலிஸம் மற்றும் தேசிய முன்னணி என்று கூறலாம். ஆனால், இதன் செயல்பாட்டு முறைகள், பெரும்பான்மை இந்து சமுதாயத்தை சாதியின் அடிப்படையில் துண்டாட வேண்டும் என்று கோரு வதால் தேசிய அளவில் மக்களை ஒன்றுபடுத்துவதற் காகப் போதுமான அளவு ஒலியுடன் இதனால் முழக்கமிட முடியாமல் போகும்.

## இந்துத்துவத்திற்கான சாதகம்

இந்த வாதத்தின் துவக்கத்திலேயே கூறப்பட்ட படி, இந்துத்துவத்திற்கும் புதிய பொருளாதாரக் கொள்கைக்கும் இடையிலான தொடர்பு மிகவும் சுற்றி வளைத்த ஒன்றேயாகும். புதிய பொருளாதாரக் கொள்கை உருவாக இந்துத்துவம் காரணமாக அமையவில்லை. மேலும், அது நிலைத்து நிற்பதற்கு இந்துத்துவம் அதற்குத் தேவையும் இல்லை. இந்தியத் தனித்துவம் வாய்ந்த ஒரு மாற்று இலட்சியத்தை ஏற்படுத்தாமலேயே சுயசார்புக்கான வாழ்வாதார மாகிய நேருவியக் கொள்கையை நடைமுறை ரீதியில் காங்கிரஸ் அழித்து விட்டதால், இவை இரண்டும் ஒன்றாகக் கொண்டுவரப் பட்டன. இலட்சியங்களில் வெற்றிடம் இருப்பதை தேசிய அரசுகள் வெறுக் கின்றன. குறிப்பாக, இந்தியாவைப் போல இளமை யாகவும், இன்னமும் நவீனமயமாக்கப்படாமலும் உள்ள ஒரு தேசத்தில் இது கூடுதலாகக் காணப்படும். எனவே, முன்னெப்போதையும் விட இன்று இந்துத்துவம் ஒரு பெரிய அளவிலான ஆதரவைப் பெற்றிருப்பதில் வியப்பேதும் கிடையாது.

இப்போது இந்துத்துவம் தன்னைத்தானே ஒரு அதிவேட்கையுள்ள பாத்திரத்தில் கண்டு கொண்டு



படிப்பகம்

www.padippakam.com



விட்ட பின், இந்நிலைமைக்கேற்றபடி செயல்படுவதற்கு இந்துத்துவத்தை முன்வைப்பவர்கள் தம்மால் இயன்ற அளவில் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டுள்ளனர். இந்து மதத்தின் உயர் கலாச்சாரத்தை முன் வைப்பதோடு அவர்கள் திருப்தியுறுவதில்லை. மாறாக, அதை மேலும் எளிமையான ஒரு விஷயமாக்குவதன் மூலம் இந்துத்துவத்தின் பால் உள்ள ஈர்ப்பைப் பரவலாக்கிக் கொண்டு வருகின்றனர். விஸ்வ இந்து பரிஷத் மற்றும் பஜ்ரங் தளம் இதன் மேலும் பிரபலமான முகங்கள் ஆகும். இந்துத்துவ அணியினரிடையே நீலநிற ஜீன்ஸுகளுடனும், மஞ்சள் உடைகளுடனும் இன்று காக்கி டிரவுஸர்கள் ஒன்றாக இணைய முடியும். இதனால்தான், முன்னதாக ஆர்.எஸ்.எஸ்.ஸினரால் உயர் பிரமாணப் பாணி விரும்பப் பட்ட போது, இன்று சங்க பரிவார் ஒரு மிகப் பெரிய மக்கள் பிரிவினரோடு தன்னை நெருக்கமாக இணைத்துக் கொண்டு வருகிறது.

இத்தகைய நிலவரத்தில், மக்களை சாதி அடிப்படையிலோ (மண்டல்), மொழி வாரியாகவோ (மைதிலி இயக்கம்) அல்லது பகுதி வாரியாகவோ (சிவசேனை) ஒருங்கிணைக்கும் முயற்சிகள் ஒரு தேசிய இன இலட்சியத்தால் சுலபமாக மறைக்கப் பட்டு விடுகின்றன. ஏனெனில், நிரப்பப்படக் காத்திருக்கும் ஒரு வெற்றிடம் உயர் மட்டங்களில் காலியாக உள்ளது. இதைச்செய்ய இந்துத்துவம் வெகு வேகமாக உள்ளே நுழைந்துள்ளது. நிறைவேற்றப் படாத சோஷலிச வாக்குறுதிகளைக் கொண்டுள்ள புறக்கணிக்கப்பட்டுள்ள நேரு வாதத்திற்கு ஒரு இலட்சிய ரீதியான மாற்றை அது கொடுக்கிறது.

ஒரு கலவையான பொருளாதாரமும், லைசென்சு ராஜ்ஜும் மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யத் தவறி விட்டன. மக்கள் வேகமாகப் பொறுமையிழக்கத் தலைப்பட்டு விட்டனர். காலப்போக்கில், பா.ஜ.க.வினர் ''நான் - அப்போதே - சொன்னேனே'' என்று கூறியது மேலும் மேலும் நம்பிக்கையூட்டுவதாக ஒலிக்கத் துவங்கியது, ஒரு வியப்பூட்டும் விஷயம் அல்ல. மேலும், காங்கிரஸால் புதிய பொருளாதாரக் கொள்கை துவங்கப்பட்டது, சோஷலிசம் பின்வாசல் வழியாக வெளியேறி விட்டது என்பதற்கான ஒரு ஒப்புதலாக இருந்தது. IMF-ஆல் உருவாக்கப்பட்ட திட்டம், வெறும் செயற்பயன் மட்டுமே கருதும், இலட்சியம் நீக்கப்பட்ட ஒரு அடிப்படைக் கோட்பாட்டைக் கொண்டதாக வைக்கப்பட்டது. இதனால் பா.ஜ.க.விற்கு இந்தக் கொள்கையைப் பறித்துக் கொண்டு அதை தனக்கும் சொந்தமானது என்று கூறுவது சுலபமாயிற்று. நேருவியத் திட்டங்களுக்கும், பா.ஜ.க.விற்கும் இடையில் உள்ள இலட்சிய ரீதியான கொள்கை வேறுபாட்டின் காரணமாக, நேருவிய திட்டங்களை இவ்வாறு பா.ஜ.க. எடுத்துக் கொண்டிருக்க முடியாது. புதிய பொருளாதாரக் கொள்கை போன்ற இலட்சியத்தை இழந்துவிட்ட செயல்பாடுகளை பா.ஜ.க. தனதாக்கிக் கொள்ளக் கூடிய ஒரு காரணத்தால், முன்னர் எப்போதும் இருந்திராத வகையில், பா.ஜ.க. இன்று மேலும் ஒரு வலுவான தேசிய மாற்றாக அமைய முடிகிறது.

எனினும், இறுதியில் இந்துத்துவம் என்பது முன்னோர்களைச் சார்ந்துள்ள உணர்வுகளைப் பயன்படுத்திக் கொள்கிற ஒரு பிரிக்கும் சக்தியாகவே இருந்து வருகிறது. இந்துக்களை ஒரு அமைப்பாக இணைத்து உருவாக்க அது முயல்கிறது. ஆனால், பிற சிறுபான்மை மதத்தினரை, நாட்டின் உள்ளேயே அமைந்துள்ள எதிரிகளாக காட்டுவதன் மூலமாக மட்டுமே அதனால் இதைச் செய்ய முடியும். நாட்டின் குடியுரிமை பற்றிய நவீனக் கருத்தாக்கத்தை இது துண்டாடுகிறது. ஆனால் இந்துப் படையினருக்கு அது பற்றிக் கவலையில்லை. பிற மதங்களை மதிப்பதாக அவர்களால் காட்டிக் கொள்ள முடியாது. ஏனெனில் இது வரையில் அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ள எல்லாவற்றையும் அவர்கள் மறுப்பதாக அது குறிக்கும்.

### இனத் தன்மை, இனவாதம் மற்றும் தேச அரசு

இந்திய தேச அரசு ஐம்பதாண்டுகளாக நிலைத்துள்ளது, மற்றும் மேலும் பல ஆண்டுகள் தொடர்ந்து நிலைத்திருக்கப் போவதாகத் தோன்றுகிறது என்பது மகிழ்வூட்டும் ஒரு விஷயமாக இருக்க வேண்டும். இந்தியா சுதந்திரம் பெற்ற பொழுது, ஆங்கிலேயே நிர்வாகத்தினர் மட்டுமின்றி, இந்திய மற்றும் மேலை நாட்டு அறிஞர்கள், விமர்சகர்கள் மற்றும் பொது அறிவாளிகள் அனைவருமே, இந்திய அமைப்பு மொத்தமும் துண்டு துண்டாகச் சிதறுவதற்கு ஒரு சில ஆண்டுகளே எடுக்கும் என்று கூறினர். இந்தக் கண்ணோட்டம் இன்றளவிலும் பிரதானமாக இருந்து வருகிறது. இதனால்தான் ஒவ்வொரு முறையும் சாதி, மதம் அல்லது மொழி பற்றிய முரண்பாடு எழும் போதும், இதுவே இந்தியாவின் முடிவுக்கான துவக்கம் என்ற கூக்குரல் எழுகிறது. இந்தக் கூட்டுக் கவலைக்கான பிரதான காரணம், இவ்வளவு நீண்ட காலம் நிலைத்து ஆதிக்கம் செலுத்தி வந்துள்ள தேச அரசு பற்றிய மேலைக்கருத்து ஆகும். இந்தக் கண்ணோட்டத்தின் படி, ஒரே மொழி மற்றும் மதத்தால் இணைக்கப்பட்டுள்ள மக்களால் மட்டுமே உண்மையான தேச அரசுகளை அமைக்க முடியும். எனவே, இதன்படி, இந்தியாவைப் போல பல மொழிகள் மற்றும் மதங்களால் ஆன குழுக்களைக் கொண்டுள்ள ஒரு நாடு, தொடக்கத்திலேயே இடர்பாடு கொண்டுள்ளது என்பது பொருள். எனவே, இந்தியா தோல்வி காண்பது என்பது எப்போதாவது நிகழ்ந்தே தீரும் என்று பல இந்தியர்களுக்கும் தோன்றுவது வியப்பூட்டும் விஷயமல்ல.

இந்தியாவின் இன மற்றும் சமூக முரண்பாடுகள் பற்றிய ஒரு சரியான புரிதலைத் தடுப்பது இந்தக்



படிப்பகம்

www.padippakam.com



கண்ணோட்டம்தான். ஒவ்வொரு நாடும், தேச அரசை எட்டுவதற்குத் தனக்கே உரிய தனி வழியைக் கொண்டுள்ளது என்பதை நாம் உணர்ந்து கொண்டு விட்டோம் என்றால், இங்கிலாந்துஅல்லது பிரான்ஸ் போன்ற நாடுகள் எவ்வாறு உருவாயின என்பது பற்றிய புனைந்து உருவாக்கப்பட்ட பிரச்சாரத்தால் அவ்வளவு அதிகமாக மதிமயங்கிப் போக மாட்டோம்.

குறுகிய, ஆரவாரம் எழுப்பும் தேசிய அரசியலை வழக்கமாக முன்னிலைக்குக் கொண்டு வரக்கூடிய அச்சத்தை எழுப்பும் விசையைத் தட்டி விடுவதையும் குறைத்துக் கொள்வோம். மேலை நாடுகளின் துவக்க காலத்தின் போது அங்கிருந்த மத மற்றும் மொழி சிறு பான்மையினர் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்தனர் என்ற உண்மை, அத்தகைய நாடுகளின் பாடப்புத்தகங்களின் சரித்திரங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள விரும்பாத ஒன்று ஆகும்.

இந்திய நிலைமை முற்றிலும் வேறு விதமானது. இந்தியா ஒரு சுதந்திரமான ஆட்சியுரிமை கொண்ட நாடாகச் செயல்படுவதற்குத் தன்னைத் தயார் செய்து கொண்டிருந்த போது கூட, சிறுபான்மை உரிமை களையும், கலாச்சார வேற்றுமைகளையும் ஏற்றுக் கொள்வது அதற்கு முக்கியமான விஷயமாக இருந்தது. இங்கிலாந்து 1747-ல் இருந்தது போல், 1947-ல் இந்தியா பாவித்துக் கொள்ள முடியவில்லை. ஆனால், எல்லா தேச அரசுகளும் இறுதியில் ஒரு கூட்டுத் துயரத்தால் இணைக்கப்பட்டுள்ளன. இந்தக் கூட்டுத் துயரமே ஒரு நாட்டின் பிரதேசச் சொத்துக் களை புனிதமாக்குகிற ஒன்று. இந்தியாவின் விஷயத் தில், இத்துயரம் பாகிஸ்தானும், பிரிவினையும் ஆகும். இத்தகைய ஒரு கூட்டுத் துயரத்தை மனதில் இருத்திக் கொள்வதில் இந்தியா தனியாக நிற்க வில்லை. ஏனெனில், மக்களை ஒருங்கிணைப்பது, மகிழ்ச்சியை விட, துயரமே ஆகும். அமெரிக்காவின் துயரமாக இப்பொழுது ஈராக்கும், லிபியாவும் உள்ளன. வெகுகாலமாக அது சோவியத் யூனியனும், க்யூபாவுமாக இருந்தது. இங்கிலாந்தின் துயரம் அயர்லாந்து ஆகும். இந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகக் கூடிய ஒன்று.

கடந்த ஐம்பதாண்டுகளில், இந்தியா பல புயல் களை எதிர்கொண்டுள்ளது. மொழிவாரி மாநிலங் களுக்கான கோரிக்கை சிவசேனை போன்ற இயக் கங்கள், அடிக்கடி எழும் சாதிக் கலவரங்கள், பஞ்சாப் பிரச்சனை, மற்றும் பாபர் மசூதி போன்றவை, இந்தியாவின் குறுகிய ஆனால் கொந்தளிப்பு மிக்க சரித்திரத்தில் ஒரு சில பளிச்சிடும் புள்ளிகளாகும். இந்த அனைத்து உத்வேக நிகழ்வுகளும் இந்தியாவைச் சாகடித்து விடாததால், இவை அதை மேலும் வலிமை யுறச் செய்துள்ளன என்று நாம் நம்பலாம். அதாவது இவற்றிலிருந்து நாம் பாடங்களைக் கற்று கொண்டு, நமது தவறுகளைத் திருத்திக் கொண்டுள்ளோ மானால், இது சாத்தியம். இங்குதான் நாம் எதிர்காலம் பற்றி சற்றே அவநம்பிக்கை கொண்டு வாட்டமுறுவது தவிர்க்க முடியாத விஷயமாகிறது.

பாகிஸ்தான் மற்றும் பிரிவினை பற்றிய கூட்டுத் துயரம் நமது தேசிய மனதில் மாறாத வடுவை ஏற் படுத்தி உள்ளது என்பதில் சிறிதும் சந்தேகம் கிடையாது. 1947-க்குப் பின்னால் பிறந்தவர்கள் கூட, இந்தத் தீயகனவை (பயங்கரக் கனவை) தாங்குமாறு சமூகவயப் படுத்தப்பட்டு உள்ளோம். அந்த அளவில், நமது தேச அரசை உண்மையாக்குவதில் நாம் வெற்றி கண்டுள்ளோம் என்று கூடக் கூறலாம். எனினும், இந்தக் கூட்டுத்துயரம் திறம்படக் கட்டுப்படுத்தப்பட வில்லை என்றால், மிகச் சுலபமாக குறுகிய அளவி லான, ஆரவாரமான தேசிய அரசியலாக மாறிவிடக் கூடும் என்றே பஞ்சாப் கலவரங்கள் மற்றும் பாபர் மசூதியின் அழிவு ஆகியவற்றின் அனாவசிய வன் முறைச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய தேசிய அரசியல் மற்றும் ஆவேச நாட்டுப் பற்று வெடிச்சிதறல்களில் நமக்கே உரித்தான தனித் தன்மை வாய்ந்த கூட்டுத் தன்மைகளைக் கொண்ட ஒரு பல்கலாச்சார நாடாக நாம் இருக்கிறோம் என்பதை நாம் சுலபமாக மறந்து போய் விடக்கூடும்.

இதன் தொடர்பாக, சமூக அழுத்தங்களை, இன அழுத்தங்களிலிருந்து வேறுபடுத்திக் காண்பது செய்யத் தகுந்த செயலாகும். ஒரு சமூக நிலைமையில், ஒருவரையொருவர் எதிர்த்து நிற்கும் சமூகங்கள் நமது எதிரிகளை தேச விரோதிகளாகக் காட்ட முயல்வ தில்லை. இந்த சமூகங்கள் ஒருவருக்கொருவர் அரசியல் ரீதியாக எதிர்கொண்டு நிற்கும்போது, அரசிடமிருந்து பெறும் சலுகைகளில், எதிரணியினர் தமக்குறித்தானதை விட கூடுதலான பங்கினைப் பெறு கின்றனர் என்பதுதான் இங்கு வழக்கமான குற்றச் சாட்டாக இருந்து வந்துள்ளது. சாதி இயக்கங்களும், மொழிவாரி கோரிக்கைகளும் இந்த வகையிலான சமூக அணிதிரட்டுதலைச் சேர்ந்தவை. இதற்கு மாறாக, இஸ்லாமியர் மற்றும் பிற சிறுபான்மை யினருக்கு எதிரான தாக்குதல்கள் இனரீதியிலானவை என்று கூறப்படலாம். ஏனெனில் இத்தகைய சம்பவங் களில் எல்லாம், தேச அரசின் புனிதத்துவமானது பெரும்பான்மை சமூகத்தினரால் கருத்தாக்கம் செய்யப் படுகிறது. இங்கு விஷயம் தவறிழைக்கும் அரசாங் கத்தைப் பொறுத்தது அல்ல. தேச அரசும் அதன் அரசா திக்கம் முழுமையும் இங்கு ஆபத்துக்கு உள்ளா கின்றன. இந்தியாவில் உள்ள அனைத்து இஸ்லாமியர் களையும் பாகிஸ்தானின் பிரிவினர்கள் என்று ஒட்டு மொத்தமாகக் குறிப்பிடுவதன் மூலம் இந்து பிரிவினைவாத அரசியல் அமைப்புகள் தமக்கான இலட்சியரீதியிலான வலிமையைப் பெறுகின்றன. இதேபோல், பஞ்சாபில் இறுக்க நிலை நிலவிய ஆண்டுகளில், சீக்கியர்கள் மற்றொரு பிரிவினையை



படிப்பகம்

www.padippakam.com



விரும்பினார்கள் என்பதும், எனவே, கருத்து ரீதியாகவும், தனிமனித உணர்வு ரீதியாகவும், பாகிஸ்தானின் நண்பர்களாக அவர்கள் இருக்கிறார்கள் என்பதும் பெரும்பான்மைக் கருத்தாக இருந்தது. இரு விஷயங்களிலும், பாகிஸ்தான் பற்றிய பூச்சாண்டி காட்டுதல், பெருமளவு நபர்கள் இது பற்றித் தெளிவாகச் சிந்திக்க இயல்வதைத் திறம்படத் தடுத்து நிறுத்தியதன் வாயிலாக, இக்குற்றச்சாட்டுகள் ஒரு பகுத்தறிவு வாய்ந்த சண்டையிலிருந்து தப்பி விட்டன.

இனரீதியிலான மற்றும் சமூகரீதியிலான அணி திரட்டும் இயக்கங்களில், இனரீதியிலான உணர்வுக் கிளர்ச்சியும் அரசியல் ஆரவாரமும் எதிர்காலத்தில் ஆபத்தை விளைவிப்பதில் கூடுதல் சாத்தியப்பாடுகளைக் கொண்டுள்ளது என்று நான் கருதுகிறேன். பெரும்பாலான சம்பவங்களில் சமூக ரீதியிலான கோரிக்கைகள் - மொழிவாரிக் கோரிக்கைகள் மற்றும் சாதி ஒதுக்கீடுகள் போன்றவை - பெருமளவில் திருப்திப்படுத்தப்பட்டு விட்டன. இன்னமும் கொந்தளித்துக் கொண்டுள்ள விஷயங்களில், அரசியல் வானில் தமக்கென ஒரு இடத்தைப் போராளிகள் கண்டு கொண்டுள்ளனர்; இருக்கும் அமைப்பில் தொடர்ந்து செயல்படும் திறனை அவர்கள் கொண்டுள்ளனர் என்றே தோன்றுகிறது. இந்தக் கிளர்ச்சியில் நேரடியாக ஈடுபடாதவர்களின் உணர்வுகளை இந்த சமூகவழியிலான இயக்கங்கள் பொதுவாகத் தூண்டி விடுவதில்லை. இத்தகைய விவாதங்களில், ஒரு பக்கத்தையோ அல்லது மறு பக்கத்தையோ ஆதரிக்கும் பார்வையாளர்கள் இருக்கக்கூடும் ஆனால், கொல்வதற்கோ, அல்லது கொல்லப்படுவதற்கோ அவர்கள் வீதிகளில் இறங்குவது வெகு அரிது. இனவாரி முரண்பாடுகள் வேறு வகையானவை. இத்தகைய கலவரங்களின் மையம் பஞ்சாபில் இருந்தாலும் சரி, அயோத்தி நகரில் இருந்தாலும் சரி, நாட்டின் ஒரு முனையிலிருந்து மறுமுனை வரை அதிர்வலைகள் உருளும் போது நாடு முழுவதும் அவற்றால் அதிர்வடைகிறது.

இத்தகைய இனரீதியான எழுச்சிகளால் நாடு முழுவதையும் ஈடுபடச் செய்ய முடியும் என்றால், மக்களுக்குள் இருக்கின்ற வெகு வலிமையான தேசப்பற்று உணர்வுகள் வெளிப்பாடுகள் அவை என்று கூறலாம். எனினும், இரண்டு வகையான தேசப்பற்றுகள் உள்ளன. ஒன்று, பல்வேறு சமூகங்களின் உறுப்பினர்களை நாட்டின் சமமான குடிமக்களாக ஏற்றுக்கொண்டு, தேச அரசினுள் ஒரு நேர்மறையான சகோதரத்துவ உணர்வை உருவாக்குவதில் வெற்றி காண்கிறது. பிற கலாச்சாரங்களை மதிப்பதால், நவீன சிந்தனையோடு இது உடன்பட்டு உள்ளது. மற்றொரு வகையின்படி, பகுதியில் வாழ்கின்ற மக்கள் ஒரு பொருட்டல்ல. பகுதியே முக்கியமாக அமைகின்றது. இந்த வகையிலான குறுகிய தேச அரசியல் சார்ந்த ஆரவாரமிக்க தேசப்பற்றைப் பற்றிதான் இந்தியா கவனமாக இருக்க வேண்டும். சமீப ஆண்டுகளில், இந்த வகையிலான குறுகிய தேச அரசியல் சார்ந்த, அழிவை உண்டாக்கும் தேசப்பற்று இவ்வளவு அடிக்கடி மேலெழுந்து உள்ளது என்பது கவலையளிக்கும் விஷயமாகும். இனவாரி இயக்கங்கள் இந்த வகையிலான குறுகிய தேசிய அரசியலால் நன்கு ஊட்டம் பெறுகின்றன. ஏனெனில், ஒருவரது அரசியல் எதிரிகளை தேச அரசின் எதிரிகளாக உருவகித்து, தற்காலிக வெற்றிகளைப் பெறுவது மிகவும் கவர்ச்சியூட்டி ஈர்க்கும் ஒரு விஷயமாகும்.

தேசிய அரசின் அளவிலான பிற இலட்சியரீதியான தேர்வுகள் தமது புத்தொளியை நிலைக்கச் செய்ய முடியாமல் நாளடைவில் பெயரிழந்து போய் விட்ட காரணத்தால், இந்தியாவில் இனவாரி அணிதிரட்டுதல் அதிகமாக ஏற்படத் துவங்கியுள்ளது என்பது எனது கருத்து. இனவாரி உணர்வுகள் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள்ளோ, பிரதேசத்துக்குள்ளோ கட்டுப்பட்டு இருப்பது வெகு அபூர்வம். எனவே, அரசியல் சந்தையில் பிற தேசிய இலட்சிய கொள்கைகள் எவ்வாறு செயல்பட்டுக் கொண்டு வருகின்றன என்பதோடு அவற்றின் ஈர்ப்பு இணைந்து காணப்படுகிறது. எனவே, நேருவிஸத்தின் உற்சாகம் மிகுந்து காணப்பட்ட நாட்களில், இந்து பிரிவுவாத கட்சிகள் ஆண்டுக்கணக்கில் பரிதாபகரமாகத் தோற்றமளித்தது ஒன்றும் வியப்பூட்டும் விஷயமல்ல. இந்திரா காந்தியால் கூட, தனது 'வறுமை ஒழிக' (Garibi Hatao) திட்டத்தின் மூலம் ஜனசங்கத்தை நிறுத்தி வைக்க முடிந்தது ஆனால் இந்த மதச்சார்பற்ற கட்சிகள் தாமே நம்பிக்கையிழந்து சூழ்ச்சித் திறத்துடன் செயல்படத் துவங்கியதும், அவர்களது தேர்தல் வாக்குறுதிகள் மேலும் மேலும் போலியானவையாகத் தென்படத் துவங்கியவுடன், சிறுபான்மையினரைக் குறிவைப் போர் அதிகமான அளவில் சரியான நிலையை எட்டத் துவங்கினர்.

இன்று, வெகு சில மதச்சார்பற்ற கட்சிகள் மட்டுமே எதிர்காலத்திற்கு ஒரு நம்பிக்கையூட்டும் வாக்குறுதியை முன் வைக்கின்றன இதனால்தான் பிரிவுவாத அமைப்புகள், இறுதியான தேசபக்தர்களாக பாவனை செய்து கொண்டு, தம்மை உள்ளே நுழைத்துக் கொள்ள முடிகிறது. அதிர்ஷ்டவசமாக, ஒவ்வொரு முறை இக்கட்சிகள் அதிகாரத்திற்கு வரும் பொழுதும் வெகு விரைவில் அவை தமது பெயரைக் கெடுத்துக் கொள்கின்றன. ஆனால் அவர்களது செயற்பாடுகள் அநாவசிய இரத்தக் களறியையும், மதங்களுக்கு இடையிலான துவேஷத்தையும் உருவாக்கும் வகையில் உள்ளன. இவை அனைத்தும் நமது மட்டமான அரசியல் உணர்வுகளுக்கும், ஒரு தெளிவான அரசியல் ஒருங்கமைப்பாக நிலைத்திருக்க இயலுமா என்ற அச்சத்திற்கும் இடம் தருபவையாக உள்ளன. பகுதிவாரி இயக்கங்களும், அரசியலும் பொதுவாக



படிப்பகம்

www.padippakam.com



மதச்சார்பற்ற தன்மையைக் கொண்டிருப்பது பற்றி நாம் ஓரளவு ஆறுதல் பெறலாம். மேலும், இந்த பகுதிவாரி அரசியல் கட்சிகள் தேச எதிர்ப்புத் தன்மை கொண்டவையல்ல; மாறாக, மத்தியில் அரசியல் ஈடுபாட்டைக் கொண்டுள்ளவை என்பதும் உண்மையே. தெலுங்குதேசம், பல்வேறு ஜனதா தளங்கள், மற்றும் பல திமுகக்கள் எல்லாமே இக்கருத்தை நிச்சயப்படுத்து கின்றன. ஆனால் அவை பகுதிசார்ந்த கட்சிகளாக இருப் பதால் ஒரு குறிப்பிட்ட இடர்பாட்டை எதிர்கொள் கின்றன. மத்தியில் உள்ள அரசு பலவீனமாகவும், முடிவெடுக்கும் திறனின்றியும் இருக்கும் போதெல் லாம், தேசிய உணர்வு ஒரு அனைத்திந்திய தேசியக் கட்சியின் பால் திரும்புகிறது. பல பொதுத் தேர்தல்கள் இந்தப் போக்கை வெளிப்படுத்துகின்றன. இதை ஒரு கட்டுக்குள் வைத்திருக்க வேண்டி, நமக்கு நம்பத் தகுந்த மதச்சார்பற்ற மாற்றுகளைக் கொண்டுள்ள தேசியக்கட்சிகள் தேவையாக உள்ளன.


மேற்கண்ட மதச்சார்பற்ற மாற்றுகள் தமது சிறப்பை இழந்துவிட்ட நிலையில், இனரீதியான அணிதிரட்டுவதன் அபாயத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது. சாதி இயக்கங்களில், ஒழுக்க நெறியூட்டும் வகையில் ஏதும் இல்லை என்பது உண்மை - எனினும் இத்தகைய தருணங்களில் போட்டியாளர்கள் ஓரளவு சமமான வலிமையுடன் இருக்கிறார்கள். தலித்துகள் இன்னமும் சரித்திர ரீதியில் சலுகைகளின்றி அவதிக்கு உள்ளாகின்றனர். ஆனால் அரசியல் ரீதியாக அவர்கள் நன்றாக இணைந்து அமைந்துள்ள ஒரு தெளிவான சக்தியாக உருவாகியுள்ளனர். இனவாரிக் கலவரங் களில் பாதிப்புக்குள்ளாவோர் பெரும்பாலும் மிகச் சிறுபான்மையினராகவும், தம்மைத் தாமே பாது காத்துக் கொள்ளும் திறனற்றும் உள்ளனர். இத்தகைய இனவாரி அணி திரட்டுதல் என்பது எப்போதுமே இஸ்லாமியர் போன்ற சமூகத்தினரைக் குறிவைத்து மட்டுமே இருக்க வேண்டியதில்லை என்பது உண்மை. இந்திராகாந்தியின் படுகொலைக்குப் பின்னர் நிகழ்ந்த கொலைகள் சுட்டிக்காட்டியபடி, புதிய சிறுபான்மையினரை உருவாக்குவது சாத்தியம். பிரிவினைவாதிகளுக்குக் கட்டுப்பாடுகள் கிடையாது. நாளை அடுத்து உருவாகப்போகும் சிறுபான்மையினர் யார் என்று கூறுவது கடினம். இனவாரி பிரிவுவாதி கள், அதிகாரபூர்வமான சிறுபான்மையினரோடு திருப்தி கொண்டு விடுவதில்லை. அவர்களால் வேண்டுமென்றே புதிய சிறுபான்மையினரை உருவாக்க முடியும். இவ்வாறு சிறுபான்மைப்படுத்தும் செயல்முறைதான் குறுகிய பகட்டான தேசப்பற்றைப் பற்றி ஒவ்வொருவரையும் கவனம் கொள்ளச் செய்ய வேண்டும். ராஜீவ் காந்தியின் படுகொலைக்குப் பின்னர், நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசித்த தென்னிந்தியர்கள் ஒரு சில தினங்கள் வெகுவாகப் பாதுகாப்பின்மையை உணர்ந்தனர். அடுத்த சிறுபான்மையினர் நீங்களாக இருக்கக் கூடிய பட்சத்தில் இன ரீதியான அட்டூழியத்தில் இருந்து எவருக்கும் உண்மையான பாதுகாப்பு இல்லை. இறுதி ஆய்வில், அதீத உணர்வோடு பிரதேசத்தை நினைவூட்டக்கூடிய இனவாரி இயக்கங்களை எந்த எண்ணிக்கையில் இந்தியாவால் உருவாக்க முடிந்தது, என்ற கணக் கெடுப்பினால் இந்திய தேச அரசின் வலிமை அளவிடப்படக்கூடாது. இந்தியா துண்டு படப் போகிறது என்ற கவலை விட்டுத் தள்ளப்பட வேண்டும். ஏனெனில், பகுதி ரீதியிலான கட்சிகளும் சரி, பிரிவுவாத இனவாரி கட்சிகளும் சரி அதை விரும்பவில்லை. எங்குமே இது ஒரு பிரதான கோரிக்கையாகி இருக்கவில்லை. ஆனால் இது நடக்கக்கூடும் என்ற அச்சம் வெறுக்கத்தக்க அரசியல் லட்சியக் கொள்கைகள் முதன்மை பெறுவதை அனுமதிக்கிறது. நமது தேச அரசு உடையக்கூடியது மற்றும் உண்மையிலேயே நம்பத்தகுந்ததல்ல என்ற பொதுவான பரவலான அச்சம் இருக்கும் வரையில் நமது நாட்டில் வசிக்கும் பல்வேறு இன மக்கள், மனிதர்கள் மற்றும் கலாச்சாரங்கள் இவற்றை கணக்கிலெடுத்துக் கொள்ளாமல் வீட்டு மனைகள் போல நமது தேச அரசை பூமியியல் மற்றும் பிரதேச வாரியாக பார்க்கும் வரையில், பிரிவினைவாதிகளும் சிறுபான்மையினரைக் குறி வைப்பவர்களும், தேசப் பற்று எனும் போர்வையைத் தமக்கென எடுத்துக் கொள்ளப் போதுமான இடத்தை எப்போதுமே கண்டடைவார்கள். மதவெறியின் இத்தகைய பொது வெளிப்பாடுகளை நமது அரசியல் நடைமுறைகளும், அரசியல் அமைப்புகளும் அனுமதித்துக் கொண்டிருக் கும் வரையில், நவீனத்துவம் நமது வாழ்க்கையின் விளிம்புகளில் நின்றுகொண்டு தமக்குரிய காலத்திற் காக காத்திருந்தாக வேண்டும்.

தமிழில் : ஜார்ஜினா பீட்டர்.

❑❑

... இனங்களுக்கு வழங்கப்படுகிற நீதி அவர்களுக்குப் பயனுடையதாக இருக்க வேண்டுமானால், நீதி வேறாகவும் பயன் வேறாகவும் பிரிந்துவிடக் கூடாதல்லவா?

ரூஸ்ஸோ





படிப்பகம்

www.padippakam.com



# மார்க்ஸிய கோட்பாட்டுடன் மனிதநலம் சார்ந்த உளவியல் பகுப்பாய்வு முறையைப் பொருத்துதல்

எரிக்ப்ராம்

மார்க்சியம் என்பது மனித நலம் நாடும் ஒரு கோட்பாடு ஆகும். மனிதனின் உள்ளார்ந்த திறன்களை முழுமையாக மலரச் செய்வதே அதன் நோக்கம். தனது கருத்துகள் மற்றும் உணர்வு நிலையால் ஊகித்து உணரப்படும் ஒருவகை அல்லாமல், அவனது உடல் மற்றும் மனோ ரீதியான குணாம்சங்களால் நிறைந்துள்ள ஒருவனாக, அது மனிதனைக் காண்கிறது, வெறும் வெற்றிடத்தில் வாழ்பவனாக அல்லாமல், சமூக உறவுகளால் நிலை நிறுத்தப்படுபவனாக, உயிர் வாழ்வதற்கென உற்பத்தியில் ஈடுபட்டாக வேண்டிய ஒருவனாக மார்க்ஸியம் மனிதனைப் பார்க்கிறது. மார்க்ஸிய சிந்தனையினுடைய அக்கறையானது இவ்வாறு மனிதனுடைய உணர்வு நிலையையும் உள்ளிட்ட முழுமையான மனிதனைப் பற்றியதாக உள்ளதால் தான் மார்க்ஸின் ''பொருள்முதல் வாதம்'' ஹெகலின் கருத்தியல் கோட்பாடு மற்றும் மார்க்ஸியத்தின் உருக்குலைந்த வடிவமான பொருளதார - எந்திரத்தனமான கோட்பாடு இவற்றிலிருந்து வேறுபட்டுத் தோன்றுகிறது. மனிதனை, புரிந்துகொள்ளக் கடினமானவையும், அந்நியப் படுத்தப்பட்டவையுமாகிய வெளிப்பாடுகளின் மூலமாக விளக்கிய பொருளாதார மற்றும் தத்துவார்த்த ரீதியிலான வகைப்பாடுகளைக் கட்டவிழ்த்து விடுதலை செய்து, பின்னர் தத்துவம் மற்றும் பொருளாதாரக் கருத்துகளை மனிதனுக்காகப் பயன்படுத்தியது மார்க்ஸின் ஒரு மகத்தான சாதனையாக இருந்தது. மார்க்ஸின் கவலை மனிதனைப் பற்றியதாக இருந்தது. பொருளாதார ஈடுபாடுகளின் ஆதிக்கத்திலிருந்து மனிதனை விடுவிப்பதும், அவனது சொந்த ஏற்பாடுகளும், செயல்பாடுகளும், அவனைச் சுற்றிலும் எழுப்பியிருந்த சிறையிலிருந்து அவனை விடுதலை செய்வதும் அவரது நோக்கமாக இருந்தது. மார்க்சின் இந்த அக்கறை பற்றி ஒருவர் புரிந்து கொள்ளவில்லை என்றால், அவரது தத்துவத்தையோ, அல்லது கதைநடை முறையில் பின்பற்றுவதாகக் கூறிக் கொள்ளும் பலரும் ஏமாற்றும் நோக்கத்துடன் அதை மாற்றியமைத்திருப்பதையோ புரிந்து கொள்ள முடியாது. மார்க்சின் பிரதான உருவாக்கத்திற்கு 'மூலதனம்' (டாஸ் காபிடல்) என்ற பெயர் சூட்டப்பட்டிருந்தபோதிலும், இந்தப் புத்தகம் அவரது மொத்த ஆய்வில் ஒரு கட்டமாக மட்டுமே கொள்ளப்பட வேண்டிய ஒன்று; இதைத் தொடர்ந்து தத்துவத்தின் சரித்திரம் ஒன்று பின்வந்திருக்க வேண்டும். இயந்திரத் தொழில் சமுதாயத்தில் மனிதனின் ஊனமுற்ற நிலையைப் புரிந்து கொள்வதில், மூலதனம் பற்றிய ஆய்வு ஒரு அதிமுக்கியக் கருவியாக மார்க்ஸுக்கு இருந்தது. அவரால் முடிந்திருந்தால் எழுதியிருக்கக் கூடிய மகத்தான நூலின் ஒரு முதல் படியாகவே அது இருக்கிறது. அந்த நூலின் தலைப்பு, ''மனிதனும் சமுதாயமும் பற்றி'' என்று இருந்திருக்கக்கூடும்.

இளைஞராக இருந்தபோதும், ''மூலதனத்தின்'' ஆசிரியராக இருந்தபோதும், மார்க்ஸ் எழுதிய படைப்புகள் உளவியல் கருத்துகள் நிறைந்து காணப்படுகின்றன. மிக முக்கியமான சிலவற்றை மட்டும் குறிப்பிட வேண்டுமெனில் ''மனிதனின் சாரம்'', ''ஊனமுற்ற மனிதன்'' போன்ற கருத்துகளோடு, ''அந்நியப் படுதல்'' ''உணர்வு நிலை'' ''அதீத ஆர்வத்துடன் கூடிய முயற்சிகள்'' மற்றும் ''சுதந்திரம்'' போன்ற கருத்துகளோடு இணைத்து அவர் எழுதுகிறார். எனினும், ஒழுக்கநெறியை ஒரு அமைப்புரீதியிலான உளவியலின் மீது அமைத்த அரிஸ்டாட்டில் மற்றும் ஸ்பைனோஸா இவர்களுக்கு மாறாக, மார்க்ஸின் எழுத்துகளில் உளவியல் கோட்பாடு எதுவும் காணப்படவில்லை. 'பசி' மற்றும் 'பாலுணர்வு' போன்ற, நிலையாக அமைந்துள்ள தூண்டுதல்களுக்கும், சமூக ரீதியாக உருவாக்கப்படுகின்ற, மாறக்கூடிய தூண்டுதல்களுக்கும் இடையே உள்ள வேறுபாடு பற்றிய சிறு சிறு குறிப்புகளைத் தவிர, மார்க்ஸின் எழுத்துகளில், முக்கியமான உளவியல் கருத்துகள் ஏதும் இல்லை. அவரைப் பின்தொடர்ந்து வந்த எழுத்தாளர்களின் நூல்களிலும் கூட இவை காணப்படவில்லை. இக்குறைக்குக் காரணம் உளவியல் சார்ந்த விவரங்களை ஆய்வு செய்யத் தேவையான திறனோ அல்லது ஆர்வமோ இல்லாதது அல்ல. (ஏனெனில், மார்க்சுக்கும் எங்கெல்சுக்கும் இடையே இருந்த கடிதப் போக்குவரத்தின் சுருக்கப் படாத கடிதங்கள் கொண்ட தொகுப்பு ஒன்றில், உணர்வு நிலைக்கு எட்டாத உள்மனத் தூண்டுதல்களை மிக ஆழமாகவும், தீர்க்கமாகவ. ஆய்வு செய்யக்கூடிய ஒரு திறன் தெளிவாகப் புலப்படுகிறது. மிகவும் திறன் வாய்ந்த உளவியல் ஆய்வாளருக்குக் கூடப் பெருமை சேர்க்கும் வகையில் இவை அமைந்துள்ளன.) மனிதனின் பிரச்சனைகளுக்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் ஆற்றல் மிக்க உளவியல் ஏதும் மார்க்ஸின் வாழ்நாளில் இருந்



படிப்பகம்

www.padippakam.com



திருக்கவில்லை என்ற உண்மையே இதற்குக் காரண மாகும். மார்க்ஸ் 1883-ல் மரணமடைந்தார். மார்க்ஸின் மரணத்திற்கு பத்து ஆண்டுகளுக்குப் பின்னரே ஃப்ராய்டு தனது படைப்புகளை வெளியிடத் துவங்கினார்.

ஃப்ராய்டினால் உருவாக்கப்பட்ட உளவியல், பல்வேறு மாற்றங்கள் தேவைப்பட்ட போதிலும், மார்க்ஸின் ஆய்வுக்குத் துணைபோகக் கூடிய ஒரு உளவியலாக இருந்தது. உளவியல் பகுப்பாய்வு என்பது எல்லாவற்றுக்கும் மேலாக, ஒரு ஆற்றல் மிக்க உளவியல். அது மனித நடத்தை, செயல், உணர்வுகள் மற்றும் கருத்துகளை ஊக்குவிக்கக் கூடிய உளம்சார்ந்த விசைகளைப் பற்றியது. இந்த சக்திகளை அவை உள்ளவாறே உணர்ந்து அறிந்து கொள்ள முடியாது. கண்டு அறியப்படும் விஷயங்களின் வாயிலாக இவை ஊகித்து அறிந்து கொள்ளப்படவேண்டும். மேலும், அவை முரண்பாடுகள் வாயிலாக, மற்றும் மாற்றங் களின் வாயிலாக அறியப் படவேண்டும். மார்க்சிய சிந்தனைக்குப் பயன்பட வேண்டும் என்றால், இச்சக்தி களின் பரிணாம வளர்ச்சியை மனிதனின் தேவைகளுக் கும், அவன் பங்கு பெறுகின்ற சமூக மற்றும் சரித்திர ரீதியிலான நிதர்சனத்திற்கும் இடையில் உள்ள இடைவிடாத எதிரெதிர்ச் செயல்பாட்டின் ஒரு உருவாக்கமாகப் பார்க்கக் கூடிய ஒரு உளவியலாக அது இருக்கவேண்டும். அதன் துவக்கத்திலிருந்த சமூக உளவியலாக உள்ள ஒரு உளவியலாக அது இருக்க வேண்டும். இறுதியில், அது ஒரு திறனாய்வு செய்யும் உளவியலாக, சிறப்பாக, மனிதனின் உணர்வுநிலை பற்றி நுணுக்கமாக ஆய்வு செய்யும் ஒரு உளவியலாக அது இருக்கவேண்டும்.

மார்க்ஸிய சிந்தனைக்கு அவை பொருத்தமாக உள்ளன என்ற உண்மையை பெரும்பாலான ஃப்ராய் டியன்களோ மார்க்ஸிஸ்டுகளோ உணர்ந்து கொள்ளாத போதிலும், ஃப்ராய்டின் உளவியல் ஆய்வுத்தத்துவம் மேற்கண்ட பிரதான விதிகளை நிறைவேற்றுவதாக உள்ளது. இவற்றைத் தொடர்புபடுத்திப் பார்க்கத் தவறிவிட்டதன் காரணம், இரண்டு பக்கத்திலும் வெகு தெளிவாகவே தெரிகின்றது. மார்க்ஸிஸ்டுகள் தமது பாரம்பரியப்படி தொடர்ந்து உளவியலை அலட்சியம் செய்து வந்தனர். ஃப்ராய்டும் அவரது சீடர்களுமோ, இயந்திரத்தனமான பொருள்முதல்வாதத்தின் கட்டுக் குள்ளே தமது கருத்துகளை வளர்த்தெடுத்தனர். இந்தக் கட்டமைப்பு, ஃப்ராய்டின் மகத்தான கண்டுபிடிப்பு களை மேலும் முன்னேறச் செய்வதற்குத் தடையாக அமைந்தது. மேலும், வரலாற்றுப் பொருள் முதல் வாதத்தோடு பொருத்தமற்றதாக அது இருந்தது.

இதற்கிடையில், புதிய முன்னேற்றங்கள் ஏற்பட் டுள்ளன. இவற்றுள் மிக முக்கியமான ஒன்று மார்க்சின் மனித வாழ்வியலின் புத்தாக்கம் ஆகும். மார்க்சின் தத்துவத்திற்கு, மனிதன் பற்றிய ஒரு உளவியல் தத்துவம் தேவை என்ற உண்மையை பல மார்க்சிய சோசலிசவாதிகள் - சிறப்பாக, சிறிய சோசலிச நாடு களில் உள்ளவர்களும், மேற்கத்திய நாடுகளில் உள்ள வர்களும், உணரத் தலைப்பட்டுள்ளனர். மேலும் ஒருமுகப்படுத்தப்படுவதற்கும், பக்தி செலுத்துவதற்கு மான ஒரு அமைப்புக்கான மனிதத் தேவையை சோஷலிசம் திருப்தி செய்யவேண்டும் என்ற உண்மை யையும் அவர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர். மனிதன் யார், மற்றும் அவனது வாழ்வின் பொருள் மற்றும் இலக்கு என்ன என்ற கேள்விகளை அது கையாள வேண்டும் என்பதையும் அவர்கள் புரிந்து கொண்டுள்ளனர். ''புரட்சிக்கு பயன் அளிப்பது எதுவும் நல்லது'' (தொழிலாளர் அரசு, சரித்திரத்தின் பரிணாம வளர்ச்சி, இன்னபிற.) என்று கூறும் வெற்றுச் சொற்றொடர் களைத் தாண்டி அப்பால் செல்லக்கூடிய ஒழுக்கக் கோட்பாடுகள் மற்றும் ஆன்மீக வளர்ச்சி இவற்றுக் கான ஒரு அடித்தளமாக அது இருக்கவேண்டும்.

இதற்கு மாறாக, ஃப்ராய்டின் சிந்தனைக்கு அடித் தளமாக உள்ள இயந்திரத்தனமான பொருள்முதல் வாதத்திற்கு எதிராக உளவியல் ஆய்வாளர்கள் கூட்டத் தில் எழுகின்ற விமர்சனமானது உளவியல் ஆய்வின் மறுமதிப்பீட்டிற்குக் காரணமாகியுள்ளது - சிறப்பாக, பாலுணர்ச்சி உந்துதல் தத்துவத்தைப் பொறுத்த அளவில் இது நிகழ்ந்துள்ளது. இவ்வாறு மார்க்சிய, மற்றும் உளவியல் ஆய்வு ஆகிய இரு சிந்தனை களிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சியின் காரணமாக மார்க்ஸிய தத்துவம் மற்றும் சோஷலிச நடைமுறைப் பயிற்சி, மேலும் வளர்வதற்கு ஒரு ஆற்றல்மிக்க, நுணுக்கமாக ஆய்வு செய்யக்கூடிய, சமூக ரீதியில் செயல்படக்கூடிய உளவியலின் பயன்பாடு அதி முக்கியமாகத் தேவைப்படுகிறது என்பதை மனித நலன் நாடும் மார்க்ஸிய வாதிகள் உணர்ந்து கொண்டே ஆக வேண்டிய காலம் வந்து விட்டது. அதாவது, மனிதனை மையம் கொண் டுள்ள ஒரு தத்துவம். மனித உண்மை நிலையுடன் தொடர்பற்றுப் போகாமல் இருக்கவேண்டும் என்றால், உளவியல் இல்லாத ஒரு தத்துவமாக இதற்கு மேலும் அதனால் நிலைத்திருக்க இயலாது என்பதை அவர்கள் உணர வேண்டும். பின்வரும் பக்கங்களில் மனிதவியல் உளவியல் ஆய்வினால் சரி செய்யப்பட்டுள்ள அல்லது சரி செய்யப்பட வேண்டிய சில பிரதான பிரச்சனைகளை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கு கவனிக்கப் படவேண்டிய முதல் பிரச்சனை ''சமூக குணாம்சம்'' என்பது பற்றியதாகும். இது ஒரு குழுவிற்கு (உ-ம் : நாடு அல்லது வர்க்கம்) பொதுவாக அமைந்துள்ள குணாம்ச உருவாக்க அமைப்பு ஆகும். அக்குழுவின் உறுப்பினர்களின் எண்ணங்கள் மற்றும் செயல்களை இது திறம்பட நிர்ணயிக்கின்றது. இந்தக் கருத்து, ஃப்ராய்டின் குணாம்சம் பற்றிய கருத்தின் ஒரு சிறப்பு வளர்ச்சி ஆகும். குணாம்சத்தின் ஆக்க சக்தியு டன் மாறக்கூடிய இயல்பு இதன் முக்கிய அங்கமாக விளங்குகிறது. குணாம்சம் என்பது பல்வேறுபட்ட



படிப்பகம்

www.padippakam.com



பாலுணர்ச்சி உந்துதலின் தீவிர முயற்சிகளின் ஓரளவு நிலையான வெளிப்பாடு என்று ஃபிராய்டு கருதினார். அதாவது, சில குறிப்பிட்ட ஆதாரங்களிலிருந்து புறப் பட்டு, சில குறிப்பிட்ட இலக்குகளை நோக்கிச் செல்லும் மனோசக்தியின் உந்துதல்களின் வெளிப் பாடுகள் இவை என்று பொருளாகிறது. வாய், மலத்துவாரம் மற்றும் இனப்பெருக்க உறுப்புகள்பற்றி தனது கருத்துகளின் வாயிலாக, மனித குணாம்சங்களில் ஒரு புதிய வகையை ஃபிராய்டு முன் வைத்தார். தனித்தன்மை வாய்ந்த, உத்வேகமுள்ள உந்துதல்களின் வெளிப்பாடுதான் நடத்தை என்று இது விளக்கியது. உடலின் சிற்றின்பப் பகுதிகளாகிய வாய், மலத் துவாரம், மற்றும் இனப்பெருக்க உறுப்புகள் தொடர்பாக, சிறுபிள்ளைப் பருவத்தின் துவக்கத்தில் ஏற்பட்ட அனுபவங்களின் விளைவே இந்த உந்துதல்களின் போக்கும், தீவிரத் தன்மையுமாக உள்ளன என்று ஃப்ராய்டு கருதினார். பாலுணர்ச்சி உந்துதலின் வளர்ச்சிக்கு, உடலமைப்புக் கூறுகளைத் தவிர, ஒருவரது பெற்றோரின் நடத்தையே முதன்மைப் பொறுப்பு வகிக்கின்றன என்றார் அவர்.

சமூகக் குணாம்சம் பற்றிய கருத்தாக்கம், ஒரு குழுவுக்குப் பொதுவான குணாம்ச அமைப்பை உருவாக்கும் அமைப்பைப் பற்றிக் குறிப்பிடுகிறது. உற்பத்தி முறையாலும் அதன் விளைவாக எழும் சமூக மட்டங்களால் உருவாகும் வாழ்க்கை முறையே சமூகக் குணாம்சத்தை உருவாக்குவதற்கு அடித்தளமாக அமை கிறது என்று இக்கருத்து கூறுகிறது. ஒரு குறிப்பிட்ட சமூகம் செயல்படுவதற்குப் பயன்படும் வகையில் அந்த சமூகத்தால் வடிவமைக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மனோசக்தி அமைப்பு தான் சமூகக் குணாம்சம். ஒரு சமூகம் தனது நோக்கங்களுக்காக ஒரு தனி மனிதனின் சக்தியைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கும் வகையில் அவன் செயல்பட வேண்டுமென்றால், சராசரி மனிதன் தான் செய்ய வேண்டிய பணியைச் செய்ய அவன் விரும்ப வேண்டும்.

சமூகச் செயல்முறையில் மனித சக்தியின் ஒரு பகுதி மட்டுமே வெறும் உடல் சக்தியாக வெளிப்படு கிறது. உதாரணமாக, வேலையாட்கள் நிலத்தைப் பண்படுத்துவது அல்லது சாலைகளை அமைப்பது. இதன் மற்றொரு பகுதி மிகக் குறிப்பிட்ட மனோ சக்திகளின் வடிவாக வெளிப்படுகிறது. பிற மக்கள் கூட்டங்களைத் தாக்கி, கொள்ளையடித்து வாழ்க்கை நடத்தும் ஒரு புராதன மக்கள் கூட்டத்தின் உறுப்பினர் ஒருவர், ஒரு போராளிக்கான குணாம்சங்களாகிய போர், கொன்றழித்தல் மற்றும் கொள்ளையடித்தல் இவற்றை வேட்கையுடன் விரும்பும் குணாம்சத்தைக் கொண்டிருக்கவேண்டும். விவசாயத்தில் ஈடுபட்டு அமைதியாக வாழும் ஒரு கூட்டத்தினரோ வன் முறையை விலக்கி, கூட்டுறவை நாடும் குணத்தைக் கொண்டிருக்க வேண்டும். தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களுக்கு அடிபணிந்து போவதுடன் தமது அதிகாரிகளாக உள்ளவர்கள்பால் மரியாதையும், அபிமானமும், அதன் உறுப்பினர்கள் கொண்டிருந் தால்தான் ஒரு நிலப்பிரவுத்துவ சமுதாயம் நன்றாகச் செயல்படமுடியும். உழைப்பதில் ஆர்வத்துடன், கட்டுப்பாட்டுடன், காலந்தவறாமல் செயல்படக் கூடியமனிதர்களுடன் தான் முதலாளித்துவ சமுதாயம் சிறப்பாகச் செயல்பட முடியும். இவர்களது பிரதான நோக்கம் பணவரவு; உற்பத்தி மற்றும் பண்ட மாற்றின் விளைவாக உருவாகக் கூடிய லாபம் தான் இவர்களது வாழ்வின் முதன்மைக் கோட்பாடு. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பணத்தைச் சேமிக்க விரும்பிய மனிதர்கள் முதலாளித்துவத்திற்குத் தேவைப் பட்டனர். இருபதாம் நூற்றாண்டின் நடுவில், பணத்தைச் செலவழிப்பதில் வேட்கை கொண்ட நுகர் வோராக உள்ள நபர்கள் அதற்குத் தேவைப் படுகின் றனர். சமூகச் செயல்முறையில் ஒரு உற்பத்திச் சக்தி யாக அதற்குப் பயன்படக்கூடிய வகையில் மனித சக்தி வடிவமைக்கப்படும் உருவே சமுதாயக் குணம் ஆகும்.

மனிதர்களை செயல்படச் செய்யும் சக்தி கொண்ட கருவிகளாகிய அமைப்பு, சமயம், இலக்கியம், பாடல்கள், நகைச்சுவைத் துணுக்குகள், பழக்க வழக்கங்கள், ஆகியவையும், மேலும் இவை அனைத்திற்கும் பிரதானமாக, தமது பிள்ளைகளை வளர்த்தெடுக்கப் பெற்றோர் பயன்படுத்தும் முறைகளும் என, ஒரு சமுதாயத்திற்குக் கிடைக்க கூடிய அனைத்துக் கருவிகளாலும் சமூகக் குணாம்சம் கூடுதலாக வலிமையூட்டப்படுகிறது. இறுதியாகக் கூறப்பட்ட விஷயம் மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஏனெனில், தனி நபர்களின் குணாம்ச உருவமைப்பு அவர்களது வாழ்வின் முதல் ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் பெருமளவு வடிவமைக்கப்பட்டு விடுகிறது. ஆனால், பெற்றோர்களின் தாக்கம், பிரபல உளவியல் ஆய்வு நிபுணர்கள் நம்புவது போல, தனிப்பட்டதோ அல்லது தற்செயலாக நிகழக்கூடிய ஒன்றே அல்ல. பெற்றோர்கள் அவர்களது சொந்த குணாம்சங்களின் வாயிலாகவும், அவர்களது கற்பிக்கும் முறைகளின் வாயிலாகவும் அவர்கள் பிரதானமாக சமுதாயத்தின் முகவர்களாக உள்ளனர். வெகு சிறிய அளவிலேயே அவர்கள் ஒருவருக் கொருவர் வேறுபடுகின்றனர். மேலும் சமுதாய அளவில் விரும்பப்படுகின்ற வகையிலான சமுதாய குணாம்சங்களை உருவாக்கும் ஒரு அமைப்பை ஏற்படுத்துவதிலான அவர்களது தாக்கத்தைப் பெரும் பாலும் இந்த வேறுபாடுகள் எந்த அளவிலும் குறைப்பதில்லை.

எந்த ஒரு சமுதாயத்திலும் உள்ள வாழ்க்கை முறையினால் சமுதாயக் குணாம்சம் வடிவமைக்கப் படுகிறது என்ற கருத்து உருவாவதற்கான ஒரு நிலை, ஃபிராய்டின் பாலுணர்வு உந்துதல் கோட்பாட்டின் ஒரு மாற்றியமைக்கப்பட்ட வடிவமாகும். குணாம்சம்



படிப்பகம்

www.padippakam.com



பற்றிய அவரது கருத்துக்கு இதுவே அடிப்படையாக உள்ளது. பாலுணர்வு உந்துதல் கோட்பாடானது, பாலுணர்வு உந்துதலை (அதோடு கூட, தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்வதற்கான முயற்சியுடன்) ஒரு சக்தி ஆதாரமாகக் கொண்டு ''இன்பம் தேடும் கொள்கை''யால் ஆளப்பட்டு வரும் ஒரு எந்திரமாக மனிதனைக் கண்ணுறும் எந்திரத் தனமான கருத் தாக்கத்தில் வேரூன்றி உள்ள ஒன்றாகும். இக்கருத் துக்கு மாறாக, முதற்படியாக ஒரு சமூக உயிருருவாக உள்ள மனிதனின் பல்வேறு முயற்சிகளும் (பொருள் களை) சேமிப்பதற்கானதும், மற்றும் (பிற நபர்க ளுடன்) சமூக வயப்படுவதற்கானதுமான அவனது தேவையின் விளைவாக உருவாக்கின்றன என்று காட்ட (குறிப்பாக, 'தனக்காகவே மனிதன்' என்ற நூலில்) நான் முயன்றுள்ளேன். அதோடு கூட, மனிதனின் தலையாய பேரார்வங்களாக அமையும் சேமிப்பு மற்றும் சமூகவயப்படுதலின் வடிவங்கள், அவன் வாழ்ந்துவரும் சமுதாய அமைப்பைப் பொறுத்து உள்ளன என்பதையும் நான் காட்ட முற்பட்டுள்ளேன். இந்தக் கருத்தின்படி, பொருள் களை மனிதர்கள் மற்றும் இயற்கை - நோக்கியுள்ள ஒரு பேரார்வம் கொண்ட தேடும் முயற்சியினாலும், உலகோடு தன்னைத் தொடர்புப்படுத்திக் கொள்ள அவனுக்கு உள்ள தேவையினாலும் தனித்தன்மை பெற்றவனாக மனிதன் பார்க்கப்படுகின்றான்.

மார்க்ஸியத் தத்துவத்தால் போதுமான அளவு விளக்கப்படாத முக்கியக் கேள்விகளுக்கு, சமூகக் குண நலன் பற்றிய கருத்து பதில் அளிக்கின்றது.

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் உறுப்பினர்கள், அந்த அமைப்பின் கீழ் துயருற்ற போதிலும், அதனோடு இணைந்திருத்தல் அவர்களுக்குக் கேடு விளைவிக்கக் கூடிய ஒன்று என்று அவர்களது பகுத்தறிவு கூறியபோதிலும், அவர்களைத் தொடர்ந்து அதனோடு ஒன்றுபட்டு இருக்குமாறு செய்வதில் ஏன் இந்தச் சமுதாயம் வெற்றி பெறுகிறது? பல்வேறு இலட்சிய ரீதியான தாக்கங்களாலும், மூளைச் சலவை யினாலும் உருவக்கப்பட்டுள்ள போலியான நலன் களை விடவும் மனிதர்களாக அவர்களுக்கு இருக்கக் கூடிய உண்மையான ஆர்வம் ஏன் அதிக முக்கியத்துவம் பெறுவதில்லை? அவர்களது வர்க்க நிலைமை மற்றும் சோஷலிஸத்தில் சாதகங்கள் பற்றிய உணர்வு நிலை, ஏன் மார்க்ஸ் எதிர்பார்த்த அளவு திறம்பட அமையவில்லை? இந்தக் கேள்விக் கான பதில், சமுதாய குணநலனின் தன்மையில் பொதிந்துள்ளது. தான் செய்ய வேண்டியதை விரும்பும் வகையில், ஒரு சராசரி நபரின் குணநலன் அமைப்பை வடிவமைப் பதில் ஒரு சமுதாயம் வெற்றி பெற்றுவிட்டால், அந்தச் சமுதாயம் அவன் மீது சுமத்தும் நிலைமைகளோடு அவன் திருப்தி அடைந்துவிடுகிறான். இப்செனின் பாத்திரப்படைப்பு ஒன்று கூறியபடி, ''தன்னால் செய்ய முடிந்ததை மட்டுமே அவன் விரும்புவதால், தான் விரும்பிய எதையும் அவனால் செய்யமுடியும்'' எனவே, அடங்கிக் கிடப்பது பற்றி திருப்தி அடைந் துள்ள ஒரு சமூகப் பாத்திரம், ஒரு குறைபாடுள்ள பாத்திரம் என்பதை நாம் சொல்லத் தேவையில்லை. ஆனால், குறைபாடு உள்ளதோ அல்லதோ, தான் சரியாகச் செயல்படுவதற்கு அடங்கிப்போகும் மனிதர்களே தேவையாக உள்ள ஒரு சமுதாயத்தின் நோக்கத்தை அது நிறைவேற்றுகிறது.

ஒரு சமுதாயத்தின் பொருளாதார அடிப்படைக்கும், ''கொள்கையான மேல் கட்டுமானத்திற்கும்'' இடை யிலான தொடர்பை விளக்குவதற்கும் சமுதாயக் குண நலன் பற்றிய கருத்தாக்கம் பயன்படுகிறது. கொள்கை ரீதியான மேல் கட்டுமானம் என்பது பொருளதார அடிப்படையின் பிரதிபலிப்பேயன்றி வேறு எதுவும் இல்லை என்று மார்க்ஸ் கூறியதாக அடிக்கடி பொருள் படுத்தப்பட்டதுண்டு. இந்த பொருள்படுத்துதல் சரி யல்ல. ஆனால் மார்க்ஸின் தத்துவத்தில், அடித்தளத் திற்கும் மேல் கட்டுமானத்திற்கும் இடையிலான உறவின் இயல்பு போதுமான அளவு விளக்கப்பட வில்லை என்பதுதான் உண்மை. சமுதாயம், சமுதாய குணநலனை உருவாக்குகிறது என்றும், சமுதாய குணநலன், தனக்குப் பொருத்தமான, ஊட்டமளிக்கக் கூடிய கருத்துகளையும் இலட்சியங்களையும் உருவாக் கவும் அவற்றைப் பற்றிப் பிடித்துக்கொள்ளவும் செய்கிறது என்பதையும் ஒரு செயலாற்றல் நிறைந்த உளவியல் கோட்பாட்டால் காட்டமுடியும். எனினும், குறிப்பிட்ட கருத்துகளை உருவாக்கும் ஒரு குறிப் பிட்ட சமுதாய குணநலனை பொருளாதார அடிப் படை மட்டுமே உருவாக்குகிறது என்பதல்ல. கருத்து கள், ஒருமுறை உருவாக்கப்பட்ட பின்னர், சமுதாய குணநலன்களின் மீது பாதிப்பை ஏற்படுத்துகின்றன; மேலும், மறைமுகமாக, சமூகப் பொருளாதார அமைப்பின் மீதும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. சமூகப் பொருளாதார அமைப்பிற்கும், ஒரு சமுதாயத் தில் நிலவிவரும் கருத்துகள் மற்றும் இலட்சியங்களுக்கும் இடையே சமுதாய குணநலன் ஒரு இடைநிலை அம்சமாக உள்ளது என்பதைத் தான் நான் இங்கு வலி யுறுத்துகிறேன். இது இரு புறங்களிலும் இடைநிலை அம்சமாக இருந்து வருகிறது. அதாவது பொருளாதார அமைப்பிலிருந்து கருத்துகளுக்கும், கருத்துகளி லிருந்து பொருளாதார அமைப்பிற்கும் இடையே இருந்து வருகிறது. பின்வரும் திட்டம் இந்தக் கருத்தை வெளிப்படுத்துகிறது.

1. சமுதாய குண நலன்
2. கருத்துகளும், இலட்சியங்களும்
3. பொருளாதார அமைப்பு

ஒரு சமுதாயத்தின் தேவைகளுக்கும், நோக்கங் களுக்கும் வேறு எந்தக் கச்சாப் பொருளையும் போல மனித சக்தியையும் சமுதாயம் எவ்வாறு பயன்



படிப்பகம்

www.padippakam.com



படுத்திக் கொள்கிறது என்பதை சமுதாய குணநலன் என்னும் கருத்தாக்கத்தால் விளக்க முடியும். உண்மையில் இயற்கையின் சக்திகளிலேயே மிகவும் வளைந்து கொடுக்கக் கூடியவன் மனிதன் தான். கிட்டத்தட்ட எந்த நோக்கத்துக்காகவும் அவனை வேலை செய்ய வைக்க முடியும். வெறுத்தொதுக்கவோ அல்லது ஒத்துழைக்கவோ; அடங்கிப் போகவோ அல்லது பொங்கி எழவோ; துன்பத்தையோ அல்லது இன்பத்தையோ ரசித்து அனுபவிக்கவோ, எதை வேண்டுமானாலும் செய்யும்படி அவனை ஆக்க முடியும்.

இவையெல்லாம் உண்மையாக இருக்கும் அதே சமயத்தில் தனது மனித சக்திகளை மலரச் செய்வதால் மட்டுமே தனது உயிர் வாழ்தலின் பிரச்சனையை அவனால் தீர்த்துக் கொள்ளமுடியும் என்பதும் உண்மையாகும். ஒரு சமுதாயம் மனிதனை எத்துணை அதிகமாக ஊனமுற்றவனாகச் செய்கிறதோ, அத்துணை நோயாளியாக அவன் ஆகிறான். உணர்வு ரீதியாக, தனக்கு விதிக்கப்பட்டிருக்கிற விஷயங்கள் பற்றி அவன் திருப்தி கொண்டிருந்த போதிலும், அவன் உணர்வு நிலைக்கு எட்டாத வகையில் அதிருப்தி கொண்டிருக்கிறான். இந்த அதிருப்திதான், தன்னை ஊனப்படுத்தும் சமூக வடிவங்களை மாற்றி அமைக்க காலப்போக்கில் அவனைத் தூண்டுகிறது. அவனால் இதைச் செய்ய முடியவில்லையெனில், குறிப்பிட்ட விதத்தில் நோய்வாய்ப்பட்டுள்ள அவனது சமுதாயம் செத்தழிந்து போகும். பழைய சமுதாய அமைப்புகளுடன் முரண்பட்டுப்போகும் புதிய உற்பத்திச் சக்திகளால் மட்டும் சமுதாய மாற்றமும், புரட்சியும் ஏற்படுவதில்லை. மனிதத் தன்மையற்ற சமுதாய நிலைமைகள் மற்றும் மாற்றமுடியாத மனிதத் தேவைகளுக்கு இடையிலான முரண்பாட்டுக் காரணமாகக் கூட அவை ஏற்படக்கூடும். மனிதனை கிட்டத்தட்ட என்ன வேண்டுமானாலும் செய்யலாம் ஆனால் அதுவும், கிட்டத்தட்டதான்! சுதந்திரத்திற்கான மனிதனின் போராட்டத்தின் சரித்திரம், இந்தக் கோட்பாட்டின் வெகு வலுவான நிரூபணம் ஆகும்.

சமுதாய குணநலன் என்ற கருத்து, பொதுவான ஊகங்களுக்கு இடமளிக்கும் ஒரு தத்துவார்த்த கருத்து மட்டுமல்ல. ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அல்லது சமுதாய வர்க்கத்தில் ஏற்படக்கூடிய பல்வேறு வகையான சமுதாய குணநலன்கள் எவை என்று கண்டறியும் நோக்கத்துடன் கூடிய நடைமுறை ஆய்வு களுக்கும் அது பயனுள்ளதாகவும், முக்கியமான தாகவும் உள்ளது. ''கிராமப்புற உழவன் குணநலன்'' என்பது தனித்தன்மை வாய்ந்தது, சேமிக்கும் குணம் கொண்டது, வீம்புடன், கூட்டுறவில் திருப்தி கொள்ளாமல் இருப்பது, நேரம் தவறாமை மற்றும் காலம் பற்றிய உணர்வு இல்லாதது, என்று நாம் வரையறை செய்தால், இந்தக் குணாதிசயத் தொகுப்பு என்பது பல்வேறு குணாதிசயங்களின் கூட்டுத்தொகுதி அல்ல. மாறாக, அதிக சக்தி கொண்டுள்ள ஒரு கூட்ட மைப்பு ஆகும். இதை மாற்றுவதற்கு முயற்சிகள் ஏதும் செய்யப்பட்டால், வன்முறையாலோ அல்லது மௌனமான தடைகளாலோ அம்முயற்சிகளை இந்தக் கூட்டமைப்பு தீவிரமாக மறுக்கும். பொருளா தார ரீதியிலான சாதகங்கள் கூட சுலபமாக எந்த விளைவையும் இங்கு ஏற்படுத்த இயலாது. ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக கிராமப்புற உழவர் வாழ்வின் குணாதிசயமாக இருந்துவந்துள்ள பொது முறையிலான உற்பத்திமுறை இந்த குணநலனின் அறிகுறித் தொகுதிக்குக் காரணமாகவுள்ளது. இதே போலத்தான், குறைந்து கொண்டு வரும் அடி - நடுத்தர வர்க்கமும் - இது ஹிட்லரை ஆதிக்கத்துக்குக் கொண்டுவந்ததாக இருக்கலாம், அல்லது அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தென்பகுதியில் உள்ள வறிய வெள்ளையினமாக இருக்கலாம். எந்தவித கலாச்சாரத் தூண்டுதலும் இல்லாமல் இருத்தல், தமது நிலைமை பற்றிய வெறுப்புணர்வு, அதாவது, தமது சமுதாயத்தின் முன்னேற்ற அலைகளால் விட்டு விடப்பட்டு பின்தங்கி நிற்கும் நிலை. முன்னாட்களில் தமக்குப் பெருமிதம் அளித்த சின்னங்களை அழித்து விட்டவர்கள் மீதான வெறுப்பு, ஆகியவை இந்த குணநலன் அறிகுறித் தொகுதியை உருவாக்கியுள்ளன. இத்தொகுதியானது. மரணத்தை விழைத்தல் (Necrophilia) இரத்த உறவுகள் மற்றும் மண் இவற்றின் மீதான அதித்தீவிரமான, கடும்பகைமையுடன் கூடிய ஈடுபாடு, மற்றும் வெகு அதீத குழு சார்ந்த சுய காதல் ஆகியவற்றால் உருவாகி யுள்ளது. மேற் கூறப்பட்ட சுய காதலானது தீவிர தேசப் பற்று மற்றும் இனப்பற்று ஆகியவையாக வெளிப்படுகின்றது. ஒரு உதாரணம்: தொழிற்சாலைப் பணி யாளரின் குணநலன் கூட்டமைப்பு, காலந் தவறாமை, ஒழுங்கு, குழுவாகப் பணிபுரியும் திறன் இவற்றைக் கொண்டிருக்கிறது. ஒரு தொழிற்சாலைப் பணியாளர் திறம்படச் செயல்படுவதற்குத் தேவை யான குறைந்த பட்ச குணங்களாக இத்தொகுதி உள்ளது. (பிற வேறுபாடுகளாகிய - சார்புத்தன்மை சுதந்திரப்போக்கு, ஆர்வம் - அலட்சியம், செயலூக்கம் - செயலற்ற தன்மை ஆகியன இங்குக் கவனிக்கப்பட வில்லை. எனினும் ஒரு பணியாளரின் குணநலன் கூட்டமைப்புக்கு இப்போதும் எதிர்காலத்திலும் இவை மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன.)

சமுதாய குணநலன் பற்றிய கருத்தின் மிக முக்கியப் பயன்பாடு என்பது மார்க்ஸ் கனவு கண்டபடியான ஒரு சோஷலிச சமுதாயத்தின் எதிர்கால சமுதாய குணநலனை பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதலாளித்துவ சமுதாய குணநலனி லிருந்து வேறுபடுத்திக் காண்பதில் உள்ளது. முதலாளித்துவ சமதாயத்தின் மைய விருப்பம் சொத்துகளையும் செல்வங்களையும் சொந்தம் கொள்வதில் இருந்தது. இருபதாம் நூற்றாண்டின்



படிப்பகம்

www.padippakam.com



சமுதாய குணநலன் (முதலாளித்துவமோ அல்லது கம்யூனிஸமோ) இன்று மிகவும் அதிகமாகத் தொழில் மயமாக்கியுள்ள சமுதாயங்களில் பரவலாகக் காணப்படும் - ஹோமோ கம்ஸுமென்ஸ் - என்பதிலிருந்து முற்கண்டதை வேறு படுத்திக்காண இது உதவும்.

'நுகர் மனிதன்' ''(ஹோமோ கன்ஸுமென்ஸ்)'' என்ற மனிதனின் பிரதான இலக்கு பொருள்களை சொந்தம் கொள்வதல்ல, மாறாக மேலும் மேலும் அதிகமான பொருள்களைப் பயன்படுத்துவதும், அதன் மூலமாக தனக்குள் இருக்கின்ற வெற்றிடம், செயலறு நிலை, தனிமை மற்றும் பயம் ஆகிய வற்றுக்கு ஈடு செய்வதும் ஆகும். இராட்சத வியாபார மற்றும் தொழில் நிறுவனங்கள், அரசு மற்றும் தொழிலாளர் அமைப்புகள், இவற்றால் தனித்தன்மை பெற்று விளங்கும் ஒரு சமுதாயத்தில், தனது பணிச் சூழலின் மீது எந்தக் கட்டுப்பாடும் கொள்ளவியலாத தனிநபர் சக்தியற்று, தனிமையுடன், சலிப்புற்று, கவலையை உணர்கிறான். அதே நேரத்தில் லாபத்திற்கான பிரம்மாண்டமான நுகர்பொருள் தொழிற்சாலைகள், லாபத்திற்கான தமது தேவையின் காரணமாக, விளம்பரங்களின் வாயிலாக அவனை ஒரு அடக்கமுடியாத வேட்கைகள் கொண்டவனாக மாற்றி விடுகின்றன. எப்போதுமே பாலருந்தும் குழந்தை போல அவன் மேலும் மேலும் அதிகமாக நுகர்வதில் ஈடுபட விழைகிறான். எல்லாப் பொருள்களுமே, சிகரெட்டுகள், மது, பாலுறவு, திரைப்படங்கள், தொலைக்காட்சி, பயணம், ஏன்? கல்வியும், புத்தகங்களும், சொற்பொழிவுகளும் கூட நுகரப்படக் கூடிய பொருள்களாக அவனுக்கு ஆகிவிடுகின்றன. புதிய செயற்கையான தேவைகள் உருவாக்கப்படுகின்றன. மனிதனின் ரசனைகள், சுய லாப நோக்கத்தோடு கையாளப்படுகின்றன. ['நுகர் மனிதனின்' (ஹோமோ கன்ஸுமென்ஸின்) குணநலன் உச்சகட்ட வடிவங்களை எட்டும்போது, இது ஒரு பிரபல மனநோய் வகையாகி விடுகிறது. மனச் சோர்வு மற்றும் கவலை பயம் இவற்றால் பீடிக்கப்பட்டுள்ள பல மன நோயாளிகளும் அதிகமாக உண்ணுதல், அதிகமாக பொருள்களை வாங்குதல், அல்லது மதுவுக்கு அடிமையாதல் ஆகியவற்றில் மறைமுகமாக தமது மனச் சோர்வு மற்றும் கவலைக்கு மாற்று காணவேண்டி நுழைகின்றனர்.] நுகர்வதற்கான பேராசை, அதீத மட்டங்களை எட்டும்போது ''வாய் வழி வாங்கும் குணநலன்'' என்று ஃபிராய்டால் அழைக்கப்பட்டது. இன்றைய தொழில்மயமான சமுதாயத்தில் இன்று பரவலாகத் தென்படக் கூடிய ஒரு பிரதான மனோ சக்தியாக இது ஆகத்தலைப் பட்டுள்ளது. மகிழ்வுடன் இருப்பது போன்ற மாயையில் இருந்த போதிலும், உண்மையில் நுகர் மனிதன் (ஹோமோ கன்ஸுமென்ஸ்) தன் உணர்வின்றியே தனது சலிப்பு மற்றும் செயலற்ற தன்மைகளால் துயருற்றபடியே இருக்கிறான். எந்திரங்களின் மீதான சக்தி அதிகமாக அதிகமாக, ஒரு மனிதன் என்ற முறையில் அவன் சக்தியிழந்து போகிறான். எந்த அளவு அதிகமாக அவன் நுகர்வதில் ஈடுபடுகிறானோ அந்த அளவு அதிகமாக தொழில் அமைப்பு உருவாக்கி வருகின்ற, பெருகிவரும் தேவைகளுக்கு அடிமையாகிப் போகிறான். சிலிர்ப்பு, கிளர்ச்சி இவற்றை மகிழ்ச்சி, சந்தோஷம் என்று தவறாகப் புரிந்து கொள்கிறான். பொருளாதார வசதிகளை, உயிர்ப்போடு இருத்தல் என்று கருதுகிறான். திருப்தி செய்யப்படும் பேராசையே வாழ்க்கையின் பொருளாகி விடுகிறது. அதற்கென தீவிரமாக முயற்சி செய்தல் ஒரு சமயமாகிப் போகிறது. நுகர்வதற்கான சுதந்திரம், மனித சுதந்திரத்தின் சாரமாகிப்போகிறது.

இந்த நுகரும் ஆர்வ எழுச்சியானது மார்க்ஸ் கனவு கண்ட சோசலிஸ சமுதாயத்தின் சர்வ எழுச்சிக்கு நேர் எதிர்மறையானது ஆகும். முதலாளித்துவத்தில் உள்ளார்ந்து இருந்த அபாயத்தை அவர் மிகத் தெளிவாகக் கண்ணுற்றார். மனிதனே உயர்வென்று மதிக்கப்படும் ஒரு சமுதாயம் தான் அவரது நோக்கமாக இருந்தது. அவனிடம் **இருப்பதோ** அல்லது அவன் **பயன்படுத்துவதோ** உயர்வாக மதிக்கப்படும் ஒரு சமுதாயமல்ல. மனிதனின் பொருள்சார்ந்த பேராசையின் தளைகளிலிருந்து அவனை விடுவிக்கவே அவர் விரும்பினார். அந்தப் பேராசையின் அடிமையாக அவன் கட்டுண்டு கிடக்காமல், அதிலிருந்து விடுபட்டு, முழுமையாக விழிப்புற்று உயிர்ப்புற்று, உணர்வுடன் இருக்கவேண்டும் என்று அவர் விரும்பினார். ''மிக அதிகமான எண்ணிக்கையிலான பயனுள்ள பொருள்களின் உற்பத்தியில் மிக அதிகமான எண்ணிக்கையிலான பயனற்ற நபர்கள் உருவாகிறார்கள்'' என்று அவர் எழுதினார். அதீதமான வறுமை, மனிதன் ஒரு முழுமையான மனிதனாவதைத் தடுக்கிறது என்பதால், அதை ஒழிக்க அவர் விரும்பினார். தனது பேராசையின் கைதியாக ஒருவனை ஆக்கக்கூடிய அதீத செல்வச் செழிப்பையும் அவர் தவிர்க்க விரும்பினார். அவரது இலக்கு அதிகபட்ச நுகர்தலாக இருக்கவில்லை. மாறாக, ஒரு முழுமையான, செழிப்பான, வாழ்வுக்கு வழிவகுக்கும் உண்மையான மனிதத் தேவைகளை நிறைவு செய்யக்கூடியதும் வளர்ச்சி வளங்களுக்குப் பெரிதும் துணை நலமானதும் ஆன ஒரு நுகர்தலை எட்டுவதே அவரது இலக்காக இருந்தது.

கம்யூனிஸ்டு நாடுகளின் திட்டமிட்ட பொருளாதாரத்தின் துணையுடன் பொருள்சார்ந்த பேராசையை அவர்களால் கட்டுப்படுத்த இயலும். எனினும், இந்த பொருள்சார்ந்த பேராசை, முதலாளித்துவத்தின் ஆர்வ எழுச்சி இன்று கம்யூனிஸ்டு மற்றும் சோஷலிஸ நாடுகளை வெற்றிகண்டு வருவது சரித்திர ரீதியான முரணான கேலிக் கூத்துகளில் ஒன்றாகும். இந்த வழிமுறைக்கு அதற்கே உரிய வாதப்பொருத்தம்



படிப்பகம்

www.padippakam.com



உண்டு. கம்யூனிஸம் வெற்றி கண்டிருந்த வறிய ஐரோப்பிய நாடுகளுக்கு, முதலாளித்துவத்தின் பொருள்சார்ந்த வெற்றி மிகவும் கவர்ச்சியூட்டி ஆட்கொள்வதாக இருந்தது. சோஷலிஸத்தின் வெற்றி என்பது, முதலாளித்துவத்தின் ஆர்வ எழுச்சியின் **வட்டத்துக்குள்ளேயே** முதலாளித்துவத்தோடு போட்டியிட்டு வெற்றிபெறுவது என்ற அடையாளம் காணப்பட்டது. எனவே, பொருளாதார உற்பத்தியின் வளர்ச்சி அல்லது, மனிதனின் வளர்ச்சியைத் தனது பிரதான இலக்காகக் கொண்டுள்ள ஒரு சமுதாயமாக உருவாகாமல், வறிய நாடுகளில், முதலாளித்துவத்தை விடவும் வேகமாக தொழில் மயமாக்குதலை சாதிக்கக்கூடிய ஒரு அமைப்பாக மதிப்பிழந்துபோகும் அபாயத்தில் சோஷலிஸம் உள்ளது. மார்க்ஸிய பொருள் முதல் வாதத்தின் ஒரு மோசமான திரிபு ஒன்றை ஏற்றுக்கொண்டதன் வாயிலாக, சோவியத் கம்யூனிசமும் முதலாளித்துவ நாடுகளைப் போலவே மனித நலன் நாடும் ஆன்மிகப் பாரம்பரியத்தோடு தொடர்பற்றுப் போனது. இதன் காரணமாக, மேற் கண்ட சோஷலிஸம் மதிப்பிழந்து போகும் அவலம் மேலும் வேகமாக முன்செல்ல ஏதுவாயிற்று. மனித நலன் நாடும் ஆன்மிகப் பாரம்பரியத்தைப் பிரதிநிதிப் படுத்தியவர்களுள் மார்க்ஸ் தனிச்சிறப்பு வாய்ந்த வராகத் திகழ்ந்தார்.

தமது மக்களின் நியாயமான பொருள்சார்ந்த தேவைகளை நிறைவேற்ற வேண்டிய பிரச்சனையை சோஷலிஸ நாடுகள் இன்னமும் தீர்க்கவில்லை என்பது உண்மையே. (அமெரிக்க ஐக்கிய நாடு களிலும் கூட, மக்கள்தொகையில் நாற்பது சதவிகித் தினர் ''வளமான'' நிலையில் இல்லை.) ஆனால், வளர்ச்சி வளங்களுக்கு ஏதுவான நுகர்தல் என்ற இலக்கு, வெகு சுலபமாக உச்சகட்ட நுகர்தலுக்கு மாறக்கூடும் என்ற அபாயத்தினைப் பற்றி சமூகப் பொருளாதார நிபுணர்கள், தத்துவவாதிகள் மற்றும் உளவியல் அறிஞர்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது மிகவும் அதிமுக்கியமான ஒரு விஷய மாகும். சமூகவியல் கொள்கையாளர்களின் பணி இங்கு மனிதத் தேவைகளின் இயல்பு பற்றி ஆய்தலும் மனிதனை மேலும் உயிர்ப்புடனும், உணர்வுடனும் இருக்கச் செய்யக் கூடிய நிஜமான தேவைகளுக்கும், முதலாளித்துவத்தால் உருவாக்கப்பட்டு மனிதனை பலமிழக்கச் செய்து, அவனுக்கு மேலும் சலிப்பூட்டி, செயலற்றவனாக்கி, பொருள்களுக்கான பேராசைக்கு அவனை அடிமைப்படுத்துகின்ற செயற்கையான தேவைகளுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டிற் கான கூறுகளைக் கண்டறிதலும் ஆகும்.

இங்கு நான் வலியுறுத்துவது என்னவென்றால், உற்பத்தி என்பது கட்டுப்படுத்தப்படக்கூடாது, ஆனால், ஒரு தனிநபரின் வளத்துக்குத் துணைபோகும் சரியான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர், உற்பத்தி சக்திகள் சமுதாய நுகர்தலுக்கான வழிமுறை களாகிய பள்ளிகள், நூலகங்கள், அரங்கங்கள், பூங்காக்கள், மருத்துவமனைகள், பொது போக்கு வரத்துச் சாதனங்கள், என இன்னபிறவற்றுக்காகத் திருப்பிவிடப்பட வேண்டும் என்பதுதான். மிகவும் அதிக அளவில் தொழில்மயமாக்கப்பட்டுள்ள நாடு களில் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டே செல்லும் தனிநபர் நுகர்தல் எதைச் சுட்டிக்காட்டுகிறது என்றால், போட்டி, பேராசை மற்றும் பொறாமை ஆகியவை தனிநபர் சொத்தினால் மட்டுமல்லாது, தனிநபர் நுகர்தலினாலும் உருவாக்கப்படுகின்றன என்ற உண்மையைத் தான். ஒரு மனித நலன் நாடும் சோஷலிஸத்தின் இலக்கு முழு மனிதனின் மிக முழுமையான வளர்ச்சிக்குப் பணி செய்யக் கூடிய ஒரு உற்பத்தி முறையைக் கொண்டுள்ள ஒரு தொழில் மயமான சமுதாயத்தை உருவாக்குவதேயன்றி, நுகர் மனிதர்களை (ஹோமோ கன்ஸுமென்ஸ்களை) உருவாக்குவது அல்ல என்ற உண்மையை சமூக வியலாளர்கள் மறந்து விடக்கூடாது. அதாவது, சோஷலிஸ சமுதாயம் என்பது மனிதர்கள் வாழவும், வளரவும் சரியாக வகை செய்யும் ஒரு தொழில் மயமான சமுதாயம் என்ற தெளிவைத் தொலைத்து விடக்கூடாது.

சமுதாய குணநலன்களைப் படித்தறிவதை ஏது வாக்கும் அனுபவ நடைமுறை வழிமுறைகள் உள்ளன. மக்கள் தொகை முழுவதிலும், மற்றும் ஒவ்வொரு வர்க்கத்திலும் இருக்கக் கூடிய பல்வேறு குணநலன் தொகுதிகள், ஒவ்வொரு தொகுதியினுள்ளும் காணப்படும் அம்சங்களின் தீவிரத்தன்மை, மற்றும் வெவ்வேறு சமூகப் பொருளாதார நிலைமைகளால் உருவாக்கப்பட்டுள்ள புதிய அல்லது முரண்பாடான அம்சங்கள் இவற்றைக் கண்டறிவதே இத்தகைய ஆய்வின் இலக்கு ஆகும். இத்தகைய வேறுபாட்டுக் கூறுகள் அனைத்தும், இருக்கக்கூடிய குணநலன் கூட்டமைப்பு, மாற்று வழிமுறைகள் மற்றும் என்ன செயல்பாடுகள் இந்த மாற்றங்களைக் கொண்டு வருகின்றன போன்ற விஷயங்களில் ஒரு நுண்பார்வை ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றன. விவசாயத்தி லிருந்து தொழில்மயமாதலுக்கு மாறிக்கொண்டு வரும் நாடுகளிலும், முதலாளித்துவம் அல்லது அரசு முதலாளித்துவத்திலிருந்து – அந்நியமாகிப் போன தொழிலாளி நிலைமைகளிலிருந்து – நிஜமான சோஷலிஸத்திற்கு மாறிக் கொண்டிருக்கும் பிரச் சனைக்கும் இத்தகைய நுண்பார்வை மிக முக்கியம் என்பதை இங்கே எடுத்துக் கூற அவசியமில்லை. மேலும், இத்தகைய ஆய்வுகள் அரசியல் செயல் பாட்டுக்கு வழிகாட்டிகள் ஆகும். கருத்துச் சேகரிப்பு களின் மூலம் பெறப்படும், மக்களது அரசியல் ''கருத்துகள்'' மட்டுமே எனக்குத் தெரியும் என்றால், அடுத்துவரும் உடனடியான எதிர்காலத்தில் அவர்கள் எவ்வாறு செயல்படக்கூடும் என்பதை நான் அறிவேன். ஆனால், இனவாதம் போர் அல்லது அமைதி சிந்தனை



படிப்பகம்

www.padippakam.com



போன்ற மனோ சக்திகளின் வலிமையைப் பற்றி நான் அறிந்துகொள்ள விரும்பினால் (இவை தற்சமயம் உணர்வு ரீதியாக இன்னமும் வெளிப்படா மல் இருக்கக்கூடும்.) இத்தகைய குணநலன் பற்றிய ஆய்வுகள், சமூக செயல்முறைகளில் செயல்பட்டுக் கொண்டுள்ள உள்ளார்ந்த சக்திகளின் வலிமை மற்றும் போக்கு பற்றி எனக்குத் தெரியப்படுத்துகின்றன. இச்சக்திகள் சிலகாலம் சென்ற பின்னரே தம்மை வெளிப்படுத்திக் கொள்ளக்கூடும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள குணநலன் புள்ளி விவரங்களைப் பெறப் பயன்படும் வழிமுறைகளை விவரமாக விவாதிக்க இங்கே இடமில்லை. இவற்றுக்குப் பொதுவாக அமைந்துள்ள ஒரு அம்சம் என்னவென்றால், உள்ளார்ந்த, பெரும்பாலும் தன்னுணர்வற்ற உண்மை நிலையின் வெளிப்பாடுகளுக்கு மாறாக இலட்சியக் கொள்கை (நியாயப்படுத்துதல்) களை ஏற்றுக்கொள்ளும் தவற்றினைத் தவிர்த்தல் ஆகும். மிகவும் பயனுள்ளதென்று நிரூபணம் ஆகியுள்ள ஒரு முறை, வரையறையற்ற திறந்த கேள்விகளைக் கொண்ட பேட்டிதான் ஆகும். அதில் உள்ள எல்லையற்ற கேள்விகளுக்கு அளிக்கப்படும் பதில்கள் அவற்றில், தன்னை அறியாமல், வெளிப்படுத்தும் நோக்கமின்றி பொதிந்துள்ள பொருளைக் கொண்டு அர்த்தப்படுத்திக் கொள்ளப் படலாம். இவ்வாறு, ''நீ மிகவும் மதித்துப் போற்றும் சரித்திரத் தலைவர்கள் யாவர்?'' என்ற கேள்விக்கு, ஒருவர் ''மகா அலெக்ஸாண்டர், நீரோ, மார்க்ஸ் மற்றும் லெனின்'' என்று பதிலளித்திருக்கையில், மற்றொருவர் ''சாக்ரடீஸ், பாஸ்கல், மார்க்ஸ் மற்றும் லெனின்'' என்று பதிலளித்திருக்கலாம். இங்கு முதலாமவர் சக்தி மற்றும் கண்டிப்பான அதிகாரம் ஆகியவற்றை விரும்புகிறவர் என்றும், இரண்டாமவர் வாழ்விற்கான சேவையில் ஈடுபட்டுள்ளவர்களையும், மனித குலத்திற்கு நன்மை செய்பவர்களையும் மதிக்கிறார் என்றும் ஊகித்து அறியலாம். ஒரு விரிவான, கருத்துக்கு வெளியுருக்கொடுக்கும் கேள்விகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஒரு நபரின் குணநலன் கட்டமைப்பைப் பற்றிய ஒரு நம்பத்தகுந்த வரி வடிவத்தைப் பெற முடியும். விருப்பமான நகைச் சுவைத் துணுக்குகள், பாடல்கள், கதைகள், மற்றும் கவனிக்கத்தக்க நடத்தைகள் - குறிப்பாக, உளவியல் ஆய்வுக்கு வெகுவாகப் பயன்படும் ''சிறிய செயல்கள்'' என, வேறுவிதமான ஒருவரது கருத்துக்கு வெளி உருக்கொடுக்கும் சோதனைகள் சரியான விளைவுகளைப் பெற உதவுகின்றன. வழிமுறைச் செயல்பாட்டின்படி, இந்த அனைத்து ஆய்வுகளின் முக்கியமான நோக்கம் உற்பத்தி முறை மற்றும் அதன் விளைவான வகுப்பு அடுக்கமைப்புகள்; இவை உருவாக்கக்கூடிய மிக முக்கியமான குணநலன் அம்சங்களும் அவற்றின் தொகுதிகளும்; மற்றும் இவ்விரு புள்ளிவிவரத் தொகுதிகளுக்கு இடையிலான உறவுகளும் ஆகும். இவ்வாறு அடுக்காக அமைக்கப் பட்டுள்ள மாதிரிகளின் வாயிலாக, ஓர் ஆயிரம் நபர்கள் மட்டுமே ஆய்வின் விசாரணைக்கு உட்படுத்துவதன் மூலம் ஒரு நாடு முழுவதுமோ அல்லது மிகப்பெரிய சமூக வகுப்புகளுமோ கூட படித்தறியப் படலாம்.

ஆய்வு ரீதியான சமூக உளவியலின் மற்றொரு முக்கிய அம்சம் ஃப்பிராய்டினால் ''உணர்வற்றநிலை'' என்று அழைக்கப்பட்ட ஒன்றாகும். ஆனால் ஃப்பிராய்டு தனி நபர்களின் அடக்கி ஒடுக்கப்பட்ட இயற்கைத் தூண்டல்களைப் பற்றி மட்டுமே அக்கறை காட்டினார். மார்க்ஸிய சோஷலிஸ உளவியலின் மாணவரோ, இதற்கு மாறாக 'சமூக உணர்வற்ற நிலை'' பற்றி அதிக கவனம் செலுத்துவார். பெரிய குழுக்களுக்குப் பொதுவாக உள்ள ஒரு உள்ளார்ந்த உண்மை நிலையை அடக்கி ஒடுக்குவது பற்றி இக்கருத்து கூறுகிறது. ஒவ்வொரு சமுதாயமும், தனது உறுப்பினர்களையோ அல்லது ஒரு குறிப்பிட்ட வகுப்பின் உறுப்பினர் களையோ அவர்களுக்குள் உணர்வற்ற நிலையில் உள்ள சில உந்துதல்களை உணர்ந்து கொள்வதைத் தடுக்க தன்னாலான முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ளவேண்டும். ஏனெனில், அவர்கள் இவற்றை உணர்ந்துகொள்ளும் பட்சத்தில், சமூகரீதியில் ஆபத்தான எண்ணங்கள் அல்லது செயல்களுக்கு அவை அவர்களை இட்டுச் செல்லக் கூடும். எனவே இதற்கான தணிக்கை, அச்சிடப்படும் அல்லது பேசப்படும் வார்த்தைகளின் மட்டத்தில் இல்லாமல், அபாயகரமான விழிப்புணர்வை அடக்கிவைக்கும் மட்டத்திலேயே அதாவது, எண்ணங்கள் உணர்வுநிலையை எட்டுவதைத் தடுக்கும் முறையிலேயே வெகு திறம்பட செய்யப்பட்டு விடுகிறது. சமூக உணர்வற்ற நிலையின் உள்ளடக்கம் சமூக கட்டமைப்பின் பல்வேறு வடிவங்களைப் பொறுத்து வேறுபடுவது இயல்புதான். இவற்றுள் சிலவற்றைக் குறிப்பிட வேண்டுமானால், இதோ சில, வலியத் தடுக்கும் மனச் சலிப்பு இன்னபிற. இந்த அடக்கி வைக்கப்பட்டுள்ள உந்துதல்கள் தொடர்ந்து அடக்கியே வைக்கப்பட வேண்டும்; பின்னர் அவற்றை மறுத்துக் கூறுகின்ற அல்லது அவற்றுக்கு எதிரானவற்றை வலியுறுத்துகின்ற இலட்சியக் கொள்கைகளால் அவை பதிலுக்கு மாற்றியமைக்கப்பட வேண்டும். இன்றைய தொழில்மய சமுதாயத்தின் சலிப்புற்ற, கவலையுடன் மகிழ்ச்சியற்றுக் காணப்படும் மனிதன், தான் மகிழ்ச்சியுடனும், கேளிக்கைகள் நிறைந்தும் இருப்பதாக நினைத்துக் கொள்ள அவனுக்குக் கற்பிக்கப்படுகிறது. கருத்து மற்றும் பேச்சு/ எழுத்துச் சுதந்திரம் மறுக்கப்படும் பிற சமுதாயங்களில், தற்பொழுது அவனது தலைவர்கள் மட்டுமே அந்தச் சுதந்திரத்தின் பெயரால் பேசிக் கொண்டிருந்தபோதும், தான் கிட்டத்தட்ட மிக முழுமையான ஒரு சுதந்திரத்தை எட்டிவிட்டதாக நினைக்கும்படி அவன் கற்பிக்கப்படுகிறான். சில அமைப்புகளில் வாழ்வதன் மீதான விருப்பம்



படிப்பகம்

www.padippakam.com



கட்டுப்படுத்தப்பட்டதற்குப் பதிலாக, சொத்துகளின் மீதான விருப்பம் வளர்க்கப்படுகிறது. மேலும் பிறவற்றில், அந்நியப்படுத்தப்படுதலின் மீதான விழிப் புணர்வு அடக்கி வைக்கப்பட்டு அதற்குப் பதிலாக, ''ஒரு சோஷலிஸ சமுதாயத்தில் அந்நியபடுதலே இருக்கமுடியாது'' என்ற கோஷம் எழுப்பப்படுகிறது.

உணர்வற்ற நிலை என்ற தன்மை பற்றிக் கூறு வதற்கு மற்றொரு வழி, ஹெகல் மற்றும் மார்க்ஸ் இவர்களின் வார்த்தைகளில் பேசுவதாகும். அதாவது, தனது முடிவுகளில் சுதந்திரமாக இருப்பதான ஒரு மாயையை அவன் கொண்டிருக்கும் அதே சமயத்தில், அவனது முதுகுக்குப் பின்னால் வேலைசெய்யும் சக்திகளின் முழுமையைப் பற்றி.... அல்லது ஆதம் ஸ்மித் கூறியபடி, ''தனது நோக்கத்தில் ஒரு பகுதியாக இல்லாத ஒரு விளைவை முன்னேறச் செய்வதற்கென, பொருளாதார மனிதன் ஒரு கண்ணுக்குப் புலப்படாத கையால் செலுத்தப்படுகிறான்''. ஸ்மித்தைப் பொறுத்தவரை இந்தக் கண்ணுக்குப் புலனாகாத கை நன்மை பயக்கும் ஒன்றாக இருந்தது. ஆனால் மார்க்சுக்கும், ஃபிராய்டுக்கும் இது அபாயகரமான ஒன்றாக இருந்தது. இதனைத் திறனிழக்கச் செய்யவேண்டுமென்றால் இதை வெளிப்படுத்தியே ஆக வேண்டியிருந்தது. உணர்வுநிலை என்பது ஒரு சமூக நிகழ்வு. மார்க்ஸைப் பொறுத்த அளவில் அது பெரும்பாலும் ஒரு போலி யான உணர்வு நிலையாக, அடக்குமுறையின் சக்தி களால் உருவானதாக இருந்தது. உணர்வற்ற நிலை யும், உணர்வு நிலையைப் போன்றே, பெரும்பாலான நிஜமான மனித அனுபவங்களை உணர்வற்ற நிலையி லிருந்து உணர்வு நிலைக்கு மேலேறி வர அனுமதிக் காத ''சமூக வடிகட்டியால்'' நிர்ணயிக்கப்படுகின்ற ஒரு சமூக நிகழ்வு ஆகும். இந்தச் 'சமூக வடிகட்டி' பிரதானமாக மொழி, தர்க்கவாதம் மற்றும் சமூகக் கட்டுப்பாடுகளைக் கொண்டது. உள்ளார்ந்த நிலை யில் தனிமனித அனுபவத்தில் உண்மை என்று உணரப் படுகின்ற, ஆனால் நிஜத்தில் சமூதாயத்தால் உருவாக் கப்பட்டு, அனைவராலும் பகிர்ந்து கொள்ளப்படும் புனை கதைகளாக உள்ள இலட்சியக் கொள்கை களால், (நியாயப்படுத்துதல்களால்) இந்தச் சமுதாய வடிகட்டி மூடிப்போடப்பட்டு உள்ளது. உணர்வு நிலை மற்றும் அடக்கு முறையை இவ்வாறு அணுகு வதன் முலம், ''சமூக உயிர்வாழ்தல் உணர்வு நிலையை நிர்ணயிக்கின்றது'' என்ற மார்க்ஸியக் கூற்றின் உண்மையை அனுபவ ரீதியாக நிரூபித்துக் காட்டமுடியும்.

இந்த சிந்தனைகளின் ஒரு தொடர்விளைவாக, கொள்கைப் பிடிவாதம் கொண்டுள்ள ஃபிராய்டு மற்றும் மார்க்ஸியம் சார்ந்த உளவியல் ஆய்வுகளுக் கிடையே உள்ள மற்றொரு கருத்து ரீதியான வேறு பாடு உருவாகிறது. பாலுணர்வு ரீதியான அடக்கு முறைக்கான மிகவும் திறன் வாய்ந்த காரணம் – இவற்றுள் மிகவும் முக்கியமாக அடக்கப்படுபவை முறை தவறிய பாலுணர்வு ஆசைகள் – விதையறுப்பு பற்றிய அச்சம் என்று ஃபிராய்டு கருதினார். இதற்கு மாறாக, தனிநபராகவும் சமூக ரீதியாகவும், மனிதனின் மகத்தான அச்சம் தனது சக மனிதர்களிடமிருந்து முழுமையாகத் தனிமைப்படுத்தப்படுதல், முழுமை யாக வெளியே ஒதுக்கப்படுதல் என்று நான் கருது கிறேன். மரணம் பற்றிய அச்சம்கூட, இதைவிடக் கொள்வதற்கு எளிதானது. ஒதுக்கப்படுவது என்ற அபாய அச்சுறுத்தலின் வழியாக சமுதாயம் தனது அடக்குமுறைக்கான தேவைகளை வலியுறுத்திச் செயல்படுத்துகிறது. சில குறிப்பிட்ட அனுபவங் களின் இருப்பை நீங்கள் மறுக்கவில்லை என்றால், நீங்கள் இங்கு ஏற்றுக்கொள்ளப் படமாட்டீர்கள். நீங்கள் எங்குமே ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்றால், மனநிலை பாதிக்கப்படும் அபாயத்திற்கு நீங்கள் உள்ளாகிறீர்கள். (மனநிலை பாதிக்கப் பட்டிருத்தல் என்ற நோயின் அம்சம் வெளியில் உள்ள உலகத்தோடு எந்தவிதத் தொடர்பும் இல்லாதவாறு இருத்தல் என்பது தான்.)

மனிதனின் முதுகுக்குப் பின்னால் இருந்து கொண்டு வேலை செய்வதும், அவனை வழி நடத்துவதும் பொருளாதார சக்திகளும் அவற்றின் அரசியல் பிரதிநிதித்துவங்களும் என்று மார்க்ஸிஸ்டுகள் வழக்கமாக யூகித்துக் கொண்டுள்ளனர். இது ஒரு வெகு குறுகிய கருத்தாக்கம் என்று உளவியல் ஆய்வுகள் காட்டுகின்றன. சமுதாயம் மனிதர்களால் ஆனது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும், மிகப்பழமை யானது துவங்கி மிக முன்னேற்றமானது வரையில் அதித வேட்கையுடன் கூடிய முயற்சிகளுக்கான உள்ளார்ந்த, இன்னமும் செயல்படாத சக்தி உள்ளது. இந்த மனித செயல்பாட்டுக்கான சாத்தியப்பாடுகள் முழுமையும் ஒவ்வொரு குறிப்பிட்ட சமுதாயத்திற்கே உரித்தான பொருளாதார மற்றும் சமூக சக்திகளின் தொகுப்பால் வடிவமைக்கப்படுகின்றன. இந்தச் சமூகத் தொகுப்பின் சக்திகள் ஒரு குறிப்பிட்ட சமூக உணர்வற்ற நிலையையும், ஆரோக்கியமான மன வளத்துடன் கூடிய மனித செயல்பாட்டுக்கு அத்தி யாவசியமான சில குறிப்பிட்ட மனிதத் தேவை களுக்கும் (உதாரணமாக, ஒரு குறிப்பிட்ட அளவு சுதந்திரம், தூண்டுதல், வாழ்வில் ஆர்வம், மகிழ்ச்சி) அடக்குமுறை அம்சங்களுக்கும் இடையே சில குறிப்பிட்ட முரண்பாடுகளையும் உருவாக்குகின்றன. உண்மையில், நான் முன்பே கூறியபடி, புதிய உற்பத்தி முறைகளால் மட்டும் அல்லாது, மனிதஇயல்பின் அடக்குமுறைக்கு உட்பட்ட பகுதியிலும் கூட புரட்சிகள் ஏற்படுகின்றன. மேலும், இந்த இரண்டு நிலைமைகளும் ஒன்று சேரும்போது மட்டுமே அவை வெற்றியடைகின்றன. அடக்குமுறையானது, அது தனிநபர் சார்ந்தாயினும், அல்லது சமூக ரீதியாகக் கட்டுப்படுத்துவதாயினும், மனிதனை விகாரப்படுத்து



படிப்பகம்

www.padippakam.com



கிறது, துண்டுபடுத்துகிறது. அவனது முழு மனிதத் தையும் பெறவிடாமல் அவனை இழப்புக்கு ஆளாக்கு கிறது. உணர்வு நிலை என்பது ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தால் நிர்ணயிக்கப்படுகின்ற ''சமூக மனிதனை'' பிரதிநிதிப்படுத்துகிறது. உணர்வற்ற நிலையோ, நம்முள் உள்ள பிரபஞ்சம் தழுவிய மனிதனை, நல்லதும் அல்லதுமாகிய, முழுமையான மனிதனை பிரதிநிதிப்படுத்துகிறது. டெரன்ஸ் கூறியதாகிய ''மனிதன் அல்லாத எதுவும் எனக்கு அன்னியமானது என்று நான் நம்புகிறேன்'' என்ற வாச கத்தை அந்த முழுமையான மனிதன் நியாயப்படுத்து கின்றான். (மார்க்ஸுக்கு மிகவும் பிடித்தமான வாசகம் இதுவாக இருந்தது)

மார்க்ஸிய தத்துவத்தில் ஒரு மைய அங்கம் வகிக் கின்ற ஒரு பிரச்சனைக்கு ஆழமான உளவியலும் ஒரு பங்களிப்பு அளிக்கிறது. இதற்கான ஒரு திருப்தி யளிக்கும் தீர்வை மார்க்ஸ் கண்டறியவே இல்லை. இந்தப் பிரச்சனை, மனிதனின்சாரம் மற்றும் இயல்பு பற்றியதாகும். ஒரு புறம், ''மனிதனின் சாரம்'' போன்ற இயற்பியல் கடந்த, சரித்திர ரீதியில் அல்லாத ஒரு கருத்தைப்பயன்படுத்த விரும்பவில்லை- குறிப் பாக 1844-ம் ஆண்டுக்குப்பின்னர், அவர் இதைச்செய்ய விரும்பவில்லை. மேற்சொன்ன கருத்து, பல்லாயிரம் ஆண்டுகளாக, பல ஆட்சியாளர்களாலும், தாம் ஒவ்வொருவரும் ''மாற்ற இயலாத மனித இயல்பு'' என்று அறிவித்தவற்றுக்கு ஏற்ப தமது விதிமுறை களும் சட்டங்களும் இருந்தன என்பதை நிரூபிக்கப் பயன்படுத்தி வந்துள்ளதாகும். மற்றொரு புறம், ஒவ்வொரு கலாச்சாரமும் தனது பாடத்தை எழுது கின்ற ஒரு வெள்ளைத்தாளாக மனிதன் பிறக்கிறான் என்ற தொடர்புவழி கண்ணோட்டத்தை மார்க்ஸ் எதிர்த்தார். இது உண்மையாயிருப்பின், ஒரு குறிப் பிட்ட சமுதாயம் உறுப்பினர்களை வலுக்கட்டாய மாகத் தள்ளுகின்ற வாழ்க்கை முறைகளுக்கு எதிராக மனிதன் எவ்வாறு கிளர்ச்சி செய்யமுடியும். ஊனமுறச் செய்யப்படக்கூடிய ஒரு மிகச்சரியான மனித இயல் பின் மாதிரி பற்றிய கருத்தை மார்க்ஸ் கொண்டிருக்க வில்லையென்றால் ''ஊனமுற்ற மனிதன்'' என்ற கருத்தை அவர் எவ்வாறு (மூலதனத்தில்) பயன்படுத்தி யிருக்க முடியும்? உளவியல் ஆய்வின் அடிப்படையி லான ஒரு கேள்வி, ''மனிதனின் சாரம்'' என்று எதுவுமே கிடையாது என்ற ஊகத்தில் அடங்கியுள்ளது. அதாவது, சரித்திரம் முழுமைக்கும் மாறாமல் ஒரேமாதிரி இருக்கக்கூடிய ''பொருள்'' என்ற அர்த்தத்தில் எதுவுமிருக்கமுடியாது. இதற்கான பதில், எனது கருத்துப்படி, கீழ்க்கண்ட உண்மையில் உள்ளது - அதாவது மனிதன் இயற்கையிலே இருப்பதற்கும் அவனது விருப்பமின்றியே உலகத்துள் தூக்கியெறியப்பட்டு, ஒரு விபத்துபோல தற்செய லாக ஏதோ ஓர் இடத்திலும் காலத்திலும் தூக்கி எறியப் பட்டு அதே சமயத்தில் அவனிடம் உள்ளுணர்வுக்கான கருவிகள் இல்லாததாலும், தன்னைப் பற்றியும், பிறரைப் பற்றியும், கடந்த காலத்தைப் பற்றியும், நிகழ்காலத்தைப் பற்றியும் அவனிடம் உள்ள விழிப்புணர்வினாலும் இயற்கையைத் தாண்டி அப்பால் செல்லுவதற்கும் இடையே உள்ள முரண் பாட்டில்தான் மனிதனின் சாரம் அடங்கியுள்ளது. இவ்வாறு இயற்கையின் ஒரு வினோதப் பிறவியாகிய மனிதன், ஒரு புதிய வகையிலான ஒற்றுமையை கண்டுகொள்வதன் மூலம் தனது முரண்பாட்டுக்குத் தீர்வு கண்டால் ஒழிய, தாங்கமுடியாத அளவு தனிமையை அவன் உணர்வான். மனிதனின் உயிர் வாழ்தலில் உள்ள அடிப்படை முரண்பாடு இந்த முரண்பாட்டிற்கான தீர்வைத் தேடும்படி அவனை உந்தித்தள்ளுகிறது. அவன் பிறக்கும் தருணத்தில் வாழ்க்கை அவனைக் கேட்கும் கேள்விக்கு பதிலைத் தேடும்படி தூண்டுகிறது. ஒற்றுமையைக் கண்டறிவது எவ்வாறு என்ற கேள்விக்கு நிச்சயப்படுத்திக்கொள்ளக் கூடிய ஆனால் ஒரு வரையறைக்குட்பட்ட பதில்கள் பல உண்டு. மனிதனுக்கே உரிய (பகுத்தறிவு அன்பு) ஆகியவற்றை விடுவதன் மூலம் விலங்கு நிலைக்கு மீண்டும் பின்னோக்கிச் செல்வதன் வாயிலாக, ஒரு அடிமையாகவோ அல்லது அடிமைப்படுத்துபவ னாகவோ இருப்பதன் மூலம், தன்னை ஒரு பொரு ளாக மாற்றிக்கொள்வதன் மூலம் அல்லது தனது சகமனிதர்களுடனும், இயற்கையுடனும் ஒரு புதிய ஒற்றுமையைக் கண்டுகொள்ளும் வகையில் தன்னிட முள்ள தனிச் சிறப்பான மனித சக்திகளை வளர்த்துக் கொண்டு ஒரு சுதந்திரமான மனிதனாவதன் மூலம் மனிதன் ஒற்றுமையைக் கண்டறியலாம். தளைகளி லிருந்து சுதந்திரம் பெறுவதோடு மட்டுமின்றி தன்னிடம் அடங்கியுள்ள ஆற்றல்கள் அனைத்தையும் வளர்த்தெடுப்பதைத் தனது வாழ்வின் இலக்காக ஆக்கிக்கொள்ளவும் சுதந்திரம் பெறலாம். இந்த மனிதனின் உயிர் வாழ்தலே அவனது சொந்த உருவாக்கும் முயற்சியின் விளைவாக இருக்கும். மனிதனிடம் முன்னேற்றத்துக்கென உள்ளார்ந்த தீவிர முயற்சி ஏதும் இல்லை. ஆனால் முன்னேற்றத்தின் ஒவ்வொரு மட்டத்திலும் மீண்டும் மீண்டும் எழுகின்ற பிரச்சனையாகிய, தனது உயிர் வாழ்தலின் முரண் பாட்டைத் தீர்க்க வேண்டிய தேவையின் கட்டாயத் தால் அவன் தள்ளப்படுகிறான். இந்த முரண்பாடு - அல்லது வேறு வார்த்தைகளில் கூறுவதானால், மனிதனின் வேறுபட்ட மற்றும் முரண்பட்டுத் தோன்றும் சாத்தியப்பாடுகள் - அவனது சாராம்சத்தை உருவாக்குகின்றன.

சுருக்கமாகக் கூறுவதானால், மார்க்ஸிய சிந்த னையினுள் இயக்கவியல் ரீதியிலானதும், மனிதநலன் நாடுவதுமான உளவியல் ஆய்வை ஒரு முக்கியக் கண்ணோட்டமாகப் புகுத்துமாறு இக்கட்டுரை கோருகிறது. மார்க்ஸியத்திற்கு இத்தகைய உளவியல் தேவை எனவும், உண்மையான மார்க்ஸிய தத்துவத்தை உளவியல் ஆய்வு உள்ளடக்கிக் கொள்ள வேண்டும் என்றும் நான் கருதுகிறேன். இத்தகைய ஒரு ஒருங்கிணை தல் இரு துறைகளையும் வளம் பெறச்செய்யும்.

*தமிழில் : ஜார்ஜினா பீட்டர்.*



படிப்பகம்

www.padippakam.com



# முதலாளியப் பல்கலைக்கழகத்தின் மாறிவரும் பாத்திரம்

எர்னஸ்ட் மேண்டல்

கடந்த 25 ஆண்டுகளில் மேற்குலகில் பல்கலைக் கழகத்தின் செயல்பாடானது படிப்படியாக மாறி வந்திருக்கிறது. இந்த நிகழ்முறையில் பல்கலைக் கழகமானது ஒரு திட்டமிடப்பட்ட சமூக மாற்றத்தின் இலக்காக அல்லாமல் அதன் கருத்தாவாகவே பெரு மளவுக்கு இருந்து வந்திருக்கிறது. இந்த மாற்றத்தை, ***''முதலாளிய உற்பத்தி முறையின் வரலாற்றில் இரண்டாம் கட்டத்திலிருந்து மூன்றாம் கட்டத்துக் கான நிலைமாற்றம்''*** என்ற சூத்திரமாக தொகுத்துக் கூற முடியும். அல்லது சுருக்கமாக, ***'புது முதலாளி யத்தின் உதயம்'*** எனலாம்.

முதலாளியத்தின் முந்திய இரு கட்டங்களின் போதும், ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த அறிவாற்றல் மிக்க மகன்களுக்கும், ஓரளவு மகள்களுக்கும் கூட, தேவையான பாரம்பரிய கல்வியை வழங்குவதும், தொழில்துறையையும் தேசத்தையும் காலனி நாடு களையும் படையையும் திறமுடன் நிர்வகிப்பதற்கு அவர்களைத் தகுதியானவர்களாக ஆக்குவதுமே பல்கலைக்கழகத்தின் முதன்மையான செயல்பாடாக இருந்தது.

குறிப்பிட்ட வரிசைக்கிரமத்தில் சிந்திக்கப் பயிற்று வித்தல், சுயமாக படித்து புலமை பெறுவதற்கான முறைகளை ஊக்குவித்தல், சமூகவாழ்வின் எல்லாப் பகுதிகளையும் சேர்ந்த ''மேட்டுக்குடி''களுக்கு இடை யிலும் ஒரு பொதுவான பண்பாட்டுப் பின்னணியையும் அந்த பின்னணியை அடிப்படையாகக் கொண்ட முறைசாரா இணைப்புகளையும் வகுத்தமைத்தல் ('பழைய பள்ளித் தொடர்பு' முறை), இதுதான் மிகப் பெரும்பான்மையான மாணவர்களுக்கு பல்கலைக் கழகக் கல்வி ஆற்றிய முதன்மையான பாத்திரமாக இருந்தது.

சிறப்புத் தேர்ச்சிகளுக்கான தொழில்முறைப் பயிற்சி ஒரு துணை விளைவாகவே கிடைத்தது. இயற்கை அறிவியல்களிலும் கூட பொதுவாக தூய கோட்பாட்டுக்கே முக்கியத்துவம் தரப்பட்டது. நடைமுறையில் உயர்கல்விக்கு நிதி ஒதுக்கப்பட்ட முறையானது ஆளும் வர்க்கத்துக்கு ''அறிவின் மீது ஒரு ஏகபோக அதிகாரத்தை'' அளித்தது. பெரும் பாலான பல்கலைப் பட்டதாரிகள் உண்மையில் தொழில்ரீதியில் சுயேச்சையானவர்களாகவே இருந் தார்கள், சுதந்திர தொழில்களில் பங்காளிகளாக இருந்தார்கள்; வணிகர்களாக இருந்தார்கள்; அல்லது சுயேச்சையான பணிநிலைகளில் இருப்போருடன் நேரடியாகத் தொடர்புள்ளவர்களாக இருந்தார்கள்.

இவை எல்லாவற்றையும் அடியோடு மாற்றி விட்டிருக்கிறது புது முதலாளியம். புது முதலாளி யத்தின் இரு அம்சங்கள் சேர்ந்து இந்த மாறுதலை ஏற்படுத்தி உள்ளன:

*1.* தொழில் துறையிலும் விரிவடைந்து வரும் அரசு யந்திரத்திலும் தொழில்நுட்ப சிறப்புத் தேர்ச்சி கொண்ட தொழிலாளர்களுக்கான கிராக்கி.

*2.* உயர் கல்விக்கான தேடல் அதிகரித்து வருவதை ஈடுகட்டும் தேவை. வாழ்க்கைத் தரம் உயர்ந்து செல்வதன் விளைவாக நடுத்தர வர்க்கம், அரசு அலுவலர்கள், மூளை உழைப்பாளிகள், ஓரளவுக்கு தேர்ச்சியுற்ற உடல் உழைப்பாளிகள் கூட சமுதாய முன்னேற்றத் துக்கு ஒரு வழியாக இந்த உயர்கல்வியைத் தேட ஆரம்பித்தார்கள்.

இப்பவும் நாம் பார்த்துக் கொண்டிருக்கும் இந்த பல்கலைக்கழகப் பெருக்கமானது, இவ்வாறு அறிவு உழைப்பாளிகளுக்கான தேவை பலமாக அதிகரித் துள்ளதையும் அதற்குக் குறையாமல் அவர்களின் வரத்து அதிகரித்துள்ளதையுமே பிரதிபலிக்கிறது.

பல்கலைக்கழகமோ இதற்கு தயாராயிருக்க வில்லை. உயர்கல்வியின் உள்ளடக்கத்தைப் பொறுத்தும் தயாராக இல்லை. அதன் பொருள்வகை உள்கட்டு மானம், அதன் நிர்வாக அமைப்பு ஆகியவற்றைப் பொறுத்தும் தயாராக இல்லை. புது முதலாளியத்தின் தேவைகளைச் சமாளிக்க பல்கலைக் கழகம் தவறிய தானது, உலகளாவிய மாணவர் கிளர்ச்சிக்கான காரணங்களில் ஒன்றென சரியாகவே கணிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் ஆளும் வகுப்பின் இந்த தேவைகளுக்கு ஒத்துப் போகுமாறு பல்கலைக்கழகங் களை அது கட்டாயப்படுத்த முடியும் என்பது நம் சமுதாய அமைப்பின் இயல்பிலேயே இருந்தது.

தொழில்நுட்ப மேலாண்மையின் அடிப்படை யில் பல்கலைக் கழகத்தை சீர்திருத்துவது என்பது, பாரம்பரிய முறையிலான பல்கலைக்கழகத்திலிருந்து தொழில்நுட்ப மேலாண்மைக்கான பல்கலைக்கழக மாக அதை உருமாற்றுவது என்பது, புது முதலாளிய சூழலில் தவிர்க்க முடியாததாயிருந்தது.

தம்மை இப்படி தகவமைத்துக் கொள்ள இன்றைய பல்கலைகள் தவறிவிட்டதற்கு ஒரு எதிர் வினையாகவே மாணவர் கிளர்ச்சி கிளம்பியுள்ளது. அது மட்டுமல்ல, அதேநேரத்தில் புதுமுதலாளியத்தின் தேவைகளுக்கும் ஆர்வங்களுக்கும் இந்த தகவமை தலை ஏறக்குறைய முற்றிலுமாக கீழ்ப்படுத்துவதன் அடிப்படையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மிகவும் வெற்றிகரமான முயற்சிகளுக்கு ஒரு எதிர் விளைவாகவும்தான் மாணவர் கிளர்ச்சி வெடித்துள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



பெரிதும் தொழில்நுட்ப - அறிவியல் புரட்சி என அழைக்கப்படும் இந்த மூன்றாவது தொழில் புரட்சிக்கும் (அறிவு உழைப்பாளிகளுக்கான தேவை அதிகரித்து வருவதற்கும்) தொழில்நுட்ப மேலாண்மை கொண்ட பல்கலைச் சீர்திருத்தத்துக்கும் இடையிலான தொடர்பு வெளிப்படையானது. தொழில்துறை, உற்பத்தி, மற்றும் வேலை நிகழ்முறையின் உள்ளேயும் கூட அறிவு உழைப்பானது மீண்டும் மிகப் பெரிய அளவில் ஒருங்கிணைத்துக் கொள்ளப்பட்டிருப்பதி லேயே மூன்றாம் தொழில் புரட்சியானது குறிப் பிடத்தக்க அளவுக்கு வேறுபட்டுத் தெரிகிறது. மின்னணு வல்லுநர்கள் தானியங்கி முறையில் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதும் கண்காணிப்பதும் இதையே குறிக்கிறது.

ஆக, பல்கலைக்கழக பட்டதாரிகளுக்காக உண்மையிலேயே ஒரு 'தொழிலாளர் சந்தை' வளர்ந்து கொண்டிருக்கிறது. ஐக்கிய அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் ஜப்பானிலும் இருக்கும் முக்கியமான பல்கலைக் கழகங்களின் ஒவ்வொரு புதிய வகுப்பி லிருந்தும் பட்டம் பெற்று வருவோரை திறமைக் குழுக்கள் கொத்திக் கொண்டு போகின்றன. இதே செய்முறைதான் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் அதிகமதிகம் அறிமுகப்படுத்தப்பட்டுக் கொண்டிருக் கிறது. 200 ஆண்டுகளாக உடலுழைப்பாளர்களின் கூலி அளவைக் கட்டுப்படுத்தி வந்துள்ள வரத்து - தேவை விதியே அறிவு உழைப்பாளிகளின் ஊதியத்தையும் நிர்ணயிக்கிறது.

இவ்வாறு அறிவு உழைப்பை பாட்டாளிய மயமாக்கும் ஒரு நிகழ்முறை இன்று நடைபெற்று வருகிறது. பாட்டாளி மயமாக்கம் என்பதன் உண்மையான பொருள், வரம்புக்குட்படுத்தப்பட்ட நுகர்வோ அல்லது வாழ்க்கைத் தரக் குறைவோ அல்ல (சில சந்தர்ப்பங்களில் இந்த பொருளுக்கு அறவே வாய்ப்பில்லை); மாறாக, அதிகரித்து வரும் அந்நிய மாதல், மனிதர்களின் சிறப்புத் திறன்களுடனோ, அவர்களின் அகத்தேவைகளின் நிறைவுடனோ எந்த நேர்பொருத்தமும் இல்லாமல் போய்விட்டிருக்கிற நிர்ப்பந்தங்களுக்கு உழைப்பானது அதிகரித்த அளவில் அடிமைப்பட்டிருத்தல் என்பதே அதன் பொருள்.

பெரும் தொழில் குழுமங்களுக்குத் தேவைப் படும் வல்லுநர்களைப் பயிற்றுவிக்கும் கடமையை பல்கலைக்கழகம் செயல்படுத்த வேண்டுமானால் உயர் கல்வியானது ஒரு செயல்பாட்டுத் திசையில் சீர்திருத்தப்பட்டாக வேண்டும். பயன்படு நடைமுறை அறிவியலைப் புறக்கணித்து அதனிடத்தில் கோட் பாட்டு அறிவியலுக்கு பல்கலைக்கழகங்கள் அதிகப் படியான முக்கியத்துவம் அளித்தது. பிரிட்டனின் மொத்த தேசிய உற்பத்தியின் வளர்ச்சி மந்தமடைந்த தற்கான காரணங்களில் ஒன்று என்று பொருளியல் வளர்ச்சி குறித்த வல்லுநர்கள் 'கண்டுபிடித்திருக் கிறார்கள்'.

நடப்புத் தேவைகளுக்குப் பொருத்தமானதாக உயர்கல்வியை மாற்றி அமைக்கும் உந்துதல் எல்லா வழியாலும் ஊக்குவிக்கப்பட்டு வரும் அதேபோது, நீண்ட காலப் போக்கில், முன்பே முடிவு செய்யப் பட்டு விட்ட துறைகளில் (''தூய பொருளியில்'' துறையிலும் கூட) மேற்கொள்ளப்படும் ஆய்வை விட தூயகோட்பாட்டு ஆய்வே அதிகப் பயன்விளைப் பதாக இருக்கிறது என்பதை, பெரும் ஏகபோகங்களின் அறிவாற்றல் மிக்க ஆண்டைகளும் ஒத்துக் கொள் கிறார்கள்.

தனியார் தொழிலகங்களின் அல்லது அரசுத் துறைகளின் குறிப்பான திட்டங்களுக்கு கல்வியும் கல்வித்துறை ஆய்வும் கீழ்ப்படுத்தப்படும் போது பல்கலைக்கழகத்தின் செயல்பாட்டு மயமாக்கம் அளவு கடந்து நெருக்கப்படுகிறது. (உயிரியல் ஆயுதங்கள் குறித்த ஆய்வில் சில பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்கப் பள்ளிகள் இழுத்து விடப்பட்டிருப்பது இங்கு நினைவுக்கு வருகிறது; அதுபோலவே ஏதாவது ஒரு காலனி நாட்டின் உள்நாட்டுக் குழப்பங்களைச் சமாளிப்பதற்கான போர் விளையாட்டுகளில் ஈடுபடுத் தப்படும் சில அமெரிக்கப் பள்ளிகளும் நினைவுக்கு வருகின்றன.)

ஆனால் இந்த அதீதமான உதாரணங்களை உள்ளவாறே புரிந்து கொள்ள வேண்டும். அதாவது இவை அதீதமான உதாரணங்களே தவிர எவ்விதத் திலும் செயல்மயமாக்கத்தின் இயல்பான தன்மை அல்ல. ஆயின் செயல்மயமாக்கமே தொழில்நுட்ப மேலாண்மை கொண்டதாகத் திருத்தப்படும் பல்கலைக் கழகத்தின் சாராம்சமாகும்.

அறிவு உழைப்பின் அளவுக்கதிகமான சிறப்புத் துறை மயமாக்கம், செயல்பாட்டு மயமாக்கம், பாட்டாளி மயமாக்கம் ஆகியவையே உழைப்பின் அந்நியமாதல் அதிகரித்து வருவதன் புறவயமான வெளிப்பாடாக உள்ளன. மேலும் அந்நியமாதல் பற்றிய அகவய உணர்வு ஒன்று வளர்ந்து செல்வ தற்கும் தவிர்க்க முடியாதவாறு அவை இட்டுச் செல் கின்றன. தங்கள் சொந்த வேலையின் உள்ளடக்கம் மற்றும் முன்னேற்றத்தின் மீது தங்களின் கட்டுப் பாட்டை இழந்து போகிற உணர்வு உடலுழைப்பாளி களிடையே இருப்பது போலவே இன்று நிபுணர்கள் எனப்படுவோரிடையிலும் (பல்கலைக்கழக பட்ட தாரிகளிடையில் உட்பட) பரவலாகக் காணப்படுகிறது.

பல்கலைக்கழகத்தின் யதேச்சதிகாரக் கட்ட மைப்பு குறித்த எதிர்ப்புணர்வுடன் சேர்த்து மேற் சொன்ன அந்நியமாதல் குறித்து மாணவர்களிடையில் காணப்படும் எதிர்பார்ப்பும் மாணவர் கிளர்ச்சியைத் தூண்டி விடும் ஒரு முக்கியமான உந்துவிசையாக இருக்கிறது.

அறுபது ஆண்டுகளுக்கு முன்னிருந்த சமூக ஒழுங்கைக் குறித்து வழங்கப்பட்ட பழமைவாத அல்லது தாராளவாத சமாதானங்கள் அனைத்தும் அன்று பெரிதும் ஏற்கத்தக்கவையாகவே இருந்தன. ஏனென்றால் அமைப்பின் நிலைப்புத் தன்மை அரிதாகவே அன்று கேள்விக்குள்ளாக்கப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com



அதிகபட்சம், சமூகப் புரட்சி என்பது வளர்ச்சிக் குறைவான நாடுகளின் நிகழ்ச்சி நிரலிலேயே இருந்தது. மேற்கைப் பொறுத்தவரையோ அது ஒரு தெளிவற்ற தொலைதூர இலக்காகவே தெரிந்தது.

அதன் பின் நிகழ்ந்துவிட்ட இரண்டு உலகப் போர்கள், ஏராளமான சமூக-பொருளாதார நெருக்கடிகள் மற்றும் பல்வேறு புரட்சிகளும் இந்த பார்வையை பெரிதும் மாற்றி உள்ளன. முதல் உலகப் போருக்கு முன்பு இருந்ததைவிடவும் தற்போதைய சமூக ஒழுங்கானது குறைந்த நிலைப்புத் தன்மையையே கொண்டுள்ளது. இந்த காரணத்தால்தான் முதலாளிய அறிவுஉழைப்பின் செயல்பாடானது இப்போதெல்லாம் முதன்மையாக கோட்பாட்டு ரீதியான சமாதானமாக இல்லை மாறாக; குறிப்பான சில நெருக்கடிகளை சமாளிப்பதற்கான நடைமுறை ரீதியான சீர்திருத்தமாகவும் தலையீடாகவுமே உள்ளது.

ஆனால் இதே காரணங்களுக்காகவே, முதலாளிய அமைப்பை கோட்பாடு, செயல்பாடு ஆகிய இரண்டு நிலைபாடுகளிலும் பல்கலைக்கழகத்தில் இருந்தபடி எதிர்ப்பது என்பது, கடந்த காலத்தைவிட இன்று அதிக எளிதாக ஆகியிருக்கிறது. இன்று இந்த அமைப்பானது தனக்குத் தானே ஆதாரமாயுள்ள ஒரு யதார்த்தமல்ல, மாறாகப் பல்வேறு மாற்று சாத்தியப்பாடுகளில் ஒன்று மட்டுமே என்று பார்க்கப்படுகிறது.

எனவே மாணவர் இயக்கத்தைத் தாண்டிவிட்டுள்ள மூன்று முனை கொண்ட சிறப்புச் சூழ்நிலைகள் நம்முன் உள்ளன. ஒரு கண்ணோட்டத்தில், தற்போதுள்ள சமுதாயத்தின் மீதான அதிருப்தி அதிகரித்து வருகிறது, இந்தச் சமுதாயம் நெருக்கடியில் இருக்கிறது என்பதை உள்ளபடியே யாராலும் மறுக்க முடியாது. பல்கலைக்கழகத்தில் யதேச்சதிகாரமான முறையில் நிறைவேற்றப்பட்டு மாணவர்கள் மீதும் பெரிய அளவில் திணிக்கப்படும் புது முதலாளிய சீர்திருத்தம் இந்த நோய்க்கூறான நிலைமையை அதிகப்படுத்த மட்டுமே முடியும்.

இன்னொரு கண்ணோட்டத்திலிருந்து பார்த்தால், மரபார்ந்த விமர்சன கட்டமைப்புகளும் – அதாவது இடது அரசியல் கட்சிகளும் – எல்லாவற்றுக்கும் மேலாக தொழிலாளர் இயக்கமும், தற்போது நிலவும் சமுதாயத்தைத் தீவிரமான முறையில் எதிர்க்கும் தம் கடமையை செய்வதை நிறுத்தி விட்டுள்ளன; அதற்கான காரணங்களைப் பற்றி இங்கு நான் விரித்துரைக்க முடியாது.

விமர்சனத் தன்மை கொண்ட மாணவர்களுக்கு, இன்றுள்ள கட்டமைப்புகளை தீவிரமாக எதிர்க்கவும் எதிர்கொள்ளவும் இவற்றுக்குள் எந்த வாய்ப்பும் புலப்படுவதில்லை. ஆகவே அவர்கள் கட்சிகள், பாராளுமன்றம், சூழ்ச்சித்திறத்துடன் கையாளப்படும் தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றுக்கு வெளியில் அதை சாதிக்க முயல்கிறார்கள். ஆனால் சமுதாயத்தை தாமே நிலைமாற்றுவதற்கான வெகுசன அல்லது சமுதாய பின்பலம் அவர்களுக்கு இல்லை. எனவே ஒரு முன்மாதிரியை உருவாக்கும் பொருட்டு அத்தகைய ஒரு சமூகப் புரட்சியை போலச் செய்வதுடன் தம் நடவடிக்கையை அவர்கள் மட்டுப்படுத்திக் கொள்கிறார்கள். ஒருவித பாவனைக் காட்சி அளவிலேயே இது நின்று விடுகிறது.

சில முற்போக்கு மாணவர்களுக்கு இந்த பாவனைக் காட்சியானது ஒரு வழிமுறையாக இருப்பதற்குப் பதில் அதுவே முடிவான காரியமாக ஆகி விடுகிறது. இவ்வகையில் அவர்களின் முற்போக்கு சொற்சாலம் எல்லாம் இருந்தும், அளவு கடந்த உழைப்புப் பிரிவினையின் அடிப்படையில் அமைக்கப்பட்ட ஒரு சமுதாயத்தில் மிகவும் இயல்பாக நடக்கக் கூடிய ஒரு நிலைமைக்கு அவர்கள் பலியாகிறார்கள். அதாவது ஒரு சார்பான, எனவே பொய்யான, உணர்வு நிலைக்கு பலியாகிறார்கள்.

வேறுசில தீவிரவாத மாணவர்கள் பகுத்தறிவு பூர்வமாக செயல்பட முயற்சி மேற்கொள்கிறார்கள். அதாவது தொழிலாளி வர்க்கத்துக்கு வேறொரு விதத்தில் ஒரு முன்மாதிரியாக இயங்க அவர்கள் முனைகிறார்கள். பரந்துபட்ட உழைக்கும் மக்களிடையில் ஒரு பெருவெடிப்பைத் தொடங்கி வைக்கும் வெடிப்பியாக செயல்படப் பார்க்கிறார்கள். இது யதார்த்தமல்லாத ஒரு நிலைபாடு அல்ல என்பதை 1968 மேயில் பிரான்சில் நடந்த நிகழ்ச்சிகள் நிரூபித்துள்ளன.

*ஆனால் அரசியல் ரீதியாகக் கல்வியூட்டப்பட்டதும் அமைப்பு ரீதியாக அணி திரட்டப்பட்டதுமான உழைக்கும் வர்க்கத்தின் புரட்சிகர முன்னணிப் படைக்கு ஈடான ஒரு பதிலியாக ஒரு மாணவர் எழுச்சி ஆகிவிட முடியாது என்பதையும் அந்த நிகழ்ச்சிகள் காட்டின.*

ஆக, இன்றைய பல்கலைகள் எதிரெதிரான இரண்டு நெருக்குதல்களுக்கு இடையில் மாட்டிக் கொண்டுள்ளன என்று தோன்றுகிறது. ஒருபுறத்தில் ஆளும் வர்க்க நலன்களுக்காக, தொழில்நுட்ப மேலாண்மைக்கான சீர்திருத்தம் வெளியிலிருந்து உள்ளே வலிந்து புகுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. மறுபுறத்தில் பல்கலைக்கழகங்களின் உள்ளிருந்து ஒரு புரட்சிகர அறைகூவல் எழுந்து கொண்டிருக்கிறது. ஆனால் சமுதாயத்தின் பிற பிரிவினரிடையில் அதற்கு ஆதரவு இல்லாததால் அது கற்பனா வாதத்திலும் ஆற்றலழிந்த நிலையிலும் அழுந்திக் கிடக்கிறது.

இந்த இரண்டும் கெட்ட நிலையிலிருந்து வெளியேற ஏதாவது வழி இருக்கிறதா? மாணவர்களும் – பொதுவாக 'அறிவுஜீவிகளும் – இப்போது நிலவும் பகுத்தறிவற்ற, மனிதத்தன்மையற்ற சமூக ஒழுங்குக்குள் (சமூக ஒழுங்கினத்துக்குள் என்பது இன்னும் பொருத்தமாகலாம்!) தம்மை இணைத்துக்கொள்வது அல்லது தனிநபர்களாகவோ சிறு குழுக்களாகவோ நடத்தும் நம்பிக்கைக்கு இடமற்ற கிளர்ச்சித் தோரணைகளில் கலந்து கொள்வது என்ற தெரிவு மட்டுமே உள்ளவர்களாக சபிக்கப்பட்டிருக்கிறார்களா?



படிப்பகம்

www.padippakam.com



தனது மிக முக்கியமான அக முரண்பாடுகளுக்குத் தீர்வு காண புது முதலாளிய சமுதாயத்துக்குள்ள திறன் பற்றிய ஒரு அபிப்பிராயம் மேற்படி கேள்விக்கான பதிலில் தொக்கி நிற்கிறது. மார்க்யூசுக்கும் அவரைப் போன்றவர்களுக்கும் மாறாக, நாம் பின்வரும் நிலைபாட்டிலிருந்து தொடங்குகிறோம். அதாவது உற்பத்தி நிகழ்முறையில் மூலதனத்துக்கும் கூலி உழைப்புக்கும் இடையிலான முரண்பாடே புது முதலாளிய கட்டத்திலும் சரி, அதற்கு முந்திய கட்டங்களிலும் சரி முதலாளிய சமுதாயத்தின் மிக முக்கியமான முரண்பாடு ஆகும் என்பதே நம் நிலைப்பாடு ஆகும்.

எனவே போகப்போக தொழிலாளிகள் புது முதலாளியத்துடன் ஒத்துப்போக முடியாது என்பது நமக்கு தெளிவாகத் தெரிகிறது. ஏனென்றால் முதலுக்கும் உழைப்புக்கும் இடையிலான அடிப்படை முரண்பாடு எபபோதும் திரும்பத் திரும்ப மேலெழவே செய்யும். நுகர்வு துறைக்குள்ளும் இந்நிலை ஏற்பட்டாலும் ஏற்படாவிட்டாலும், இதே கதிதான்.

அதுவும் தவிர, தொழில் மயமாக்கப்பட்டிருக்கிற மேல்நாடுகளில், தேசிய வருமானத்தை கூலிகளுக்கும் லாபங்களுக்கும் இடையில் எந்தெந்த விகிதங்களில் பங்கு பிரிப்பது என்னும் கேள்விகளில் இருந்து; என்ன பொருள் உற்பத்தி செய்யப்பட வேண்டும், எந்த முறையில் அது உற்பத்தி செய்யப்பட வேண்டும், அதை உற்பத்தி செய்வதற்கான உழைப்பானது எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட வேண்டும் போன்ற வற்றை தீர்மானிப்பது யார் என்னும் கேள்விக்கு, வர்க்கப் போராட்டத்தின் ஈர்ப்பு மையமானது - மெதுவாக ஆனால் உறுதியாக – இடம் பெயர்ந்து கொண்டிருக்கிறது.

நடைபெறப் போகும் நிகழ்ச்சிகளால் நம் நிலைபாடு உறுதி செய்யப்படுமானால் (பிரான்ஸ், இத்தாலி, பிரிட்டன் ஆகிய மூன்று முக்கியமான மேலைநாடுகளின் தொழிலகங்களில் கடந்த 2, 3 ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கும் பெரும் பாலான நிகழ்ச்சிகள் உண்மையில் அதை உறுதி செய்துள்ளதாகவே தோன்றுகின்றன) பின், இங்கே குறிப்பிடப்பட்ட இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைமையானது, திட்டமிடப்பட்ட சமூக மாற்றத்தில் பல்கலையின் பங்கு என்ன என்ற கேள்வி குறித்து சொல்லக்கூடிய அனைத்தையும் சொல்லிவிட வில்லை என்றாகும்.

இந்த இருதலைக்கொள்ளி நிலையிலிருந்து விடு பட ஒரு வழி இருக்கிறது. எப்படி என்றால் சமுதா யத்தை அடிப்படையிலேயே மாற்றி அமைக்கும் உள்ளாற்றலைக் கொண்ட ஒரு சக்தி இன்னமும் நிலவவே செய்கிறது. புது முதலாளியத்தின் செயல்மய மாக்கம் என்னும் பொறியில் தான் மாட்டிக்கொள் வதற்கு அச்சக்தி இடம் கொடுக்காதபோது, சமகால பல்கலைக்கழகமும் தன் இருதலைக்கொள்ளி நிலை யின், வெற்றிக்கு வாய்ப்பற்ற கலகம் என்ற மறுதலையி லிருந்து தப்பிக்க முடியும்; பல்கலைக்கழகம் ஒரு நிசமான புரட்சியின் தொட்டிலாக விளங்க முடியும்.

இந்த வாதத்துடன் ஒரு எச்சரிக்கையையும் கையோடு நாம் சேர்த்து வைத்து விட வேண்டும்: 'பல்கலைக்கழகம்' என்று நாம் பேசும்போதெல்லாம் அதன் மாணவர்கள் - ஆசிரியர்கள் ஆகிய அனை வரையும் சேர்த்தே குறிப்பிடுகிறோம்; பல்கலைக் கழகம் என்ற நிறுவனத்தை அல்ல.

ஒரு நிறுவனம் என்ற வகையில் பல்கலைக்கழக மான தற்போதுள்ள சமூக கட்டமைப்புடன் சேர்த்துக் கட்டப்பட்டுள்ளது. சமுதாயத்தின் உபரி மதிப்பானது கூட்டுமயப்படுத்தப்படாத வரை, அதாவது ஒரு முதலாளிய சமுதாயத்தில் நாம் வாழ்ந்து வரும் வரை, இறுதி ஆய்வில் மாணவர்களும் பேராசிரியர்களும் (பல்கலை) ஊழியர்களும் தாமே எந்த பல்கலைக் கழகத்துக்கும் நிதி போட்டு நடத்திவிட முடியாது.

நீண்ட காலப்போக்கில் ஒரு நிறுவனம் என்னும் வகையில் பல்கலைக்கழகம் ஆளும் வகுப்பின் அதிகாரத்துடன் தங்கச் சங்கிலிகளால் பிணைக்கப் பட்டதாகவே இருக்கிறது. சமுதாயத்தையே ஒரு தீவிரமான முறையில் திருத்தி அமைக்காத வரை பல்கலையும் எந்த ஒரு நீடித்த புரட்சிகர மாற்றத் துக்கும் உள்ளாக முடியாது.

ஆனால் ஒரு கல்வி நிலையம் என்ற வகையில் பல்கலைக் கழகத்துக்குச் சாத்தியப்படாதது, தனியாட்கள் மற்றும் குழுக்கள் என்ற வகையில் மாணவர்களுக்கு சாத்தியப்படும். மேலும் தனியாட்கள் மற்றும் குழுக்கள் என்ற வகையில் மாணவர்களுக்கு சாத்தியப் படுவது, ஒட்டுமொத்த மட்டத்தில் பல்கலைக்கழகம் முழுவதற்குமே ஒரு தற்காலிக சாத்தியமாக உருவாக முடியும்.

சமுதாயத்தின் புத்தாக்கத்துக்கு மாணவர்களின் பங்கு ஒரு உந்து விசையாக, தொடங்கிவிடும் ஆற்ற லாக விளங்க முடியும் என்னும் கருத்து ஒன்றும் புதியதுமல்ல. எப்படியும், மார்க்ஸ் - லெனின் - பிடல் காஸ்ட்ரோ ஆகியோரே உடல் உழைப்பாளிகள் அல்ல, அறிவு உழைப்பாளிகள்தான் என்றே மதிப் பிட்டாக வேண்டும்.

மறுபடியும் நவீன தொழிலாளிய இயக்கத்தின் முன்னோடிகளாகத் தொடங்கி தொழிலாளி வர்க் கத்துக்குள் முதலாளிய எதிர்ப்புப் புரட்சிகர சோசலிச உணர்வைப் பரப்புவது என்பது மாணவர்களுக்கும் அறிவுத் துறையினர்க்கும் முக்கால் நூற்றாண்டுக்கு முன் சாத்தியமானது போலவே இன்றும் அவர்களுக்கு அது சாத்தியமாகக் கூடியதே. (ஆனாலும் இன்று) இந்தப் பணியானது கூடுதல் கடினமானதாகவே இருக் கிறது. ஏனெனில் இந்த முயற்சி மேற்கொள்ளப் படுவது இது முதல் தடவை அல்ல என்பதுடன், தோல்விகளும் ஏமாற்றங்களும், பரந்துபட்ட உழைப் பாளி மக்களின் உணர்வில் ஒரு மலை போன்ற சுமையாக அழுத்திக் கொண்டுள்ளது.



படிப்பகம்

www.padippakam.com



இருந்தாலும், பழைய தலைமுறையை விட இளைய தலைமுறையைச் சேர்ந்த உடலுழைப்பு மற்றும் அறிவு உழைப்புத் தொழிலாளிகள் இந்த அவநம்பிக்கை உணர்வால் அதிகமாக பாதிக்கப்படு வதில்லை என்பதற்கு பல அடையாளங்கள் உள்ளன. மேலும், மாணவர்களுக்கும் இளம் தொழிலாளர் களுக்கும் இடையில் தொடர்புகள் வளர்க்கப்படவும் முடியும், பல மேல்நாடுகளில் வளர்க்கப்பட்டி ருப்பதைப் போல. தொடக்க இடர்ப்பாடுகளை தாண்டிவிட்டால் பணி தன்னாலேயே 19ஆம் நூற்றாண்டில் இருந்ததை விடவும் அதிக எளிதானதாக ஆகிறது; ஏனெனில் புறநிலைமைகள் முன்னைக்கு இன்று அதிக முதிர்ச்சி யடைந்து காணப்படுகின்றன.

கோட்பாட்டு உற்பத்தியின் விளைச்சலான அறிவியல் அறிவையே எல்லாவற்றுக்கும் முதலாவ தாக இளம் தொழிலாளிகளுக்கு பல்கலைக்கழகம் சொல்லித்தர வேண்டி உள்ளது. தம் தசைகளையும் அடித்தொண்டைகளையும் தொழிலாளிகளுக்கு வழங்குவதற்காக வெறும் கைகளுடனும் காலியான மண்டைகளுடனும் தொழிலாளிகளிடத்தில் செல்ல விரும்பும் சில மாணவர்களின் சுயதுன்பத்தில் இன்பம் காணும் கவர்ச்சி அரசியலைப் போல பாமரத்தன மானது பலனளிக்காதது வேறு எதுவுமில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக தொழிலாளிகளுக்கு தேவைப்படுவது அறிவு, நடப்பு சமுதாயம் பற்றிய ஒரு தீவிர விமர்சனம், தொடர்பு சாதனங்கள் முன் வைக்கும் அனைத்து பொய்களையும் அரை உண்மை களையும் முறைப்படி அம்பலப்படுத்தல் ஆகியவையே.

வெகுமக்கள் புரிந்து கொள்ள முடிகிற வகையில் இந்த அறிவை வார்த்தைகளில் வெளியிடுதல் அவ்வளவு எளிதல்ல. பகட்டாரவார உரைவீச்சும் பண்டிதமணி களின் விளங்கா நடையும், பாமர கவர்ச்சி அரசியலைப் போலவே பயனற்றவையே. ஆனால் வெகுசன மயப் படுத்தும் வேலை, மெய்யான அறிவை உட்செரித்துக் கொண்ட பிறகே வருகிறது. கடைசியாகச் சொன்ன இந்த அரங்கில்தான் நிசமாகவே தீவிர விமர்சன தன்மை கொண்ட ஒரு பல்கலைக்கழகமானது இன்றைய சமுதாயத்தை மாற்றி அமைப்பதில் முதன்மையான பங்களிப்பு ஆற்ற முடியும். இன்று நிலவும் ஒட்டுமொத்த சமூகம் பற்றிய ஒரு விமர் சனத்தை வழங்க அதனால் முடியும். அத்துடன், அதிக முற்போக்கானதாகவும், உண்மையான அக்கறையும் அறிவும் பொருந்தியதாகவும், நடப்பு விவரங்களின் பெருமளவை ஒருங்கே உருத்திரட்டிக் கொள்வ தாகவும், இயங்கும் சமுதாயத்தின் சில பகுதிகள் பற்றிய விமர்சனத்தையும் அதனால் வழங்க முடியும்.

இப்படிப்பட்ட பெரும்பணிக்கான அடிப்படைத் தகவல்கள் கிடைப்பது, அன்றாடம் தொழில்தேடி பிழைப்பு நடத்த வேண்டிய நிலையிலிருக்கும் வெகு சனத்தை விட மாணவர்களுக்கும் பல்கலை வாணர் களுக்கும் ஆயிரம் மடங்கு அதிக எளிது. அடிப்படைத் தகவல்களைச் சேகரிப்பதிலும் பரிசீலிப்பதிலும் இன்றைய பல்கலைக் கழகம் ஈடுபடும்போது, அது சுயவிமர்சனத்தையும் சமூக மாற்றத்தையும் நோக்கி நடைமுறையில் ஒரு அடி எடுத்து வைப்பதாக இருக்கிறது.

சமுதாயத்தை அடியோடு மாற்றி அமைப்பதற்கு பல்கலைக்கழகம் செய்ய முடியக்கூடிய மிக முக்கியமான பங்களிப்பு - குறைந்தது தொடக்கத்தி லாவது - கோட்பாட்டு உருவாக்கப் பணியே என்பதை நாம் எல்லோரும் சொல்லி இருக்கிறோம். ஆனால் அது தூய கோட்பாட்டு உருவாக்கத்துடன் தன்னை மட்டுப்படுத்திக் கொள்ள தேவையில்லை. நடை முறை அனுபவ பயன்பாட்டுக்கு அல்லது அனுபவ நடைமுறை ஆய்வுக்கு ஒரு பாலமாகவும் அது பங்காற்ற முடியும்.

மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் அளவுக்கு, அவர்களின் எதிர்ப்பு பரந்ததாக இருக்கும் அளவுக்கு, கோட்பாட்டையும் நடைமுறையையும் ஒன்றிணைப்பதற்கான வாய்ப்புகளும் அதிக விரிவா னதாக ஆகின்றன. அந்நியமாக்கப்பட்ட உழைப்பு என்ற பிரச்சினையைப்பற்றி பெருமளவான இலக்கிய சான்றுகள் நம்மிடம் உள்ளன. அதன் 90 வீதத்தை கற்றுணர்ந்த தத்துவர்களும் சமூகவியலாளர்களும் பொருளியல் அறிவர்களும் எழுதியுள்ளனர். 10 வீதத்தை சுயமாக படித்துக்கொண்ட தொழிலாளர் களே எழுதியுள்ளனர். ஒருசில மதவாதிகளும், இந்த சிக்கலைப்பற்றி ஏற்கனவே தமக்கு இருக்கும் கோட்பாட்டு அறிவுடன், தொழிலாளர்களிடமிருந்து பெறப்படும் நடைமுறை அனுபவத்தை பின்இணைப் பாக சேர்க்க முயற்சி செய்திருக்கிறார்கள்.

மருத்துவம், உடலியல், உளவியல் ஆகிய வற்றில். பணியாற்றும் மாணவர்கள் அத்தகைய பரி சோதனைகளை ஏன் ஒரு நவீன தொழில் நிறுவனத்தில் பெரிய அளவில் தம் சொந்த அனுபவங்களுடன் பொருத்திப் பார்க்கக் கூடாது? விமர்சனத் தன்மை கொண்ட மாணவர்கள் தம் உண்மையான தொழில்ரீதி சிறப்புத் தேர்ச்சியுடன், சமூக நிகழ்வுகளை முழுமை யாக கிரகித்துக் கொள்ளவும் செய்தால், தம் சொந்த அனுபவங்கள் மூலம் அதை மேலும் வளப்படுத்திக் கொண்டால், அந்நியமாக்கப்பட்ட யந்திரத்தனமான உழைப்பாலும் தொடர்ந்து அதிகரித்துச் செல்லும் உழைப்பின் கடுமையாலும் ஏற்படும் அலுப்பு - சலிப்பு என்னும் பிரச்சனையை, நேர்க்காட்சி வாத மருத்துவர்களைவிட சிறப்பாக பரிசீலிக்க அவர்களால் முடியும்.

ஆனால் இது பல காட்டுகளில் ஒன்று மட்டுமே. வெகுசன தொடர்பு சாதனங்களை, சமரசத்தை உருவாக்குவதற்கான கருவிகள் என்பதிலிருந்து சமுதாயத்தை விமர்சிப்பதற்கான கருவிகளாக மாற்றி அமைப்பதை சரிநுட்பமாக பரிசோதித்துப் பார்க்க முடியும், இது மிகுந்த பயன்விளைப்பது என்பதை உறுதி செய்ய முடியும். ஆர்ப்பாட்டம் பற்றிய திரைப்படங்களை ஒடுக்குமுறைக்கு சாதகமாக பயன்படுத்துகிறது போலீஸ். பயிற்சி நோக்கத்துடன் /



படிப்பகம்

www.padippakam.com

தொழில்சாரா நோக்கத்துடன் எடுக்கப்படும் முற்போக்குப் படங்களை, ஒடுக்குமுறைக்கு எதிராக தம்மை தற்காத்துக் கொள்வதற்கு ஆர்ப்பாட்டக் காரர்களைப் பயிற்றுவிப்பதற்கும் பயன்படுத்த முடியும். (இத்தகைய படங்களை தயாரிக்க முடியக் கூடியவர்கள் பல பத்தாயிரம் பேர் இன்று இருக் கிறார்கள்).

இன்று நிலவும் ஒடுக்குமுறைக் கூட்டமைப்பு களை அம்பலப்படுத்தவும் உழைக்கும் மக்களின் சுய விமோசனத்தை விரைவுபடுத்தவும் உதவும் ஒரு கருவியாக இன்றைய தொழில்நுட்பத்தை கணக்கற்ற பல்வேறு வழிகளில் நாம் பயன்படுத்த முடியும். இந்த இடத்தில் எல்லா அறிவுத் துறைகளையும் சார்ந்த மாணவர்களுக்கும் பல்கலை உறுப்பினர்களுக்கும், இன்னும் தொடப்படாத - சவாலான ஒரு பொறுப்புக் கான வாய்ப்பு இருக்கிறது. இதற்குத் தேவையான முதல் தகுதி: கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும் இடையிலான முரண்பாட்டுக்குத் தீர்வு காண்பதை நீங்களே உங்களிலிருந்தே தொடங்குங்கள் என்பதே.

இதில் உருவாகிறது சமூகத்தின் அடிப்படை மாற்றத்துக்கு பல்கலைக்கழகம் வழங்க முடியக்கூடிய இன்னொரு முக்கியமான பங்களிப்பு. ஒரு நிரந்தர நிறுவனம் என்ற முறையில் பல்கலைக்கழகமானது ஆளும் வர்க்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட தாகவே இருக்கிறது. ஆனால் எங்கெல்லாம் ஒட்டு மொத்த பல்கலைக்கழகத்தின் தன்னாட்சிக்கான போராட்டமானது ஒரு தற்காலிக தடைநீக்கத்தை நிகழ்த்துமளவுக்கு வாய்ப்புடையதாக அமைகிறதோ அங்கெல்லாம் கொஞ்சகாலத்துக்கு பல்கலைக்கழகம் அனைத்து மக்களுக்கும் 'தன்னாட்சியைக் கற்பிக்கும் ஒரு பயிற்சிப் பள்ளி'யாக மாறுகிறது. 1968 மே-யில் பாரீசில் உள்ள சோர்போன் பல்கலைக்கழகத்தில் இதுதான் நடந்தது. 1970 மே-யில் சிக்காகோவில் நடந்ததும் இதுதான். இன்று பல இடங்களிலும் நடைபெறுவதும் இதுவே. இந்த காட்டுகள் எல்லாம், வாய்ப்பிலும் கால அளவிலும் மிகுந்த வரம்புடைய தாகவே இருந்தன. ஆனாலும் சாதகமான சூழ்நிலை களின்கீழ் இத்தகைய காட்டுகளின் ஈர்ப்பாற்றலே பரந்துபட்ட உழைக்கும் மக்களுக்கு மிகுந்த நம்பிக்கை அளிப்பதாக விளங்க முடியும்.

ஒரு குறிப்பிட்ட பொருளில், 'திட்டமிடப்பட்ட சமூக மாற்றத்தின்' மையமான பிரச்சினையே இது தான்: யாருக்காக திட்டமிடப்படுகிறது, யாரால் திட்டமிடப்படுகிறது என்பதுதான் பிரச்சனையே. கலாசாலைகளிலும், அவ்வாறே தொழிற்சாலை களிலும் இருக்கக்கூடிய ஜனநாயக சுயநிர்வாகத்தின் எதிரிகளுடைய வாதம், தகுதி-திறமை என்பதை முன்னிறுத்துகிறது. திறன்மிகு தலைவர்களாகவும் 'திறன் குறைந்த' தொழிலாளர்களாகவும் சமுதாய மானது பிரிந்துள்ளது என அவர்கள் பார்க்கிறார்கள். இறுதி முடிவெடுக்கும் உரிமையை, அதிகாரத்தை தலைவர்கள் தம் கைகளிலேயே தக்க வைத்துக் கொள்வதை நியாயப்படுத்தும் விதத்திலான தகுதி - திறமை அவர்களிடம் இருக்கிறதா என்னும் கேள்வி ஒருபுறம் இருக்கட்டும்; பெரிதாகக் கூறப்படும் இந்தத் தகுதி - திறமையை (குறைந்தது சமுதாயத்துக்காவது) கிடைக்கும் பலன்களுடன் ஒப்பிடும்போதெல்லாம், அதுபற்றி நாம் ஐயங்கொள்ளப் போதிய காரணங்கள் கிடைக்கவே செய்கின்றன.

இருந்தாலும் இந்த கருத்தாக்கத்துக்கு எதிரான முடிவான வாதம், அத்தகைய ஒரு மதிப்பீட்டுத் தீர்ப்பால் பாதிக்கப்படுவதில்லை. கணிணியின் வளர்ச்சியோடும் பல்கலையின் செயல்பாட்டு மயமாக்கத்தோடும் சேர்ந்து ஒரு புதுமுறை எழுந்து வருகிறது. இதில், பொருளியல் அதிகாரத்தின் - பொருளியல் அதிகாரக் குவிப்பின் விசைகளை கட்டுப் படுத்துவதும் அதற்கிணையான பயங்கர அளவில் குவியும் தகவல்களைக் கையகப்படுத்தும் ஏகபோக மயமாக்கத்தின் வளர்ச்சியும் கைகோர்த்துச் செல் கின்றன.

அறிவியல் அறிவானது மென்மேலும் கூடுத லான சிறப்புத் துறைகளாக பிரிந்தும் பின்னப்பட்டும் போகிற அதேபோது மொத்த அதிகாரத்தையும் தகவல் களையும் சமூகத்திலிருக்கும் அதே சிறுபான்மையே தன் கிடுக்கிப்பிடியில் வைத்துக் கொண்டுள்ளது. இதனால் விரிவுபடுத்தப்பட்ட தொழில்ரீதி தகுதி - திறமைக்கும், கொள்கை ரீதியான முடிவுகளை எடுக்க வாய்ப்பளிக்கும் மையப்படுத்தப்பட்ட தகவல் குவிப்புக்கும் இடையில் ஒரு தடை / பிளவு வளர்ந்து வருகிறது.

கொள்கை ரீதியில் முக்கியமான தீர்மானங்களில் அடங்கி உள்ளது என்ன என்பதை உழைக்கும் மக்கள் புரிந்து கொள்வதற்குத் தேவையான தகவல்களை அவர்களுக்கு வழங்குவதன் மூலம் மேலேசொன்ன பிளவை/தடையை சுய மேலாண்மை முறை வென்று விடுகிறது. போட்டி அல்ல, கூட்டுறவே தனிமனிதர் களுக்கிடையிலான சமூக நியதியாக இருக்கும் போதெல்லாம், ஏதாவது ஒரு நுட்ப விவரத்தில் 'தேர்ந்த' உழைக்கும் மக்களைச் சேர்ந்த எந்த ஒரு உறுப்பினரும் இந்த தீர்மான முடிவுகளை எடுப்பதில் தானும் ஒரு பாத்திரத்தை ஆற்றுகிறார்.

தொழில்நுட்ப முன்னேற்றத்தின் விளைவாக முதலாளிய உற்பத்தி உறவுகளில் அளவு கடந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதை மீறியும் முதலாளிய அமைப்பு நீடிக்கிறபோது, 'திறன்மிகு தொழில்காரர் களுக்கும்', 'திறன் குறைந்த உழைப்பாளி மக்களுக் கும்' இடையிலான அந்நியமாதல் அதிகரிப்பது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. இருந்தாலும் உற்பத்தி சாதனங்களில் தனி உடைமை, நிறுவனங் களில் முதலீடு செய்வதில் தன்னிச்சைப்போக்கு, பொத்தாம் பொதுவான சரக்கு உற்பத்தி என்னும் (இன்றுள்ள) முறையானது அகற்றப்பட்டு, அனைத்து உற்பத்தியாளர்கள் மற்றும் உழைப்பாளிகளின் சனநாயக ரீதியாக மையப்படுத்தப்பட்ட, திட்டமிடப் பட்ட, சுயநிர்ணயம் நடைமுறைக்கு வருமானால்,



படிப்பகம்

www.padippakam.com



இந்தத் தகுதி - திறக் குறைவை ஒழிப்பதற்கான அனைத்தும் தழுவிய சமூக அக்கறை பொதுவாக எழுகிறது. இந்த சமூக அக்கறையானது, அனைவருக்கும் உயர்கல்வி என்பதை நோக்கிய போக்கில் பிரதி பலிக்கப்படும்.

உற்பத்தி நிகழ்முறையிலிருந்தும், சேவைத் துறையிலிருந்தும் கூட - 'திறன் குறைந்த' தொழிலாளர் பிரிவை ஒதுக்கி வைப்பது காலப்போக்கில் அதிகரித்தே செல்கிறது. இது, அனைவருக்கும் உயர் கல்வி என்பதை உண்மையாகவே முற்றிலும் இன்றி யமையாததாக ஆக்குகிறது. காரணம் (அஃதின்றேல்) மாபெரும் சமுதாய செல்வத்தின் நடுவில், அதிகமதிக மக்கள் வேலை தரப்பட முடியாமல் கைவிடப்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவார்கள்.

அதுமட்டுமல்ல, தொழில்நுட்ப மேலாண்மை சார்ந்த பல்கலைக்கான சீர்திருத்தம் / பல்கலைக் கழகத்தின் செயல்பாட்டு மயமாக்கமானது (பின்னப் பட்ட, அதித சிறப்புத் துறைகளாக பிரிக்கப்பட்ட, ஒருங் கிணைப்பற்ற தொழில்திறப் பண்பாக உயர்கல்வியை தரம் தாழ்த்துவது; இதை முற்போக்கு ஜெர்மன் மாண வர்கள் 'தொழில்திற மடத்தனம்' - 'Fachidiotismus' என அழைக்கிறார்கள்), அதிகமதிகம் ஒழுங்கமைக்கப் பட்ட தகுதி - திறன் இழப்பாக வளர்ந்திருக்கிறது.

நிலவும் சமூக ஒழுங்கீனத்தின்மீது சுமத்தப்பட முடிகிற மிகக் கூர்மையான குற்றச்சாட்டுகளில் ஒன்று தலைதெறிக்கும் வேகத்தில் அறிவியல் அறிவு விரிவு பெற்றுச் செல்லும் ஒரு கால கட்டத்தில், பல்கலைக் கல்வி அதிகரித்துச் செல்வதற்குப் பதிலாக தொடர்ந்து குறைந்தபடி செல்கிறது என்பதாகும். இவ்வாறு, அறிவியலின் உற்பத்தித் திறனின் வளமான உள்ளாற் றலை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள உயர்கல்வியால் முடியாதிருக்கிறது; அத்துடன், திறமையற்ற உழைப்பாற்றலையே (இது முற்றான பொருளில் அல்ல, அறிவியல் படைத்துள்ள சாத்தியப் பாடுகளுடன் ஒப்பிடும் ஒப்பீட்டுப் பொருளில்தான் என்றாலும்) அது உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது.

புது முதலாளியத்தின் பிரதிநிதிகள் சிலர் தாம் விரும்புவதை வெளிப்படையாகக் கூறிவிடுகிறார்கள், மேற்கு ஜெர்மன் பல்கலைக்கழகத்தின் சீர்திருத்த செயல்திட்டத்தை உருவாக்கியவர்கள்போல். எனவே பழைய ஹம்போல்ட்டிய பல்கலையின் மிகவும் தாராளவாதமான தன்மை குறித்து குறை கூறும் மன நிலையில் அதைத் தாக்குவது அவர்களுக்கு இயல் பானதே. படிக்கவும், ஆராயவும், தாம் தேர்ந்தெடுத்த சொற்பொழிவுகளில் கலந்து கொள்ளவும் மாணவர் களுக்குள்ள சுதந்திரம் ஒடுக்கப்பட்டாக வேண்டும். இதுவே தம் நிலைபாடு, அதாவது புது முதலாளி யத்தின் நிலைபாடு என்பதை அப்பிரதிநிதிகள் ஒளிவுமறைவின்றி ஒத்துக்கொள்கிறார்கள்.

உற்பத்தியை மனிதத் தேவைகளுக்கு உட்படுத்து வதல்ல, மனித தேவைகளை உற்பத்திக்கு கீழ்ப்படுத் துவதே முதலாளியத்தின் அடிப்படை சாரம்.

எனவே அறிவியல் தகுதி/திறன், அறிவியலின் உள்ளுறைந்த உற்பத்தி ஆற்றல் ஆகிய இரண்டும் முழுமையாக வளர்ச்சி பெற சுய மேலாண்மையே வழி. இதில்தான் பல்கலைக்கழகம், சமுதாயம் ஆகிய இரண்டின் எதிர்காலமும் சந்தித்து இறுதியாய் ஒன்று கூடுகின்றன. வெகுமக்களில் பலர் பல்கலைக்கழகக் கல்விக்குப் பொருத்தமானவர்களாக இல்லை என்று சொல்லப்படுவது சந்தேகத்துக்கிடமின்றி ஒரு சரியான கூற்றுதான், நம் தற்கால சமுதாய சூழலுக்குள் வைத்துக் கூறினால். ஆனால், இந்த பொருந்தாமை யானது உடல்கூறு வகையிலோ மரபணு வகையிலோ தீர்மானிக்கப்பட்டதல்ல, மாறாக வீட்டுச் சூழலாலும் நாட்டுச் சூழலாலும் முன்தரப்படும் ஒரு நீண்ட நிகழ்முறையின் விளைவே அது.

இருப்பினும் மனிதர்களின் வளர்ச்சியை பொருள் களின் உற்பத்திற்குக் கீழ்ப்படுத்தும் ஒரு சமுதாய மானது, மதிப்பீடுகளின் மெய்யான வரிசைக் கிரமத்தை தலைகீழாக நிறுத்துகிறது என்பதைப் பார்க்கும்போது, சில சில சிறு உதாரணங்களைத் தவிர இந்தப் பொருந்தாமை தவிர்க்க முடியாதது என்பதற்கு எந்த அடிப்படையும் இல்லை என நாம் எடுத்துக் கொள்ள முடியும்.

பொருள்களைக் குவித்துச் செல்லுவதற்குப் பதில், அனைத்து மக்களின் கல்விக்கு முன்னுரிமை அளிக்கும் விதத்திலும், இன்றைய முன்தெரிவு – போட்டி ஆகிய சூழலுக்கு எதிர்த்திசையில் உந்திச் செல்லும் வகையிலும் சமுதாயம் மறுசீரமைக்கப் படும்போது – அதாவது, குறைந்த திறனுடைய குழந்தை ஒவ்வொன்றுக்கும் அதிகபட்ச கவனிப்பை எல்லா வகையிலும் பெற்று அதன் மூலம் அது தன் 'இயற்கை' ஊனத்தை வெற்றி கொள்ள முடியும் போது, அனைவருக்கும் உயர்கல்வி என்ற சாதனை அசாத்தியமாகத் தோன்றாது.

ஆக அனைவருக்கும் உயர்கல்வி, வேலை நேரத்தை பாதியாகக் குறைத்தல், நுகர்வுப் பொருள் களின் அபரிமிதத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயம், பொருளியலில் அனைத்து தழுவிய சுய மேலாண்மை என்பதுவே 20ஆம் நூற்றாண்டின் கேள்விக்கான பதிலாகும். அதாவது ஆசிரியர்கள் எதை கற்பிப்பார்கள்? போலீசை யார் கண்காணிப் பார்கள்? என்ற கேள்விக்கான பதிலாகும். அப்போது சமுதாய வளர்ச்சி என்றால் ஒவ்வொருவரும் சுய கல்வி பெறுவது ஒரு அடிப்படையான நிகழ்முறை என்று ஆகிவிடும். அன்றுதான் 'முன்னேற்றம்' என்னும் சொல்லுக்கு நிசமான பொருள் இருக்கும். அன்று மனிதகுலம் தன் சொந்த சமூக விதியை தானே உணர்வுடன் தீர்மானிக்கவும், தன்னை மட்டுமே சார்ந்திருக்கவுமான தகுதி-திறன் கொண்டிருக்கும்.

தமிழில்: சிங்கராயர்.



படிப்பகம்

www.padippakam.com



# படைப்பின் கர்த்தாக்கள்

பார்பரா டெய்லர்

ஏறக்குறைய ஒரு நூற்றாண்டிற்கு முன் 'ஒவெனைட்ஸ்' என்ற பெயரில் இயங்கிய பிரிட்டிஷ் சோசலிஸ்டுகளின்சிந்தனைகளையும் நம்பிக்கைகளையும் ஏங்கல்ஸ் விமர்சித்தார் - மிதமிஞ்சிய கற்பனைகளும் செறிவற்ற கோட்பாடுகளையும் உள்ளடக்கிய (ஒவெனைட்) கருத்துகளை விஞ்ஞானபூர்வமான சோசலிசத்துடன் ஏங்கல்ஸ் ஒப்பிட்டார். அக்கற்பனைகளும் கோட்பாடுகளும் சோசலித்தின் பூர்வீக வரலாற்றுடன் தொடர்புடையவை, அவை வெளிபடுத்திய 'கற்பனை வாதத்தை' கடந்து வந்து, வரலாற்று பொருள்முதல்வாத கருத்துக்களை வலியுறுத்தும் கோட்பாடுகளை நிலைநிறுத்தினாலொழிய, வலுவான விஞ்ஞானபூர்வமான அடிப்படையில் கம்யூனிச போராட்டங்களை முன்னெடுத்துச் செல்ல முடியாது என்பது ஏங்கல்சின் கருத்தாக இருந்தது.

ஏங்கல்சின் மதிப்பீட்டினை நாம் இன்று பரிசிலித்து மீண்டும் மதிப்பிட வேண்டிய ஒரு சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று எனக்கு தோன்றுகிறது. அத்தகைய புதிய மதிப்பீட்டினை செய்கையில் ஒவெனைட்டுகளின் ஒரு முக்கிய கருத்துக்கு - இந்த விஷயத்தில் அவர்கள் தமக்கு பின் வந்த மார்க்சியர்களிடமிருந்து பெரிதும் வேறுபட்டனர்.[1] அழுத்தங் கொடுத்து நமது வாதத்தை தொடங்குவோம். அக்கருத்து பெண் விடுதலை குறித்ததாகும்.

கற்பனைவாத சோசலிச சிந்தனைகள் அனைத்துக்கும் பொதுவாக வாய்த்திருந்த ஒரு குணநலன் மானுடப்பற்று, அல்லது மானுடத்துவம் எனபதாகும் என்பதை ஏங்கல்ஸ் பின்னாட்களில் சுட்டிக்காட்டினார். பெண்ணியத்தின்பால் ஒவெனைட்டுகள் காட்டிய அக்கறையும் அர்ப்பணிப்பும் இத்தகைய மானுடத் துவத்தின் கூறுகளேயாகும். அதாவது, ஏங்கல்ஸ் கூறியது போல், ''குறிப்பிட்ட ஒரு வர்க்கத்தின் விடுதலை''யை முன்னிட்டு மட்டும் அவர்கள் தமது கருத்துக்களை முன்வைக்கவில்லை. மாறாக, ''மானுடம் அனைத்தையும் ஏககாலத்தில் விடுதலை அடைய''ச் செய்வதையே அவர்கள் விரும்பினர். அவர்கள் தமக்கு வகுத்துக் கொண்ட இலக்குகளாவன: பரஸ்பர நம்பிக் கையின் அடிப்படையில் அமைக்கப்படும் கூட்டு வாழ்க்கை சமுதாயங்கள் உலகம் முழுவதும் நிறுவப்பட வேண்டும். அவ்வாறு அமைக்கப்படும் கூட்டு வாழ்க்கைச் சமுதாயங்களில் பாலின சமத்துவத்துக்கு முட்டுக் கட்டைகளாக விளங்கும் கருத்தியல்களும் சமூக நிறுவனங்களும் மறைந்துவிடும்; (பெண்களை) ஒடுக்கும் திருமணச் சட்டங்கள், தனிக் குடும்பங்கள், தனிச் சொத்து ஆகிய அனைத்துமே தவிடுபொடியாகி விடும். பெண்களை அடிமைப்படுத்தி, அவர்களுக் கிடையே போட்டி பொறாமைகளை ஊட்டி வளர்க்கும் தனிக் குடும்பம் அழிந்து போய் இது இருந்த இடத்தில் கூட்டுவாழ்வு குழாம்களும், கூட்டுப்பொறுப்பில் மேற்கொள்ளப்படும் பிள்ளைகள் பராமரிப்பு முறைகளும் ஏற்படும்.

வாழ்நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக முற்றிலும் புதிய வகையான வேலைப் பிரிவினை - பாலினரீதியில் கட்டமைக்கப்பட்டாலும், புதிய முறையில் செயல்படும் வேலைப்பிரிவினை - சமுதாயத்தில் உருவாகும் சலிப்பூட்டும் வீட்டு வேலையை அதிநவீன தொழில்நுட்பத்தின் உதவியுடன் ஆண்களும் குழந்தைகளும் (ஆண் பெண் குழந்தைகள் ஆகிய இருபாலாரும்) சுற்றுமுறையில் மேற்கொள்ளும் நிலைமை உண்டாகும். இதனால் பெண்களின் வேலைச்சுமை குறைந்துவிடக் கூடுமாதலால், சமுதாய வாழ்வில், பொது வாழ்வில், அவர்களால் தம்மை மேலதிகமாக ஈடுபடுத்திக் கொள்ளத்தக்க சூழல் உருவாகும். உற்பத்தித் துறையில், வயல் வேலைகளில், அரசு நிறுவனங்களில், கல்வி, பண்பாட்டுப் பணிகளில் அவர்களால் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவும் முடியும். குழந்தைகள் பராமரிப்பு என்பது ஒரு பொதுப் பொறுப்பாக ஆக்கப்படுவதாலும் 'கூலி'க்காக பெண்கள் மாரடிக்க வேண்டியதில்லை என்பதாலும் திருமணம் என்பது (பெண்களின் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் தேவையான) ஒரு கட்டாயமாக இல்லாது, காதலின்பொருட்டும், ஆசையின்பொருட்டும் மேற்கொள்ளப்படும் உறவாக உருமாறும் - விரும்பினால் உறவை ஏற்படுத்திக் கொள்ளலாம், ஒத்துப் போகாவிட்டால், பரஸ்பர விருப்பத்தின் பெயரில் உறவை முறித்தும் கொள்ளலாம். 1841 இல் கூட்டப்பட்ட ஒவெனைட் மாநாட்டில் பேசிய ஒரு பெண்ணிய சிந்தனையுடைய சோசலிஸ்டு பெண்ணொருவர் கூறியதாவது.

''எல்லோரும் எல்லோருக்காகவும் உழைக்கும் போது, ஒவ்வொருவரும் பொதுநலம் கருதி உழைக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு விரவியிருக்கும் போது, தனது சுதந்திரங்களையும் மென்னுணர்வுகளையும் விற்றுப் பிழைக்கும் நிலை மாறி பெண்களுக்கென மதிப்பு மிகுந்த இடம் ஒன்று சமுதாயத்தில் உருவாகிறது.''

இத்தகைய இலட்சியக்கனவுகளையும் புரட்சிகர நோக்குகளையும் வெளிப்படுத்திய அதே நேரத்தில், உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய சீர் திருத்த திட்டங்களையும் ஒவெனைட்டுகள் முன்வைத்தனர். இருக்கக்கூடிய திருமணச்சட்டங்களை மாற்றி சிவில் திருமண முறைகளையும் மணமுறிவு (விவாகரத்து) முறைகளையும் சட்டபூர்வமாக்குதல்; பெண்களுக்கு வாக்குரிமை வழங்குதல் என்பன போன்ற திட்டங்களை அவர்கள் வரையறுத்தனர். (பெண்களுக்கு வாக்குரிமையை வழங்குவதை எதிர்த்த சாசனவாதிகளை ஒவெனைட்டுகள் விமர்சித்தனர்). பெண்களுக்கு உயர்கல்வி அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர்கள் கோரினர். இத்தகைய கோரிக்கைகளை முன்வைத்து போராடிய பெண்களில் பலர் நடுத்தர வர்க்கத்தின் அடிமட்டத்திலிருந்த சமூகங்களை



படிப்பகம்

www.padippakam.com



சேர்ந்தவர்களாக இருந்தனர். 1833-34 ஆம் ஆண்டில், ஓவெனைட்டுகள் மாபெரும் தொழிற்சங்கங்களை அமைக்க முனைந்த காலகட்டத்தில், பெண்கள் செய்த தொழில்களில் சங்கங்கள் பல அமைக்கப்பட்டன. அச்சங்கங்களில் உறுப்பியம் வகித்த பெண்கள் ஓவெனைட் இயக்கத்தின் உறுப்பினர்தளம் விரியவும், உழைக்கும் பெண்கள் இயக்கத்துக்குள் வரவும் காரணமாக இருந்தனர்.

பெண்கள் தொழிற்சங்கங்களில் பெண்ணியம் குறித்து விறுவிறுப்பான விவாதங்கள் நடைபெற்றன. ஓவெனைட்டுகளுக்கு சொந்தமான 'தி பயனீயர்' என்ற பத்திரிகை 'பெண்கள் பக்கம்' ஒன்றை தொடங்கியது. சமக் கூலி, சம வேலைவாய்ப்பு குறித்து பெண்கள் தொழிற்சங்க உறுப்பினர்கள் கடிதங்கள் எழுதி அப் பக்கத்தில் வெளியிட்டனர் - பெண்ணிய விவாதங்கள் தொடர்ந்து நடைபெற இந்தப் பத்திரிகை தன்னாலான ஊக்குவிப்புப் பணிகளைச் செய்தது. தொழிலாளர் வர்க்கத்தினர் மத்தியிலும் கூட ஆணாதிக்கக் கருத்துகள் விரவியிருப்பதை பல பெண்கள் சுட்டிக் காட்டினர். 'பெண்கள் பக்கத்து' தலையங்கம் ஒன்று குறிப்பிட்ட தாவது: ''தமது எசமானர்கள் தம்மீது செலுத்தும் அதிகாரத்தை தொழிலாளர்கள் விமர்சிக் கின்றனர், சங்கம் அமைக்கும் உரிமை தமக்கு வேண்டும் என்கின்றனர்; தமது உரிமைகளைப் பாதுகாக்கும் சட்டங்கள் நிறுவப்பட வேண்டும் என்கின்றனர். ஆனால் ஆண்களின் அதிகாரத்தில் சேதாரங்கள் ஏற்படுத்தவல்ல திட்டங்களைப் பற்றி (நாம்) பேசினாலேஎ, ஆணுக்கு அடிபணியாது அவனுடன் சரிசமமாக இருக்க (பெண்கள்) விழைந் தாலோ, அவர்களது மனத்தில் பழைமைபேண் கருத்துகள் உதித்தெழுகின்றன ...'' இந்த கருத்தைக் கொண்ட ஒன்று கட்டுரை தொழிற்சங்கப் போராட்டம் நடந்த காலகட்டத்தில் எழுதப்பட்டது. ''படைப்பின் கர்த்தாக்கள் தாம் தான் என்று துணிந்து கூறுபவர்கள் இவ்வாறு பெண்ணை அடிமைப்படுத்துவதும் வெறுப்பதும் முறையாகுமா?'' என்று மற்றொரு பெண் எழுதினாள். தன்னைப் பொறுத்தவரை, ''பெண்களின் துயரமான நிலை மாறியமையத் தேவையான மாபெரும் மாற்றமானது ஏற்பட வேண்டுமானால் மானுடகுலத்தின் தற்கால நடத்தை முறையிலும் சிந்தனையிலும் முழுமையான புரட்சி கரமான மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இது நடக்கா விட்டால் எதுவும் சாத்தியமில்லை; அந்த பெருந் தன்மை மிக்க ஓவெனின் திட்டத்தினூடாகத் தான் இத்தகையதொரு மாற்றத்தைச் சாத்தியப்படுத்த முடியும் - பொதுச் சொத்து, சமத்துவம், எல்லோரும் சமமாக சுதந்திரமாக வாழ்தல் ஆகியவற்றை உள்ள டக்கிய அந்த திட்டத்தால் மட்டுமே இதைச் செய்ய முடியும்... சோசலிசத்தின் கொள்கைகளையும் செயல் பாடுகளையும் பெண்கள் சரிவர புரிந்து கொள்வார் களேயானால், ஒவ்வொருத்தியும் ஆத்மார்த்தமான சோசலிஸ்டாகி விடுவாள்.''

ஏங்கல்ஸ் பின்னாட்களில் கூறியது போல, இவை மாபெரும் கருத்துகள்தான். பிரமாதமானவை தான். ஆனால் அதுமட்டுமல்ல உண்மை. இந்த கூற்றினை விரிவாக ஆராயும் முன் ஏங்கல்சும் அவருக்குப் பின் வந்த மார்க்சிஸ்டுகளும் வர்க்கமும் பால்நிலை பாகுபாடுகளும் பின்னிப்பிணைந்துள்ள நிலையை எவ்வாறு முற்றிலும் வேறுபட்ட வகையில் புரிந்து கொண்டனர் என்பதைப் பார்ப்போம். இவர் களைப் பொறுத்தவரை, ஆணாதிக்கம் என்பது பூர்ஷ்வா உடைமை உறவுகளின் ஒரு வெளிப்பாடு தான்; இதற்கும் தொழிலாளர் வர்க்க போராட்டங் களுக்கும் எந்தவிதத் தொடர்புமில்லை. ஆணாதிக்கம் என்பது உலகு தழுவிய ஒன்றாகும், அனைத்து வர்க்கங்களிலும் இதை நாம் காணலாம் என்று ஓவெனைட்டுகள் கூறிய போதிலும் இக்கருத்துகள் இந்தப் பிற்கால மார்க்சியர்களின் சிந்தனைக்கு ஆட்படாது மறைந்து போனது. பாட்டாளி வர்க்கத்தில் ஆண் - பெண் சமத்துவம் நிலவ வேண்டும் என்று பிற்கால மார்ச்சியர்கள் கூறினாலும் அக்கூற்று ஒரு அருவமான கருத்தாக மட்டுமே வெளிப்பாடு கண்டது. வர்க்க எதிரிகளை முறியடிக்க ஆண், பெண் ஆகிய இருபாலரும் ஒற்றுமையுடன் செயல்பட வேண்டும் என்று கூறி, பெண்ணியவாதத்தை அம்மார்க்கசியர்கள் மறுத்து ஒதுக்கியதோடு, பாட்டாளி வர்க்கத்தை திசை திருப்ப வல்ல பூர்ஷ்வா தாராளவாத சிந்தனை அது என்று விமர்ச்சிக்கவும் செய்தனர். குடும்ப அமைப்பையும் சமுதாயத்தின் பாலியல் வாழ்வையும் மாற்றியமைப் பதை சமுதாய மாற்றத்தின் முக்கிய கருவாக, அம்சமாக ஓவெனைட்டுகள் அடையாளப்படுத்தியிருந்த போதிலும், சோசலிச சிந்தனை வட்டாரங்களில் இந்த கருத்து புறந்தள்ளப் பட்டது; பொருளாதாரத் தளத்தில் நடத்தப்படக்கூடிய புரட்சிக்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்கப் பட்டது; இத்தகையதொரு புரட்சி நடந்தாலே போதும், இதுவே பாட்டாளி வர்க்கத்தின் ஒட்டு மொத்த விடுதலையைச் சாதித்து விடும் என்பன போன்ற கருத்துகளே பேசப்பட்டன. ஒரு வகையில் சோசலிச, மார்க்சிய விவாதங்களை நான் கொச்சைப் படுத்துவதாகக் கூட நீங்கள் கொள்ளலாம். (ஓவெனைட்டுகளுக்கு பிறகு தோன்றிய) மார்க்சிய அமைப்புகளில் ஆண் - பெண் சமத்துவம் பற்றி எவ்வளவோ பேர்கள் பேசினார்கள் என்பது உண்மை தான். ஆனால், பெண் விடுதலையை வர்க்க விடுதலை என்ற திணைக்குள் புகுத்தி, வர்க்க விடுதலைக்கு முன்னுரிமை வழங்கிய மார்ச்சிய தலைமையின் கறாரான முடிவினை துணிச்சல் மிகுந்த வெகு சிலரே எதிர்த்தனர். 1896-ஆம் ஆண்டு சோசலிச - சனநாயக கட்சிக் கூட்டத்தில் பேசிய கிளாரா ஜெட்கின், கீழ்க்கண்டதைப் பேசி கூட்டத்தின் கைத்தட்டல்களை பெற்றுக் கொண்டார். ''பெண்களின் அற்பத்தனமான பிரச்சனைகளை முன்னுக்கு கொண்டு வர இதுவல்ல நேரம். நவீன பாட்டாளி வர்க்க பெண்களை வர்க்கப் போராட்டத்தில் ஈடுபடுத்துவது நமது கடமையாகும்.''

பெண்கள் விடுதலையைக் குறித்து ஓவெனைட்டு களும் பிற்கால மார்க்சியர்களும் கொண்டிருந்த புரிதல் களுக்கு இடையில் நிலவிய வேறுபாட்டினை எப்படி புரிந்து கொள்வது? ஒன்றினை கற்பனைவாதம், பக்குவமடையாத தன்னெழுச்சி வாதம் என்றும், மற்றொன்றினை வளமான, விஞ்ஞானபூர்வமான சோசலிசம் என்றும் விளக்கி இவற்றின் குறை நிறைகளை சுட்டிக்காட்டுவதால் இவற்றுக்கிடையே உள்ள வேறுபாடுகளை வரையறுத்து விடமுடியாது.



படிப்பகம்

www.padippakam.com



ஒவெனைட் கருத்துகளைக் கடந்து மார்க்சிய சிந்தனை வளர வளர சோசலிச மரபில் தனக்கென ஒரு சுயாதீனமான இடத்தைப் பெற்றிருந்த பெண்ணிய நிலைபாடானது காணாமல் போனது. பாலியல் ஒடுக்கு முறையை எதிர்த்துப் போராடுவதை ஆரம்ப கால சோசலிஸ்டுகள் ஏன் முக்கியமானதாகக் கருதினர்?

வர்க்க வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார அமைப்பாக முதலாளியத்தை பிற்கால மார்க்சியர் புரிந்துகொண்டதற்கு மாறாக பல்வேறு முரண்பாடுகளும் எதிரும் புதிரு மான விஷயங்களும் உள்ளடக்கிய ஒரு சமூக அரங்க மாகவே முதலாளியத்தை ஒவெனைட்டுகள் புரிந்து கொண்டனர். இந்த முரண்பாடுகளும் எதிரும் புதிரு மானவைகளும் வாழ்நிலைமைகளில் மட்டுமின்றி ஆண்களின், பெண்களின் மனத்திலும் அறிவிலும் ஆழப்பதிந்திருப்பதாக அவர்கள் கருதினர். இந்த முதலாளிய சமுதாயத்தை அவர்கள் 'போட்டா போட்டிகள்' நிறைந்த அமைப்பாக விளக்கினர்.

இந்த 'போட்டாபோட்டிகள்' நிறைந்த சமுதா யத்தை குறித்த அவர்களது விமர்சனமானது, பாட்டாளி வர்க்கத்தினர் அனுபவிக்கும் பொருளாதார சுரண்டல் பற்றிய விமர்சனமாகவும், தன்னலம் தோய்ந்த தனிமனித வாதத்தைப் பற்றிய அற ரீதியான கண்டனமாகவும், தொழிற்சாலைகளிலும் வேலைப் பட்டறைகளிலும் மட்டுமின்றி, பள்ளிக்கூடங் களிலும், தேவாலயங்களிலும் ஏன் குடும்பத்திலும் கூட காணப்படும் பொருத்தமற்ற, எதிர்மறையான சமூக உணர்வுகளைப் பற்றிய உளவியல் விளக்க மாகவும் விரிந்தது. குடும்பத்தைப் பற்றிக் குறிப்பிடு கையில் வில்லியம் தாம்சன் என்ற ஒவெனைட் சிந்தனையாளர் கூறியதாவது. ''... குடும்பத்தில் காணப்படும் அநீதியான ... ஆண்கள் பெண்கள் மீது செலுத்தும் கொடூரங்கள் ஆவன ... சரி, தவறு என்று நாம் நினைத்து கொண்டு இருப்பவற்றை தடம்புரளச் செய்துவிடுகின்றன...'':

''ஒவ்வொரு குடும்பமும் முழுமுதலானதொரு சர்வாதிகாரமாக உள்ளது. அறிவார்ந்த வகையிலோ, விஷயங்களைச் சொல்லி விளக்கியோ தனக்கு வேண்டியதைப் பெற்று கொள்ள வேண்டியநிலை ஆணுக்கு இல்லை. அவன் இட்ட கட்டளை இங்கு உடனடியாக நிறைவேற்றப்படுகிறது. சர்வாதிகார மையங்களான இக்குடும்பங்களில்தான் மானுட குலம் முழுவதும் வாழக் கற்றுகொள்கிறது - இங்கிருந்து தான் தன்னல நோயும் மேலாதிக்கம் செலுத்தத் தூண்டும் கருத்துகளும் மானுட பரிவர்த்தனைகள் அனைவற்றுக்குள்ளும் ஊடுருவு கின்றன.''

அந்தரங்கமான உறவுநிலைகளிலும் கூட அதிகார மும் அடிமைத்தனமும் புரையோடிக் காணப்படும் நிலையைச் சுட்டிக்காட்டி, இத்தகைய மோசமான உறவுமுறைகள்தான் போட்டா போட்டிகள் நிறைந்த சமுதாயத்தின் உளவியல் அடித்தளங்களாக விளங்கு கின்றன என்பதையே இவர் இங்கு வலியுறுத்துகிறார். பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்தியதால் மானுடகுலம் முழுவதுமே களையிழந்து, மானுட ஆற்றல்கள் நொறுக்கப்பட்டு, சமூக ஏற்றத்தாழ்வு களை சமுதாயம் அப்படியே ஏற்றுக் கொண்டு, இதுதான் நியதி, இதுதான் இயற்கை என்று தனக்குத் தானே சமாதானம் சொல்லிக் கொள்ளும் நிலைக்கு வந்துவிட்டதையும் இங்கு நம்மால் காணமுடிகிறது. வீட்டில் அதிகாரம் செலுத்திப் பழகிய ஆண்கள், தமது தன்னலக் கொள்கையை பொது வாழ்விலும் நிறுவ முனையும் போது, பொருளாதார வளர்ச்சியை மட்டுமே முக்கியமானதாகக் கருதி செயல்படும் பூர்ஷ்வா பண்பாடும், அதற்கு ஆணி வேறாக விளங்கும் போட்டா போட்டியில் நம்பிக்கையுடைய தனி மனிதனும் உருவாகுகின்றனர். தந்தையச் சமூக அமைப்பிற்குரிய பாலியல் பண்பாடும் உளவியலும் இணைந்தே இந்த பூர்ஷ்வா தனிமனிதனை உருவாக்கு கின்றன.

சமுதாய வாழ்வை முடக்கும் இந்த பண்பாட் டுக்கு ஒரு மாற்றை உருவாக்க வேண்டுமானால், பொருளாதார அதிகாரத்தை ஒரு வர்க்கத்திடமிருந்து மற்றொரு வர்க்கத்துக்கு இடமாற்றம் செய்தால் மட்டும் போதாது - தனி மனிதர்களின் வாழ்வு ஒட்டு மொத்தமாக மாறி அமையவேண்டும்; பணம், அதிகாரம் ஆகியன உருவாக்கும் ''செயற்கை''யான பிரிவினை கள் அகற்றப்பட்டு மனிதர்களுக்கிடையே உயிரோட்டமான பரஸ்பர நல்லுறவுகள் நிறுவப்பட வேண்டும். ஒவ்வொரு கூட்டுவாழ்வுக் குழாமிலும் ஆண்களும் பெண்களும் புதிய வாழ்க்கை வாழவும் காதல் செய்யவும் அன்பு பேணவும் கற்று கொள்வர்.

பிற்கால மார்க்சியர்கள் இந்த சமூக கண்ணோட் டத்தை 'கனவுத்தன்மை'யுடையதாக கருதிய போதிலும், இத்தகைய கனவுகளை காணத்துணிந்த ஆரம்பகால சோசலிஸ்டுகளின் செயல்பாடுகளுக்கு அக்கனவுகளும் கற்பனைகளும் ஆதாரமாக, முக்கிய கருவாக அமைந்தன. மானுட வாழ்வின் அந்தரங்க அனுபவங்களிலுங்கூட ஒளிந்திருக்கும் போட்டா போட்டி மனப்பான்மையை வேருடன் பிடுங்கி எறிந்தால் ஒழிய அம்மனப்பான்மையை எப்படி எதிர்க்க முடியும்? அதற்கு எதிர்வினையாக சமுதாய நல்லுணர்வை நிலைநிறுத்த முடியும்? ''மனதாலன்றி வேறு எவ்விடத்தில் விடுதலை துளிர்விடக்கூடும்?''

ஒவெனைட்டுகளின் சமகாலத்தவரான 'ரொமாண்டிக்' கவிஞர்களை பொறுத்தவரையிலும் சரி, அவர்களுக்கு முன் வாழ்ந்த கிறிஸ்துவ சீர்திருத்த வாதிகளான 'புனிதர்' களைப் பொறுத்தவரையிலும் சரி, பாலியல் உறவுகளை சரியான முறையில் சீரமைப் பதன் முலம் தான் ஒரு சமுதாயத்தின் அறவாழ்வை ஒழுங்குபடுத்த முடியும் என்று அவர்கள் நம்பினர். ஒவெனைட்டுகளும் இவ்வாறே சிந்தித்தனர்.

ஆண் பெண் உறவில் வெளிபட்ட சுதந்திரத்தில் தான் கம்யூனிசம் முதன்முதலில் தனது சாரத்தை இனங்காட்டிக்கொண்டது. எனவே பெண்ணியம் என்பது சோசலிச தரிசனத்தின் உபகரணமல்ல, அது சோசலிசத்தை செயல்படவைக்கும் உந்து சக்திகளில் மிக முக்கியமானதாகும்.

ஒவெனிசம் இவ்வாறு விஷயங்களை பார்ப்பதற் கான காரணங்கள் என்ன? நான் ஏற்கனவே கூறியது



படிப்பகம்

www.padippakam.com



போல பிற்கால மார்க்சியர்கள் பெண்கள் பிரச்சனை குறித்த மாறுபட்ட பார்வையை மேற்கொள்ளக் காரணம் என்ன? இந்த வேறுபாடுகள் எழக் காரணம் என்ன?

சமுதாய மாற்றங்கள் மிக விரைவாக ஏற்பட்ட காலகட்டத்தில் தான் ஒவெனிசம் வளர்ச்சி கண்டது. அக்காலகட்டத்தில் வர்க்க உறவுகளும் பாலுறவுகளும் பெரும் மாற்றங்களைக் கண்டன - வேலை நிலைமைகளிலும் குடும்ப வாழ்விலும் ஏற்பட்டிருந்த புதுமைகளே இம்மாற்றங்களுக்கு காரணமாகயிருந்தன. ஆரம்பகால சோசலிஸ்டுகளில் பலர் கைவினைஞர்களாகவோ சிறு வியாபாரிகளாகவோ இருந்தனர். 1830-களிலும் 1840-களிலும் ஏற்பட்ட பொருளாதார, சமூக நெருக்கடிகள் இவர்களது வாழ்வினைப் பெரிதும் பாதித்தன. இந்த நெருக்கடிகளினூடாகத் தான் நவீன பாட்டாளிவர்க்கம் வளர்ந்து உருப் பெற்றது. இந்தக் காலகட்டத்தில் ஏற்பட்ட பாரதூரமான மாற்றங்களுக்கு எதிரான ஒழுங்கமைக்கப்பட்ட போராட்டங்களின் வெளிப்படாகவே ஆரம்ப கால சோசலிசம் அமைந்தது; அம் மாற்றங்களை புதிய, முற்போக்கான வடிகால்களில் செலுத்த அது முனைந்தது. பிற்காலத்தில் தோன்றிய சோசலிச இயக்கங்கள் உழைக்கும் மக்களை 'பாட்டாளிகள்' என்று அடையாளப்படுத்தி அவர்களை ஒன்றுதிரட்டி ஒழுங்கமைத்தன. ஆனால் ஒவெனைட்டுகளோ உழைக்கும் மக்களை 'பாட்டாளி'களாக ஆக்கிக் கொண்டிருந்த (வரலாற்று) போக்குகளுக்கு எதிராக ஒன்று திரண்டனர். கூட்டுறவு பொருளாதாரத்தின் மூலமும் மானுடர்களின் தன்மையை மாற்றியமைப்பதன் மூலமும் முதலாளியம் தோற்றுவித்துக் கொண்டிருந்த சமுதாய உறவுகளுக்குள் சிக்காது வேறொரு தளத்தில் செயல்படலாம் என்று அவர்கள் நினைத்தனர்.

முதலாளித்துவ வளர்ச்சிப் போக்குக்குள் சிக்காது புதிய சமுதாயம் உருவாக்கிவிட முடியும் என்ற எண்ணம் 1830களில் வேண்டுமானால் செயல்படுத்தக்கூடிய கருத்தாக இருந்திருக்கலாம். 1880-களில் - பிரிட்டிஷ் சோசலிசத்தின் வளர்ச்சிக்கட்டத்தின் அடுத்த நிலையில் - முதலாளியத்தை விட்டு அகன்று செல்ல விரும்பியவர்களுக்கான போக்கிடங்கள் அதிகம் இருக்கவில்லை. முதலாளித்துவ சமுதாய உறவுகளின் வரம்பிற்குட்பட்டுப் 'பாட்டாளி'களாக வாழ வேண்டியிருந்த உழைக்கும் மக்களுக்கு அவ்வரம்புக்கு அப்பால், அதைக் கடந்து மேற்கொள்ளப்படக் கூடிய வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கும் ஆற்றல் கூட சுருங்கிவிட்டிருந்தது. முதலாளித்துவத்தின் ஆளுகையின் கீழ் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டவர்களின் படைப்பாற்றலும் கற்பனை வளமும் சேதாரமடைந்திருந்ததால் சோசலிஸ்டுகளின் கோட்பாட்டு அறிவும் பாதிக்கப்பட்டது. இது குறித்து எட்வர்ட் தாம்சன் எழுதுவதாவது:

''1850-களுக்கு பிறகு கற்பனையார்ந்த கனவு உலகங்களை விஞ்ஞானபூர்வமான சோசலிசம் தேவையற்றவையாகக் கருதியது. அவற்றை சந்தேகக்கண் கொண்டு பார்த்து தனது பார்வைக்கான தர்க்கரீதியான நியாயவாதங்களையும் அது ஏற்படுத்திக் கொண்டது. வருங்கால சமுதாயத்தைப் பற்றி கனவு காண்பதை தனது ஆழ்மனத்துக்குள் புதைத்து வைத்துவிட்டு சம காலத்தில் மேற்கொள்ளப்படத்தக்க (அரசியல்) உத்திகளை பற்றியே சிந்திக்கலாயிற்று.'' (வில்லியம் மாரிஸ், பின் குறிப்பு, 1976. ப. 787).

இதனால் பிரிட்டிஷ் புரட்சிகர மார்க்சிய சிந்தனை வட்டாரங்களிலும் பிரக்ஞையிலும் கனவும் வருங்காலத்தைப் பற்றிய தரிசனமும் இடம்பெறாமல் போயின. வில்லியம் மாரிஸ் கூறியது போல் விடுதலை சிந்தனை நீங்கிய ''போலியான, காரியவாத சோசலிசம்'' மட்டுமே எஞ்சியது - மாரிசின் தற்கால சீடரான எட்வர்ட் தாம்சனும் இதையேதான் கூறுகிறார்.

''பிற்கால மார்க்சிய சிந்தனையோட்டத்தில் கற்பனையும் கனவும் புறந்தள்ளப்பட்டதால் ஏற்பட்டுள்ள பிரச்சனைகளாவன:

சுய உணர்வுடன் கூடிய அறநிலைப்பாடு என்பது இந்த சிந்தனைக்குள் வராமல் போய்விட்டது. தனக்கு என்ன வேண்டும், தனது விருப்பங்கள் என்ன என்று சொல்லக்கூட இயலாத அளவுக்கு இதில் சொல் வறட்சி ஏற்பட்டுவிட்டது. வருங்காலத்தை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய குறியீடுகளை, பிம்பங்களை இந்த சிந்தனையால் தோற்றுவிக்க முடியாமல் போனதோடு, எதற்கெடுத்தாலும் 'பொருளாதார வளர்ச்சி' என்ற பயன்பாட்டுரீதியிலான தரிசனத்தை மட்டுமே இது முன்நிறுத்துகிறது.''

பிரிட்டிஷ் புரட்சிகர சிந்தனை மரபிற்கு ஏற்பட்ட இழப்புகளில் முக்கியமானது ஒரு உண்மையான பெண்ணியப் பார்வையை அதனால் கையாள இயலாமல் போனது தான். மானுடகுலம் முழுவதும் விடுதலை அடைய வேண்டும் என்ற உன்னதமான கனவினை மறந்து 'வர்க்கப் போர்' என்ற விஷயத்துக்கு மட்டும் இங்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதால் பெண்களும் பெண்கள் நலனும் பெரிதும் பாதிக்கப்பட்டன. இவ்விதமாக இரண்டுவிதமான பாதிப்புகள் ஏற்பட்டன.

முதலாவதாக, உழைக்கும் மக்கள் பாட்டாளிகளாக ஆக்கப்படுவதை எதிர்த்து போராடிய காலம் போய், அவர்கள் தங்களை பாட்டாளிகளாக உணர்ந்து பாட்டாளி வர்க்கமாக போராட முடிவு செய்த காலம் வந்த பிறகு 'பாட்டாளிகள்' அல்லாதவர்கள் இந்த பாட்டாளி வர்க்க அரசியல் போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டு போனார்கள். ''எல்லா தேசங்களைச் சேர்ந்த எல்லா வர்க்கத்தினரும் ஒன்றுபட வேண்டும் என்று முழங்கிய ஒவெனைட்டுகள் வேறுபாடு பாராட்டாது எல்லோரையும் கூட்டு வாழ்வுமுறையில் ஈடுபடுத்த முனைந்தனர். அவர்கள் வீசிய வலை மிகப்பெரியது எனலாம். பிற்கால மார்க்சியர்களோ கம்யூனிச இலக்கையடைய ஒரே ஒரு வழிதான் உண்டு, அந்த வழி நடக்க ஒரே ஒரு வகுப்பாரால்தான் முடியும் என்று கூறி வலையை மிக குறுகிய வெளியில் வீசி இறுக்கிக்கட்ட முயற்சித்தனர். இதனால், மிகக் குறைவான எண்ணிக்கையிலான பெண்கள் மட்டுமே - வர்க்க அடிப்படையில் என்றாலும் கூட - இவர்களுடன் இணைந்தனர். அதிநவீனமுறையில் ஒழுங்கமைக்கப்பட்ட தொழில் துறைகளில் பெண்கள் அதிகம் வேலைபார்க்காததால் சோசலிசத்திற்கான போராட்டம் என்பது ஆண்கள் நடத்திய ஆண்களுக்கான போராட்டமாகவே அமைந்தது.



படிப்பகம்

www.padippakam.com



இந்த நிலைமையை மாற்றப் புறப்பட்ட பெண் மார்க்சியர்கள் வர்க்கப் போராட்டமும் சுயாதீனமாக நடைபெறக்கூடிய பெண்களின் போராட்டமும் தமக்குரிய தளங்களில் நடைபெற வேண்டும் என்றோ, வர்க்க அரசியலுக்குள்ளும் ஆண்-பெண் போராட்டம் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்றோ கூறவில்லை. மாறாக பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்த ஆண்களுடன் தோள்சேர்ந்து நின்று போராடும் உரிமை தமக்குமுண்டு என்று அவர்கள் பறைசாற்றினர். ஆரம்பகால சோசலிச பெண்ணியலாளர்கள் பெண் இனத்தின் விடுதலை குறித்துப் பேசினர். 19-ஆம் நூற்றாண்டின் இறுதியாண்டுகளில் போராடிய மார்க்சிய பெண்களோ, பெண்களை வர்க்கப் போராட்டத்திற்காக தயார்ப்படுத்துவதன் தேவையை குறித்துப் பேசினர். 1892 ஆம் ஆண்டில் எலியனர் மார்க்ஸ் கேட்ட கேள்வியாவது: ''பெண்கள் என்ன செய்ய வேண்டும்?'' என்பதுதான். ''நாங்கள் ஒன்றிணைவோம் ... ஆனால் ''பெண்களாக'' அல்ல ... பாட்டாளிகளாக எங்களை ஒழுங்கமைத்துக் கொள்வோம். எங்களுக்கு உள்ள ஒரே இயக்கம், பாட்டாளி இயக்கம் மட்டுமே'' என்று, தான் கேட்ட கேள்விக்கு தானே பதிலுரைத்தார்.

இரண்டாவதாக, சோசலிச போராட்டத்தின் வரம்பும் வீச்சும் சுருங்கியவுடனேயே புரட்சிகர அரசியலின் எல்லைக் கோடுகளும் முடங்கின - பல விஷயங்கள் அதற்கு அப்பாற்பட்டதாயின. உற்பத்தி உறவுகளை மாற்றியமைக்கும் பணி மட்டுமே முக்கிய மானதாக கருதப்பட்டதால் ஆண்கள், பெண்கள் ஆகியோர் முழு மாற்றமடைய வேண்டும் என்ற கருத்து அடிப்பட்டுபோனாது. உற்பத்தி உறவுகளுக்கு அளிக்கப்பட்ட முக்கியத்துவம்; மறு உற்பத்திமுறை, திருமணம், அந்தரங்க வாழ்க்கை ஆகியவற்றுக்கு அளிக்கப்படாததால் இவை அரசியல் பிரச்சனைகளாக அடையாளப்படுத்தப்படாமல் போயின - மாறாக, இவை (ஒருவரின்) சொந்தப் பிரச்சனைகளாயின; சொந்தப் பிரச்சனைகளாகக் கருதப்பட்டன.

கிளாரா ஜெட்கினுக்கும் லெனினுக்கும் நடந்த அந்த முக்கியமான உரையாடலின் போது அவர் அந்த அம்மையாரைக் கடிந்து கொண்டாராம்: ''உழைக்கும் பெண்கள் படிக்கவும், பேசவும், விவாதிக்கவும் கூட்டப்படும் கூட்டங்களில் பாலியல், திருமணம் குறித்துதான் பேசுகிறார்கள் என்று சொல்கிறார்கள். என்னால் இதை நம்பவே முடியவில்லை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் ஒரே பிரதிநிதியான நமது அரசு எதிர்ப் புரட்சியாளர்களுடன் போராடிக் கொண் டிருக்கையில், ... கம்யூனிசப் பெண்கள் இங்கு பாலியல் பிரச்சனைகள் குறித்து மும்முரமாகப் பேசிக் கொண்டிருக்கின்றனர்.''

பிரிட்டிஷ் புரட்சியாளர்கள், லெனினைப் பின்பற்றியவர்கள் உட்பட, இவ்வாறுதான் சிந்தித் தனர் என்று சொல்லிவிடமுடியாது. ஆனால் மிகச் சிலரே, அதுவும் இந்த 20 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வர்களில் மிகச்சிலரே, இந்த நிலைப்பாட்டினை எதிர்த்தனர். எனவே தான் 1970களில் சோசலிச பெண்ணியலாளர்கள் ஒரு இயக்கமாக ஒன்றிணைந்த போது ''(பெண்களின்) சொந்தப் பிரச்சனையும் அரசியல் பிரச்சனையே'' என்று முழங்கினர்; ஆணாதிக்கத் தன்மையுடைய இடதுசாரி அமைப்பு களுக்கு சவால்விடுத்தனர். பெண்செயலாளர் (19 ஆம் நூற்றாண்டில்) முன்நிறுத்திய பிரச்சனைகள் மறைய வில்லை. அவற்றைப் பற்றிப் பேசத்தகுந்தவர்கள் தலையெடுத்தவுடன் அமுக்கப்பட்டிருந்த அவை மேலெழும்பின.

கடந்த காலத்துக்கு தற்காலமானது எப்போதுமே தாழ்ப்பணிய வேண்டியதுதான். தற்கால நிலைப் பாட்டிலிருந்து கடந்த காலத்தை நாம் நோக்குகையில் ஆரம்பகால சோசலிச சிந்தனை பக்குவமற்றதாகவும் செயல்பாட்டுக்குப் பயனற்றதாகவும் நமக்குத் தோன்றலாம். இந்தக் கருத்தை நாம் ஏற்றுக் கொண்டாலும் கூட பிற்கால மார்க்சியவாதிகளின் சிந்தனையை விமர்ச்சிக்கவும் வேண்டியுள்ளது. பிற்கால மார்க்சியம் கற்பனைவாத சோசலிசத்தை மறுதலித்தது என்றாலும், அத்தகைய மறுதலிப்பினூடாக மறுதலித்தவர்களின் சிந்தனை வரம்புகள் வெளிப்படுவதை நாம் காண வேண்டும். அந்த சிந்தனை மரபில் வழிமுறைகள் இலக்கு ஆகிய இரண்டுமே சுருங்கிப் போயின, இதனால் அம்மரபு முன்வைத்த விடுதலை மார்க்கமும் குறிப்பாக பெண் விடுதலை மிகவும் பாதிக்கப்பட்டது. எனவே (என்னைப்போன்ற) சோசலிச பெண்ணியலா ளர்கள் ஒவெனைட்டுகளை வாஞ்சையுடன் நினைத்துப் பார்க்கிறோம் என்றால், அது ஏக்கத்தின் பாற்பட்டன்று, நடந்து முடிந்து போன யுகமொன்றின் தன்மையை நினைத்து பெருமூச்சுவிடுவதற்காக ஒவெனைட்டு களை நாம் நினைவு கூறவில்லை. அவர்களது அரசியல் பாதையினூடாக நமக்குரிய வழியை, சனநாயக - கம்யூனிச இலக்கையடைவதற்கான வழியைத் தேடியடைந்து, நவீன மார்க்சிய இயக்கங்களின் இலட்சியங்களை வரையறுக்க முயற்சி செய்து கொண்டிருக்கும் நமது தற்காலத் தேடல்களுக்கான ஆதாரத்தைப் பெறவே இதை நாம் செய்கிறோம். கனவுகள், கற்பனைகள் என்று சில முடிவுகளை, இலக்குகளை நாம் அடையாளப்படுத்தலாம். ஆனால் அதுவல்ல பிரச்சனை. அவ்வாறு அடையாளப் படுத்தப்படுவதன் ஆளுமை, நோக்கு - இவற்றின் தன்னிலை - ஆகியன தான் முக்கியமானவை.

**தமிழில் : வ.கீதா**

**குறிப்புகள்**

ஒவெனைட்டுகள்: ராபர்ட் ஒவென் என்ற 'கற்பனை வாத' சோசலிஸ்டைப் பின்பற்றியவர்கள். தொழிலதிபராக வாழ்க்கையைத் தொடங்கிய ஓவென் பின்னர் கூட்டுறவு, கூட்டுவாழ்வு என்ற அடிப்படையில் இலட்சியக் குழாம்கள் பலவற்றை உருவாக்கினார். தொழிலாளர் உரிமைகள், பெண்ணுரிமை, கூட்டு வாழ்வு ஆகியவற்றின் முக்கியத் துவத்தை வலியுறுத்தி சிந்தித்தார், செயல்பட்டார்.

சாசனவாதிகள் : 1836 இல் இங்கிலாந்தில் நிறுவப்பட்ட இலண்டன் தொழிலாளர் சங்கம் தேர்தல் சீர்திருத்தங்கள் குறித்த கோரிக்கைகள் அடங்கிய திட்டத்தை வெளியிட்டு, அதை நிறைவேற்றும் பொருட்டு ஒரு இயக்கத்தைத் தொடங்கியது. அத்திட்டம் ''மக்கள் சாசனம்'' என்றழைக் கப்பட்டது. அந்த சாசனத்தையொட்டி இயக்கமாக செயல் பட்டவர்கள் 'சாசனவாதிகள்' என்று அழைக்கப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com



# நவீனத்துவத்தைக் தேடும் முயற்சியில் தலித்துக்கள்

கோபால் குரு

துவக்கத்தில் ஒரு தெளிவுப்படுத்தலோடு நான் இதைத் தொடங்குகின்றேன். இக்கட்டுரையில் தலித்துக்களின் மீது, நவீனத்துவம் எதுவென்று ஏற்கெனவே சொல்லப்பட்ட ஒரு பொருளைத் திணிக்க நாம் முயற்சி செய்யவில்லை. உண்மையில், விடுதலைக்கான அவர்களின் போராட்டத்தின் மூலமாக தலித்துக்களாலேயே உருவாக்கப்பட்டு உணரப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட நவீனத்துவம் பற்றியே நாம் இங்கு பேசுகிறோம். ஆகையால் இக்கட்டுரை நவீனத்துவத்தின் வரலாற்று ரீதியான பயணம், மற்றும் அது குறித்து தலித்துக்களின் ஒத்திசைவாக எதிர்வினை ஆகிய இரு கூறுகளிலும், குறிப்பாக இயல்பான காலூன்றலில், எவ்வாறு இந்த நவீனத்துவத்தின் மேலும், இருபத்தியொன்றாம் நூற்றாண்டில் தலித்துக்களின் தளையறுத்து விடுதலை பெறும் போராட்டச் செயல்பாடுகளை எவ்வகையில் இந்த நவீனத்துவம் உருவாக்கும் என்றும் இக்கட்டுரை வினவுகிறது.

தலித்துக்களைப் பொறுத்தவரையில் சமத்துவம் சுதந்திரம் மற்றும் கவுரவம் தன்மானம் மற்றும் அங்கீகாரம் ஆகியவற்றைப் பெறும் மொழியை வழங்கும் என்ற அடிப்படையிலேயே நவீனத்துவம் பார்க்கப்படுகின்றது. பச்சைத்தோல் மற்றும் இறந்த கால்நடைகளின் இறைச்சி, எஞ்சிய பழையஉணவு மற்றும் பழைய ஆடைகள் மீதான உரிமை போன்ற எதிர்மறையான உரிமைகளை மட்டுமே தவிர்க்க முடியாததாக சுமத்தியிருந்த கடமைப் பொறுப்பின் மொழியை தலித்துக்கள் மறுதலித்ததிலிருந்துதான் இப்புதிய மொழி வளர்ந்தது. இவையெல்லாமே இந்து - நிலவுடைமை அமைப்பின் கீழ் தலித்துக்களை இழிவு படுத்துவதற்கே பயன்பட்டன. இந்திய மற்றும் மேலை நாடுகளின் தளையறுக்கும் விடுதலை மரபுகளிலிருந்து அவர்கள் கற்றுக்கொண்ட சமத்துவ மொழி, தீண்டாமையைப் பயின்று ஒதுக்கி வைக்கும் இந்துத்துவ மரபுகளை கேள்வி கேட்பது மட்டுமல்லாமல், நவீனத்துவ அறிமுகச் சான்றுகள் (திறன், ஆற்றல், செய்நேர்த்தி) அடிப்படையில் எல்லா விதமான வாய்ப்புகளுக்கான கட்டமைப்பிற்குள் தங்களை உட்படுத்திக்கொள்ளப் போராடவும், அவர்கள் ஊக்கம் கொள்ளவும் வைத்தன. இவ்வாறு, சமத்துவ உணர்வும், தன்மான உணர்வும் நவீனத்துவத்தை அடைவதற்கான தலித்துகளின் முயற்சிகளுக்கு இயல்பான தளத்தை வழங்கியிருக்கின்றன.

சுதந்திரம் மற்றும் தன்னுரிமை பற்றிய மதிப்பீடுகளை நவீனத்துவம் அளித்திருக்கின்றது; உடல் உழைப்பு மற்றும் மூளைசார்ந்த உழைப்பு ஆகிய இருவகையிலுமே தலித்துகளைச் சுரண்டுவதற்காகப் பயன்படும் 'வெட் பிகாரி' அமைப்புக்கு மாறாக காலத்தால் உறுதி செய்யப்பட்ட மற்றும் முறைப் படுத்தப்பட்ட கருத்துக்களின் மூலம் அதனை அடைய முடியும். தலித்துக்களுக்கு, இந்துக்களுடன் அதிக அளவில் ஒருவருடனொருவர் கலந்து செயல்படும் சமூக ரீதியான உறவுநிலையில் அவர்களை இருக்கச் செய்யவும் புழங்குவதற்குமான (நடமாடுவதற்கான) நிலப்பரப்புத் தளத்தை மறுகட்டமைப்பு செய்வதற்கும் கூட நவீனத்துவம் உறுதியளித்துள்ளது. தூய்மை (மடி) - தீட்டு எனும் கருத்தியல் கட்டமைப்பின் உதவியுடன் மேல்சாதிகளால் காக்கப்பட்டுவந்த எல்லைகளுக்குள்ளாகவே தலித்துக்களை முடக்கி வைத்த 'இந்து' கட்டுப்பாட்டு முகாம்களுக்கு முரணாக இந்த நவீனத்துவம் இருந்தது.

இவ்வாறு தலித்துக்கள், கருநாடகத்தில் ஹொலகேரி, மகாராஷ்ட்ராவில் மஹர்வாடா, தமிழகத்தில் பறைச்சேரி என்பனபோன்ற தலித்துக்கள் தனித்துத் தெரியும்படியான பகுதிகளில் பிரித்து வைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு, இந்தியாவில் நவீனத்துவத்தின் வளர்ச்சி, முதலாளித்துவ வளர்ச்சியின் தவிர்க்க முடியாத போக்கோடு கொடுமையான பண்பாடா சமூகத்தை நாகரீகப்படுத்தவும் உறுதியளித்தது. காலனிய ஆட்சி கால கட்டத்திலும் விடுதலைக்குப் பிறகான இந்தியாவிலும் எந்த அளவுக்கு இந்த உறுதி மொழியை, நவீனத்துவமானது நிறைவேற்றியுள்ளது என்பதை நாம் அலசிஆய்வோம்.

## வணிகவகுப்பு நவீனத்துவத்தின் வரையறை (எல்லைகள்)

தலித்துக்களுக்கு ஆக்கபூர்வமான உரிமைகள் முழுமையாக மறுக்கப்பட்டிருந்த நிலையோடு ஒப்பிடும்போது, காலனிய நவீனத்துவமும் அதற்குப் பின்னான அரசியல் அங்கங்களும் மற்றும் பல்வேறு அரசு சமூகநலத் திட்டங்களும் இயலுகின்றவகையில் தலித்துக்களுக்கு ஒருவகையான வாய்ப்பை வழங்கியிருப்பது என்னவோ உண்மைதான். எப்படியாயினும், காலனிய நவீனத்துவத்தின் 'வாய்ப்பு' என்னும் பக்கம் தீவிரமான வரையறைகளைக் கொண்டிருந்தது. வல்லரசியலாளர்களும் உள்நாட்டு முதலுடைமையாளர்க்கும், தலித்துக்களின் குடிசைகளுக்குள்ளேயே தலித் உழைப்பாளிகளை அடைத்து வைப்பதற்கும், தொழிற்சாலைகளில் அவர்களை



படிப்பகம்

www.padippakam.com



உடலுழைப்பு சார்ந்த பணிகளுக்கும், அல்லது சாக்கடை, கழிவுநீக்கம் தொடர்பான பணிகளுக்கு மட்டும் ஒதுக்கி வைக்க தீட்டு-தூய்மை (மடி) என்னும் கருத்தில் கட்டமைப்பைப் பயன்படுத்தினர். அதே போன்று, மேல்சாதி தொழிலாளர்கள், ஓரளவு நல்ல ஊதியத்தைத் தந்த வேலைகள் கொண்ட ஆலைகளின் சில குறிப்பிட்ட பிரிவுகளுக்குள் தலித் தொழிலாளர்கள் நுழைவதை மறுத்தனர். மேல்சாதித் தொழிலாளர்கள் மற்றும் உள்ளூர் முதலுடைமையர்கள் ஆகிய இருபகுதியினரின் நலவிருப்பங்கள், நவீனத்துவம் - மரபு இரண்டும் ஒன்றிணைந்த உறவு கொண்டிருக்கும்படி வைத்தன; அந்நிலை தொழிற்சாலைகளிலும் தொழிலாளர்வகுப்பு குடியிருப்புகளிலும் தீண்டாமையை மறுஉருவாக்கம் கொள்ளும் படி கொண்டு சென்றது. காலனிய நவீனத்துவம், தலித்துக்களுக்கு ஒரு கலவையான கொடையாகும்; காரணம், அது ஒரு புறம் அடிமைத்தளையை (நிலவுடைமை அடிமைத்தனத்தைப் பொறுத்தவரையில்) விடுதலையை நோக்கி இட்டுச் செல்கிறது, அதே நேரத்தில் விடுதலையின் எல்லைகளை விரிவுபடுத்த இயலாத தனது தன்மை காரணமாக கட்டுப்படுத்தவும் செய்கிறது.

நாட்டு விடுதலைக்குப் பின்னுள்ள கால கட்டத்தில், பல்வேறு நிலைகளில் பலவகையான வாய்ப்புகளிலிருந்தும் தலித்துக்களை வெளியேற்றுவதைத் தடுத்து நிறுத்தி பலன்பெறச் செய்வதை அரசாங்கத்தின் சமூகநல கொள்கைகளும் அரசியல் சட்டமும் நோக்கமாகக் கொண்டிருந்தன. எடுத்துக்காட்டாக, தொடக்கக் கல்வி, தொழில்கல்வி ஆகியவற்றையும் மற்றும் தொழில்நுட்ப கல்வியையும் தலித்து மக்கள் பெறமுடிந்தது. அவர்களில் சிலர், மூன்றாம் தரப் பணிகளையே பெற்றனர், அதே நேரத்தில் சிலர் நாடாளுமன்றத்திலும் சட்டசபைகளிலும் நுழைந்துள்ளனர். அவர்களில் சிலர் தங்களின் வாழ்க்கை முறையையும் கூட, மேற்கத்திய பாணியை மாதிரிகளாகக்கொண்டு மாற்றிக் கொண்டுள்ளனர். இருந்தபோதிலும் அரசாங்கத்தின் அல்லது இந்து (அரசு சாராத சாதாரண மக்கள்) சமுதாயத்தின் அங்கீகாரமின்மையின் காரணமாக நவீனத்துவம் பாதிக்கப்பட்டுள்ளது என்பது தலித்துக்களின் முறையீடு. இந்திய அரசு, தலித்துக்களுக்காக அதிக அளவில் கவுரவமான, தன்மதிப்பான வாழ்க்கைக்காக மாற்றுத் தொழில்களை அளிக்க முடியாததால் இந்த உரிமை முறையீட்டை, உரிமைக் கோரிக்கையை அங்கீரிக்கத் தவறிவிட்டது. ஒரு 'இந்து மனநிலை' கொண்ட சாதாரண குடிமக்கள் சமூகத்தால் சமூக ரீதியாக இழிவானதாகவும் தீண்டத்தகாததாகவும் கருதப்படும் வாழ்க்கைத் தொழில்களான துப்புரவுப்படுத்தும் வேலை, கழிவுப்பொருட்களை அப்புறப்படுத்துவது, தோல் பதனிடும் தொழில் மற்றும் தற்போது காகிதக் குப்பைகளைப் பொறுக்குவது ஆகியவற்றுடன்மட்டுமே அவர்கள் தங்களைத் தாங்களே முடக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. நகர்ப்புற ஆட்சிப் பொறுப்பாளர்கள் சாதி அடிப்படையிலான தனிக் குடியிருப்புகளைத் தளர்வடையச் செய்யவும், கலப்புக் குடியிருப்புக்களை உற்சாகப்படுத்தவும் எடுத்துக்கொண்ட அரை மனதுடனான முயற்சிகளுக்குப் பிறகும்கூட அம்முயற்சிகள் இந்திய நகரங்களில் 'தலித் குடியிருப்புகள்' (குடிசைப் பகுதிகள்) மீண்டும் உருவாவதிலேயே முடிந்துள்ளன.

தலித்துக்கள் உடல்சார்ந்து பிரித்து வைக்கப்பட்டிருப்பதால் மட்டும் தொல்லைப்படவில்லை; அவர்கள் பொருட்களை வாங்குமிடம் என்றவகையிலும் கடைகண்ணிகளைப் பிரித்து வைத்தல் என்னும் வகையிலும் கூட பலியாகியுள்ளனர். போதுமான வாங்கும் சக்தி இல்லாமையின் காரணமாக, சமூக ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் தாழ்ந்தது என்று கருதப்படும் (சனிக் கிழமை, ஞாயிற்றுக்கிழமைச் சந்தைகள்) ஒன்றுக்கும் உதவாத, கழித்துக்கட்டப்பட்ட பொருட்களை விற்கும் கடைப்பகுதிகளுக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தன்மதிப்பு மற்றும் சமத்துவ உணர்வை தலித்துக்களுக்கு அளிக்கக்கூடிய ஒரு புதிய களத்தை (வாழுமிடங்களை) நவீனத்துவம் தோற்றுவிக்கவில்லை. காலம் பற்றிய முடமானதும், முழுமையற்றதுமான ஒரு உணர்வையும் அதற்கிடான கருத்தையுமே அது தலித்துக்களுக்கு அளித்துள்ளது.

வேலைவாய்ப்புச் சந்தையின் ஒரு பிரிவில் வரையறுக்கப்பட்ட வேலைநேரத்தை அடைந்ததன் மூலம் தங்களின் நேரத்தின் மீதான பிடிமானத்தை தலித்துக்கள் தற்போது அடைந்து வருவதாகத் தெரிகின்றது. ஆனால், போதுமான விளைவைத் தரும் வாங்கும் சக்தியின்மையின் காரணமாக சந்தைக் கடையின் மற்றொரு பகுதியில் தங்களின் நேரத்தின் மீதுள்ள பிடிமானத்தை அவர்கள் இழக்க நேரிடுகின்றது. இதற்கு முன்பு கூறியதைப்போல, பொருட்கள் புத்தகம் புதியனவாகவும் தரம் உயர்ந்ததாகவும் கிடைக்கும் (உரிய) முதன்மை நேரத்தில் அவர்கள் அங்கிருப்பதிலிருந்து தடுக்கப்பட்டிருப்பதே காரணமாகும். தலித்துக்கள் அல்லது ஏழ்மையான ஒருவர், பொருட்கள் குறைந்தவிலையில் கிடைக்கும் நேரத்திலும் தரம் குறைந்ததாகப் போய் விடும் நேரங்களிலும் தான் கடைக்கு / சந்தைக்குப் போக வேண்டும். வறுமை அவர்களை, தரம் குறைந்த வாழ்க்கைக்கே தள்ளிக் கட்டிப் போடுகின்றது. சார்ந்திருக்கச் செய்யப்பட்ட இந்த 'நேர' உணர்வுடன் சேர்த்து மற்ற ஏழைகளைப் போலவே தலித்துக்கள், நேர இழப்பினாலும் கூட தொல்லைப் படுகின்றனர். தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கும் பொருளாதாரத் தேவை (சுதந்திரமற்ற நிலை) அவர்களை ஒன்றுக்கும் மேற்பட்ட முதலாளிகளிடம் (வேலை தருவோரிடம்) பலமணி நேரம் உழைக்க வைக்கின்றது. மற்றது அவர்கள் பல வேலை நேரக் கட்டங்களில் (ஷிப்ட்ஸ்) உழைப்பதினாலும் கூட தங்களின் நேரத்தின் மீதான பிடிமானத்தை இழக்கச் செய்கின்றது. நேரம் மற்றும் இடம் பற்றிய ஒப்பு நோக்கில், முறைப்படுத்தப்பட்ட உறுதியான உணர்விலிருந்து புறந்



படிப்பகம்

www.padippakam.com



தள்ளப்பட்ட இந்த ஒதுக்கல், தலித்துக்களின் நவீனத்துவ தேடல் முயற்சியை வெற்றிக் களிப்பிலாழ்த்தாவிட்டாலும் துயரமானதாகவே செய்கின்றது.

சமூகரீதியாக பலபடிகள் கொண்ட சமுதாயம், தலித்துக்கள் நவீனத்துவ உரிமைக் கொண்டாடல்களை ஏற்றுக்கொள்ள மறுத்தே வருகின்ற காரணத்தால், தலித்துக்கள் (அவர்களுக்குள்ளும் உயர்நிலையிலுள்ளோர் மட்டும்) நவீனத்தைக் குறித்து உரிமை கொண்டாடுவது மற்றொருவகையில் ஒரு சோகமாகவே ஆகியுள்ளது. மக்கள் சமூகம், அவதூறு, பழிப்பு, வீண்வார்த்தைப்பேசல் ஆகியவற்றின் மூலம், இழிவுபடுத்தும் வசைச்சொற்களை வாரியிறைப்பதன் மூலமும், தீயநோக்கோடு சாதியப் பிரச்சாரம் செய்தல் போன்றவற்றாலும் தலித் நவீனத்துவ ஆர்வலர்களிடம் கடைபிடிக்கும் புண்படுத்துகின்ற போக்கு மூலமும் தலித்துக்களின் அத்தகைய உரிமைக் கொண்டாடல்களை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றது. இத்துடன், நவீனத்துவம் குறித்த இருபிறப்பாளர்களின் உரிமை கொண்டாடலும்கூட ஆட்டம் கண்டு அர்த்தமிழந்து போகிறது என்று குற்றம் சாட்டுவதன் மூலம் தலித் நவீனத் துவத்திற்கு உணர்வூட்டப்பட்ட அச்சுறுத்தலும் தொடர்ந்து நிலவுகின்றது. மேல்சாதிகள், தலித்துக்களை ஊக்கமிழக்கச் செய்து செயலின்மை நிலைக்குள் (நவீனத்துவத்திற்கு எதிரான செயலில்) வீழ்த்துவதற்காக நவீனத்துவத்தின் சூழ்ச்சித் தந்திரங்களையும் கூட கட்டவிழ்த்துவிடுகின்றன. 'தங்களின் சொந்த சமூகத்தோடு பழகும் போக்கிலும்கூட, வேற்றுமை பாராட்டாமை, நடுநிலைவகித்தல் எனும் நவீனமயமாக்கல் கோட்பாடுகளை மிகமிகக் குறைவாகவே தலித்துக்கள் பின்பற்றுகின்றனர்'. இந்த சூழ்ச்சித் தந்திரம் இரு சிக்கல்களைக் கொண்டுள்ளது. ஒன்று, மேலே குறிப்பிட்டதைப் போல, அந்த அங்கீகாரத்தை அளிப்பதற்கு என்றுமே தயாராக இல்லாத இருபிறப்பாளர்களால் அதிகாரபூர்வமாக உறுதியாக்கப்பட்ட நவீனத்துவத்திற்கு தங்களின் உரிமை கொண்டாடலை அடைய தலித்துக்கள் எப்போதும் முயற்சி செய்ய வேண்டும் என்று அது கூறுகின்றது; இரண்டாவதாக, இருபிறப்பாளர்களின் நவீனத்துவ உரிமைக்கோரலை, பரிசீலனைக்கு அப்பாற்பட்டதாகவே அது வைக்கின்றது. இருந்த போதிலும், உலக அளவில் தீர்மானிக்கப்பட்ட விதிகளின்படி தேடுவதைவிட, இருபிறப்பாளர்களால் அமைக்கப்பட்ட விதிகளின் படியே நவீனத்துவத்தின் அதிகாரபூர்வமான நம்பகத் தன்மையைத் தேடும் தலித்துக்களே எண்ணிக்கையில் நிறைய உள்ளனர். இத்தகைய தலித்துக்கள் முதலில் குடும்பத்தோடுள்ள, இறுதியில் தம் சாதிசமூகத்தினுடனான எல்லா உணர்வு சார்ந்த மற்றும் பண்பாடு சார்ந்த கட்டுக்களையும் அறுத்துக் கொள்வது போன்ற பெருந்தியாகங்களை மேற்கொள் ளவும் தயாராக உள்ளனர். சிந்தனையற்ற இந்த நவீனத் துவத்திற்கான தேடல் முயற்சியில் அவளது / அவனது சொந்த சமூகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் மீதே அன்பு இடம் பெயர்ந்து, புறக்கணிப்பு, ஏளனம், அவமதிப்பு தனிப்பட்ட வெறுப்பு முதலியவை இடம் பெறுகின்றன. நவீனத்துவத்தை நோக்கிய பயனற்ற இந்தத் தேடல் முயற்சி, அவரது சொந்த சமூகத்திற்கே ஏதாவது கடப்பாட்டுதவியை செய்யக்கூட மறுக்கும் அளவுக்கு ஒரு முழுமையான ஒழுக்கமற்ற தனிமனித தன்னல வாதத்தில் ஒரு தலித்தைக் கொண்டு சேர்க்கின்றது.

இந்த நவீனத்துவத் தேடல்முயற்சி, இரண்டு பெரும் தளங்களில் தலித்துக்களாலேயே மிகக் கடுமையாக விமர்சனத்துள்ளாக்கப்பட்டு வந்திருக்கின்றது. ஒன்று, குழுக்களுக்கிடையிலான சமத்துவம் என்னும் கோட்பாட்டின்படி நடக்க அது தவறி விட்டிருக்கின்றது. இந்த வகையான தலித் நவீனத்துவத்திற்கு எதிரான ஒரு புண்படுத்தும் விமர்சனமாக தலித்துக்களால் பயன்படுத்துகின்ற மற்றொரு தளமாக சாதிசமூகபற்றாண்மையும் இருக்கின்றது. ஆந்திராவின் மாதிகர்கள், மகாராஷ்ட்ராவின் மாங்க்குகள், கர்நாடகாவின் ஆதிதிராவிடர்கள், தமிழ்நாட்டின் சக்கிலியர்கள் போன்ற விளிம்புநிலை சாதிகளால், மறுப்பு கண்டன எதிர்ப்புக் குரல்கள் எழுப்பப்படுகின்றன. அவர்கள், குழுக்களுக்கிடையிலான சமத்துவத்தைக் கோருகின்றதைப்போல அவர்களைத் தூண்டும் உந்துசக்தி படைப்பாற்றல் உள்ளதாக இருக்கும்போது, துரதிர்ஷ்டவசமாக, இந்த எதிர்ப்புக்குரல்களால் மாற்றாகத் தேர்ந்தெடுத்துக்கொள்ள முயல்வது, சமத்துவமின்மையின் கட்டமைப்பைப் புதிப்பிப்பதும் உறுதிப்படுத்துவதுமான அதே பிற்போக்காளர்களின் கருத்துரை சட்டகத்திற்குள்ளிருந்துதான். சமத்துவ நோக்கின் பொருள்விளக்கத்தின்படி (வரையறையின்படி) அது, எல்லையற்ற சார்புநிலை கொண்டது, தனக்குள் ஒரு சிலருக்கு மட்டுமே இடமளித்து, பெரும்பகுதியினரை விலக்கி வைப்பது. ஆனால், கட்டாயப்படுத்தப்பட்ட நவீனத்துவத்திற்கு எதிராக எழுப்பப்படும் வெளிப்படையான வெளிப்பாடு, ஒருவகையான உட்பகை சார்ந்த போரில் கொண்டுவிட்டிருக்கின்றது; இது, வலதுசாரி பிற்போக்கான இந்துத்துவ சக்திகளால் மேலும் தூண்டிவிடப்பட்டு தீவிரமடைகின்றது. இது குறித்து வெவ்வேறு மதச்சிறுபான்மையர் மற்றும் எண்ணிக்கையற்ற மற்ற சிறு சாதியினர்களிடமிருந்து வரும் இடஒதுக்கீட்டுக்கான கோரிக்கைகள் ஒருவழியில், அதே நிகழ்ச்சிப் போக்கின் (Phenomenon) இந்த இரு பரிமாணங்களையும் ஈடுபடுத்திய இக்கட்டான இரண்டுங்கெட்டான் நிலையை வெளிப்படுத்துகின்றது.

காயம்பட்ட அல்லது மாசுகற்பிக்கப்பட்ட இந்த தலித் நவீனத்துவம் சந்தித்த வேறொரு சூளுரை என்பது தலித்சமூகப்பற்றாண்மையிலிருந்து வருகின்றது. இத்தகையவர்களின் விமர்சனம், அடிப்படையில், ஆணோ-பெண்ணோ, தன்னுடைய சமூகத்தைப்பற்றி பிடிப்பும் ஈடுபாடுமற்ற, தொடர்புமற்ற ஒரு பார்வையை வளர்த்துக் கொண்டிருக்கின்ற இந்த நவீனத்துவ தலித்துக்கு எதிரான ஒரு எதிர்நடவடிக்கையாகும். இத்தகையர்வர்களுக்கு எதிராக தலித் சமூகப் பற்றாண்மையின் கோபம், புதுமையான முறையில்



படிப்பகம்

www.padippakam.com



சுருக்கப்பட்டு 'தலித் பிராமணன்' என்னும் சொல்லாடலாக வெளிப்படுகின்றது. இவ்வாறு சமூகப்பற்றாண்மைத் தலித்துக்கள், அதை பார்ப்பனியத்துடன் இசைப்பதன் மூலம் எதிர்மறையான பாணியில் தலித் நவீனத்துவத்தை மாசுபடுத்த முயல்கின்றனர். நவீனத்துவ தலித் பற்றிய இந்த சமூகபற்றாண்மையரின் விமர்சனக் குறிப்பு, அடிப்படையில், இரு அக்கறைகளிலிருந்து எழுகின்றது. ஒன்று, நவீனத்துவ தலித்துக்களின் பண்பாடு சார்ந்த வேறுபாடான வாழ்க்கை முறையுடன் தொடர்புடையது; இரண்டாவது பெரும்பாலும் ஒரு மேல் சாதிப் பெண்ணுடன் சடங்குமுறையோடு இணைந்த (சாதிக்) கலப்புத் திருமணத்தோடு தொடர்புடையது. ஒருவேளை, இரண்டு காரணங்களுக்காக இரண்டாவதானது தலித் சமூகப்பற்றாண்மையரால் மிகவும் தீவிரமான வகையில் உளம் நொந்து அரற்றப்படலாம். ஒன்று, அதன் விளைவாக இருவித இழப்பு நேரிடுகின்றது - சமூகம் சார்ந்தது மற்றும் பண்பாட்டு-உணர்வு ரீதியானது. இது ஒரு சமூக இழப்பு: ஏனென்றால், இந்த அன்னிய மேல்சாதிப் பெண்ணால் பறிக்கப்பட்டுவிட்ட அந்த நல்ல வாழ்க்கை ஒரு தலித் பெண்ணுக்குக் கிடைக்காமல் போய்விட்டது. (இங்கு ஒரு நல்ல வாழ்க்கையை ஒரு தலித் நபரால் அளிக்க இயலும், விருப்பமும் இருக்கும் என்றே வைத்துக் கொள்வோம்). இரண்டு, இது அந்த நபரின் பெற்றோர்களுக்கு மற்றும் முழு சமூகத்திற்குமே ஒரு பண்பாட்டு ரீதியான மற்றும் உணர்வுரீதியான இழப்பாகவும்கூட கருதப்படுகின்றது. இக்கருத்தோட்டத்தில், அந்த தலித் பையன் என்றைக்குமாக ஒரு 'விஷக் கன்னியிடம் இழக்கப்பட்டதாகவே கருதப்படுகிறான். இந்த உருவகச் சொல்லாடல் சில தீவிர சமூகபற்றாண்மை ஆர்வலர்களால் ஒரு மேல்சாதிப் பெண்ணைக்குறித்து பயன்படுத்தப்படுகின்றது; அவர்களைப் பொறுத்த வரையில், அவள் தான், சொந்தச் சமூகத்தோடுள்ள எல்லா பந்தங்களையும் புறக்கணிக்கும்படி அவனைக் கட்டாயப்படுத்துகிறாள் என்று கருதுகிறார்கள்.

## இருபத்தொன்றாம் நூற்றாண்டில் தலித்துக்கள்

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் தலித் சமூக பற்றாண்மையர்கள் தங்களுக்கான ஆதரவாளர்களைக் கண்டடைவார்களா? இரண்டு காரணங்களுக்காக இந்த வினாவுக்கு எதிர்மறையில்தான் விடையளிக்க முடியும். முதலாவது, இதற்கு முன்பு வரையறுத்துக் கூறியிருந்ததைப் போன்று நவீனத்துவத்தைத் தங்களுக்கு மறுக்கின்ற காரணத்தால் அப்போக்கை எதிர்க்கின்ற விழிப்புணர்வு பெற்ற தலித் பெண்களிடமிருந்து ஒரு கடுமையான சவாலை சமூகப்பற்றாண்மையரால் (கட்டுப்பாடான ஒழுங்கை நிலைநாட்டும் முயற்சியாக) சந்திக்க வேண்டியிருக்கும். முதன்மையாக தலித் ஆணாதிக்க வாதிகளால் வெளிப்படுத்தப்படும் இந்த சமூகப் பற்றாண்மை வாதத்தை, தலித் பெண்களில் சிலர் ஏற்கெனவே கேள்வி கேட்கத் துவங்கிவிட்டனர். இரண்டாவது, நடுத்தர தலித் வகுப்பினரின் பண்பாட்டு நாட்டங்களால் விரிந்துவரும் சமூக அடிப்படை, குறைந்தது வரும் இரண்டு பத்தாண்டுகளுக்காவது, குறிப்பாக நாட்டின் மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் (சாதிக்) கலப்புமணத்தின் தேவையை தொடர்ந்து மாற்றியமைக்கும். 'விஷக் கன்னி' என்னும் அந்த உருவகச் சொல்லாடல், இவ்வாறாக மேல்-சாதிப் பெண்களைக் குறிப்பிடுவதிலிருந்து தலித் பெண்களைக் குறிப்பிடுவதற்கு மாற்றப்படும் என்பதை இது முரண்எள்ளலாக உணர்த்துகின்றது. தனித்தன்மையாக்கப்பட்ட, உள்ளுணர்வுசார்ந்த அகநிலைக்கான வளர்ந்து வரும் கவர்ச்சி ஈர்ப்பு, தங்களின் சுதந்திரத்தையும் தன்னிருப்பு உரிமையையும் அடக்கியாள்வதை தலித் பெண்களே கேள்விக்குட்படுத்துகின்ற நிலையில், இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டில் சமூக பற்றாண்மைவாதத்திற்கு, தலித் பெண்களை பண் பாட்டு ரீதியாக ஊமைகளாக இருக்கவிடாது. நாட்டின் சில பகுதிகளில் இது ஏற்கெனவே தோன்றி வளர்ந்து வருகின்றது. இவ்வாறு இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும்கூட, தலித் பெண்களைப் பொறுத்த வரையில் நவீனத்துவவாதப் போக்கு சமூகத்திற்குள்ளேயே ஒரு மெய்ப்பொருளியல் வேறுபாட்டை உருவாக்குவதில் மீண்டும் ஒருமுறை ஒரு பெரும் பங்கை வகிக்கும். ஆனால், இம்முறை அது பாலியல் அடிப்படையிலிருக்கும். எப்படியாயினும், பண்பாட்டு ரீதியில் கூறுவதானால் பிற்போக்காளர்களின் நவீனத்துவ அடிப்படையிலேயே அமைகின்ற உற்பத்திக்கான உழைப்பிலிருந்து பொதுவாக பெண்கள், குறிப்பாக தலித் மகளிர் வெளியேறச் செய்யக் கட்டாயப்படுத்தப் படுகின்ற நிலையில், குறிப்பாக உலகமயமாக்கலின் இக்காலகட்டத்தில் இதற்கு ஓரளவு வெற்றியே கிடைக்கும். இவ்வாறு இருபத்தொன்றாம் நூற்றாண்டு தலித் மகளிருக்கு ஒரு இக்கட்டான நிலையை முன் வைக்கும்; இவர்கள் இந்த நவீனத்துவம் தங்களுக்கு உதவும்; குறிப்பாக, பொதுவான தந்தைவழி அமைப்பு முறை மற்றும் தலித் தந்தைவழி அமைப்பு முறையினாலும் கூட தங்களின் சுயத்தை மறுக்கின்ற விஷயத்தில் இந்த நவீனத்துவம் உதவும் என்று இவர்கள் கருதுவார்கள். ஆனால், மற்றொருபுறம், முதலாளித்துவ அமைப்பு முறையில் ஒரு பொருளியல் அடிப்படையற்ற இத்தகைய நவீனத்துவத்தைப் புரிந்துகொள்வதற்கு அவர்கள் மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கும். இது ஒரு பொய்யான அல்லது காயமடைந்த நவீனத்துவ உணர்வில் வந்து முடியும்.

இக்காரணங்களால், நவீனத்துவம் என்னும் குழந்தையைத் தொட்டிநீரோடு தூக்கியெறிந்து விடுவார்களா? இது, பொருளியல் நிலைமைகளின் இயங்கியல் வெளிபாட்டைப் பொறுத்திருப்பதால், அதற்கான விடை திட்டவட்டமாகக் கூறமுடியாத ஒன்றாகும். கருத்தியலளவில் தலித்துக்கள் நவீனத்துவத்தை நோக்கி தொடர்ந்து ஈர்க்கப்படும் உணர்வோடுதான் இருப்பார்கள். நம்மால், இன்னமும் இழிவானதாகவும் தூய்மையற்றதாகவும் கருதப்படுகின்ற பரம்பரைத் தொழில்களிலிருந்து அடிப்படை



படிப்பகம்

www.padippakam.com



யில் சமத்துவம் மற்றும் மதிப்பும் மரியாதையையும் கொண்ட விடுதலையை அது தருவதால். வாய்ப்பு கிடைக்குமானால், மதிப்பான பணிகளுக்காகவும் பொருளியல் வகையிலும் சமூகப் பண்பாட்டு வகையிலும் தங்களுக்கு விடுதலையளிக்கும் பணிகளுக்காகவும் புதிய வேலை வாய்ப்புக்களையே தலித்துக்கள் தேட விரும்புவார்கள். ஆனால், சில தனிப்பட்ட தலித்துக்களை மட்டுமே ஓரளவுக்கு அங்கீகரிக்கும் இந்த நவீனத்துவ உணர்வு மிகவும் ஏமாற்றம் தரக்கூடியதேயாகும்; ஏனெனில், மிகவும் இழிந்ததாகவும் தூய்மையற்றதாகவும் கருதப்படும் தங்களின் வேலைகளை மாற்றிக்கொள்ளவோ, தங்களை அவமானப்படுத்துகின்ற வேலைகளிலிருந்து மாற்று வேலைகளில் ஈடுபடவோ அவர்களுக்கு உள்ள வாய்ப்புகள் மிகவும் குறைவானதாகும். தலித்துக்கள் மேலும் மேலும் மோசமான சேரிகளில் (குடிசைப் பகுதியில்) குவிக்கப்பட்டு துப்புரவுத்தொழில், தோல் பதனிடுதல், குப்பைக் கூளங்களிலிருந்து (காகிதங்களைப்) பொறுக்கும் வேலைகளில் ஈடுபடக் கட்டாயப்படுத்தப்படுவார்கள்; ஏனெனில், உலக முதலாளித்துவத்தின் நிழலின்கீழ் இயங்கிக் கொண்டிருக்கும் இந்திய மாதிரியிலான பொருளுற்பத்தி வளர்ச்சி என்பது ஒரு பழைய சமூக முத்திரையைச் சுமந்திருக்காத மாற்று வேலைகளை தலித்துகளுக்கு அளிக்கும் திறனோ நோக்கமோ கொண்டதாக இல்லை. இந்திய மாதிரியிலான முதலாளித்துவம், அத்தகைய சாதிப் பிரச்னைகள் பற்றி ஆழ்ந்த அக்கறை கொள்ளாது. ஏனெனில், இங்கிருக்கும் இந்திய நிலைமையே முதலாளித்துவத்தின் எதிர்பார்ப்புக்களைப் போதுமான அளவுக்கு நிறைவு செய்வதாக உள்ளது. இத்தகைய நிலைமையில், சமூகரீதியாக மதிப்பும் மரியாதையும் உள்ள வேலைகளை தலித்துக்கள் பெறுகின்ற வாய்ப்பில்லாத நிலையில் தீண்டாமை, தூய்மையற்றது என்னும் உணர்வை முழுவதுமாக நீக்காவிட்டாலும் ஓரளவிற்கு குறைப்பதற்காகவாவது அத்தகைய வேலைகளை பொருத்தமான எந்திரமயமாக்கல், மற்றும் தொழில்நுட்ப நேர்த்தியை மேற்கொள்ளுமாறு கோரிக்கையை முன்வைக்கும் கட்டாயத்திற்கு அவர்கள் தள்ளப்படுவார்கள். இவ்வாறு அவர்களுக்கு ஓரளவு மரியாதையையும் கூட காட்ட மறுப்பவர்களுக்கு முன்னால் சற்று மரியாதையையாவது அவர்கள் பெறுவதற்காக, தலித்துக்களை, இந்தத் தொழில்நுட்ப நவீனத்துவம் தொடர்ந்து கவர்ந்திழுக்கின்றது.

தலித்தல்லாதவர்களால், சமூகரீதியாக தலித்துக்கள் மிகவும் இழிந்த சாதிகளைச் சேர்ந்தவர்கள் என்னும் கருத்தியலடிப்படையில், இடைத்தர தலித் குடும்பங்களுக்காக எந்த வேலையையும் செய்ய மறுக்கும் மற்ற பிற்படுத்தப்பட்ட சாதியினாரால், இழிவுப்படுத்தப்படுவதாக உணரும் இடைத்தர தலித் குடும்பங்கள், குறிப்பாக இந்தத் தொழில்நுட்ப நவீனத்துவத்தால் மிகவும் கவரப்படுகின்றன. ஆகையால், இத்தகைய தலித் குடும்பங்கள், மனித உழைப்புக்கு மாற்றாக அமையும் எந்திரங்களின் பணியை மிகவும் விரும்புகின்றனர். குறைந்தபட்சம் சாதி மற்றும் தீண்டாமையின் அடிப்படையில் தலித்துக்களுக்கு எதிராக அது எந்த வேற்றுமையையும் பாராட்டாது அல்லவா! இவ்வாறு, தொழில்நுட்ப நவீனத்துவம் ஆற்றலுள்ளதாக இருக்க முடியும். அதே நேரத்தில் இந்த நவீனத்துவமானது, செயலூக்கமுள்ளதும் படைப்பாக்கம் உள்ளதுமான சமூக உறவுகளிலிருந்து தலித்துக்களை அன்னியப்படுத்தியும் தனிமைப் படுத்தியும் வைக்கவும்கூடச் செய்யும். இவ்வாறு, ஈடுபாட்டோடல்லாமல் வெறும் கட்டாயத்திற்காக தேடிப்பெறப்பட்ட நவீனத்துவம், இருபத்தொன்றாம் நூற்றாண்டிலும் கூட தலித்துக்களுக்கு ஒரு இருதலைக் கொள்ளி நிலையாகவே இருக்கப்போகின்றது.

இம்மன உளைச்சல் இருபத்தொன்றாம் நூற்றாண்டு தலித் உணர்வின் ஒரு முக்கியக் கூறாகவே நிலைத்துவிடுமா? அதாவது, இந்த நவீனத்துவம் என்னும் பிரச்சனை, தலித்துக்களிடையில் நேர்மையான மற்றும் எதிர்மறையான போக்குகளை ஒரே நேரத்தில் மேற்கொள்ளச் செய்யுமா? இக் கேள்விக்கான விடையை மிகவும் துல்லியமான சொற்றொடர்களால் விளக்க முடியும். பெரும்பான்மையான தலித்துக்களுக்கு, இந்த மயக்கத்திலிருந்து பெற்ற தெளிவு செயலூக்கமற்றதாக இருக்காதுதான்; ஆனால், விடுதலைக்கான தேவையையும், நிலவிலுள்ள சமூகப் பார்வையைப் பற்றிய விமர்சனத்திற்கான தேவையையும்கூட அது முன்வைக்கும். நவீனத்துவத்தின் சிறப்புத் தோற்றத்தோடு கூடிய இந்த மயக்கத் தெளிநிலை பின்வரும் காரணங்களால் அமைகின்றது. முதலாவதாக, தலித் நவீனத்துவத்திற்கு உயிர்நிலையான, மிகமுக்கியமான ஊற்றுக்கண்களாக விளங்கும் கல்வி மற்றும் வேலைக்கான வாய்ப்புக்கள், அவர்களுக்கும் சமூகத்தின் மிக ஏழ்மை நிலையிலுள்ளவர்களுக்கும், ஒன்று வெறுமையானதாக இருக்கும் அல்லது முழுமையாக பொருளற்றதாக ஆகிவிடும். இதற்கு இரண்டு மிகச்சாதாரணமான ஆனால் ஒன்றோடொன்று தொடர்புள்ளதான காரணங்கள் இருக்கின்றன. ஒன்று இது தனிப்பட்ட முறையில் தகவல் தொழில் நுட்பமாகவும் உயிரியல் தொழில்நுட்ப அடிப்படையில் மட்டுமே இருக்கப்போவதால், தலித்துக்களால் எந்தவொரு 'பயனுள்ள கல்வி'யையும் பெறயியலாமல் போகும். இதன் பொருள், கல்வி என்பது தனிப்பட்ட உரிமையுடையதாக இருக்கப் போகிறது என்பதால் விலையுயர்ந்ததாகவும் ஏழைகளான தலித்துக்களால் எட்டிப்பிடிக்க முடியாத ஒன்றாகவும் இருக்கும். இரண்டாவது, உலகமயமாக்கலின் வளர்ந்துவரும் கட்டாயத்தின் காரணமாக, ஏற்கெனவே சமூகத் தளத்திலிருந்து கல்வி என்பது திரும்பப் பெற்றுக் கொள்ளப்படும் நிலை துவங்கிவிட்ட நிலையில், அரசால் கல்வி என்பது இனியும் ஆதரிக்கப்படமாட்டாது என்ற நிலையில், இந்த 'பொருள்பொதிந்த' கல்வியிலிருந்து தலித்துக்கள் மேலும் புறந்தள்ளப்



படிப்பகம்

www.padippakam.com



படக்கூடிய நிலையே தொடரும். இதன் பொருள், தலித்துக்களுக்கு கல்வி கற்கும் உரிமை / வாய்ப்பு என்பது ஒரு விளிம்பு நிலையினதாக மட்டுமே இருக்கும் என்பதுதான்; மேலும் குறிப்பாக, தலித் குழந்தைகள் வேலை வாய்ப்புக்குத் தயாராகும் வரையில் துவக்கக் கல்வி என்பது அவர்களுக்குக் குழந்தைகள் காப்பகமாக மட்டுமே தொடர்ந்து இருந்து வரும். கல்விநிலை மிகவும் குறைந்தும் வறுமை மிகுந்தும் இருக்கும் வடமாநிலங்களிலுள்ள பெரும்பாலான தலித்துக்களுக்கு, இந்த அமைப்பு முறையும்கூடத் தேவைப்படாதுதான்.

இரண்டாவதாக, கல்வி பெறுவதிலிருந்து வெளியேற்றப்படும் இந்த நிலை, தலித்துகளுக்குள்ளிருந்து வெளிப்படும் நம்பிக்கையற்றுப்போன வெறுப்படைந்த நவீனத்துவவாதிகளையும் கூட உருவாக்குவதில், இடஒதுக்கீட்டு முறையே முழுமையாக பலனற்றதாக ஆவதில் சென்று முடியும். வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களான தனியார் மயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல்களோடு, தகுதியின் அடிப்படையில் மட்டுமே வேலைவாய்ப்பு தரப்பட வேண்டும் என்று இந்திய அரசுக்கு உலக வங்கி விடும் கோரிக்கையின் காரணமாக, தலித் நவீனத்துவத்தின் பெரும் ஊற்றுக்கண்ணாக இருக்கும் இட ஒதுக்கீடே தலைகீழாக்கப்படப் போகின்றது. பா.ஜ.க.வின் தலைமையிலான இந்தியத்துவ அடிப்படையிலான அரசு, தலித்துக்களுக்கே உரித்தான இடஒதுக்கீட்டுச் சலுகையை பெருமளவில் / அறவே குறைந்துவிடுவதற்குத் தேவையான ஐந்து அரசு ஆணைகளைப் பிறப்பிப்பதற்கு மிகவும் முனைப்பாக உள்ளது. இதன் உண்மையான நோக்கம் என்னவென்றால், மதிப்பு மிகுந்ததும் ஒப்பீட்டளவில் மிகுந்த வருவாய் தரக் கூடியதுமான, அதன் காரணமாகவே சமூகத்தில் மிக்க மரியாதைக் குரியதாகக் கருதப்படும் உயர்பதவிகள் அனைத்தும் இருபிறப்பாளர்க்குக்குள்ளேயே இருக்கும். செல்வந்தர்களால் முற்றுடைமை / தனியுரிமையாக்கிக் கொள்ளப்படும் என்பதாகும். வேலை பெறுவதில் போட்டி என்ற எதுவும் இல்லாத காரணத்தினால் நவீனத்துவமானது என்று கருதப்படாத துப்புரவுப் பணிகள், அல்லது குப்பைக் காகிதங்களைப் பொறுக்குதல் போன்ற இழிவாகக் கருதப்படும் உடலுழைப்புத் தேவைப்படும் வேலைகளையே தலித்துக்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவார்கள் என்பது அதன் மற்றொரு பொருளாகும். இது, நடைமுறைபடுத்தப்படும்போது, இத்தகைய வேலைகளுக்கு போட்டியிட்டு முன்வராத மேல் சாதியர்களால் அங்கீகரிக்கப்படாமல் போவதற்கான எந்த வாய்ப்பும் எழப்போவதில்லை. மதிப்பான பணிகளிலிருந்து தவிர்க்கப்பட்ட இந்த நிலைமை, நவீனத்துவவாதிகளை ஆதரிப்பதற்கு ஏழை தலித்துகளுக்கு எந்த வாய்ப்பும் அடிப்படையும் இல்லாத காரணத்தால், தலித் சமூகத்திற்கும் அதன் நவீனத்துவமடைந்த பகுதியினருக்கும் இடையில் எந்தவிதமான உரசல் ஏற்படவும் கூட செய்யாது. அது, பண்பாட்டு விருப்பங்களை, இத்தொகைச் சொற்களின் எதிர்மறைப்பொருளில் சமன்படுத்துகின்ற / மட்டப்படுத்துகின்ற ஒன்றாக இருக்கப்போவதால், தலித்துக்களிலிருந்து வரும் சாதிசமூகப் பற்றாளர்களுக்கு, முதன்மை நிகழ்வாக இருபத்தொன்றாம் நூற்றாண்டில் மறைந்துபோக இருக்கும் நவீனத்துவ தலித்துக்களிடமிருந்து சாதிசமூகத் தோடான இணக்கத்தைக் கோருவதற்காக எந்த அடிப்படைக்காரணமும் இருக்காது. எப்பொழுதெல்லாம், தலித் சாதிசமூகத்திற்குள்ளாகவே, பண்பாட்டு மற்றும் பொருளியல் விருப்பங்களின் ஆழமான மற்றும் தீவிரமான பறிகொடுத்தல்கள் நிகழ்கின்றதோ, அத்தகைய சூழ்நிலைமைகளில் சாதிசமூக பற்றாண்மை வாதும் எடுபடுவதில்லை. ஏனெனில் அது அடிப்படையில் சார்பு நிலையாக தீனிபோடுகின்றதேயன்றி, பண்பாட்டு மற்றும் பொருள் சார்ந்த விருப்பங்களின் முழுமையான பறிகொடுத்தலுக்கு உதவியாக / உணவாக இருப்பதில்லை.

இறுதியாக தலித்துக்களைப் பொறுத்தவரையில் சாதி சமூகப்பற்றாண்மை வாதத்தை நடைமுறைப்படுத்த முடிவதில்லை என்பதற்கு மிகமிக எளிமையான காரணமென்றால், அது, கடந்த காலங்களில் ஒரு குறிப்பிட்ட சாதிசமூகம் அனுபவித்திருக்கலாம் என்னும் அதிகாரம் மற்றும் பிறர்மீது மேலாண்மை செலுத்துதல் போன்ற ஒரு பெருமித உணர்வின் இழப்பினை பகராண்மைப்படுத்தும் / அடையாளப்படுத்தும் எந்த வித பழம்பெருமை நினைவுகளையும் தலித்துக்கள் கொண்டிருக்கவில்லை என்பதுதான். அவர்களின் நினைவுகளில் நிரம்பியிருப்பதெல்லாம் இழிவு படுத்தப்படுதல் மற்றும் சுரண்டப்படுதலின் வரலாறு மட்டுமே ஆகும். அம்பேத்கர் அவர்கள் தம் போராட்டம் நெடுகிலும் அவ்வப்போது வலியுறுத்தி வந்ததைப்போல, பயனற்ற, தகுதியற்ற திறன்வளம் கொண்ட சமுதாய உணர்வு எதுவாகயிருந்தாலும் அது ஆற்றலைத் தராது, இயலாமையிலேயே கொண்டு விடும். இப்போதும்கூட அவர்கள் ஒரு சமூகம் என்பதற்கு அடிப்படையாக இருக்க வேண்டிய சமூகச் செல்வாதார வருமுதல் எதனையும் கொண்டிருக்கவில்லை. பொருளியல் சார்ந்து செல்வம் படைத்தவர்களாகவும் மேலாதிக்கம் செலுத்தக்கூடியவர்களாகவும் உள்ள சாதிச் சமூகங்கள் மிகவும் இறுக்கமாகவும் முற்றாகவும் உள்ளன; ஏனெனில் அவை அந்தத் திறன் வளத்தைக் கொண்டுள்ளன; மேலும், தங்கள் சாதி சமூகங்களுக்குள்ளேயே அவைகளைப் பாதுகாக்கவும் பெருக்கிக் கொள்வதற்காகவும் சாதிச்சமூகவாதத்தை பயன்படுத்துவதற்கு விரும்புகின்றன. இந்த உலகமயமாக்கலின் காலகட்டத்திலும் கூட, மேல்சாதி / வகுப்புச் சமூகங்கள், இந்தியாவுக்குள்ளும் வெளி நாடுகளிலும் தொடர்பு கொள்ளவும் இயங்கவும் மிகவும் தேவையானதும் முக்கியமானதுமான, சொந்த சமூக மற்றும் உறவுநிலை அடிப்படையிலான, தகவல் வலைப்பின்னல்கள் போன்ற அளவற்ற திறன் வளங்களைத் தொடர்ந்து தம் பிடியிலேயே வைத்துக்



படிப்பகம்

www.padippakam.com



கொண்டுள்ளன. இக்கருத்தில்தான், 'விஸ்வ இந்து பரிஷத்'தின் ஆதரவாளர்களாக வெளிநாடுகளிலிருக்கின்ற ஆற்றல் மிக்க மேல் சாதியினரின் திடீர்த் தோற்றத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இது ஒருபுறம், இந்த வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் தொலைதூர நாட்டுப்பற்றையும் மறுபுறம் இந்துத்துவ வகையான பண்பாட்டுரீதி நாட்டுப்பற்றையும் பற்றி தலித்துக்கள் திறனாய்வோடு சரியாக புரிந்து கொள்ளச் செய்ய வேண்டும். திறன்வளம் இன்மை மற்றும் வாய்ப்புக்களின் கூட்டமைப்புகளிலிருந்து விலக்கி வைக்கப்பட்டிருத்தல் ஆகியவற்றின் காரணமாக தலித்துகள் இந்திய அரசமைப்புக்குள் தீவிரமான தளைகளுக்குள் கட்டுண்டுக் கிடப்பார்கள்; மற்றும் மேல்சாதியினரைப் போலல்லாமல் அவர்களால் அதைத் தூக்கியெறியவும் முடியாது. தேசம் என்றழைக்கப்படும் ஒரு பருண்மையான பண்பைச் செயலூக்கமற்ற வகையில் சார்ந்து நிற்பவர்களான தலித்துக்குள், எதிர்முரண்பாடாக அவர்களின் பண்பாட்டு வேட்கைகளின் பொருள்சார்ந்த நிறைவேற்றங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக தேசியம் என்பதை மறுவிளக்கம் கோர விழைவார்கள். இவ்வாறு தேசியத்தைப்பற்றிய தலித் கருத்தாக்கம் மனிதகுல சமத்துவக் கோட்பாடு என்னும் விழுமியத்தால் வழி நடத்தப்பட்டதாக இருக்குமேயன்றி, பிற்போக்கு முதலாளித்துவ நவீனத்துவம் மற்றும் பாசிசத்துவம் வழிநடத்தும் கொள்கைக் கோட்பாட்டைப் போல எந்தவொரு ஆதிக்க உணர்வு மற்றும் தற்காலிக வெற்றிக் கோட்பாட்டியம் போன்றவைகளால் அல்ல. இவ்வாறு இருபத்தொன்றாம் நூற்றாண்டு தலித் கற்பனை சமத்துவம், மரியாதை என்னும் கேள்வியால் நிரம்பி வழிந்தவாறு தொடரும். நவீனத்துவத்தின் ஒரு மாற்று வடிவம் அல்லது புதிய தலித் உணர்வறிவோட்டம் என்பது, பொருளியல் கட்டமைப்புகளின் மீதும் மற்றும் உழைப்புச் சுரண்டலையும் அதன் உச்சவிளைவுகளையும் உரிமையோடு கட்டுப்படுத்துகின்ற சமூக யதார்த்தங்களுக்கிடையில் உருவான கூறுகளையும் முன்வைக்க வேண்டும்.

இவ்வுணர்வறிவு, மரபியல்வாதிகளாலும், சுற்றுச் சூழலியலாளர்களாலும், காந்தியவாதிகளாலும் முன்வைக்கப்பட்டிருக்கின்ற மாற்றுமுறைகளை கேள்விக்குள்ளாக்கப் போகின்றது. இம்மாற்று முறைகள், அச்சமூகங்களின் மீது உலகளாவிய சக்திகளால் சுமத்தப்பட்டிருக்கின்ற நாகரீகமாக்கப்பட்ட வன்முறைகளின் காரணமாகவே தோன்றுகின்றன என்று கூறப்படுகின்றது. ஆகையால், தலித்துக்கள் தங்களின் மரபு ரீதியான சாதிசமூக அடிப்படையிலான வேலைகளைத் தக்கவைத்துக் கொள்ளவேண்டுமென்று யோசனை முன்வைக்கப்படுகின்றது. இந்நிலையில் தலித்துக்கள் இந்த மரபியல்வாதிகளின் அறிவுரையைப் பின்பற்றுவார்களா? அல்லது தலித் மற்றும் மேல்சாதிகளைச் சார்ந்த சாதிசமூகப் பற்றாளர்களின் அறிவுரைப்படி நடக்கப் போகின்றார்களா? நான்கு காரணங்களால் இவ்வறிவுரை ஏற்றுக்கொள்ள முடியாதது மட்டுமல்ல, மிகவும் ஆபத்தானது என்று கண்டுகொள்ளத்தான் போகிறார்கள். முதலாவது, தலித்துக்களை அவர்களின் பரம்பரைத் தொழிலிலேயே முடக்கிப்போடுவதை ஆதரிக்கும் இந்த மாற்றுமுறை, பொருளியல் வகையில், எல்லாவகையான திறன்வளங்களின் மீதும் குறிப்பாக வேலைவாய்ப்பு சந்தையின் மீது மேல் வகுப்பு / சாதி முற்றுடைமையை எந்தவொரு சமூகத் தணிக்கையிலிருந்தும் பாதுக்காக்கும். இரண்டாவது, அத்தகைய கொடை அறிவிப்புக்கள் தலித்துக்களுக்கு எந்தவிதமான உரிமையாற்றலையும் தராது; பொதுவாக குடிமக்கள் சமூகத்தின் அல்லது வேலைவாய்ப்பு சந்தையின் அதிகாரத்தளங்களில் தலித்துக்களின் நம்பகத்தன்மையை அதிகரிக்காது. மேலும், அரசியல் கருத்தாக்கத்தில் இந்த மாற்றுமுறை என்பது தலித்துக்களின் இயலாமையை, உதவியற்ற தன்மையை எதிரொலிக்கும்; அதாவது, அவர்களின் எதிர்காலத்தை மேன்மையுறச்செய்ய எதுவும் செய்யமுடியாது. மற்றும் அவர்கள் எவ்வளவுதான் இழிவுபடுத்தப்படுவதாகயிருந்தாலும் சாதிச்சமூக அடிப்படையிலான வேலைகளாகவே செய்து சமாளிக்க வேண்டிய கட்டாயத்திற் குள்ளாக்கப்பட்டவர்கள். இறுதியாக, வரலாற்று மற்றும் அரசியல் கருத்தாக்கத்தில் இந்த மாற்றுமுறையானது, ஒதுக்கப்பட்டவர்களின் ஒருங்கிணைப்பையும் கூட்டான தற்காப்பான எதிர்ப்பையும் உருவாக்கும் ஒரு வாய்ப்பை தலித்துக்களுக்குத் தராமல் மறுத்துவிடுகின்றது. இதற்குக் காரணம் சமத்துவமின்மை மற்றும் சுரண்டலின் கட்டமைப்புகளை உறுதிப்படுத்துவதும் புதுப்பிப்பதுமான முழுமைக்கு எந்த பாதிப்பும் தொடர்புமில்லாத வகையில், தற்காப்பு, எதிர்ப்பை வட்டார அளவிலேயே வைத்திருக்கும் ஒரு போக்கை கொண்டிருப்பதுதான்.

இருபத்தொன்றாம் நூற்றாண்டில் நவீனத்துவத்தின் மாற்றுமுறை என்பதன் நோக்கம், அத்தகைய மாற்றுமுறைகளின் எல்லைகளைப் பற்றியதும் தலித்துக்களுக்கு நவீனத்துவ உணர்வை ஊனமுற்றதாகவும் கறைபடிந்ததாகவும் மட்டுமே தந்த இடஒதுக்கீடு போன்ற சலுகைக்கான அரசு செயல்பாடுகளின் வரையறைகளைப்பற்றியதுமான உணர்தலின் அடிப்படையின் மீது அது இருக்கும். ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டின் வேலைத்திட்ட வரையறைக்கு வெளியே, குழுக்களுக்கிடையிலான சமத்துவம் என்னும் கருத்தை நிலைநாட்ட முயற்சி செய்வதற்கு இந்த உணர்தல் அவர்களை வழி நடத்தியுள்ளது; ஆனால், இது ஒரு எதிர்மறையான உறவுநிலையையே அளித்துள்ளது. சமத்துவக் கருத்து என்பது முதன்மையாக அதற்கான நுழைவுரிமை முறைகளிலும் ஆற்றல் வளங்களை சமமாக பங்கிடுவதிலும் நடைமுறைப்படுத்த முயற்சி செய்யப்படலாம். கருத்தியல் ரீதியாக பார்க்கும்போது ஆற்றல் வளத்திற்கான சமமான நுழைவுரிமை கோரிக்கை, வேறுபாடு செய்யப்பட்ட வகையிலான புழக்கத்தை (நடமாட்டத்தை) மட்டுமே



படிப்பகம்

www.padippakam.com



தரும்; ஆனால், நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 15 விழுக்காட்டைக் கொண்டிருக்கும் தலித்துக்களில் பெரும்பான்மையினருக்கு இது பொருளற்றது, பயனற்றது, அதாவது, பண்பாட்டு ரீதியாக, இங்கு மங்குமாக ஊசலாடிக் கொண்டிருக்கும் தலித்துக்கள் பொதுவான தலித்துக்களுக்கு நேர்மறையான எடுத்துக் காட்டாக, குறிப்பிட்டுக் காட்டும் மாதிரிகளாக இருக்க மாட்டார்கள். இந்த புதிய தலித் உணர்வறிவு படிப்படியாக சமூக வாழ்க்கையிலிருந்து தனிப்பட்ட வாழ்க்கையை தொடர்பறச் செய்யும் மற்றும் தனிப் பட்ட சுயத்தை (தனித்தன்மையை) விட சமூக சுயத்தைச் சுற்றி எண்ணத்தாலும் செயலாலும் ஒருங்கிணைக்கும். எதிர்காலத்தில் 'சமூகம் சார்ந்த' என்பது, 'சுயம் சார்ந்த' திறனாய்வுக் குறிப்பு என்னும் கருத்தில் மட்டுமே விளக்கப்படும். உள்முக திறனாய்வுக் கருத்தின் இந்தச் செயல்முறை பற்றிய சமூக விளைவுகள், சமூகக் குழுக்களுக்குள்ளும் சமூகக் குழுக்களுக்கிடையிலும் செங்குத்தான மற்றும் கிடை நிலை ஆகிய இரு மட்டங்களிலுமே சமூக ஊடுவழி களை திறந்துவிடும். இது தலித்துக்களை, அரசியல் முன்முனைவுகளுக்கான பொதுமக்களின் அங்கீ காரத்தை அடைவதற்கு மிகவும் தேவையான தார்மீக கூட்டுத்தலைமை உணர்வை திரட்டுவதற்கு நிச்சய மாக உதவும். இந்தத் தார்மீக கூட்டுத்தலைமை உணர்வின் திரட்சி தெளிவாகத் தெரிகின்ற அரசியல் நோக்கங்களையும் செயல்பாடுகளையும் அடிப்படை யாகக் கொண்டதாக இருக்கும்; மேலும் பொதுமக்கள் கருதுகோள்களின் ஜனநாயக உணர்வு தளத்தை விரிவாக்குவதற்கு முறைப்படி கொண்டு செல்லும். வறுமையைத் தரப்படுத்துதல் மற்றும் உற்பத்திக்கான பொருளாதார நடவடிக்கைகளின் தளத்திலிருந்து மக்கள்திரளை வெளியேற்றுதல் காரணமாக, புரிந்து கொள்ளுதல் மற்றும் கருதுகோள்களின் விளிம்பெல் லைகளையும் இரண்டறக் கலத்தல் என்பது இயலக் கூடியதே. இது தலித்துக்களின் பரந்துபட்ட பெரும் பான்மையரை தங்கள் தலைவர்களின் வெறுப்பில் சுருங்கிப்போகும் அழுகுணித் தனமான நவீனத்துவ செயல்திட்டத்திலிருந்து தொலைவாகவே வைத் திருக்கும் இத் தலைவர்கள், தலித்மயமாக்குவதற்கு பெரும் திட்டங்களை வைத்திருப்பார்கள் அல்லது இவ்வுரிமைக் கோரிக்கைகளை அவைகளின் இறுக்க மான தன்மையை ஒன்றுக் கொன்றுடன் அகவயமாக சரிபார்க்காமலேயே 'புத்தக்' கோட்பாட்டியல் நடை முறைத் திட்டமாக மாற்றுவதற்கு முயல்வார்கள். இவ்வாறு அவற்றை பேச்சுவார்த்தை நடத்துவதற்குக் கூட இடந்தராததாகச் செய்து சுயதோல்வியில் கொண்டு முடிப்பார்கள். மாற்றுவகை நவீனத் துவத்தில் தலித்துக்கள் குறுகிய நோக்கத்தையும் தன்னலப் பெருமையையும் கொண்ட 'சுயத்தை' (அ) தன்னலமுனைப்பை மிகைப்படுத்திக் கொள்ள வேண்டிவரும் மேலும் பொறுமையுள்ளவர் களாக பேச்சுவார்த்தைக்கு உடன்படும் கூட்டு சுயத்தை (அ) தன்னலமுனைப்பை எட்ட வேண்டிவரும்.

எவ்வாறாயினும் இது, நாட்டின் பல்வேறு பகுதி களிலும் தாராளவாதம் பரவுகின்ற ஆழப்படுகின்ற அளவைச்சார்ந்திருக்கின்றது. எடுத்துக்காட்டாக தலித் எதிர்ப்பு என்பது சொத்துடைமை மற்றும் இருப்பு முதலுடைமையாளர்களுக்கும் தலித்துகளுக்கும் இடையில் நெறிப்படுத்தப்பட்டிருக்கும். ஒருவேளை தலித்துக்கள், சமூகக் கட்டமைப்பு இன்னமும் எதிரானதாக இருக்கும் இடங்களிலும் ஏழ்மையான இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த சாதிகள் இணக்கமில்லாமலும் தலித்துக்களுக்கு எதிராகவும் இருக்கின்ற இடங்களிலும், இந்த உள்ளூர்ச் சண்டை களை தனித்து நின்றே போராட வேண்டியிருக்கும். ஆனால், தாராளவாதம் பொதுமக்களின் (பஹுஜன்) விழிப்புணர்வின் மீது ஒரு நாகரீகப்படுத்தப்பட்ட பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்ற மற்ற பகுதிகளில் தலித்துக்கள் பரந்துபட்ட மக்கள் சார்ந்த சாதிகளி லிருந்து நண்பர்களை வென்றெடுக்கலாம். இது மகாராஷ்டிரத்தின் சிலபகுதிகளில் ஏற்கெனவே நடந்து வருகின்றது. தீவிரமான கண்ணோட்டம் என்றழைக் கப்படுவதன் நிதானப்போக்கு இரண்டு காரணங் களால் தலித்துக்களுக்கும் மற்ற பரந்துபட்ட மக்களுக்குமிடையில் உருவாகிவருகின்றது. ஒன்று, நாட்டுப்புற இந்தியாவெங்கும் வறுமைநிலையைத் தரப்படுத்துதல் நடைமுறையிலுள்ளது; இது, உழைக்கும் பரந்துபட்டமக்களைப் பிரிப்பதில் வழக்க மாக ஒரு பெரும் குற்றவாளியாக இருக்கும் சார்பு நிலையான புறக்கணிப்பு உணர்வை இல்லாமலாக்கி விடுகின்றது. இச்செயல்முறை, உலகமயமாக்கல் என்னும் இக்காலக்கட்டத்தில் கிராமப்புறப் பகுதி களைப் புறக்கணிக்கும் நிலை அதிகரித்துவரும் காரணத்தால் மிகவும் விரைவு படுத்தப்படப் போகின்ற இந்நடைமுறை, தம் பகைவர்களை அடை யாளம் காண்பதற்காக கூட்டாகத் தேடுவதற்கு உழைக்கும் சாதிகளை ஒன்றாகக் கொண்டுவந்து இந்த எதிரிகளுக்கெதிரான ஒரு திடமான போராட்டத்தைத் தொடுத்தாக வேண்டும். இவ்வாறு ஒன்றன் மீது ஒன்றாக படிந்த இவ்விருப்பார்வங்கள் தலித்துக்களையும் இதர பிற்படுத்தப்பட்ட சாதியினர்களையும், இச்சாதி களை எப்போதும் தொலைவாகவே பிரிந்து வைத் திருக்கும் தூய்மை-மாசு (மடி - தீண்டாமை) உணர்வு களை விலக்கிவைக்க ஏற்கெனவே கட்டாயப்படுத்திக் கொண்டிருக்கின்றன. தற்போது இதர பிற்படுத்தப் பட்ட வகுப்பைச் சேர்ந்த கம்மிய (சிறுகருவித் தொழில்) சாதியினர், தலித் திருமணங்களில் சமைப் பதைக் காணலாம். அவர்கள், தலித் சமூகத்தினரின் கலை - பண்பாட்டு நிகழ்ச்சிகளிலும் பங்கேற்கவும் கூடச் செய்கின்றனர். இருந்தாலும், வெவ்வேறு சக்திகளின் விளிம்புநிலையான இந்த இணைதல், கூட்டுத்தலைமையின் வேலை திட்டத்திற்கு மிகவும வெளியே, பொதுச் சமூகத் தளத்தில் மட்டுமே நடை பெறுகின்றது. இடம் மற்றும் அளவைப் பொறுத்த வரையில் இது மிகவும் சமநிலையற்றதாக இருக்கப் போகின்றது; மேலும் பகைமையான கட்டமைப்பு களின் சிதறல்களைச் சார்ந்தும் அது இருக்கும். எடுத்துக்காட்டாக, அத்தகைய திடமான ஒற்றுமை மகாராஷ்டிரம், கேரளம் மற்றும் மேற்கு வங்காளத்தில் இயலக்கூடியதாக இருக்கலாம். ஆனால், இன்னமும் தலித்துக்களுக்கு எதிராகவே இருக்கும் சமூகக்



படிப்பகம்

www.padippakam.com



கட்டமைப்புக்கள் கொண்ட இந்திய மாநிலங்கள், தமிழ்நாடு மற்றும் ஆந்திரா ஆகிய பகுதிகளில் இம் மாற்றங்கள் நிகழ சிறிது காலமாகலாம்.

தலித்துக்களின் அறிவார்ந்த வாழ்க்கையில் மூன்றுவிதமான போக்குக்களை இருபத்தொன்றாம் நூற்றாண்டு பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. முதலாவது, அம்பேத்கர் சிந்தனைகளை இன்றியமையாத சாரமாக்குவது; அதாவது அம்பேத்கருக்கு வெளியே மற்றும் அம்பேத்காரின்றி எதுவுமில்லையென்றாக்குவது. இரண்டாவது அம்பேத்கரை கருத்தியல் முதன்மை கொள்ளச் செய்வது; மார்க்சை எதிர்கொள்ளவோ அல்லது காந்தியைப் புறக்கணிக்கவோ அம்பேத்கரின் எழுத்துக்களில் வசதியான பகுதிகளை மட்டும் முதன்மைப்படுத்துவதை தலித்துக்கள் தவிர்த்து அல்லது எதிர்த்து, அந்தக் கருத்தியல்களுக்கு பேச்சளவிலான மதிப்பையும் மரியாதையையும் மட்டும் தருவதோடல்லாமல், அவைகளை உயிரோட்டமான முறையில் அம்பேத்கரின் சிந்தனைகளோடு ஒன்றிணைப்பது. மூன்றாவது, இருபத்தொன்றாம் நூற்றாண்டு தலித் உணர்வுநிலை. இது அம்பேத்கரின் படைப்புத்திறன் வாய்ந்த கருத்துவிளக்கங்களையும் கூட கேலிசெய்யும் அல்லது ஒதுக்கிவிடும் சந்தேக மனப் பான்மையுள்ள திறனை மட்டுமே பகராண்மைப் படுத்துகின்றது. கடந்த நூற்றாண்டு தலித்துக்களின் அறிவார்ந்த பண்பாட்டுக்கு மொத்தத்தில் மனத் துணிவு இல்லை என்பதைக் காட்டிற்று; எனவே அச்சொல்லின் தாராளமான முற்போக்கான கருத்தில் பார்த்தால் அது நவீனத்துவ எதிர்ப்பாகவே இருந்தது. இந்த நவீனத்துவ எதிர்ப்பு, கருத்தியலளவிலான உரையாடல்களில் அம்பேத்கரைத் தூக்கிப் பிடிப்பதற்கு இயலாத ஒரு அறிவார்ந்த தற்காப்பின்மை அல்லது இயலாமையிலிருந்து தோன்றியதாகும்; தருக்க ரீதியாக அவர்களை அதே வகுப்பைச் சேர்ந்தவர்களாயிருந்தபோதிலும் கூட.

எவ்வாறாயினும், இந்த இருபத்தியொன்றாம் நூற்றாண்டு, தலித்துக்கள் தொடர்ந்து அம்பேத்கரிசத்தையே மேலும் அதிகமாகப் பயில்வதைப் பார்க்கும். இப்படிப் பயில்வது தன்னைத்தானே அவரது சிந்தனைகளில் உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மட்டுமல்ல, மற்ற சிந்தனையாளர்களான மார்க்ஸ், பெரியார், காந்தி ஆகியோருடன் ஒரு ஒப்பீட்டை கண்டுகொள்ளவும் பதியவைத்துக் கொள்ளவும் கூடத்தான். புதிய தலித் உணர்வறிவை முனைப்போடு வைத்திருக்கப் (ஆதிக்கம் செலுத்தப்) போகின்ற, கருத்தியலளவிலான செயல்திட்டம், அம்பேத்கர் சிந்தனைகளை சிலவற்றில் மறுவிளக்கம் செய்யவும் மற்றவைகளில் அவரது வேலைத் திட்டங்களை மறுஉறுதிப்படுத்தி கொள்ளவும் தேவையாக இருக்கும். அம்பேத்கர் மீது பரந்த அளவில் விவாதங்கள் நடந்துகொண்டிருக்கும் மகாராஷ்ட்ரம், ஆந்திரபிரதேசம் சார்ந்த தலித்துக்களைப் பொறுத்த வரையில் மறுவிளக்கமாக மறுவரையறையாக அது இருக்க முயலும், வெகு அரிதாக எதிர்ப்பாக இருக்கும் பீகாரிலும் உத்திரபிரதேசத்திலும் ஒருசில குறிப்பிட்ட உணர்வுகளோடு மேற்கு வங்காளத்திலும் மறுஉறுதியேற்பாகவும் அது இருக்கும். தலித்துக்களால் அம்பேத்கர் சிந்தனைகளை மறுவிளக்கம் செய்தல் என்னும் முயற்சிகள் ஏற்கெனவே அறிவார்ந்தவர்களின் செயல்திட்டத்தில் உள்ளது. அம்பேத்கரைக் கடந்து சென்று மார்க்சியத்திற்கு பெருமளவு பாய்ச்சலில் தாண்டிச் சென்ற சில நக்சல் குழுக்களின் மறுசிந்தனையிலிருந்து மறுஉறுதிப்படுத்திக் கொள்வதன் முயற்சிகள் தெளிவாகின்றன. நக்சல் குழுக்கள் மீண்டும் அம்பேத்கரின் சிந்தனைக்குத் திரும்பிவருகின்றன. இந்த மறுவிளக்கம் காணல் அல்லது மறுவரையறைசெய்தல் என்னும் பணி தற்போது பொதுக்காரணத்தைவிட கனத்த மன வெழுச்சிவயப்பட்ட தன்மையில் வேரூன்றியுள்ளது. இது தலித்துக்களை முன்னவர்களுக்கு (அ) முந்தியவைகளுக்கு எதிராக முரண்படச் செய்கின்றது. இந்த தலித்திய கருத்துரைகள் உள்ளேயே இருக்கும் சக்திகளையும் வெளியிலிருக்கும் நட்பு சக்திகளையும் ஈடுபடவைக்கும் உரையாடல்களை மற்றும் வாதங்களை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். தலித்திய கருத்துரைகள் தமது சொந்த உள்எதிரிகளுக்கு எதிராக மட்டுமே இயங்காது; ஆனால், அதன் தார்மீக கூட்டுத் தலைமை (மேலாண்மை) என்பது, அரசியல் மற்றும் கருத்தியல் ஆகிய இரண்டு வகையிலுமே, இடதுசாரி சக்திகள் அந்த இரண்டு வகைகளிலுமே உரிமைக் கோரல்களை முன்வைப்பதற்கும் தலித்திய கருத்துரையின் குறியீடு (அ) அடையாளங்களாகவும், வரலாற்று ரீதியாக அதை மிகவும் தேவையானதாக்குகின்றது. தமிழ்நாட்டிலும் சாதிய பிரச்சனைகளின் மீது போராட, உழைக்கும் பரந்துபட்ட மக்களை ஒன்றுதிரட்டும் வகையில் எடுக்கப்பட்ட ஒரு புதிய சுதந்திரமான தலைமைக்கான இடதுசாரிகளின் முயற்சி இத்திசையில் ஒரு வளர்ச்சியாகும். இவ்வாறு, தலித்துக்களுக்காக, இருபத்தொன்றாம் நூற்றாண்டு, வரலாற்றின் இறுதியைக்காணச் செய்யாது; ஆனால், எல்லாவகையான எதிரிகளோடும் முழுமையாக போரிடும் ஒரு வரலாறாக அது இருக்கும். சமத்துவமற்ற நிலைமையை வற்புறுத்தியும் புதுப்பித்தும் வருகின்ற கட்டமைப்புக்களை மாற்றியமைப்பதில் ஒரு நம்பகமான குறி இலக்கை கொண்டிருக்கும் சக்திகளோடு இணக்கம் ஏற்படுத்திக் கொள்ளவும் உடன்படிக்கை கொள்ளவுமான வரலாறாக இருக்கும். இதுவே, மாற்று நவீனத்திற்கான உண்மையான வேலைத் திட்டத்தை வடிவமைக்கும். அடிப்படையில் இது வெறுமே பேச்சுத்திறனாலமைந்த உட்சேர்க்கை / உள்ளிணக்கமாக இல்லாமல் ஒவ்வொரு மனிதனின் பரஸ்பர அங்கீகாரத்தின் அடிப்படையில் அமைந்திருக்கும்.

***தமிழில்: தி. சு. சதாசிவம்.***



படிப்பகம்

www.padippakam.com



# சீனத்தில் நடைபெறும் மார்க்சிய இலக்கிய விமர்சனம்

ஃபெங்ஸென் வங்

***இலக்கியமானது நமது அரசியல் தத்துவத்தோடு உடன்படுவதுமட்டும் போதாது, வெகுமக்களின் ஆன்மீகத் தேவைகளுக்கும் அது சேவை செய்வது தேவை என்பதை சீன இலக்கிய விமர்சனம் அங்கீகரிக்க ஆரம்பித்துள்ளது. வடிவியல் மற்றும் அழகியல் அளவுகோல்களுக்கு அழுத்தம் தராமல் இது சாத்தியமில்லை.***

புதிய சீனத்தை நிறுவியதிலிருந்து, கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தில் சீனத்தில் இலக்கிய விமர்சனம் பெரும் சாதனை புரிந்துள்ளது. அதே நேரத்தில் பல சோதனைகளையும் சந்தித்துள்ளது. முதன்மையான சிக்கல், ''அரசியல் அளவுகோல்களுக்கே முதலிடம், கலையியல் அளவுகோல்களுக்கு இரண்டாம் இடமே'' என்பது போன்ற முழக்கங்களால் உண்டாக்கப்பட்டது. இவை 50 களின் நடுப்பகுதி முதல் 70 களின் நடுப்பகுதி வரை இலக்கிய வட்டங்களில் நடத்தப்பட்ட அரசியல் இயக்கங்களால் தொடுக்கப்பட்டன. ஒரு வெகுசன அரசியல் இயக்கத்தின் கோரிக்கைகளை அப்படியே கலை இலக்கியத்துக்கும் பொருத்துவதே அவற்றின் நோக்கமாக இருந்தது. கலை இலக்கியம், வர்க்கப் போராட்டத்தின் ஒரு கருவியாக இருப்பது அவற்றுக்கு தேவையாயிற்று. கலை இலக்கியத்துக்கு அவற்றுக்கே உரிய அழகியல் விதிகள் உண்டு என்பதை அது மறுத்தது. இதனால், வடிவம் - பாணி - உத்தி ஆகிய வற்றில் சோதனைகள் செய்வது புறக்கணிக்கப் பட்டது. எல்லாவற்றையும்விட முக்கியமாக, பரந்து பட்ட உழைக்கும் மக்களுக்கு உண்மையில் பல்வேறு அகத் தேவைகள் உள்ளன, அவற்றைக் கலையானது நிறைவுசெய்ய முடியும் என்பதை இந்த இயக்கங்கள் அங்கீகரிக்க மறுத்தன. இதன் விளைவாக, இலக்கிய விமர்சனத்துக்கு தேவையான முழுவிரிவான தர அளவீட்டு கருவிகளும், அரசியல் என்னும் ஒரே ஒரு அளவுகோலாக குறைக்கப்பட்டன. கலையியல் அளவுகோல்கள் அதிகபட்சம் ஒரு இரண்டாம் நிலை காரணியாகவே ஆயின. வெளிவந்த ஒரு இலக்கிய படைப்பை மதிப்பிடும்போது அதன் அரசியல் உள்ளடக்கமே ஒரே முக்கியமான கூறாகக் கருதப் பட்டது. அரசியல்ரீதியாக அது ஏற்புடையதாக இருந்தால் அது ஒரு நல்ல படைப்பாக கொள்ளப் பட்டது. இல்லாவிட்டால் அது எவ்வளவு கலைநயம் மிக்கதாக இருந்தாலும் அது தரங்குறைந்த படைப் பாகவே நடத்தப்பட்டது. கலையின் அடிப்படையான இடத்தை அரசியல் எடுத்துக்கொண்டது, அல்லது கலையைப் புலப்படாமலாக்கியது. இதனால் விமர்சன எழுத்துகள் என்பவை மிகை எளிமைப் படுத்தப்பட்டு விதிமுறைகள் ஆக்கப்பட்ட பொதுக் கருத்துகளாக வெறும் பிரச்சாரங்களாக ஆகும் நிலை ஏற்பட்டது.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை எப்படி எழுந்தது? முதல் காரணம் என நான் நினைப்பது, 1942 ஏனான் கலை இலக்கிய கருத்தரங்கில் மாவோ ஆற்றிய உரை பரவலாக தவறாகவே புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. ''அரசியலை கலைக்கு சமானமாக்க முடியாது.'' என்றார் அவர். ''ஒவ்வொரு வர்க்க சமுதாயத்திலும் இருக்கும் ஒவ்வொரு வர்க்கமும் தனக்கே உரிய அரசியல் மற்றும் கலை அளவீடுகளைக் கொண்டுள்ளது. ஆனால் எல்லா வர்க்க சமுதாயத்திலும் இருக்கும் எல்லா வர்க்கங்களும் ஒரே மாதிரியாக அரசியல் அளவு கோலையே முதன்மையாகவும் கலை அளவுகோலை இரண்டாவதாகவுமே வைக்கின்றன.''[1] அவர் சொன்னது அந்தக் குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் சரியாக இருந்திருக்கலாம். ஆனால் எந்த அளவீடு முதன்மையானது, எது இரண்டாவது என்று கூறுவது அவ்வளவு எளி தல்ல, அவசியம் சரியாகவே இருக்கும் என்பதும் இல்லை என்பதை அதன்பின் நடந்தது நிரூபித்திருக்கிறது. எப்படியும், எது முந்தியது எது பிந்தியது என்பதை நிறுவமுயன்ற இந்தச் செயல், கலைபற்றிய ஒரு தவறான புரிதலையே பொதுவாக வளர்த்துள்ளது; இதன் தவிர்க்க முடியாத விளைவாக, விமர்சனத்தில் சிக்கல்கள் ஏற்பட்டன. மாவோ பின்வருமாறு கூறியுள்ளதையும் நினைவில் கொள்வது முக்கிய மாகும்: ''அரசியலும் கலையும் ஒன்றிணைவதையே,



படிப்பகம்

www.padippakam.com



உள்ளடக்கமும் உருவமும் ஒன்றிணைவதையே, புரட்சிகர அரசியல் உள்ளடக்கமும் கலைவடிவத்தில் சாத்தியமாகும் ஆகச்சிறந்த செம்மைப்பாடும் ஒன்றிணைவதையே நாம் வலியுறுத்துகிறோம் ... எனவே, சரியான அரசியல் கண்ணோட்டத்தைக் கொண்டதாக இருந்தாலும், கலையாற்றலில் குறைந்த சுவரொட்டி - சொல்முழக்க போக்கையும் நாம் எதிர்க்கிறோம்''[2] கலையை வெறும் அரசியலாகக் குறைத்துவிடுவதை இது மறுத்து விடுவதாகத் தோன்றும். அதேபோது; தன் உரையில் மாவோ அரசியலுக்கு தருகிற முக்கியத்துவமானது, விமர்சனத்தின் மீதான இந்த குறைப்புப் போக்கின் பாதிப்புகளைத் தவிர்த்துக் கொள்வதையும் உறுதியாக இயலாததாக்கி உள்ளது.

இரண்டாவது காரணமாக எனக்குத் தோன்றுவது, சோவியத் இலக்கிய விமர்சனத்தின் சிறப்பாக பிளக்கனோவ் - ஸ்தானோவ் ஆகியோரின் கோட்பாடுகளின் - தாக்கம். **இருபதாண்டு கட்டுரைகள்** நூலுக்கு தான் எழுதிய முன்னுரையில் பிளக்கனோவ் கூறுகிறார்; ''விமர்சனத்தின் முதல் பணி, படைப்பின் சிந்தனையை, கலைமொழி வடிவத்திலிருந்து சமூக மொழி வடிவத்துக்கு மாற்றிக் கொள்வதாகும்; அதன்மூலம் இலக்கிய நிகழ்வுகளுக்கு இணையான சமூக நிகழ்வுகளைக் கண்டுபிடிப்பதாகும். இரண்டாவது பணி, படைப்பின் அழகியல் மதிப்பீட்டைப்பற்றிய முடிவுகளை எடுப்பதாகும்.'' கலைத்தன்மை, அழகியல் ஆகிய பிரச்சினைகளுக்கு முன்னதாகவும் மேலானதாகவும் அரசியல் சிந்தனையை அவர் மதிப்பது தெளிவு. 1934-இல் நடந்த முதல் சோவியத் எழுத்தாளர் பேராயத்தில் ஸ்தானோவ் தான் ஆற்றிய உரையில் லெனின், ''இலக்கியமெல்லாம் கட்சி இலக்கியமாக வேண்டும்'' என்று குறிப்பிட்டதைப் பின்பற்றி ''பிரச்சார தன்மை கொண்டது என்ற குற்றச்சாட்டுக்கு நம் சோவியத் இலக்கியம் பயப்படப் போவதில்லை'' என்று கூறியதன்மூலம் அத்தகைய குறைப்புப் போக்கை ஆதரித்தார். சமூக ஜனநாயக யந்திரத்தின் ''ஒரு சிறு பல்சக்கரமாக'' இலக்கியம் ஆகிவிட வேண்டும் என அவர் வாதாடினார். இலக்கியம் பொதுவுடைமைக் கட்சிக்கே சொந்தமானது, எனவே அரசியலையே சார்ந்தது என அவர் எடுத்துக்கொண்டார் என்பது வெளிப்படை. பிளக்கனோவ், ஸ்தானோவ் இருவரின் செல்வாக்கும் சீன விமர்சகர்களின் மீது வலுவாகக் காணப்பட்டது.

அவர்களின் கோட்பாடுகள் முதன்முதலில் 30-களில் சீனத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. 50-கள் வாக்கில் பெரும்பாலான சீன விமர்சகர்கள் அவற்றையே பின்பற்றினர். மேலும் சீனாவின் இளைய தலைமுறையைச் சேர்ந்த விமர்சகர்கள் மீதும் அவற்றின் தாக்கம் உள்ளது. எனவே கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சீனாவின் இலக்கியத் திறனாய்வு என்பது முதன்மையாய் ஸ்தானோவியத்தாலும் மரபு மார்க்சிய குழாம் எனப்படுவதாலும்தான் வரையறுக்கப்பட்டது என்று சொன்னால் அதில் தவறில்லை.

பண்பாட்டுப் புரட்சியின் முடிவிலிருந்து, இலக்கிய விமர்சனத்தை தீர்மானிக்க வேண்டிய அளவுகோல்கள் பற்றிய விவாதங்கள் ஊக்கமாகவும் தொடர்ச்சியாகவும் நடைபெற்று வந்துள்ளன. ''அரசியலுக்கு இலக்கியம் உட்பட்டது, அரசியலுக்கு இலக்கியம் சேவை செய்தாக வேண்டும்'' என்ற அறிவிப்பால் தெரிவிக்கப்படும் மரபு பார்வைக்குப்பதிலாக, ''மக்களுக்கும் சோசலிசத்துக்கும் பணிபுரிவதே இலக்கியம்'' என்னும், குறைப்புவாதம் குறைந்த ஒரு நிலைப்பாட்டை மேற்கொள்ளும் கண்ணோட்டமே அதிக ஏற்புடையதாக காணப்படுகிறது. இந்த மாறுதலானது கோட்பாடுகளில் மட்டுமல்ல, நடைமுறையிலும் தெரிகிறது. இது கலை இலக்கியத்துக்கும் அரசியலுக்கும் இடையிலான உறவுகள்பற்றிய கோட்பாட்டு விவாதங்களின் விளைவாகும். அத்துடன் கடந்த 30 ஆண்டுகால வரலாற்று அனுபவத்தை தொகுத்துக் கொண்டதன் விளைவுமாகும். முழக்கங்களில் ஏற்பட்டுள்ள இந்த மாறுதல்கள், வரலாற்றுப் பொருள்முதல்வாதம் மற்றும் இயங்கியல் பற்றிய மார்க்சியப் பார்வையை அடிப்படையாகக் கொண்டதுமாகும். மார்க்சின் கருத்துப்படி ''தம் இருத்தலுக்காக மேற்கொள்ளும் சமூக உற்பத்தியின் போது மனிதர்கள் தவிர்க்க முடியாதபடி குறிப்பிட்ட உறவுகளை ஏற்படுத்துகிறார்கள். (அவர்களின் சொந்த விருப்பத்துக்கு அப்பாற்பட்டது இது.) அந்த உற்பத்தி உறவுகள், அவர்களின் பொருள்வகைப்பட்ட உற்பத்தி சக்திகளின் குறிப்பிட்ட வளர்ச்சிக் கட்டத்துக்கு ஏற்றவையாக இருக்கின்றன. இந்த உற்பத்தி உறவுகளின் ஒட்டு மொத்தமே, சமூகத்தின் பொருளியல் கட்டுமானமாக - நிசமான அடித்தளமாக அமைகிறது. அதன்மீது ஒரு சட்ட - அரசியல் மேல்கட்டுமானம் எழுகிறது. அதற்கு ஒத்துப்போவதாக சமூக உணர்வின் திட்டவட்டமான சில வடிவங்கள் எழுகின்றன. பொருள்வகை வாழ்வின் உற்பத்தி முறையே சமூக - அரசியல் - அறிவுத்துறை வாழ்வின் பொழுதுப்போக்கை கட்டுப்படுத்துகிறது.''[3] வேறுவிதமாகச் சொன்னால், சட்ட அரசியல் மேல்கட்டுமானமும் அதற்கு ஒத்த சமூக உணர்வின் வடிவங்களும் (இதில் இலக்கியமும் அடங்கும்) தன்னாட்சி உடையவை. அரசியலும் இலக்கியமும் உற்பத்தி உறவுகளின் அடிக்கட்டுமானத்துக்கு கீழ்ப்படுத்தப்பட முடியாது. சமகால சீன நிலைமைகளைப் பார்க்கும்போது இதன் உட்பொருள் இரண்டு: (1) இலக்கியத்தின் செயல்பாடுகள் பலவிதப்பட்டவை. வெவ்வேறு விதமானசமுதாயத்தைச் சேர்ந்த மக்களுக்கும் அது பயன்பட முடியும். ஏற்கனவே தான் எதிர்கொண்டிராத வெவ்வேறு விதமான அரசியல் நிகழ்ச்சிகளையும் அது எதிர்கொள்ள முடியும். காட்டாக, சீன மரபுக் கவிதைகள்,



படிப்பகம்

www.padippakam.com



சேக்ஸ்பியரின் நாடகங்கள், பால்ஸாக்கின் புதினங்கள் ஆகியவை, அவை உருவான காலத்து மக்களுக்கு நல்லதாக இருந்தது மட்டுமல்ல, தற்காலத்திலும் எல்லா நாடுகளிலும் வாழும் மக்களுக்கும் அவை நலம் பயப்பவையாக இருக்கமுடியும்.(2) இலக்கியமும் அரசியலும் கூட ஒன்றின்மீது ஒன்று தாக்கம்செலுத்திக் கொள்கின்றன. மேலும் சீனாவிலும் சோவியத் ஒன்றியத்திலும் நடந்ததைப்போல குறிப்பிட்ட சமுதாய நிலைமைகளில் அரசியலுக்கு இலக்கியம் சேவை செய்ய முடிந்தாலும், இந்த பாத்திரத்துடன் அதை மட்டுப் படுத்திவிடவோ இந்தப் பாத்திரத்தை மட்டுமே கொண்டதாக அதைக் குறைத்துவிடவோ முடியாது.

எனவே முழக்கங்களில் ஏற்பட்டுள்ள மாற்றம் சீன மக்களுக்கு அடிப்படையான முக்கியத்துவமுடையது. இதன் ஒரு விளைவாக, இலக்கிய விமாசனத் துக்குப் பொருத்தமான அளவு கோல்களைப் பற்றி மறுபடியும் சிந்தித்துப் புதிதாக நிறுவ சீன விமர்சகர்கள் ஒரு இயங்கியல் முறையை பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். 1859 இல் லசாலுக்கு (Lassalle) எழுதிய கடிதத்தில் எங்கல்ஸ் கூறினார்: ''உங்கள் படைப்பை ஒரு அழகியல் மற்றும் வரலாற்றுக் கண்ணோட்டத்திலிருந்து நான் மதிப்பிடுகிறேன். இது ஒரு உயர்வான அளவுகோல், மிகவும் உச்சமான அளவுகோல் என்று கூட சொல்லலாம். இப்படிப் பட்ட அளவீட்டைக் கொண்டுதான் சில மறுப்புகளை நான் எழுப்புகிறேன். இதுவே, உங்கள் படைப்பை நான் உயர்வாக மதிக்கிறேன் என்பதற்கான மிகச்சிறந்த ஆதாரமாகும்.''[4] உண்மையில் கார்ல் கிரண் மீதான இதற்கு முந்திய ஒரு குறிப்பில் ஏங்கல்ஸ் எழுதினார், ''கதேயை ஒரு அறவியல் அல்லது அரசியல் கண்ணோட் டத்தில் ஒருபோதும் நான் விமர்சித்ததில்லை. மாறாக ஒரு அழகியல் மற்றும் வரலாற்றுக் கண்ணோட்டத்தி லிருந்தே மதிப்பிடுகிறேன். அறவியல் - அரசியல் - மனித அளவுகோலைக் கொண்டு அவரை நாம் தீர்ப்பிடுவதில்லை.''[5] அழகியல், வரலாற்றியல் என்னும் இரண்டு கண்ணோட்டங்களைக் கொண்ட தாகவே மார்க்சிய இலக்கிய விமர்சனத்தை இன்றைய சீனத்தின் பெரும்பாலான விமர்சகர்கள் பார்க் கிறார்கள். மார்க்சிய அழகியல் கண்ணோட்டம் என்றால் என்ன? மார்க்சிய வரலாற்றியல் கண்ணோட் டம் என்றால் என்ன? அவற்றுகிடையிலான உறவு என்ன? இவை தாம் அங்கு தொடர்ந்து முன் வைக்கப் பட்டும் விவா திக்கப்பட்டும் வரும் கேள்விகளாகும்.

மார்க்ஸ் - ஏங்கல்சின் படைப்புகளைக் கவன மாகப் பயிலும்போது, நேர்மையுடைமையும் பண்பு மாதிரியாக்கமுமே அவர்களின் அழகியல் கொள்கை களாக இருந்தது தெரி கிறது. யூஜேன் கியூ மீதான ஒரு கருத்துரையில் மார்க்ஸ், எழுத்தாளர்கள் ''மனித உறவுகளை நேர்மையுடன் விவரிக்க வேண்டும்.'' என்றார். கிரேக்கக் கலைக்கு நிரந்தர உள்ளாற்றல் இருப்பதை விளக்கியபோது அவர் குறிப்பிட்ட முதல் அம்சமே நேர்மையுடைமை தான் ஆகும். பண்டை கிரேக்கத்தை மனிதகுலத்தின் ஒரு தொடக்க நிலை - உருவாக்கக் கட்டமாக அவர் மதிப்பிட்டார்; அந்தக் கட்டத்தை கிரேக்கக் கலை நேர்மையாக பிரதி பலித்தது என்று அவர் கருதினார், ஆனால் நேர்மை யுடைமை என்றால், சமூகவாழ்வை ''அச்சுபிசகாமல்'' பிரதிபலிக்க முயலும் வாய்மை தவறா கருத்துடன் சேர்ந்ததாக அதை எடுத்துக் கொள்ளக் கூடாது. அப்படிப்பட்ட குறிப்பான மரபுக் கருத்துகளிலிருந்து விடுபட்டு நிற்பதே நேர்மையுடைமை. கிரேக்க புராணம், இதிகாசம், இடைக்கால இலக்கியம், சேக்ஸ்பியர், கதே, பால்ஸாக் ஆகிய வெவ்வேறான படைப்புகளிலும் அதை நிறுவ முடியும். (அவற்றின் மீதான மதிப்பீட்டிலும் அதை நிலைநாட்டமுடியும்).

கலைநேர்மை என்பது உலகின் வெளிப்புற யதார்த்தத்திலிருந்து மாறுபட்டது ஆகும். சமூக வாழ்வுக்கும் அதன் சாரத்துக்கும் இடையிலான இயங்கியல் உறவின் ஒரு விளைவாகும் அது. நமது உலகில், கொடுக்கப்பட்ட சம்பவங்களின் யதார்த்தமும் புறக்காட்சித் தோற்றங்களும் உள்ளன. கூடவே அத்த கைய நிகழ்ச்சிகளை ஆளும் / இயக்கும் குறிப்பிட்ட ஒழுங்கும் / விதியும் உள்ளது; இதைப் பொருட்களின் சாரம், நிலவும் யதார்த்தத்தின் ஆன்மா, எனலாம். புற யதார்த்தத்தைப் படிஎடுப்பது அல்லது போலச் செய்வதுடன் மட்டும் இலக்கியம் நின்றுவிடாது. பருண்மையான செய்திகளை விளக்கும் போக்கில் அதன் சாரத்தை வெளிப்படுத்தவும் அது முயல வேண்டும். இவ்வாறு தத்துவத்திலிருந்து வேறாக இருக்கிறது இலக்கியம். ஏனெனில் சமூக வாழ்வின் நிகழ்ச்சிகளை விவரிப்பதனூடாக யதார்த்தத்தின் உட்சாரத்தை அது சித்தரிக்கிறது. அதன்மூலம் சாரங் களுக்கும் நிகழ்ச்சிகளுக்கும் இடையிலான உறவைக் குறிப்பால் உணர்த்துகிறது. ஆனால் தத்துவ விளக்கங் களோ கண்ணால் காணும் நிகழ்வுகளிலிருந்து உடனடியாக, நேரடியாக அவற்றின் சாரமான இயல் புக்கு தாவிவிடும் தன்மை கொண்டவை. லூகாக்ஸ் சொன்னதுபோல, ''பால்ஸாக்கின் அரசியல், கருத் தியல் அபிப்பிராயங்கள் தவறானவை என்பது ஒரு புறம் இருந்தால் கூட அவரது பெருமை சரியாக எதில் இருக்கிறது என்றால், எல்லா முரண்பாடுகளையும் அவை தோன்றும் நிலையிலேயே கறைபடாத கண் களால் கவனித்தார் என்பதிலும் நேர்மையுடன் அவற்றை விவரித்தார் என்பதிலும் தான்.''[6]

இந்த நிலைப்பாடு ஒரு பழைமைவாத நிலைப் பாடு, அதைவிட, 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த யதார்த்தவாத நிலைப்பாடுதான், அதற்குமேல் இதில் ஒன்றுமில்லை என்று சிலர் எடுத்துக்கொள்ளலாம். ஆனால் நவீனவாதம் என்பதும் அது தோன்றுகிற



படிப்பகம்

www.padippakam.com



அளவுக்கு நவீனமானதில்லை என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. குறைந்தது 200 ஆண்டுப் பழமையுடையதே அது. தம் விவரிப்பை நவீனத்துவ விமர்சகர்களுக்குப் பொருளுடையதாக ஆக்க முயன்ற யதார்த்தவாதிகளி லிருந்து, யதார்த்தவாதத்திலிருந்தும் விவரிப்புத் தன்மையிலிருந்துமே தம்மை வேறுபிரித்துக் கௌ்வதன் மூலமாகத் தம்மைத் தனித்துக் காட்டிக்கொள்ளும் நவீன விமர்சகர்களுக்கு நேரடியான ஒரு இடையறாத் தொடர்ச்சி இருக்கிறது. எல்லையற்ற, வரையறுக்க முடியாத பொருள்களுக்கான வாய்ப்புகள் பற்றியும் தன் அனுபவவாதம் பற்றியும் 19 ஆம் நூற்றாண்டின் யதார்த்தவாத நாவலாசிரியர்களுக்கு தெரிந்தே இருந்தது. ஆனாலும் தாம் வெளிப்படுத்த முயன்ற அந்த நிர்ணயமற்ற தன்மைக்கு எதிராகவே அவர்கள் எழுதினார்கள். தாம் சுவீகரித்துக் கொண்ட மரபுகளை அவர்களின் வருணனைகள் அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை, மாறாக (நவீனத்துவ ஏடுகள் போலவே) தம்மைச் சூழவும் கட்டவிழ்க்கப்பட்டும் வந்த உலகிலிருந்து ஒரு ஒத்திசைவான உலகை மறு உருவாக்கவே அவர்கள் போராடினார்கள். மறு உருவாக்கப்பட்ட ஒழுங்கின்மையின் விதிக்கட்டற்ற தன்மையை குறிப்பிடத்தக்க சீரான அக்கறையுடன் உற்று நோக்கினார்கள். இந்த யதார்த்தவாத நாவலாசிரியர்களிடம் மேலும், மொழிக்கு இன்னும் கொஞ்சம் அருகே நம்மைக் கொண்டு வருவதுடன், நமக்கு உண்மையற்றவை, நன்மையற்றவை எவை என நாமே கண்டறிவதை நோக்கியும் நம்மை இன்னும் கொஞ்சம் உந்தித்தள்ளவும் தம் கதைகள் உதவும் என்றும் அவர்கள் நம்பினார்கள். காட்டாக, பால்சாக், டிக்கன்ஸ் இருவருமே, முதலாளிய சமுதாயத்தை மிகப் பெரியதாகவும் தவிர்த்துவிட முடியாததாகவுமே பார்த்தார்கள். அந்த உலகில் அகநிலையின் விதியைப் பற்றிய பார்வையை அவர்களின் நாவல்கள் வழங்கின. 1842இல் **ல காமெடி ஹியூமன் நூலுக்கு** தான் எழுதிய முன்னுரையில், சில ஆயிரம் விதமான பாத்திரங்களை, அவற்றின் அன்றாட வாழ்வின் ஆழத்திலிருந்து எழும் உணர்ச்சிகளோடு, ஒரு பரந்துவிரிந்த வரலாற்றுக் காட்சியாக சித்தரிப்பதே தன் முயற்சி என பார்த்தார் பால்ஸாக். அந்த வரிசையில் வரும் ஒவ்வொரு நாவலும் – அது சித்தரிக்கும் உலகம் மாநில அளவினதாயினும் பாரீசோடு நிற்பதாயினும், மேல்வகுப்புடைய தாயினும் கீழ்வகுப்புடைய தாயினும் – அந்த உலகின் ஒரு கூறின்மீது கவனம் குவிக்கிறது. சில பாத்திரங்களை வெவ்வேறு நாவல்களுக்குள் திரும்பத் திரும்பக் கொண்டுவருவதன் மூலம் அந்த உலகத்துக்குள் நடக்கும் இடையுறவுகளுக்கு அழுத்தம் கொடுத்தார் பால்ஸாக். இதற்கு மாறுபட்டு டிக்கன்ஸ் 1850களைச் சேர்ந்த தன் சமூக நாவல்களில், மனித இயல்புக்கும் தன் கால சமூக வாழ்வுக்கும் இடையில் ஒரு பிளவைக் கண்டார். நகரமயமான தொழில்மயமான ஒரு சமுதாயத்தில், பகைமையும் குழப்பமும் நிரம்பிய ஒரு சமுதாயத்தில், மனிதர்கள் (தனிஅடையாளங்கள் அற்ற) ஒரே மாதிரியான பொம்மைகளாக உருமாறி விட்ட ஒரு சமுதாயத்தில் மனிதப் பிறவிகள் அனாதைகள் போல் இருக்கிறார்கள் என்பதே அவர் கண்டது. குறிப்பிட்ட சில குறியீடுகளை திரும்பத் திரும்ப குறிப்பிடுவதன் மூலம் தன் துயர சித்திரத்தை அவர் எடுப்பாக்கிக் காட்டினார். காட்டாக **பாழடைந்த வீடு** - இல் ''மூடுபனி,'' **கஷ்டகாலம்** - இல் ''புள்ளிவிவரம்,'' **சின்ன டோரிட்** - இல் ''சிறை.'' பால்ஸாக்கின் பாத்திரங்கள் ஒற்றை கருத்து வெறி உணர்வால் விரட்டப்படுவனவாக உள்ளன. உலகம் அவர்களின் ஆசைக்கான ஒரு பொருளாகவே உள்ளது. டிக்கன்சின் பாத்திரங்கள் உலகியல் மதிப்பீடுகளின் தத்துவார்த்த ஆள்பண்புகளாக உள்ளன. இரண்டு ஆசிரியர்களுமே குணமாறுதலற்ற, ஒற்றைப் பரிமாண பாத்திரங்களை உருவாக்குவதில் தீவிரமாக இருந்திருக்கிறார்கள். ஆனால் அதைவிட, முதலாளிய சமுதாயத்தின் பொருள்வகைச் சக்திகளால் அகநிலை ஆளுமை குறுக்கப்பட்ட பாத்திரங்களையே அவர்கள் சித்தரித்தார்கள் என்று சொல்வது மேலும் பொருந்தும்.

இலக்கியத்தில் பண்பு மாதிரியாக்கத்துக்கும் நேர்மைத் தன்மைக்கும் நேரடித் தொடர்பு உண்டு. பண்பு மாதிரியாக்கம் / வகைமாதிரித் தன்மை என்னும் கருத்து பழைய பாணிக் கருத்து என மேலை இலக்கியக் கோட்பாடும் விமர்சனமும் கருதலாம். ஆனால் சீன விமர்சகர்கள் மற்றும் இலக்கியர்களின் நடுவில் இன்னமும் அதற்கு ஒரு முக்கியமான இடம் இருக்கிறது. நான் புரிந்து கொண்டுள்ள வகையில், சாரத்திலிருந்து நிகழ்வுகளை நோக்கிய வளர்ச்சியாக்கத்தை, பருண்மையான, விலாவாரியான, உயிரோட்டமான, உணரத்தக்கதான உருமாதிரிகளை / படிமங்களைக் கொண்டு குறித்துக்காட்டும் ஒரு உபாயம் அது. லசாலுக்கு எழுதிய கடிதத்தில் மார்க்ஸ், பாத்திரங்களைப் பற்றிய எந்த ''தனித்தன்மையான'' விளக்கத்தையும் தன்னால் பார்க்க முடியவில்லை என்பதற்கு வருந்துவதாகக் கூறினார் (ஹெகலின் அழகியல் கருத்தாக்கங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றான 'தனித்தன்மை' என்ற கருத்து மார்க்சிய இலக்கிய சிந்தனையில் மிக முக்கியமான ஒன்றாகும்). ஏங்கல்சு, மின்னா காவுத்ஸ்கிக்கு தான் எழுதிய கடிதத்தில் இதேபோன்ற கரிசனத்தை தெரிவித்துள்ளார்: ''அந்த இரண்டு கட்டங்களிலும் வரும் பாத்திரங்களைப் பொறுத்தவரை, உங்கள் வழக்கமான, விரிவான பாத்திர வர்ணனையுடன் அவற்றை நீங்கள் படைத்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன். ஒவ்வொன்றும் (பொதுப்) பண்பு மாதிரியாகவும் தனித்தன்மையதாகவும் உள்ளது ... மேலும் அப்படித்தான் அது இருக்கவும் வேண்டும்.''[7] பொதுவானது தனியானதில்



படிப்பகம்

www.padippakam.com



உள்ளடங்கி உள்ளது என்றும், தனித்தன்மை கொண்ட ஒரு தனியாள், பொதுத்தன்மையின் ஒன்று குவிக்கப் பட்ட வெளிப்பாடாக இருக்கிறார் என்றும் மார்க்சும் ஏங்கல்சும் வலியுறுத்தினார்கள். எனவேதான் ஏங்கல்ஸ், ''யதார்த்தம் பற்றிய விவரங்களை விட்டு விட்டால் பின், வகை மாதிரியான சூழ்நிலைகளில் வகைமாதிரியான பாத்திரத்தை பிரதிநிதித்துவப் படுத்துவதே யதார்த்தவாதத்தின் பொருளாகும் என்றே எனக்கு தோன்றுகிறது'' என்றார். ஏங்கல்சைப் பொறுத்தவரை, பண்புமாதிரி / வகைமாதிரி என்பது, ஹொரேசின் மாதிரிப் படிமம், ஸோலாவின் அப்பட்ட யதார்த்தம், ஷில்லரின்' அருவ விதிகளில் கரையும் பாத்திரம்' ஆகியவற்றிலிருந்து வேறுபட்டதாகும்.

உருவம் உள்ளடக்கம் இரண்டும் ஒன்றுபடுவதன் முக்கியத்தையும் மார்க்சிய அழகியல் வலியுறுத்து கிறது. உள்ளடக்கத்தை வெளிப்படுத்த கலைவடிவமே வழி; கலைவடிவின் மூலமாகவே உள்ளடக்கம் வெளிப்படுத்தப்படவும் வேண்டும். உள்ளடக்கமற்ற வடிவம் பயனற்றது, அப்படியே கலைவடிவமற்ற உள்ளடக்கம் புரிந்துகொள்ள இயலாதது. இவ்விரண் டையும் பிரிக்க முடியாது.

உள்ளடக்கத்தில் கருப்பொருள், பாத்திரங்கள், சூழ்நிலை, சந்தர்ப்பங்கள் யாவும் உள்ளன. வடிவத்தில் பாணி, நடை, கட்டுக்கோப்பு, சீர்மை, தொனி, வண்ணம் ஆகியவை அடங்குகின்றன. இலக்கியத்தின் சமூகக் கோட்பாட்டைப் பொறுத்தவரை வடிவம் பற்றிய சிக்கல் என்பது சமூக முறைகளுக்கும் வரலாற்றுக் கோட்பாட்டுக்கும் இடையிலான உறவுகள் பற்றிய சிக்கல். இது மொழியின் பொருண்மைத் தன்மையையும் அதற்கு உறவுடைய பண்பாட்டு உற்பத்தியின் பொருண்மைத் தன்மையையும் அடிப் படையாகக் கொண்டது. தெளிவாகக் குறிப்பிடக் கூடிய பொருள்வகை நடைமுறைகளுக்குள் வேறு படும் உறவுகளை விவரிக்கும் பிரச்சனை அது. அதை கண்டுகொள்வதையும் படைப்பாக்குவதையுமே வடிவம் சார்ந்துள்ளது. கடந்த காலத்தில் அரசியலி லேயே முதன்மையான அர்ப்பணிப்பு இருந்ததன் விளைவாக சில விமர்சகர்கள் உள்ளடக்கத்துக்கே அதிக அக்கறை செலுத்தி இருக்கிறார்கள். ஆனால் இப்போது அவர்கள் தம் விமர்சன செயல்பாட்டில் இயங்கியல் கண்ணோட்டத்தைக் கைக்கொண்டிருக் கிறார்கள். சில விமர்சகர் ஒருவர் ஒருமுறை சொன்னது போல, ''இலக்கியம் ஒரு ஆற்றைப்போல. ஆற்றின் கரைபோன்றது வடிவம்; நீர்போன்றது உள்ளடக்கம். கரை உயரமாகவும் திடமாகவும் இருந்தால் அது அதிக நீரை கொள்ளமுடியும், அந்த நீர் தெளிவாகவும் இருக்கும் என்பது உண்மைதான். ஆனால் நீர் இல்லா விட்டால் முதலில் ஆறு என்றே எதுவும் இருக்க முடியாது.'' சிறந்த இலக்கியப் படைப்புகள் உள்ளடக்கத்தையும் உருவத்தையும் ஒரு செம்மையான முழுமையில் ஒன்றுபடுத்துகின்றன.

மார்க்சிய இலக்கிய விமர்சனம் ஒரு வரலாற்றுக் கண்ணோட்டத்தையும் கொண்டதாக வேண்டும். அதன்படி, இலக்கியப் படைப்புகளில் விவரிக்கப் பட்ட யதார்த்தத்தையே இலக்கிய விமர்சனமானது தன் அடிப்படையாகக் கொள்ளவேண்டும். குறிப் பிட்ட படைப்பு 19 ஆம் நூற்றாண்டு வாழ்க்கையைப் பற்றியது என்றால் அது 18 ஆம் நூற்றாண்டு அல்லது 20 ஆம் நூற்றாண்டு வாழ்க்கையின் அடிப்படையில் விமர்சிக்கப்படக்கூடாது. அந்தப் படைப்பு, இங்கிலாந்தில் நடந்த நிகழ்ச்சிகள் பற்றியது என்றால் வேறுநாடுகளில் நடந்த நிகழ்ச்சிகளின் அடிப்படையில் அதை அணுக்ககூடாது. லசாலின் **பிரான்ஸ்வான் சிக்கின்ஜென்**-ஐப் பற்றிய தம் விமர்சனத்தில் மார்க்சும் ஏங்கல்சும், அந்த படைப்பு குறித்த விமர்சனம், அதை நல்லதென்றோ கெட்டதென்றோ ஆழமானது என்றோ ஆழமற்றது என்றோ எப்படி தீர்ப்பிட்டாலும், 16 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஜெர்மனியின் வாழ்வை அடிப்படையாகக் கொண்ட தாக இருக்கவேண்டும். ஏனெனில் அந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் சிக்கின்ஜென் தலைமைஏற்று நடத்திய கிளர்ச்சியையே அது சித்தரிக்கிறது என்றார்கள். இப்சனின் படைப்புகளில் வெளிப்படுத்தப்படும் நகர்ப்புற சிறுமுதலாளி வகுப்பின் வாழ்நிலையே எல்லா இடங்களிலும் அவ்வகுப்பின் வாழ்நிலையாக உள்ளது என நம்பினார் பால் எர்ன்ஸ்ட். அந்த பால் எர்ன்ஸ்ட்டை விமர்சிக்கும்போது ஏங்கல்ஸ் கூறினார்: ஜெர்மனியைச் சேர்ந்த நகர சிறுமுதலாளி வகுப்பைப் பற்றிய தன் பார்வையை நார்வேயிலிருந்த அவ்வகுப் பின்மீது அவர் ஏற்றிக்கூறிவிட்டார். அப்படியே, கிரேக்க புராணம் என்பது கிரேக்க கலையின் ஓர் ஊற்று. எகிப்திய புராணம் ஒருபோதும் கிரேக்கக் கலையின் ''கருவறை''யாக முடியாது. கிரேக்கப் புராண நாயகர்கள் அந்த தொல்காலத்துக்குள் மட்டுமே உலவ முடியும்.

''ஒரு ஆளைப் பற்றிய நம் அபிப்பிராயம், எப்படி தன்னைப்பற்றி அவர் என்ன நினைக்கிறார் என்பதன் அடிப்படையில் அமைவதில்லையோ அப்படியே, ஒரு நிலைமாற்ற காலகட்டத்தைப் பற்றி அக்கால கட்டமே கொள்ளும் உணர்வின் அடிப்படையில் அதை நாம் மதிப்பிட முடியாது. மாறாக, அந்த உணர்வேகூட, பொருள்வகை வாழ்வின் முரண்பாடு களிலிருந்துதான் – சமூக உற்பத்திசக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளுக்கு இடையில் நிலவும் மோதலைக் கொண்டுதான் – விளக்கப்பட்டாக வேண்டும்'' என்றார் மார்க்ஸ்.[8] இதை நாம் இலக்கிய விமர்சனத் துக்குப் பொருத்தினால், ஒரு இலக்கியப் படைப்பைப் பற்றிய நம் தீர்ப்புகள் அந்த படைப்பில் வெளிப் படுத்தப்படும் உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருந்தாக வேண்டும். அந்த படைப்பின் காலம், சமூக வாழ்க்கை, களம் ஆகியவற்றின் அடிப் படையிலேயே அதை நாம் ஆராய்ந்தாக வேண்டும். இதைத்தான் சிட்டி கேர்ள்-ஐ பகுத்தாய்ந்த ஏங்கல்ஸ் செய்தார். 1880-களில் இங்கிலாந்தில் இருந்த தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அடிப்படையில் அதை அவர் ஆராய்ந்தார். வரலாற்று யதார்த்தத்தை ஆராயும்போது வரலாற்றுக்கால சூழலை நாம்



படிப்பகம்

www.padippakam.com



மறந்துவிடக்கூடாது. வரலாறு ஒரு இடையறாத ஆற்றொழுக்குப் போன்றது. வரலாற்றில் எந்த ஒரு நிகழ்ச்சியும் தொடர்ச்சியற்ற தன்னந்தனியானது அல்ல. மொத்தத்தில் சமூகத்தின் தீர்மானத்தைப் படம்பிடித்தல், மாறுதலுக்கான அடிப்படையைக் குறிப்பால் உணர்த்தல், மாற்றத்தை நோக்கிய போக்குகளைச் சுட்டிக் காட்டல் ஆகிய பெரும்பணி இலக்கியத்துக்கு இருக்கிறது. இந்தப் பணியை அது உணர்வுடன் செய்கிறதா தன் உணர்வின்றி செய்கிறதா என்பது வேறு. காவோ ஸுகின் - **இன் டிரிம்ஸ் ஆவ் த ரெட் சாம்பர்**, சீன நிலக்கிழமைச் சமூகத்தின் மறைவை ஒரு பெரிய குடும்பத்தைப் பற்றிய விவரணையின் வழியாகக் காட்டுகிறது. இதை அதன் சமூகச் சூழலுக்குள் வைத்துப் புரிந்து கொண்டாக வேண்டும். இல்லாவிட்டால் அதன் முக்கியத்துவம் அறவே விளங்காது.

கடந்த பல்லாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக மனித குலத்தின் வரலாறு வர்க்க சமுதாயத்தின் வரலாறாகவே இருக்கிறது. இன்றுகூட, அத்தகைய வர்க்க பாகுபாடுகள் இல்லாத நாடுகளில்கூட, பலவேறு வர்க்கங்களின் பிரதிபலிப்பு இன்னமும் எண்ணத்திலும் கருத்துகளிலும் நிலவவே செய்கிறது. எனவே மார்க்சிய இலக்கிய விமர்சனம் இன்னும் வர்க்க நிலைபாடுகள் பற்றிய சிக்கலை இணைத்துக் கொண்டே போக வேண்டியுள்ளது. மார்க்ஸ் சொன்னார், ''மனிதசாரம் என்பது ஒவ்வொரு தனி அளவிலும் உள்ளார்ந்த அருவ விசயம் அல்ல, சமூக உறவுகளின் ஒட்டுமொத்த மதிப்பு / பலன் அது'' என்று.[9] மேலும், வர்க்க உறவுகளே வர்க்க சமுதாயத்தில் மிக அடிப்படையானதும் எதிர்ப்பார்க்கக் கூடியதுமான உறவுகளாக இருக்கின்றன. மனித இயல்பின் தீர்மான காரணிகளில் ஒன்றாக இருக்கின்றன. வர்க்க சமூதாயத்தில் வாழும் அனைவரும் தத்தம் வர்க்க முத்திரையை தாங்கியே இருக்கிறார்கள். லூ சுன் ஒருமுறை சொன்னார்: **''டிரீம்ஸ் ஆவ் த ரெட் சாம்பர்** - இல் ஜியா மாளிகையில் இருக்கும் ஜியாவோ தா, லின் அக்காளை ஒருபோதும் காதலிக்க முடியாது. ஜியாவோ தா ஒரு வேலைக்காரன். லின் அக்காளோ ஒரு அரசாங்க உயர் அதிகாரியின் மகள்; ஜியா குடும்பத்தில் எல்லாரிலும் மூத்தவரான ஜியா பாட்டியின் பேத்தி. அவர்கள் வெவ்வேறு வர்க்கங்களைச் சேர்ந்தவர்கள். அவர்களின் எண்ணங்கள், லட்சியங்கள், பேச்சுநடை, பழக்கவழக்கங்கள், வாழ்க்கைமுறை .... எல்லாமே வேறானவை. அவர்களுக்கிடையில் காதல் மலர எந்த பொதுவான அடிப்படையும் இல்லை.'' சிக்கின்ஜென்-ஐ விமர்சிக்கும் போது, அந்த நாடகம் பிழையானது என வாதிட்டார் ஏங்கல்ஸ். ஏனெனில் சிக்கின்ஜெனின் வீழ்ச்சிக்கு நிசமான காரணம், லசால் வலியுறுத்ததும் அறிவு ரீதியான பிழை அல்ல. நிசமான காரணம் ஒழுக்க ரீதியானது அல்ல, சமூக ரீதியானது. சிக்கின்ஜெனுக்கு புரட்சிகர விவசாயிகளின் ஆதரவு ஒரு போதும் கிடைத்திருக்க முடியாது. ஏனெனில் அவனது அடிப்படையான சமூக நோக்கம் அவர்களின் நோக்கத்திற்கு நேர் எதிரானது. நிலத்தை விடுவிப்பதற்குப் பதிலாக அதை மீண்டும் குறுநிலக்கிழார்களின் / பிரபுக்களின் ஆட்சியின் கீழ் கொண்டு வருவதே அவனது இலக்கு. (ஆனால் அந்த வகுப்பே பெருநிலக்கிழார்களின் / இளவரசர்களின் மற்றும் திருச்சபையின் ஆதிக்கத்தின்கீழ் துன்புற்றுக் கொண்டிருந்தது). மார்க்ஸ் - ஏங்கல்சின் கருத்துப்படி, வரலாற்றின் நிசமான இக்கட்டு நிலையை 'சிக்கின் ஜென்' பண்புமாதிரி ஆக்கவில்லை. நாடகத்தின் சூழ்நிலை அமைப்பு அந்த காலகட்டத்தைப் பற்றிய சரியான சித்தரிப்பை தரவில்லை. சிக்கின்ஜெனின் தோல்வி அவனது வர்க்க நிலைப்பாட்டிலிருந்து வருகிறது. விவசாயிகளுடன் அவனுக்குப் பொதுவான நலன்கள் இல்லை. எனவே அவன் தோல்வியடைவது உறுதி. மார்க்சும் ஏங்கல்சும் அந்த நாடகத்தை ஒரு வரலாற்று, வர்க்க நிலைப்பாட்டிலிருந்து கண்டனர். இப்போது சீனாவில் வர்க்க பாகுபாடுகள் இல்லாவிட்டாலும் வெவ்வேறு வர்க்க சிந்தனைகளும் கருத்துகளும் இப்பவும் நிலவுவதை மக்கள் கண்டு கொள்கிறார்கள். எனவே மார்க்சியத்தின் மரபுரீதி வர்க்கக் கண்ணோட்டம் இப்பவும் சீன இலக்கிய விமர்சனத்தின் ஒரு முக்கியமான, அவசியமான பகுதியாகவே இருக்கிறது.

அண்மை ஆண்டுகளில் சீன விமர்சகர்கள் மார்க்சிய கோட்பாடுகள் பற்றிய தம் ஆய்வையும் புரிதலையும் விரிவுபடுத்தவும் செம்மைப்படுத்தவும் முயன்று வருகிறார்கள். பழைய அளவுகோல்களின் வரம்புகளை அவர்கள் உடைத்தெறிந்திருக்கிறார்கள். இலக்கியத்தின் உட்புற, உளவியல் யதார்த்தங்களில் கவனம் செலுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். காட்டாக வாங் மெங் பற்றிய சமீபத்திய கட்டுரை ஒன்று, வாங் மெங்கின் கதைகளில் பெருமளவில் உளவியல் வர்ணனை இருப்பதாக வாதிடுகிறது. இலக்கிய விமர்சனத்தின் முக்கியமான குவிமுனையாக இன்று உளவியல் ஆகியுள்ளது. பாத்திரங்களின் செயல்பாடுகள், சம்பவ விவரங்கள், புறஉலகம் ஆகியவை இதன் பின்புலமாக ஆகியுள்ளன. மரபுரீதி யதார்த்தவாதத்திலிருந்து கணிசமாக விலகி நிற்கும் வாங் மெங்கின் சில கதைகள், உடல்ரீதியாக மாய உருக்கொள்ளும் பாத்திரங்களையும் கொண்டுள்ளன. காட்டாக' கலப்பு வண்ணம்' என்ற கதையில் ஒரு குதிரையும் மனிதனும் சேர்ந்து ஒரே பாத்திரமாகிறது. வாங் மெங்கின் கதைகள் மரபுரீதி காலத்தையும் இடத்தையும் கடந்து புதிய ஒரு திசையில், உணர்வோட்டம் போன்று இயங்குகின்றன. இருப்பினும், தன்னுணர்வின் அல்லது உள்ளுணர்வின் மனஓட்டங்களின் தூய விவரணைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகவே அவை உள்ளன. இவை வாசகரின்



படிப்பகம்

www.padippakam.com



உணர்வுகளையும் அனுபவத்தையும் பொருட்படுத்துவதில்லை. உணர்ச்சிகளையும் வருணனையையும் ஏறக்குறைய ஓர் இசை அமைப்பில் வரும் சுரங்களையும் சந்தங்களையும் போலவே மதிக்கிறார் வாங் மெங். அவை, அவரது எந்த ஒரு படைப்பின் கதை அமைப்பையும் போலவே கண்டிப்பாக முக்கியமானவைதான். இப்போது தன் சொந்த பாணி யதார்த்தவாதத்தை உருவாக்கும் அவரது முயற்சி, விமர்சகர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. எனவே விமர்சகர்கள் ஒரு விசாலமான யதார்த்தவாத கருத்தாக்கத்தை வளர்த்தெடுக்கலாம்.

அண்மையில்தான் (உணர்ச்சி சித்தரிப்பு உத்தியைப் பயன்படுத்தும்) ''இருண்மைக் கவிதைகள்'' பற்றி சில விவாதங்கள் எழுந்தன, இவை உண்மையில் யதார்த்தவாதம் பற்றிய விவாதங்களாகவே அமைந்தன. அக யதார்த்தத்தை வெளிப்படுத்துவதற்கான சோதனை முயற்சியே இத்தகைய கவிதைகள் என்றனர் சிலர். பிறர், அவை மோசமான இலக்கியம், நிச்சயமாக யதார்த்தத்துக்கு எதிரானவை என்றனர். முன்னணி இருண்மைக் கவிஞரான கு செங்கின் இரண்டு கவிதைகளை இங்க தர விரும்புகிறேன். வகைமாதிரியான வடிவம்பற்றி அவை கொஞ்சம் புரிதலை வழங்கலாம்.

**ஒரு உணர்வு**

*வானம் சாம்பல் நிறம்*
*சாலை சாம்பல் நிறம்*
*கட்டிடங்கள் சாம்பல் நிறம்*
*மழை சாம்பல் நிறம்*
*சலிப்பூட்டும் சாம்பல் நிற சிறு தடத்தில்*
*நடைபோடும் இரண்டு குழந்தைகளில்*
*ஒன்று ஒளிச் சிவப்பு*
*ஒன்று ஒளிப்பச்சை.*

**தொலைவும் அருகும்**

*நீ*
*கொஞ்ச நேரம் என்னைப் பார்க்கிறாய்*
*கொஞ்ச நேரம் விண்ணைப் பார்க்கிறாய்*
*என்னை நீ பார்க்கும் போது*
*மிகவும் நீ தொலைவிலுள்ளாய்*
*விண்ணை நீ பார்க்கும் போது*
*மிகவும் நீ அருகிலுள்ளாய்*
*என்று உணர்கிறேன்*
*நான்.*

மரபு யதார்த்தவாத கருத்தாக்கங்களில் இருந்து நிச்சயமாக இந்த கவிதைகள் விலகி சென்றுள்ளன. பெரும்பாலான விமர்சகர்கள் இவற்றை கடுமையாக விமர்சித்துள்ளார்கள். இருந்தாலும் வேறு சிலரை இந்தக் கவிதைகள், யதார்த்தவாதக் கருத்தை மறுபரிசீலனை செய்யும்படி தூண்டி உள்ளன.

இருப்பினும் பொதுவாகச் சொன்னால், சீன இலக்கியத்தில் இன்றும் மேலோங்கிக் காணப்படுவது யதார்த்தவாத பிரதிபலிப்பு முறைகளே. வாழ்வு பற்றிய அடிப்படை உண்மைகள், தனித்தனிக் கதைகள் மற்றும் கதைக்கருக்கள் என்னும் வாகனத்தில் ஏற்றிக் கூறப்பட முடியும் என கருதப்படுகிறது. ஆனால் நவீன மேலை உலகில் யதார்த்த வாதம் என்பது ஏறக்குறைய அரிதானதாகவே ஆகியுள்ளது. வாழ்க்கை என்பது ஒருவித முடிவற்ற காத்திருத்தலாகவே அங்கு அனுபவிக்கப்படுகிறது: கண்மூடிவழக்கங்களும் மாறாக் கடைப்பிடியும் அலுப்புத் தட்டும் அடிமை உழைப்புமே மனித அனுபவத்தின் ஒரே யதார்த்தம் என்பதாகவே தோன்றுகிறது. சமுதாய யந்திரத்தின் ஓர் உறுப்பாகவே மக்கள் ஆகி வருகிறார்கள். எனவே ''வேறுபாடுகள் கொண்ட புறநிலைமைகளுக்குத்தக'' அவற்றை மார்க்சியம் அணுகும் முறையிலும் வேறுபாடுகள் நிலவுவது சகஜமே. மார்க்சிய அழகியல் – வரலாற்று கண்ணோட்டத்தை பொருத்தமுடையதாகவும் செயல்பாடுடையதாகவும் மீட்டெடுப்பதே இன்றைய சீனாவில் நடப்பிலுள்ள அணுகுமுறையாக உள்ளது.

தமிழில் : சிங்கராயர்

**குறிப்புகள்**

1. செலக்ட்டட் வர்க்ஸ் ஆவ் மா சேதுங் (பெய்ஜிங்: மக்கள் அச்சகம், 1968), பக்.871.
2. அதே.
3. மார்க்ஸ், ''முன்னுரை'' அரசியல் - பொருளியல் விமர்சனத்துக்கு ஒரு பங்களிப்பு.
4. மார்க்ஸ் எங்கெல்ஸ், லெனின், ஸ்டாலின், கலை இலக்கியம் பற்றி பெய்ஜிங் மக்கள் இலக்கியப் பதிப்பகம்). பக்:10.
5. அதே நூல் பக்: 40.
6. லூகாக்ஸ், ஐரோப்பிய யாதர்த்த வாதத்தில் ஆய்வுகள் (நியூயார்க்; க்ராஸ்ஸெட் - டன்லப், 1994) பக்: 21.
7. மார்க்ஸ் ... கலை இலக்கியம் பற்றி பக்: 130.
8. மார்க்ஸ் ''முன்னுரை'' பக்: 390.
9. மார்க்ஸ் : பாயர்பாக் பற்றிய ஆய்வுரைகள்.

❑❑

ஒரு மனிதன் தன் சொந்த சுதந்திரங்களைப் பெற்றுவிட்டாலும், சமுதாய சுதந்திரத்தை இழந்து விடுவதில்தான் அவனுக்கு அதிகமான பாதகம் இருக்கிறதென்று சொல்லவேண்டும்.

ரூஸ்ஸோ



படிப்பகம்

www.padippakam.com



# தொழில்துறை சார்ந்த மாசு

நித்தியானந் ஜெயராமன்

தொழில் துறைகளுக்கான திட்டமிடல்களே முரண்பாடுகளையும் அபத்தங்களையும் கொண்டுள்ளன. 2000-வது ஆண்டு இறுதியில், சட்டப்படி அங்கீகரிக்கப்படாமல் நகர எல்லைக்குள் செயல்பட்டுக் கொண்டிருந்த மாசு உண்டாக்கும் தொழிற்சாலைகளை மூடவேண்டும் அல்லது வேறு இடங்களுக்கு மாற்ற வேண்டும் என்று உச்சநீதிமன்றம் இறுதித் தீர்ப்பை வழங்கியதைத் தொடர்ந்து திடீரென்று பல கலவரங்களை தில்லி நகரம் கண்டது. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்கும் தொழிற்சாலைகளை ஒழுங்குமுறைப் படுத்துவதற்கும் நியமிக்கப்பட்டுள்ள அரசு அதிகாரிகளிடம் நிலவுகின்ற அறியாமையும் மடத்தனமும் அப்போது தோலுரித்துக் காட்டப்பட்டது முதல்முறை அல்ல.

இத்தகைய பொறுப்பற்ற அக்கறையற்ற அதிகாரிகளின் போக்கினால் பாதிக்கப்பட்டவர்கள், அந்த மாசுக்களுடன் வாழ்க்கையை நடத்தவேண்டிய டெல்லி வாழ் மக்களும், சிறு பட்டறைகளை மூடிவிட்ட சிறு தொழில் சொந்தக்காரர்களும், ஒரே இரவில் தங்கள் வேலையை இழந்த தொழிலாளர்களும் தான். இதில் வேடிக்கை என்னவென்றால், தொழிற்சாலை, வேலைவாய்ப்பு, மற்றும் வளர்ச்சியும் சுற்றுச்சூழலும் என்னும் கேட்டுக்கேட்டுப் புளித்துப்போன பரவலான விவாதங்கள் நிறையவே நடந்தன. ஆனால் இவற்றில் அரசாங்கம் மற்றும் தொழிலகங்களில் உள்ள மோசமான திட்டமிடல், ஊழல் மற்றும் திறமையின்மை ஆகியவையும் - வாழ்க்கைத் தரமும் என்பது பற்றி விவாதிக்கப் படவில்லை. ஒழுங்குமுறைப் படுத்தவேண்டிய நிர்வாகத்தின் சட்ட விரோத நடவடிக்கைகளின் காரணமாக குடியிருப்பு வட்டாரங்கள் என்று எல்லை பாகுபாடு செய்யப்பட்ட நகர வளர்ச்சிப் பகுதிகளில் திடீரென்று முளைத்த அபாயகரமான தொழிற்சாலைகள் பற்றி இவ்விவாதங்களில் போகிறபோக்கில் (ஒரு குறிப்பாக அல்லது செய்தியாக மட்டும் சொல்லப் படும்). மேலோட்டமாகவே சொல்லப்பட்டது.

நாடெங்கிலும் உள்ள தொழிற்பேட்டைகளில் டெல்லியில் ''வளர்ச்சியின் எதிர்முகம்'' என்னும் சுற்றுச்சூழலுக்கு எதிரான தொழில் துறை என்ற நிகழ்வே அரங்கேறவுள்ளது. எனினும் உயிரின இயற்கைக்சூழல் வாழ்க்கையில் பேரழிவுகளின் அடையாங்களாக கண்ணெதிரில் (மிகத் தெளிவாக) இருந்தும் கூட (அவற்றிலிருந்து) பாடம் கற்காமல் அந்த அழிவுகளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல், வளர்ச்சிக்கான திட்டமிடுபவர்கள் தொழில்மயமாக்கல் மேலும் தொழில்மயமாக்கல் என்பதன் மூலமே வளர்ச்சியின் முன் மாதிரிகளை பெருமிதத்தோடும் களிப்போடும் முன்னெடுத்துச் செல்கின்றனர்.

இந்தியாவைப் பொறுத்தவரையில், மோசமான திட்டமிடல் அல்லது திட்டமிடாமலேயே இருத்தல் என்பதுவே தொழிற்துறை வளர்ச்சியின் சிறப்புத் தன்மையாக உள்ளது. உண்மையில் எல்லா தொழிற் பேட்டைகளும், குறிப்பாக இரசாயனம் மற்றும் பெட்ரோலிய இரசாயனம் தொடர்பானவைகள், இயற்கைச்சுழலின், பேரழிவுகளாகவே தொடர்ந்து விளங்குகின்றன.

### இந்தியாவின் நச்சு இடைவழி:

அகமதாபாத்திலிருந்து மும்பய்க்குச் செல்லும் சாலை, குஜராத்தின் ஆட்சியாளர்கள் பெருமிதத்தோடு குறிப்பிடும் இரசாயன தொழிற்சாலைகளின் 'பொன்னான இடைவழியின் ஊடாகத்தான் செல்கிறது. மற்றவர்கள் அதை, இந்தியாவின் தொழிற்துறை நாகரீகத்தின் அக்குள், புற்றுநோய் இடைவழி, நச்சு இடைவழி என்று அறிவார்கள்.

ஒருபக்கம் சற்றே சரிவான குன்றுகளால் சுற்றி வளைக்கப்பட்டும் மறுபக்கம் கம்பாத் வளைகுடாவும் கொண்ட அந்த குறுகிய நிலப்பரப்பில் குறைந்தது 2000 தொழிற்சாலைகளாவது அங்குள்ள இயற்கை வளத்திற்காக போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றன. (யதார்த்த நடைமுறையில்) இந்த இடைவழியில் நுழையும் சபர்மதி, மினி, தாபி, நர்மதா, பார், கோலக், தாமன்கங்கா - ஆகிய எல்லா ஆறுகளும் அங்கிருந்து வெளியேறுகையில் மரணத்தை விளைவிக்கும் தொழிற்சாலை நச்சுக்களின் கழிவுகளை அள்ளிச் சென்று கொண்டிருக்கின்றன. உலக வங்கியின் ஆதரவில் இயங்கும் ''அரசு சுற்றுச் சூழல் பாதுகாப்பு நடவடிக்கை திட்டம்'' தனது 2000- ஜூலை அறிக்கையில் 'இந்த ஆறுகளின் பகுதிகள் பலவும் மிகக் கடுமையாக மாசடைந்துள்ளன' என்று பட்டியலிட்டிருக்கின்றது. இதன் பொருள், இந்த ஆறுகளெல்லாம் உயிர் வாழ்க்கையை பாதுகாக்கக் கூடிய அனைத்து சக்தியையும் இழக்கும் நிலையை அடைந்துவிட்டன என்பதாகும்.

குஜராத்தின் 184 தாலுக்காக்களில் குறைந்தது 74ல் நிலத்தடிநீர், தொழிற்சாலைக் கழிவுகளின் மாசுபடுத்தலால் நஞ்சூட்டப்பட்டுள்ளதாக அவ்வறிக்கை குறிப்பிடுகிறது. உச்ச நீதிமன்றத்தின் மிக உயர்மட்டக்குழு



படிப்பகம்

www.padippakam.com



ஒன்றினால் சுட்டிக் காட்டப்படும் மற்றொரு மதிப் பீடு, குஜாரத்தின் 70 விழுக்காடு நீர்வளம் அச்சந்தரும் வகையில் இப்போது தொழில்துறை கழிவுகளின் மாசு படுத்தலால் களங்கப்பட்டுள்ளது என்று கூறுகிறது.

**மாசுபடுத்தும் கழிவுப்பொருட்களின் தடயங்கள்**

நாட்டின் இப்பகுதியிலுள்ள நிலங்களின் ''மண் வளத்தை தக்கவைத்துக்கொள்ளும் திறன்'' மிகவும் சீர்கெட்டிருப்பது கண்கூடாகத்தெரியும் ஒன்று; (அஃது) இப்பகுதியில் இருக்கும் மக்களின் வாழ்நிலையைப் பாதித்துள்ளது.

★ ஹரியா, உமர்சடி, சரிகம், கோலக், அங்க்லேஷ்வர் மற்றும் சாரங்பூர் பகுதிகளைச் சேர்ந்த கிராமமக்கள், தொழிற்சாலைக் கழிவுகளின் நச்சு கலந்த நிலத்தடி நீர் தங்கள் உடல்நலத்தை பாதிப் பதுடன் விவசாய விளைச்சலும் மிகவும் வீழ்ச்சிய டைந்துள்ளதாகவும் குற்றம் சாட்டுகின்றனர்.

★ கிரீன்பீஸ் அமைப்பினால் நடத்தப்பட்ட சுற்றுச்சூழல்கள் ஆய்வுகளும், இந்தச் சுற்றுச்சூழலில் தொழில்துறைக் கழிவுகளின் நச்சு எங்கும் பரந்த அளவில் காணக்கிடைப்பதையும், அத்துடன் அபாய கரமான அளவுக்கு கன உலோகங்கள் மற்றும் நிலைத்து நிற்கும் கரிமக்கழிவு மாசுப்பொருட்களும் இங்கு காணக்கிடைப்பதையும் உறுதிப்படுத்து கின்றன.

★ இப்பகுதிகளில் கிடைக்கும் மீன் மற்றும் காய்கறிகள் வழியாக மனிதனின் உணவு பழக்கத் திலும் (சங்கிலியிலும்) நச்சுப்பொருட்கள் நுழைந்து விட்டிருப்பதாக, வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் தடயங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

★ வாபி, அடுல் மற்றும் அங்க்லேஷ்வர் ஆகியவற்றைச் சுற்றியிருக்கும் கிராமங்களிலிருந்து வரும் தகவலறிக்கைகள் மக்களிடையே மலட்டுத் தனம் உயர்ந்துள்ளதாகவும் இளவயதுப் பெண்களுக்கு அதிக அளவில் நேரும் கருச்சிதைவுகளால் பெருந் துன்பத்திற்குள்ளாகி உள்ளனர் என்றும் கூறுகின்றன. மேலும் நுரையீரல் மற்றும் தோல் நோய்கள் உண்டாவது மிகச் சாதாரணமாகிவிட்டதும் தெரிய வருகின்றது.

★ வாபி தொழிற்சாலைகளால் மாசடைந்துள்ள தாமன்கங்கா மற்றும் கோலக் ஆகிய இரண்டிற் கிடையில் சிக்கியுள்ள கோலாக் கிராமத்தில், கடந்த பத்தாண்டுகளில் 70க்கும் அதிகமான பேர் புற்று நோயால் இறந்துள்ளதாக அக்கிராமத்தினர் சுட்டிக் காட்டுகின்றனர்.

★ மித்னா மச்சி என்னும் பழங்குடிச் சமூகம் சேறுநிறைந்த ஆற்றங்கரையில் மீன் மற்றும் நண்டு வகைகளை சேகரித்தே உயிர்வாழ்ந்துகொண்டிருந்தது. இப்போது அந்த ஆறு மாசுபடுத்தப்பட்ட நச்சுத் தன்மையால் மீன்களும் நண்டு வகைகளும் அறவே அழிந்து அப்பழங்குடி சமூகம் ஆதரவற்ற நிலையில் வாடிக்கொண்டிருக்கின்றது.

★ கோலக், தமான் மற்றும் உம்பர்காவ்ன் கிராமத்தவர்கள் தவறாது மீனவ மக்கள் மிகவும் விலைமதிப்பான கடல் நண்டுகளை கணக்கிலடங்கா அளவில் பிடிப்பதை பொறாமையாகக் குறிப்பிடு வார்கள். குஜராத் மீனவர்கள் இத்தகைய கடல் நண்டுகள் தங்கள் பாறைகள் நிறைந்த கடற்கரை நெடுகிலும் ஏராளமாக நிரம்பியிருந்ததாகவும் தொழிற்பேட்டைகளிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவுகளின் நச்சுத் தன்மை அவைகளை தெற்கு முகமாக தஹானுவை நோக்கி விரட்டிவிட்டன என்றும் முறையிடுகின்றனர்.

★ சரிகம் ஊரைச் சேர்ந்த கண்பார்வையற்ற திரு. கணேஷ் பாய் அம்பாலி என்னும் விவசாயி ஒட்டு மொத்தமாக கூறுவதாவது. ''எப்பொழுது குஜராத் தொழில் முன்னேற்றக் கழகம் ஏற்பட்டதோ அப்போ திருந்தே எங்கள் வாழ்க்கை அழிக்கப்பட்டுவிட்டது''.

**அழிவை நோக்கிய பேராவல்கள்**

பழங்காலத்தில் கடல் சார்ந்த வாணிப நகரமாக விளங்கிய கடலூரிலிருந்து 8 கி.மிக்கும் குறைவான தூரத்தில் இருக்கும் குடிக்காடு கிராமத்திலிருந்து தொடங்குகிறது, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழக (சிப்காட்) இரசாயன தொழிற்பேட்டை. நெடுஞ் சாலை வழியாக பயணம் செய்யும்போது, தாங்க இயலாத அளவுக்கு இனிப்பு-புளிப்பு கலந்த அழுகிய தவளை சினை முட்டையின் நாற்றம்போன்ற புழுங்கிய நாற்றம் உங்களை தாக்கிய சில நிமிடங் களில் தொழிற்பேட்டை ஆரம்பம் ஆகும்.

வாபி அல்லது குஜராத்தின் எந்தவொரு தொழிற் பேட்டைகளின் பன்முகமாக மோசமான துர்நாற்றத் தன்மை சிப்காட்டுக்கு இல்லைதான். காரணம் இந்த சிப்காட் சிறியது, மிகமிகச் சிறிய தொழிற்பேட்டை. 519 ஏக்கர் நிலப்பரப்பில் 1981ஆம் ஆண்டு நிறுவப் பட்டு, சிப்காட்டினால் ஊக்குவிக்கப்பட்டு அதன் ஆதரவோடு இயங்கிக் கொண்டிருக்கும் இந்த தொழிற்பேட்டையின் 36 நிறுவனங்களில் தற்போது குறைந்தது 8 மிகப்பெரிய மற்றும் நடுத்தர தொழிற் சாலைகளும் அடங்கும்.

குஜராத்தில் இருப்பதைப்போலவே, இந்த தொழிற்பேட்டையும் மத்திய கால மனப்போக்கின் அடிப்படையில், தொழிற்சாலைகளின் கழிவு மாசுக் கள் பற்றிய முதல் தலைமுறைப் புரிதலின் அடிப் படையில் அதாவது ''தேவையற்ற கழிவு குப்பை களை குவித்துவைப்பதற்கு, ஒரு நன்நிலையை கண்டு பிடிப்பது'' என்ற எண்ணப்படியே உருவாக்கப் பட்டது. அதன் விளைவு: உப்பனாற்றின் படுகை நெடிகிலும்-அதன் கழிமுகத்தில்தான் தொழிற் பேட்டை அமைந்துள்ளது - மிகவும் மோசமாக மாசடைந்துள்ளதாக தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் ஆய்வு மையத்தின் (Neeri) மாநிலக் கிளை நடத்திய ஆய்வு அடிப்படையிலான அறிக்கையில் கூறப் படுகிறது. ''முதன்முதலில் சிப்காட் இங்கு வந்தபோது



படிப்பகம்

www.padippakam.com



அதற்கு எந்தவித எதிர்ப்பும் எழவில்லை. 1990களின் முற்பகுதிகளில் கழிவு மாசுக்களின் விளைவுகள் வெளிப்படையாக தெரிந்தபோதுதான் எதிர்ப்புகளும் எழத்தொடங்கின'' என்கிறார் கடலூரைச் சார்ந்த நுகர்வோர் மற்றும் சுற்றுச்சூழல் இயக்கத்தில் செயற் படும் திரு. ம. நிஜாமுதின். ''ஆனால் இப்போதெல்லாம் மக்கள், தங்கள் பகுதிகளில் சுற்றுமுற்றத்தில் எங்காவது தொழிற்சாலை உருவாக்குவதற்காக திட்டமிடப்படு கிறது காலூன்றப்படுகிறது என்று கேள்விப்பட்ட உடனேயே கிளர்ந்தெழுந்து எதிர்க்கின்றனர்.

திரு. நிஜாமுதின், இப்படிப் புதிதாக கிளம்பி யிருக்கும் எதிர்ப்புகளுக்கு, காற்று நிரந்தரமாகவே மாசு நிறைந்ததாக ஆக்கப்பட்டதும் சிப்காட்டிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் நிலத்தடி நீர் விஷமாக்கப்பட்டதுமே காரணம் என்று கூறுகிறார். ''கடலூர் அளவற்ற மற்றும் நிறைவான நீர்வளப் பேறு பெற்றது. இப்போதும்கூட நகரத்திற்கு அருமையான குடிநீர் வினியோகம் உள்ளது ஆனால் சிப்காட்டைச் சார்ந்த கிராமத்தினர் தங்கள் பகுதி குடிநீர் பத்தாண்டு களிலேயே மிகவும் மோசமடைந்துள்தை கண்ணாரக் கண்டுள்ளனர்'' என்றும் அவர் விவரிக்கின்றார்.

இது உண்மையும் கூட; நீரி (Neeri)யின் பொறி யாளர்கள், கிராமமக்கள் தங்கள் துளைக்கிணறுகளி லிருந்து எடுக்கும் துர்நாற்றம் கொண்ட நிறம் படிந்த நீர் மாசுபட்டுள்ளதாக அறிவியல் அடிப்படையில் உறுதிப்படுத்துகின்றனர். தற்போது சில கிராமங்களுக்கு ஏதாவது ஒரு தொழிற்சாலை லாரிகளில் குடிநீரைக் கொண்டு வந்து பகிர்ந்தளித்துக் கொண்டிருக்கின்றனர். மற்றவர்கள் தொடர்ந்து மாசுப்படுத்தப்பட்டுள்ள நீரையே பயன்படுத்து கின்றனர்.

1999-ஆம் ஆண்டு ஆகஸ்ட்டில், சிப்காட்டில் தமிழ்நாடு மாசுகட்டுப்பாட்டு வாரியத்தின் ஊழியர்கள், சிப்காட்டில் தங்கள் அலுவலகத்தை ஷாசன் கெமிக் கல்ஸ் தொழிற்சாலையின் அருகில் நிறுவுவதற்காகத் திட்டமிட்டிருப்பதை பணித்துறை மூலமாகவே எதிர்த்தனர். ஏனெனில் அத்தொழிற்சாலைதான் அடிக்கடி மாசு உண்டாக்கும் தொழிற்சாலைகளின் பட்டியலில் அதிகம் இடம் பெற்றிருப்பதாக கிராமத் தாரால் சுட்டிக்காட்டப்பட்டது. அவர்கள், நிலையாக மாசுபடுத்தப்பட்ட காற்றும் அதனால் ஏற்படக்கூடிய மூச்சு சுவாசத் தொல்லைகளும் மேலும் தொழிற் சாலைக்கழிவு மாசுபடுத்தலால் ஏற்படக்கூடிய உயிர்க் கொல்லி நோய்களுமே தங்களுக்கு வேறு இடத்தில் அலுவலகம் அமைக்க வேண்டுமென கோரியதற்குக் காரணமாகக் கூறினர். நல்லவேளையாக, அந்த ஊழியர்களுக்கு, அவர்களின் கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அவர்கள் இப்போது ''பாதுகாப் பான'' பகுதியில் வசிக்கிறார்கள்.

இத் தொழிற்பேட்டைகள் தொடங்கி இருபது ஆண்டுகள் கழிந்தும் கூட சுற்றுச்சூழல் பாதுகாப்புக் கான மிகமிக அடிப்படைத் தேவையான உள்கட்ட மைப்பு எதுவும் இருந்ததற்கான சிறு அடையாளம் கூட இல்லை. இந்த ஆற்றுக்கு அருகில் மணலால் தூர்த்து அடைக்கப்பட்ட ஒரு தொட்டியின் இடிபாடுகள் இருக்கின்றன; 'இது தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் கழிவுகள் சென்று படிவதற்கான குட்டையாக உருவாக்கப்பட்டது' என்று திரு. நிஜாமு தீன் சுட்டிக்காட்டுகிறார். ''ஆனால், அது உண்மையில் எப்போதும் பயன்படுத்தப்படவேயில்லை'' என்றும் சொல்கிறார்.

### உள்கட்டமைப்பு இல்லாமை:

கணக்கற்ற உடைந்த காலிக்குழாய்கள் சாலை யெங்கும் குறுக்கும் நெடுக்குமாக விழுந்து கிடக் கின்றன. குழாய்த் தொகுதிகள் சேமிக்கும் தொட்டி களின் மீது குவிந்து மேலும் தொடர்ந்து செல்கின்றன. லாயல் ஃபாபரிக்ஸ் தொழிற்சாலையின் வெளிக்கதவு களுக்கு அருகே நிறைய ஆண்களும் பெண்களும், சாலையோரமாகவே கால்வாய் தோண்டும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள். தரையிலிருந்து இரண்டு அடி ஆழத்திற்குள்ளேயே அவர்கள் கருப்பு நிறத்திலான கட்டிக்கட்டியான மண்ணைத் தோண்டி மேலெடுக்கத் தொடங்குகின்றனர். அது எப்போதோ இங்கு, கழிவு களை வெளியேற்றும் ஒழுக்குகளும் கசிவுகளும் கொண் டிருந்த குழாய்கள் சென்றதற்கான அடையாளங்கள்.

திரு. நிஜாமுதினின் கூற்றுப்படி, இந்த தொடர் கட்டுமானப் பணிகளே சிப்காட் தொழிற்சாலைகளின் கூட்டமைப்பு சங்கத்தின் மாசுபடிதலுக்கு பதில் கூறுவதாக அமைகிறது. ''கிராமத்தவர்கள் தூய்மைக் கேடு குறித்து புகார் எழுப்பினால், அவர்களின் தலைவருக்கு ஒரு கட்டுமான குத்தகையை கொடுத்து விடுவது - குழாய் வரிசையைக் கட்டுவது, கால்வாய் வெட்டுவது பிறகு அவைகளை மூடுவது போன்று.''

தற்போது, அனைத்து கழிவு வெளியேற்றங்களும் வலுக்கட்டாயமாக (விரும்பினாலும் விரும்பா விட்டாலும்) உப்பனாற்றை நோக்கியே செல்கின்றன. மிகுந்த பேச்சு வார்த்தைகள் ஆலோசனைகள், ஆய்வுகளுக்குப் பிறகு, பொது கழிவேற்றங்களை நேரடியாக மூன்று கி.மீ.க்கு அப்பால் கடலுக்குள் செலுத்தக் கூடிய வகையில் கட்டுமான பணிகளுக்கான செயல்முறை திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஐம்பது ஆண்டுகால தொழில் மயமாக்கலில், இந்திய அரசும் பல்வேறு மாநில அரசுகளும் தூய்மைக்கேடுகளை உருவாக்கக்கூடிய உள்கட்டு மானங்களை உருவாக்கி இருக்கின்றன, ஆனால், அவற்றை கட்டுப்படுத்துவதற்கான எந்தவொரு உள்கட்டமைப்பையும் திட்டமிடாமலேயே செயல் படுத்தி வருகின்றன.

'முதலில் மாசுபடுத்து, பிறகு திட்டமிடு' என்னும் கொள்கையின் மீதான மிகக் கடுமையான விமர்சனமாக "அபாயகரமான கழிவுகளை கையாள் வதன்மீதான உயர்மட்ட குழுவின் ஆய்வறிக்கை''யிட



படிப்பகம்

www.padippakam.com



மிருந்து வந்துள்ளது; அண்மையில் உச்சநீதிமன்றத்தினிடம் அது அளித்துள்ள அறிக்கையில்: ''ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாக தொழில்மயமாக்கலை நடைமுறைப்படுத்திக் கொண்டிருந்தாலும் 1997 க்குப் பிறகே குஜாரத்தில் மேம்போக்காக தவறுகளை சமன் படுத்துவதற்கான (நில நிரப்புகள் போன்ற) முதல் ஏற்பாடு தொடங்கியது தெரியவரும்போது மிகவும் வியப்பாகவும் அதிர்ச்சியாகவும் உள்ளது'' என்று குறிப்பிட்டிருக்கிறது.

சட்ட நடவடிக்கையின் தீவிரம், பெருகி வந்த விழிப்புணர்வு மற்றும் சமூகக் கூட்டு நடவடிக்கை ஆகியவைகள், அரசு அவற்றிக்கு பதில் கூறும் வகையில் செயல்பட வேண்டிய கட்டாயத்துக்குள்ளானது. ஆயினும் அப்படி எடுத்த வகையில் செயல்பட வேண்டிய கட்டாயத்துக்குள்ளானது. ஆயினும் அப்படி எடுத்த நடவடிக்கைகளும் கூட மிகக் குறைவானதும் தாமதமாக எடுக்கப்பட்டதும் மட்டுமல்ல அவை தவறான திசையில் செல்லவழி வகுக்கப் பட்டும் பொதுவிருப்ப எதிர்ப்பார்ப்புகளுக்கு எதிர் நிலை கொண்டும் இருந்தன.

எடுத்துக்காட்டாக, பொதுக்கழிவு வெளியேற்றங்கள் சுத்திகரிப்பு தொழில் நிலையங்களை பார்ப்போம். வாபியில் தொழிற்பேட்டைகளிருந்து வெளியேறும் தொழிற்சாலைக் கழிவுகள் கோலக்கின் மீன் வாழ்க்கையை உயிரோட்டமில்லாமல் செய்ததுடன் அது வளைகுடாவிலும் கலக்கப்பட்டு விடுவதாக கோலக்கின் மீனவச் சமுதாயத்தினர் பல ஆண்டுகளாகவே குற்றம் சுமத்திக்கொண்டே இருந்தனர். 1998 இல் உலக வங்கியிலிருந்தும் மைய்ய மாநில அரசுகளின் உதவியுடனும், ஊக்கத்தொகையுடனும் 800 தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவுகளை சுத்திகரிக்க பொதுவான ஒரு கழிவு வெளியேற்றங்களின் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டது. தற்போது அந்த பொது கழிவு வெளியேற்றங்களின் சுத்திகரிப்பு நிலையமே சிகப்பான துர்நாற்றம் வீசும் நுரை போன்ற கழிவுகளை வெளியேற்றி தாமன் கங்கையில் கலக்கச் செய்கிறது.

**உண்மையான தீர்வே இல்லை**

கிரீன் பீஸ் இயக்கத்தினர் 2000 அக்டோபரில் நடத்திய சுத்திகரிக்கப்பட்ட கழிவு பகுப்பாய்வின் அறிக்கையில், வெண்ணீல உலோகம், குரோமியம் மற்றும் நச்சுத்தன்மை வாய்ந்த ஈயமும் பாதரசமும் கூட கலந்திருப்பதை வெளிப்படுததினர். ''அவர்கள் யாரை முட்டாள்களாக்கப் பார்க்கின்றனர்? தாமன் கங்கை ஆறு இந்த 'கரைசல்கள்' வந்து கலக்கும் வரை சுத்தமாகத்தான் ஓடிக்கொண்டிருந்தது. இப்போது உங்கள் கரைசல்கள் எங்கள் ஆற்றைக் கொன்று விட்டதால் தாமன் மீனவர்கள் துன்பப் படுகின்றனர்.'' என்கிறார் திரு. தேவ்ஜிபாய் தண்டேல்; இவர் முன்னாள் எம்.பியும் ஒரு காலத்தில் வளமாக இருந்த மீனவர் சமூகத்தின் தலைவரும் ஆவார்.

2000 -ஆம் ஆண்டு அக்டோபரில் தாமனைச் சார்ந்த மீனவ மக்கள் கடுமையாக எதிர்த்ததுடன் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தை வலுக்கட்டாயமாக மூடச்செய்து தற்காலிகமாவேனும் இயங்காமல் நிறுத்திவைத்தனர். இதில் வேடிக்கை என்னவெனில், இந்தத் தொழில்நுட்பத்தை பரவலாக்க முக்கிய பங்கு வகித்த உலக வங்கி கிரீன் பீஸ் இயக்கத்திடம் ஒப்புக் கொண்டதாவது: ''பொதுவாகவே சி.இ.டி.பி. நச்சுக் கழிவுகள்மீது போதுமான கவனம் செலுத்தத் தவறி விடுகிறது...''

இந்தியத் தொழில்துறை தன்னுடைய நச்சுத் தன்மைகொண்ட தொழிற்சாலைக் கழிவுகளை வீசியெறிந்தும், புதைத்தல், எரித்தல், நீர்த்துப்போகச் செய்தல், ஆழ்கிணறுகளில் பாய்ச்சி உட்செலுத்துதல் போன்றவற்றில் இத்தனை ஆண்டுகளாக தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போது, தொழிற்துறை தூய்மைக்கேடுகளின் அறிவியலளவிலான புரிதல் என்பது பலமடங்கு முன்னேறி ஏற்றுக்கொள்ளும் உண்மைகளாவன:

1. தூய்மைக்கேடு ஏற்பட்டுவிட்டபிறகு அதை சரி செய்வதற்கான எந்த உண்மையான தீர்வும் இல்லை. உண்மையான தீர்வு என்பது மாசு ஏற்படாமல் தடுப்பதே.

2. சமுதாயத்திற்கு, மாசு ஏற்படுத்தும் பொருட்கள் பற்றியும் மாசுத்தன்மையை உண்டாக்கும் தனிப்பட்ட தொழிற்சாலையைப் பற்றியும் உண்மையை அறிவதற்கான உரிமையென்பது தூய்மைக் கேட்டைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமைய தவிர்க்க முடியாத அம்சமாகும்.

3. இறுதிக் கட்ட மாசுக்கட்டுப்பாட்டு தலையீடுகள் காலத்தைக் கடத்த உதவும் அல்லது பிரச்சனையின் ஒரு பகுதியை மட்டும் ஓரளவு சரி செய்யும். ஆனால் இந்த வரையரைகளை (குறைபாடுகளை) முழுமையாக புரிந்து கொண்டு அதனை செயல்படுத்தினாலொழிய அத்தகைய தலையீடுகள், பிரச்சனை முழுமையாக தீர்க்கப்பட்டு விடும் என்ற தவறான கருத்தை உண்டாக்கிவிடலாம்.

4. எல்லா மேம்போக்கான நடவடிக்கைகளும் குறை உடையவைகளே. எனவே தொழிற்சாலைக் கழிவுகளை சமன்படுத்தவோ அல்லது அழிக்கவோ செய்யும் ஒரு சரியான தொழில் நுட்பத்தால் அகற்றப் படவேண்டிய அபாயகரமான கழிவுகளை தற்காலிகமாக பாதுகாப்பாக குவித்து வைக்கும் நடைமுறையை மேற்கொள்ள வேண்டும். அதுவரை அந்த அபாயகரமான கழிவுகளின் தற்காலிகமான பாதுகாப்புச் சேமிப்பிடமாக மட்டுமே அதைக் கருத வேண்டும். அவற்றை அழிக்கவோ செயலிழக்கச் செய்யவோ தகுந்த தொழில்நுட்பம் உருவானதும் அதற்கேற்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.

5. பொதுவான தொழிற்சாலைக்கழிவுகளின் சுத்திக்கரிப்பு நிலையங்கள், தொழிற்சாலையின்



படிப்பகம்

www.padippakam.com



கழிவுஓடைகளில் வரும் நிலையான கரிம உயிர்ப் பொருள் மாசுக்கள் மற்றும் நச்சுத்தன்மை கொண்ட கன கனிம மாசுப்பொருட்களாலும் ஏற்படக்கூடிய அபாயத்தைக் குறைக்க எதுவும் செய்யாது. மாசுகளை சுத்தம் செய்வதற்குப் பதிலாக, சி.இ.டி.பிக்களே தங்களின் செயல்முறைகளால் வெளிப்படுத்தும் மாசுப்படுத்தப் பட்ட கழிவுநீர் மற்றும் மிகப்பெரும் அளவிலான நச்சு சாக்கடை கசடுகளையும் உருவாக்கு வதன் மூலம் மிக அதிக மாசுக் குவியல்களின் ஊற்றுக்கண்களாகி விடுகின்றன.

6. எரிதொட்டிகள் டையாக்சின்ஸ், ஃபரான்ஸ் மற்றும் போலிக்ளோரினேட் பைபெனில்ஸ் போன்ற கடும் தீவிர நச்சுக்கள் உள்ளிட்ட கொடிய மாசுப் பொருட்களை வெளிப்படுத்துகின்றன. கடுமையான விதிமுறைகளுக்குட்பட்ட தனிக்குறிப்பீடுகள் கொண்ட நேர்த்தியான நிலநிரப்புகள் (லேண்ட்ஃபிட்ஸ்) நச்சுத் தன்மையுள்ள சாம்பலையும் கூட மிக அதிக அளவில் விளைவிக்கின்றன. இந்தியாவில் எரி தொட்டிகள் இருக்கின்றன. ஆனால் அவற்றிக்கு டையோக்கினையும் ஃபரான்ஸ்ஸையும் கண்காணிக்கக் கூடிய திறனோ இலக்களவோ தரமோ கிடையாது. அந்த சாம்பலை கழித்துக்கட்டி ஒழுங்கு படுத்துவதற் கான எந்த வசதிகளும் கூட கிடையாது.

துரதிருஷ்டவசமாக இவற்றை ஒழுங்குபடுத்த வேண்டிய பொறுப்பாளர்களுக்கு நாட்டில் மாசு ஏற்படுத்தக்கூடிய தொழிற்சாலைகள் எத்தனை இருக் கின்றன என்ற கணக்கோ அல்லது அவை எவ்வளவு விஷத்தன்மை கொண்ட கழிவுகளை உற்பத்தி செய்கின்றன என்ற புரிதலோ அல்லது என்ன செய்வது என்பது பற்றியோ இன்னும் எந்த முடிவான தீர்மானமும் அவர்களுக்குக் கிடையாது.

உச்சநீதிமன்றத்தின் உயர்நிலைக் குழுவின் கண்டுபிடிப்புப்படி: ''அபாயகரமான கழிவுகள் பற்றிய சட்டம். 1989ல் வெளிவந்து பத்தாண்டுகள் கடந்து, இந்த 2000-த்திலும் கூட அபாயகரமான கழிவுகள் உற்பத்தியாகும் அளவு பற்றிய குத்து மதிப்பான திட்டம் கூட நம்மிடம் இல்லை என்பது வருந்தத்தக்க தாகும். இத்தனைக்கும் இப்படியான கழிவுகளை வெளிப்படுத்தும் அல்லது உருவாக்கும் ஒவ்வொரு உற்பத்திக்கூடமும் அது வெளிப்படுத்தும் அபாயகரமான கழிவுகளைக் குறித்து தக்க ஆவணங் களைப் பராமரிக்க வேண்டும்; அவற்றின் உற்பத்தி அளவுகளையும் அறிவிக்க வேண்டும் என்னும் கடமைக்குள்ளாக்கப்பட்டுள்ளன. மேலும் தத்தம் மாநில மாசுக்கட்டுப்பாட்டு வாரியங்களுக்கு அத்தகைய கழிவுகளை முறையாக அகற்றியதற்கான ஆண்டு அறிக்கைகளையும் பதிவு செய்ய வேண்டும் என்பதும் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**நம்பிக்கையற்ற எதிர்காலம்**

வருங்காலத்தை எண்ணிப்பார்த்தால் மேலும் சோர்வே ஏற்படும். மாசுபடுத்துவதைக் கட்டுப்படுத்தி ஒழுங்குபடுத்த வேண்டிய பொறுப்பாளர்களின் இப் பிரச்சனை குறித்த புரிதல்களிலோ அல்லது ஈடு பாட்டுத் தன்மையிலோ மாற்றம் ஏற்பட்டிருப் பதற்கான எந்த அறிகுறியும் தென்படவில்லை. எனினும் மாசுபடுத்தும் தொழிற்சாலைகளுக்காக பெரும் முதலீடுகள் தங்குதடையின்றி முனைப்பாகத் தொடர்ந்து குவிந்துகொண்டேயிருக்கின்றன.

அண்மையில், குஜராத் அரசு பேராவலைத் தூண்டக்கூடிய வகையில், ஆனால் எந்த தொலை நோக்கும் இல்லாமல், இரசாயன துறைகளில் 56,000 கோடி ரூபாய்க்கான முதலீடுகளை ஈர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொண்டது; கவர்ச்சிகரமான ஊக்கச் சலுகைகள் வழங்கப்பட்டன. சிறுதொழில் துறையில், அபாயகரமான தொழிற்கூடங்கள் கணக் கற்று உருவாவதற்கான உற்சாக மூட்டும் வகையிலும் விவசாயவிளை நிலங்களை தொழிற்கூடங்களுக்கான காலிமனைகளாக மாற்றுவது எளிதாக்கப்பட்டது. இன்றுவரை குறைவான மாசுள்ள பகுதிகளாக விளங்கிய தேசிய பூங்காக்கள் மற்றும் விலங்குகளின் புகலிடங்களுக்கு அருகிலிருந்த வளர்ச்சியற்றிருக்கும் பிற்பட்ட பகுதிகள், தொழிற்துறை வளர்ச்சிகளுக்காக திறந்துவிடப்படும்.

தமிழ்நாட்டிலிருக்கும் சூழ்நிலையும் இதற்கு வேறானதல்ல. ஆயிரக்கணக்கான மீனவ மக்களின் வாழ்க்கைப் போரட்டத்திற்கு மிகவும் உதவியாக இருந்த ஒரு நிலப்பகுதிக்கு அடுத்திருந்த காட்டுப் பள்ளி கிராமத்தில் ஒரு மாபெரும் தொழிற் பேட்டையை உருவாக்க திட்டமிட்டு அதற்கு ராம்சார் நஞ்சை நிலப்பகுதியை (உண்மையிலேயே அது நஞ்சை பயிருக்கு தகுதியான நிலமும் கூட) ஒதுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. கடலூரில், சிப்காட் (SIPCOT) இரண்டாம் கட்ட தொழிற்பேட்டை விரிவாக்கத் திற்காக நிலங்களை கையகப்படுத்திக் கொண்டது.

தற்போது இயங்கிக்கொண்டிருக்கும் தொழிற் பேட்டையில், கழிவுகளைப் புதைக்க, எரிக்க மற்றும் நீர்த்துப்போகச் செய்யத் தேவையான புதிய உள் கட்டமைப்புப் பணிகளுக்கான கட்டுமானங்கள் குறித்து பேசப்படுகின்றன. கடலுக்கு வெகு அருகி லிருக்கும் நிலப்பகுதிகளில் கடலுக்குள் ஒரு சில கிலோமீட்டர் தொலைவில் கழிவுகளை எறிவதற்கான திட்டங்களும் உள்ளன.

தூய்மைக்கேட்டை சுற்றுச்சூழல் மாசுபடுதலை நாம் சரியாக புரிந்து கொண்டு சரியான நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு நமக்கு நீண்டகாலமாகும் என்பது மட்டும் மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் நமக்கு அதற்கான நேரம் இருக்குமா? காலம் காத்திருக்குமா?

**தமிழில் : தி.ச. சந்திர சேகர்.**

நன்றி : The Hindu
Survey of the Environment 2001



படிப்பகம்

www.padippakam.com



# ஓர் அரும் பெரும் முயற்சி

லெஸர் ஆர். பிரௌன்

நமது பொருளாதாரத்தைச் சூழலியல் - பொருளாதாரமாக மாற்றுவது ஓர் அரும் பெரும் முயற்சியாகும். பெரிதும் சந்தைப் பொருளாதார சக்திகளால் உருவாகும் ஒரு பொருளாதார அமைப்பினை, சூழலியல் கோட்பாடுகள் சார்ந்த ஒரு பொருளாதார அமைப்பாக மாற்றியதற்கு முன் உதாரணங்கள் எதுவும் இல்லை.

பொருளாதார முன்னேற்றம் பற்றிய முன் மதிப்பீடுகள், நாம் எதிர்கொள்ளப்போகும் சவால்களின் பரிமாணங்களைச்சுட்டிக்காட்டுகின்றது. உலகப் பொருள் உற்பத்தியின் வளர்ச்சியும் சேவைப் பணிகளும் 1950 இல் அறுபதாயிரம் கோடி அமெரிக்க டாலரிலிருந்து இரண்டாயிரமாவது ஆண்டில் 430 ஆயிரம் கோடி டாலராக உயர்ந்து இருக்கிறது. இதனால் சுற்றுப்புறச் சூழலானது அரை நூற்றாண்டுக்கு முன்னால் நாம் நினைத்துக் கூடப் பார்த்திருக்க முடியாத அளவிற்கு அழிவுக்குள்ளாகி இருக்கிறது. உலகப் பொருளாதாரம் ஆண்டிற்கு மூன்று சதவிகிதம் வீதம் தொடர்ந்து உயருமாயின், உலகப்பொருள் உற்பத்தியும், சேவைப் பணிகளும் அடுத்த அரை நூற்றாண்டில் 1720 ஆயிரம் கோடி டாலர்களை எட்டி நான்கு மடங்காக உயரும்.

நமக்குள்ள கால அவகாசத்தில் ஒரு சூழலியல்-பொருளாதாரத்தை அமைப்பதற்கு மிகத் துரிதமான மாற்றங்கள் தேவை. இங்கொன்று அங்கொன்று என்று திட்டங்களை அமைத்து நம்மால் வெற்றிகொள்ள இயலாது. நாம் அவ்வப்போது சிறு சிறு சண்டைகளில் வெற்றி கொள்கிறோம். ஆனால் நாம் ஒட்டு மொத்தமாக இப்போரில் தோற்றுக் கொண்டிருக்கிறோம். சுற்றுச் சூழலைப் பாதுகாத்து உலகினை வளர்ச்சிப் பாதையில் செலுத்தும் ஒழுங்கமைந்த பொருளாதார மாற்றத்திற்கான திட்டங்கள் எதுவும் நம்மிடமில்லை.

சுற்றுச் சூழலைப் பாதுகாக்கும் முன்னேற்றம் என்னும் கருத்து, கால் நூற்றாண்டுக்கு முன்பே உருவாகிவிட்ட போதிலும், உலகிலுள்ள எந்த ஒரு நாட்டிடமும் ஒரு சூழலியல் - பொருளாதாரம் அமைப்பதற்கான திட்டங்கள் இல்லை. அதாவது இயற்கைச் சமநிலையை மீட்டல், மக்கள் தொகை மற்றும் நிலத்தடி நீர்நிலைகளை ஸ்திரப்படுத்துதல், காடுகள் மற்றும் மண்வளங்களைக் காப்பாற்றுதல்; தாவரங்கள் மற்றும் உயிரினங்களைக் காப்பது போன்றவை இதிலடங்கும். ஒரு சில நாடுகள் ஒரு சில நிலைகளை மறுவடிவமைப்பதில் வெற்றி கொண்டிருக்கின்றன. ஆனால் ஒரு நாடு கூட எல்லா நிலைகளிலும் முழுமையாக முன்னேறவில்லை.

இருந்தபோதிலும் சில நாடுகளில் சூழலியல்-பொருளாதாரத்தின் அறிகுறிகள் தெளிவாகத் தெரிகின்றன. எடுத்துக்காட்டாக ஐரோப்பாவில் உள்ள 31 நாடுகளும், ஜப்பானும் அவர்களது மக்கள் தொகையை ஸ்திரநிலைக்கு கொண்டு வந்ததன் மூலம் சூழலியல் - பொருளாதாரத்தின் மிக அடிப்படைத் தேவைகளுள் ஒன்றை நிறைவு செய்திருக்கிறார்கள். ஐரோப்பா அதன் மக்கள் தொகையை தன்னுடைய உணவுப் பொருள் உற்பத்தி திறனுக்குள் ஸ்திர நிலைக்குக் கொண்டுவந்துள்ளது. இதன் மூலம் தேவைக்கு அதிகமான உற்பத்தி செய்யப்படும் தானியங்களை வளரும் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறது. மேலும் உலகிலேயே மக்கட் தொகை அதிகமாக உள்ள நாடான சீனா தற்போது அமெரிக்காவைவிடக் குறைவாக இன விருத்தி செய்யும் நாடாக விளங்குகின்றது. அது தனது மக்கள் தொகையினை ஸ்திரப்படுத்தும் முயற்சியில் உள்ளது.

உலக நாடுகளுள் டென்மார்க்கே சூழலியல் - பொருளாதாரத்திற்குத் தலைமை வகிக்கிறது. அது தனது மக்கள் தொகையை ஸ்திர நிலைக்கு கொண்டு வந்துள்ளது. நிலக்கரியில் இயங்கும் மின் நிலையங்கள் கட்டுவதைத் தடைசெய்துள்ளது. மீண்டும் உபயோகிக்க முடியாத டின்களில் பானங்கள் விற்பதைத் தடை செய்துள்ளது. தனது மின் தேவையில் 15 சதவீதத்தைக் காற்றாலைகளின் மூலம் பெறுகின்றது. மேலும் தனது நகரங்களின் போக்குவரத்து அமைப்பினை மறுவடிவமைத்துள்ளது. இப்போது கோபன் ஹேகன் நகரில் 32 சதவிகிதப் போக்குவரத்து மிதிவண்டிகளின் மூலமாகவே நடைபெறுகின்றது. டென்மார்க் இன்றும் கரியமிலவாயு வெளியேற்றத்தை சமன் செய்துவிடும் நிலையை நெருங்கிவிடவில்லை. ஆனால் அது அந்த திசையிலேயே சென்று கொண்டிருக்கிறது.

வேறு சிலநாடுகளும் சில குறிப்பிட்ட குறிக்கோள்களை அடைந்துள்ளன. தென் கொரியாவில்



படிப்பகம்

www.padippakam.com



காடுகள் உருவாக்கும் திட்டம் ஒரு தலைமுறைக்கு முன்னால் துவக்கப்பட்டு, அந்நாட்டின் குன்றுகளையும், மலைகளையும், இன்று மரங்கள் போர்த்தியுள்ளன. கோஸ்டாரிகா, 2025 ஆம் ஆண்டுக்குள் புதுப்பிக்கத் தக்க சக்தியை முழுமையாகப் பயன்படுத்தத் திட்டமிட்டிருக்கிறது. ஐஸ்லாந்து, ஷெல் மற்றும் டெய்மளர்க்ரைஸ்லர் ஆகியோரின் தலைமையில் கூட்டு நிறுவனங்களோடு சேர்ந்து உலகின் முதல் நீரக வாயு-சக்தி சார்ந்த பொருளாதாரமாக மாறத்திட்டமிட்டுள்ளது.

எனவே சூழலியல் - பொருளாதாரத்தில் சிறு சிறு பகுதிகள் உருவாவதை நம்மால் காணமுடிகிறது. ஆனால் ஒழுங்கமைந்த மாற்றத்திற்கு சந்தை நிலைகளில் அடிப்படை மாற்றம் தேவை. அதாவது அந்நிலைகள் நிரந்தரமான சுற்றுச் சூழல் பராமரிப்புக் கோட்பாடுகளை மதிக்கக் கூடியனவாக இருத்தல் வேண்டும்.

கரியமில வாயு வெளியாதல், நீரை வீணாக்குதல் போன்ற சுற்றுச் சூழல் அழிவதற்குக் காரணமான செயல்களிலிருந்து விலகிச் செல்லாமல் சூழலியல் - பொருளாதாரத்தைக் கட்டியமைப்பதில் நம்மால் வெற்றிபெற இயலாது.

இயற்கைச் சமநிலையை மீட்பது என்பது ஒரு பெரிய முயற்சியாகும். கரியை அடிப்படையாய்க் கொண்ட எரிசக்தியிலிருந்து, நீரக வாயுவை அடிப்படையாகக் கொண்டதாய் பொருளாதாரம் மாற வேண்டும். உலகின் பெரிதும் முன்னேற்றம் அடைந்துள்ள எண்ணெய் நிறுவனங்களான பிரிட்டிஷ் பெட்ரோலியம், மற்றும் இராயல் டச் ஷெல் ஆகிய நிறுவனங்கள் நீரகவாயு / சூரிய ஒளி சக்தி ஆகியவற்றை அடிப்படையாய்க் கொண்ட பொருளாதாரத்தினை அமைப்பதைக் குறித்துப் பெரிய அளவில் பேசிக் கொண்டிருக்கின்றன. ஆனால் அவைகள் இன்றும் எண்ணெயிலேயே அதிக அளவு முதலீடு செய்து, தட்ப - வெப்ப நிலைக்கு கேடு விளைவிக்காத மூலப் பொருட்களுக்கு மிகச் சிறிய அளவே முதலீடு செய்கின்றன.

புதிய மண் உருவாக்கத்திற்கு ஏற்ப மண் அரிப்பை குறைக்க விவசாய முறைகளில் சில மாற்றங்கள் தேவை. சில இடங்களில் இதற்காக அதிக பட்சமாக உழாமல் குறைந்த பட்சமாக உழுதல் வேண்டும். அல்லது உழவே கூடாது. விவசாயம் சார்ந்த காடு வளர்ப்பு சூழலியல் - பொருளாதாரத்தில் பெரும் பங்கு வகிக்கிறது.

பூமியில் மழை பொழிவதற்கும், வெள்ளத்தினைத் தடுக்கவும் உதவும் காடுகளை மீண்டும் உருவாக்குவது என்பதே மிகவும் பெரிய பணியாகும். அதாவது மரங்கள் வெட்டப்பட்ட வருடங்களை மாற்றி, நிலங்களில் காடுகளை உருவாக்குவது. இச்செயலைச் செய்ய இலட்சக்கணக்கான, கோடிக் கணக்கான மரங்களை நடவேண்டும்.

ஒரு சூழலியல் - பொருளாதாரத்தைக் கட்டியமைக்கும் போது நமது வாழ்வின் அனைத்து அம்சங்களிலும் பாதிப்புகள் இருக்கும். அது நமது வீட்டில் விளக்கு எரியச் செய்யும் முறையை மாற்றும், நாம் உண்பது, வாழ்வது, பொழுது போக்குவது, நமது குழந்தைகளின் எண்ணிக்கை ஆகியவற்றை மாற்றும், இயற்கையிடமிருந்து பேதப்பட்டவர்களாக அல்லாமல் இயற்கையின் ஒரு அங்கமாக நாம் விளங்கும் ஒரு உலகினை அது தரும்.

**தமிழில்: வாசீசன்**

-நன்றி Hindu.

## தீர்க்க தரிசனம்

சமூக வளர்ச்சியின் நீண்ட காலகட்டங்களைப் பார்க்கும்போது தொழிற்சங்க இயக்கம் தனது சக்தியை வெற்றிகரமாக வெளிப்படுத்தும் நேரம் என்பதற்கு மாறாகச் சிரமங்கள் அதிகரித்து வரும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்னும் உண்மையைக் காணாமல் நம் கண்களை மூடிக் கொள்ள இயலாது. தொழில் வளர்ச்சி உச்ச கட்டத்தை அடைந்து முதலாளித்துவ வளர்ச்சி நிலைப்படும்போது தொழிற்சங்கப் போராட்டம் என்பது இருமடங்கு சிரமமானதாகி விடும். முதற்கண் உழைப்புச் சக்தியை விற்பதற்கான புறச்சந்தை குறைந்துவிடும். ஏனெனில் உழைப்புச் சக்திக்கான தேவை மிகக் குறைவாக வளரும். தற்போதுள்ளதைக் காட்டிலும் உழைப்புச் சக்தி மிக வேகமாக வளர்ந்திருக்கும். இரண்டாவதாக உலகச் சந்தையில் தனது நட்டங்களை ஈடு செய்ய, மூலதனம், உற்பத்திப் பொருளில் உழைப்பாளர்களுக்குச் சேர வேண்டிய பங்கை மென்மேலும் ஆக்கிரமிக்கும். இலாபத்தின் வீழ்ச்சியை ஈடுசெய்ய கூலியைக் குறைப்பது மிக முக்கியமான முறைகளில் ஒன்றல்லவா.

ரோசா லுக்சம்பர்க்



படிப்பகம்

www.padippakam.com



# புதிய தொழில் நுட்பங்களும் மனித வளமும்

(2001-ம் ஆண்டுக்கான மனித வள அறிக்கை பற்றிய ஒரு விமர்சனம்)

டி.கே. ஓமன்

2001-ம் ஆண்டுக்கான மனிதவள அறிக்கை சரியான தொனியிலேயே துவங்குகிறது. தெற்கையும், வடக்கையும், ஏழையையும் - பணக்காரனையும் பிரிக்கிற காட்டு மிராண்டித்தனமான ஏற்றத் தாழ்வை அது சுட்டிக்காட்டுகிறது. ஏற்றத்தாழ்வு எப்போதும் இருந்துள்ளது, தொடர்ந்து அதிகரித்தும் வருகிறது. 1820-ம் ஆண்டில் மிகப்பெரிய பணக்காரனுக்கும் கடை மட்ட ஏழைக்கும் இடையே வருமான வேறுபாடு 3 : 1 என்ற விகிதாச்சாரத்தில் இருந்தது. 1950-ல் அஃது 35:1 எனவும் 1972ல் அஃது 72 :1 எனவும் உயர்ந்தது. காலனி ஆதிக்கக் காலம் பனிப்போர்க் காலம் மற்றும் உலகமயக் காலத்திலிருந்தும் நான் ஆண்டுகளைத் தேர்வு செய்துள்ளேன். முதற்கால கட்டத்தில் வேறு பாட்டுக்கான காரணம், காலனி ஆதிக்க சக்திகளால் காலனிக்குட்பட்டோர் சுரண்டப்பட்டதே எனக் கருதப்பட்டது. இரண்டாவது கால கட்டத்தில், சோஷலிச நாடுகளிலும் மக்கள் நல அரசுகளிலும் விநியோக நீதியே பெரிதும் கவலைக்குரிய விஷயமாக இருந்தது. ஆனால் இப்போது நாடுகளிடையேயான ஏற்றத் தாழ்வு, ஆட்சிமுறையின் செயல்பாடாகவே பார்க்கப் படுகிறது. நல்ல ஆட்சி வளர்ச்சியை நோக்கியும் மோச மான ஆட்சி வீழ்ச்சியை நோக்கியும் இட்டுச் செல் கின்றன. ஒரு நாட்டிற்குள் தனிநபர்களிடையே அல்லது குழுக்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வு அமைப்பு ரீதியான குறைபாடுகளின் விளைவாக அல்லாமல் தனிநபர்களின் திறமையின்மையின் விளைவாகவே கருதப்படுகிறது. அதாவது ஏற்றத் தாழ்வை நியாயப்படுத்துகிற போக்குக் காணப்படுகிறது. இப்போக்கு மிகவும் அபாயகரமானதாகும். எவ்வாறா யினும், 2001-ம் ஆண்டுக்கான மனிதவள அறிக்கை யின் மிக ஆபத்தான குறைபாடு என்னவெனில், புதிய தொழில்நுட்பக் கருவிகளின் மூலமாகவே மனித மேம்பாட்டைக் கொண்டுவந்து விடலாம் என அது நம்புவதே ஆகும். நான் இவ்விஷயம் பற்றியே முக்கியமாகக் கவனம் செலுத்த விரும்புகிறேன். ஆனால் அதற்கு முன்னர் ஏழைகளின் நிலை பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன்.

வளர்ச்சி வேகம் அதிகரித்துள்ளபோதிலும் மனித இனத்தின் அடிப்படைத் தேவைகள் கவனிக்கப்படா மலே உள்ளன. இரண்டாயிரமாவது ஆண்டில் 800 மில்லியன் மக்கள் அதாவது உலக ஜனத் தொகையில் 13 சதவீதம் மக்களின் உணவுக்கு உத்தரவாதமில்லாத நிலையே இருந்தது. வளரும் நாடுகளில் வாழும் 4.6 மில்லியன் மக்களில் 850 மில்லியன் மக்கள் கல்வியறிவற்றோராய் இருந்தனர். ஒரு மில்லியன் மக்களுக்கு சுத்தமான தண்ணீர் கிடைக்காத நிலை. 2.4 பில்லியன் மக்களுக்கு சுகதார வசதிகள் இல்லை. மின்சாரமும் அத்தியாவசிய மருந்துகளும் உலக மக்கள் தொகையின் மூன்றில் ஒரு பங்கு மக்களை இன்னமும் சென்றடையவில்லை.

வளர்ந்த நாடுகளுக்குக் கூட இம் முரண்பாடு களில் பங்குண்டு. DECD நாடுகளில் சுமார் 8 மில்லி யன் மக்கள் சத்துக்குறைபாடுகள் உடையோராய் உள்ளனர். ஐக்கிய அமெரிக்க நாடுகளில் 40 சதவீதம் மக்கள் மருத்துவ இன்சூரன்ஸ் இல்லாதோராகவும் 20 சதவீதம் வயதுவந்தோர் செயலளவில் கல்வியறிவற் றோராய் உள்ளனர்.

மனதைத் துயருறச்செய்யும் ஏற்றத்தாழ்வு பற்றிய விவரங்களைக் கூறி முடிக்குமுன் கீழ்கண்டவற்றைக் குறித்துக் கொள்ளவேண்டும்.

1. உலக மக்கள் தொகையில் ஒரு சதவீதமே உள்ள பணக்காரர்கள் 57 சதவீத ஏழைமக்களின் வருமானத்தைப் பெறுகின்றனர்.
2. அமெரிக்க மக்கள் தொகையில் (சுமார் 27 மில்லியன் மக்கள்) 10 சதவீதம் அடங்கிய பணக் காரர்கள் உலக மக்கள் தொகையில் ஏழைகளாய் உள்ள 43 சதவீதம் மக்களைக் காட்டிலும் அதிக வருமானம் பெறுகின்றனர்.
3. உலக வருமானத்தில் 75 சதவீதத்தை சுமார் 25 சதவீத மக்கள் பெறுகின்றனர்.

இந்தப் பின்னணியில் தான் மனித வளர்ச்சிக்குப் புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படு கின்றன.



படிப்பகம்

www.padippakam.com



உலக வரலாற்றில் பெரும்பான்மையான முன்னேறிய தொழில் நுட்பங்கள் - புதிய தொழில் நுட்பங்கள் என்றும் சொல்லலாம் அல்லவா - எப்போதும் போர் அல்லது இராணுவத் தொழில் நுட்பமாகவே இருந்துள்ளன. வளர்ச்சிக்கான ஒரு கருவியாகத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டுமெனில் போர்த்தொழில்நுட்பத்தை விடுத்து அமைதித் தொழில்நுட்பத்திற்கு முக்கியத்துவம் தரப்படவேண்டும். மனிதவள அறிக்கை 2001-ல் (HDR 2001) இத்தகு ஆலோசனை ஏதும் காணப்படவில்லை. 1998-ஆம் ஆண்டில் உலகம் முழுவதும் மருத்துவ மற்றும் உடல் நல ஆய்வுகளுக்கு 70 மில்லியன் அமெரிக்க டாலர்கள் செலவிடப்பட்டதாக அவ்வறிக்கை கூறுகிறது. அதே ஆண்டில் உள்நாட்டுக் கிளர்ச்சி களாலோ அண்டை நாடுகளுடன் போராலோ சற்றும் பாதிக்கப்படாத 290-ECD நாடுகள் பாதுகாப்பு (போர்) ஆராய்ச்சிகளுக்கென 51 மில்லியன் அமெரிக்க டாலர்கள் முதலீடு செய்துள்ளன. இதில் வியப்பூட்டும் உண்மை என்னவெனில் இந்நாடுகளில் தயாராகும் ஆயுதங்கள் பெரும்பான்மையும் தகராறுகள் நிறைந்த ஏழைநாடுகளுக்கு விற்கப்படுகின்றன என்பதுதான். இந்த வக்கிரம் நிற்காதவரை நாம் மனித வளர்ச்சி குறித்துப் பேசமுடியுமா?

தொழில்நுட்பம் நம்மைக் காப்பதாகவும் வளர்ச் சிக்கான கருவியாகவும் இருக்கவேண்டுமெனில் நாம் நமது முன்னுரிமைகளைச் சரியாக நிர்ணயித்துக் கொள்ளவேண்டும். அஃது தேவை அடிப்படையி லானதாகவும், ஏழைகளுக்கானதாகவும் இருக்க வேண்டும். 1998ல் OECD நாடுகள் ஆய்வு மற்றும் வளர்ச்சிக்கு 520 பில்லியன் அமெரிக்க டாலர்கள் செல விட்டன. இத்தொகை உலகிலுள்ள 30 ஏழை நாடு களின் ஒட்டு மொத்த பொருளாதார உற்பத்தியைக் காட்டிலும் அதிகமானதாகும். ஆய்வுக்கென OECD நாடுகள் செய்த இந்த பெரும் முதலீட்டை நாம் பாராட்டும் அதே நேரத்தில் யாருடைய நன்மைக்காக எந்த இனங் களில் அவை செலவிடுகின்றன என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும். 1975க்கும் 1997க்கும் இடையில் விற்பனைக்கு உருவாக்கப்பட்ட 1223 புதிய மருந்து களில் 13 மட்டுமே வெப்பப் பிரதேச நோய்களுக்காக உருவாக்கப்பட்டன. 1995ல் 95,000க்கும் மேற்பட்ட சிகிச்சை சார்ந்த ஆய்வறிக்கைகள் வெளியிடப்பட்டன ஆனால் அவற்றுள் வெறும் 182 மட்டுமே வெப்பப் பிரதேச நோய்கள் பற்றியவை. இந்த வேறுபாடு ஏன்? சந்தைத் தேவைக்கு (லாபத்திற்கு) ஏற்பவே ஆய்வுக் கான முதலீடு செய்யப்பட்டது, ஏழை மக்களின் தேவை களுக்காக அல்ல.

விஞ்ஞான ஆய்வுக்கான முதலீட்டில் 60 சதவீதம் தனியார் துறையாலேயே செய்யப்பட்டது என்பதை அந்த அறிக்கை ஒப்புக் கொள்கிறது. அதாவது பெரும் பங்கு நிதி, அறிவாற்றல் மற்றும் ஆய்வுப் பணியாளர் சந்தைத் தேவைக் கேற்பவே இருந்தது. இந்தச் சந்தைத் தேவை, உரிமைப் பதிவு, ஏகபோக உருவாக்கம் ஆகியவற்றைக் கொண்டு வந்தது, அவை விலைகளை வானளவு உயர்த்தின. 2000-ம் ஆண்டு டிசம்பரில் எய்ட்ஸ் நோய்க்குப் பயன்படுத்தப்பட்ட மருந்துகள் உலக அளவில் ஒரு நோயாளிக்கு ஆண்டொன்றுக்கு 10000 முதல் 12000 அமெரிக்க டாலர்கள் வரை விலை நிர்ணயம் செய்யப்பட்டன. ஒரு சராசரி கென்ய குடி மகனுக்கு இஃது அவனது மொத்த ஆண்டு வருமா னத்தைப் போல் இரு மடங்காகும். ஒரு ஜாம்பிய குடிமகனுக்கு அவனது ஆண்டு வருமானத்தின் மூன்று மடங்குத் தொகையாகும். மனித வளர்ச்சிக்கு தொழில் நுட்பம் ஒரு கருவியெனில் அது கிடைக்கக் கூடியதாக இருக்கவேண்டும். தயாரிக்கப்படும் ஒரு பொருள் எல்லா நேரங்களிலும் உலக அளவில் விற்கப்படுவ தில்லை. அதவாது அது நெருங்க முடிந்ததாக இருக்க வேண்டும். அதுமட்டுமல்ல தொழில் நுட்பம் என்பது எல்லோரும் வாங்கக்கூடியதாக இருக்கவேண்டும், அதாவது அது நியாயமான விலையில் விற்கப்பட வேண்டும்.

மிகவும் உயர்ந்த தொழில் நுட்பமாகக் கருதப் படும் இணைய தளத்தை (இண்டர்நெட்) எடுத்துக் கொள்வோம். ஐக்கிய அமெரிக்காவில் அதைப் பயன் படுத்தும் ஒருவருக்கு ஆகும் செலவு அவரது மாத வருமானத்தில் 1.2 சதவீதம் ஆகும். அதுவே வங்க தேசக் குடிமகனுக்கு அவரது வருமானத்தில் 191 சதவீத மாகவும், நேபாலில் 278 சதவீதமாகவும், மடகாஸ் கரில் வசிக்கும் ஒருவருக்கு தள்ளாடச் செய்யும் அளவுக்கு 614 சதவீதமாகவும் உள்ளது. புதிய தொழில் நுட்பம் மனித வளர்ச்சிக்கான ஒரு கருவி என்று நாம் நேர்மையுடன் கூறமுடியுமா?

விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆய்வில் விஞ்ஞானப் பணியாளர் (விஞ்ஞானிகள்) மிகவும் முக்கியமாகும். பனிபோர்க் காலத்தில் தேசிய உணர்வால் உந்தப்பட்டு வளர்ச்சிகுறைந்த நாடுகளி லிருந்து வளர்ந்த நாடுகளுக்கு விஞ்ஞானிகள் குடி பெயர்வதற்கு 'மூளைவடிகால்' (Braindrain) எனப் பெயரிடப்பட்டது. ஆனால் உலகமயமாதல் துவங்கிய பின் அப்பெயர் மாறிவிட்டது. இப்போது நாம் கூறுவது ''மூளைப் பரவலாக்கல்'' (Brain diaspora) என்பதாகும். 2001-ம் ஆண்டுக்கான மனிதவள அறிக்கை இச்சொல்லையே பயன்படுத்துகிறது.

ஏழைநாடுகளிலிருக்கும் உயர்தகுதி வாய்ந்த விஞ்ஞானிகளும் தொழில் நுட்ப நிபுணர்களும் பணக்கார நாடுகளின் அரசாங்கங்களாலும், நிறுவனங் களாலும் தட்டிச் செல்லப்படுகின்றனர். இந்த இடப்



படிப்பகம்

www.padippakam.com



பெயர்ச்சியால் ஏற்றத்தாழ்வு வளர்கிறது. உதாரணமாக அடுத்த சில ஆண்டுகளில் ஆண்டு தோறும் 1 லட்சம் இந்தியர்கட்கு அமெரிக்க விசா வழங்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதனால் இந்தியாவிற்கு ஏற்படும் ஆரம்ப நஷ்டம் இரண்டு பில்லியன் டாலர்கள் ஆகும். ஆளெடுக்கும் அமெரிக்க நிறுவனங்கள் வெளியேற்றக் கட்டணம் செலுத்த வேண்டுமென அறிக்கை பரிந்துரைக்கிறது. ஆனால் இந்தியாவிற்கு ஏற்படும் இழப்பிற்கு இது ஈடாகாது. ஆனால் இத்தகைய உயர்நிலை தொழில் நிபுணர்கள் கூட காலப்போக்கில் துயருறுகின்றனர். அவர்கள் தேவைப்படும்போது வரவேற்கப்படுகின்றனர். தேவை முடிந்த பின் வெகு வேகமாகக் கைவிடப்படுகின்றனர். அதாவது இந்த உலகக் குடிமகன்களை இழிவுபடுத்துவது விதியாகிவிடுகிறது. அவர்கள் கடைசியாக வேலைக்கு எடுக்கப்படுகின்றனர் முதலில் வெளியேற்றப்படுகின்றனர்.


இன்னும் ஒரேயொரு கருத்தோடு நான் முடித்துக் கொள்கிறேன். மனித இனம் தொடர்ந்து ஆபத்துக்களை எதிர்கொள்ள நேருகிறது. உண்மையில் அளவுக்கதிகமாக தொழில் நுட்பமயமாக்குவது ஆபத்தான சமூகத்தை உருவாக்குகிறது. அணுவெடிப்பின் மீது DDT தெளிப்பது இதில் பங்களித்துள்ளது. எனினும் நாம் புதிய நவீன உயர் தொழில்நுட்பங்களைக் கைவிட முடியவில்லை. ஆனால் உலகில் சில பழங்கால பாரம்பரிய தொழில்நுட்பங்களைத் தொடருவது அவசியமாகிறது. சில இடைநிலை / நடுத்தரத் தொழில் நுட்பங்களை வளர்க்க வேண்டியுள்ளது. சில விஷயங்களில் உயர்நிலை / நவீனத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தவேண்டியதும் அவசியமே. எல்லாத் தொழில்நுட்பங்களுமே ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையோடு தொடர்புடையவையும் பொருத்தமானவையுமாகும். அதாவது தற்போதுள்ள எல்லாத் தொழில்நுட்பங்களையும் நவீனத் தொழில் நுட்பத்தால் மாற்றிவிடாமல் தொழில்நுட்பப் பன்முகத் தன்மையே நடைமுறைத் தீர்வாக அமையும். ஒற்றைப் பண்பாட்டைப் போலவே ஒற்றைத் தொழில்நுட்பமும் ஆபத்தானதாகும். இருப்பினும் அதையே அறிக்கை முன்வைப்பதாகத் தெரிகிறது.

புதிய தொழில்நுட்பங்கள் ஏற்றத்தாழ்வை ஆழப்படுத்தி, வளர்த்து, பலப்படுத்தவும் செய்கின்றன என்று நான் வாதிட்டுள்ளேன். எந்த அளவுக்கு இந்தத் தொழில் நுட்பங்கள் சந்தை வாய்ப்புக்களைப் பிரதிபலித்து லாபநோக்கால் உந்தப்படுகின்றனவோ, அந்த அளவுக்கு அவை மனித வளர்ச்சிக்கான கருவிகளாக இருக்கஇயலாது. அதுமட்டுமல்ல, புதிய தொழில் நுட்பங்கள் உள்நாட்டில் தோன்றிவளர்ந்த பாரம்பரிய இடைநிலைத் தொழில் நுட்பங்களை மாற்றிவிடுகின்றன. இதனால் வளரும் நாடுகள் வளர்ந்த நாடுகளைச் சார்ந்திருக்கும் நோய் வளர்கிறது. புதிய தொழில்நுட்பம் மிகத் திறமைவாய்ந்த தொழில் நிபுணர்களைக் குறிப்பிட்ட தொழில்நுட்ப மையங்களுக்கு அவர்கள் தேவைப்படும் போது கவர்ந்து சென்றுவிடும் தன்மையுடையது. எனினும் அவர்கள் அக்குறிப்பிட்ட தொழில்மைய நாடுகளின் குடிமக்களாக இல்லையெனில் இழிவு படுத்தப் படுகின்றனர். இவையெல்லாம் மனித வளர்ச்சிக்கான கருவியாகப் புதிய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்த வேண்டுமெனக் கட்டியங்கூறவில்லை.

*(புதுடில்லியில் பேராசிரியர் ஓமன் அவர்கள், 'மனித வளர்ச்சி அறிக்கை 2001- மனித வளர்ச்சிக்குப் புதிய தொழில்நுட்பங்களைப் பணியாற்றச் செய்தல்' என்ற குழு விவாதத்தின்போது முன்வைத்த கருத்துக்களின் அடிப்படையில இக்கட்டுரை வெளியிடப் படுகிறது)*

- *ஆதாரம்:* 'The Radical Humanist' Vol 65 No.9, December 2001.

*தமிழில் : மு. குமரேசன்.*



**இன்றைய மாற்று**

**என்பது**

**ஜனநாயகமா, சர்வாதிகாரமா என்பதல்ல.**

**மாறாக**

**முதலாளித்துவ ஜனநாயகமா,**

**சோசலிச ஜனநாயகமா என்பதுதான்.**

*ரோசா லுக்சம்பர்க்*



படிப்பகம்

www.padippakam.com

# வன்முறையை வளர்க்கும் அமெரிக்க டாலர்கள்

ராபர்ட் ஜென்சன்

**நா**ன் ஒரு பாலஸ்தீனியனைக் கொல்வதற்கு உதவினேன். அமெரிக்க அரசுக்கு வரி அளித்தீர்களானால் நீங்களும் இதையே செய்தவராவீர். அமெரிக்க அரசின் கொள்கைகளில் மாற்றம் வரும் வரை நாளையும் மாறுதல் ஏதும் இருக்காது.

பாலஸ்தீனத்தில் நடைபெறும் தொடர் வன்முறைகளைக் கண்டிப்பது அமெரிக்கர்களுக்கு எளிதானதே. ஆனால் இவ்வன்முறையில் நமக்குள்ள பங்கினை நாம் ஒப்புக் கொள்ளும் வரை பாலஸ்தீனத்திலும் மத்திய கிழக்குப் பகுதியிலும் அமைதிக்கான சாத்தியக்கூறுகள் மிகக் குறைவாகும்.

நமது முதற்படி, இப்போரில் அமெரிக்கா ''அமைதிக்கான ஒரு நடுநிலையான தரகர்'' என்னும் நம்பிக்கையைக் கைவிடுவதேயாகும். செப்டம்பர் 1999 இல் நடந்த ஷாம் - அல் - ஷேக் அமைதி ஒப்பந்தத்திற்குப் பின்பு அமெரிக்க அரசு இஸ்ரேலுக்கு 3.6 பில்லியன் டாலர் மதிப்புள்ள ஆயுதங்களை விற்றிருக்கிறது. நடு நிலையாக இருக்கும் ஒரு நாட்டிற்கு இது உகந்த கொள்கை அல்ல.

ஆகவே, இஸ்ரேல் டாங்குகள் மேற்குக் கரையோரப்பகுதி மற்றும் அகதிகளின் கூடாரம் ஆகியவற்றைத் தாக்கும் செய்தியைக் கேட்கும்போது, அந்த டாங்குகள் அமெரிக்காவில் செய்யப்பட்டு அமெரிக்காவின் உதவியோடு இஸ்ரேலால் வாங்கப்பட்டது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். திடீர் தாக்குதலுக்கு இஸ்ரேல் பயன்படுத்தும் ஜெட் விமானங்கள், ஹெலிகாப்டர்கள், எல்லாம் அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்பட்ட F16, பிளாக்ஹாக் மற்றும் அபாச்சீஸ் ஆகியவையே. மேலும் (நமது வரிப் பணத்தைக் கொண்டு அமெரிக்காவில் செய்யப்பட்ட) இயந்திரத்துப்பாக்கிகள், எரிகுண்டு வீசும் கருவிகள், ஏவுகணைகள், வெடிகுண்டுகள் ஆகியவை பாலஸ்தீன மக்களை அழிப்பதற்குப் பயன் படுத்தப்படுகின்றன.

இப்போது நாம் இரண்டு உண்மைகளை எதிர் கொள்ளவேண்டியுள்ளது. முதலாவதாக, தற்போது மேற்குக் கரைப் பகுதியின் இஸ்ரேலால் நடத்தப்படும் தாக்குதல் தீவிரவாதத்திற்கு எதிராக நடத்தப்படுவது அல்ல. மாறாக பாலஸ்தீனத்தையும் அதன் வளங்களையும் அடைவதற்காகப் பாலஸ்தீன மக்கள் மீது நீண்ட நாட்களாக நடத்தப்பட்டு வரும் காட்டு மிராண்டித்தனமான போரின் ஒரு பகுதியேயாகும்.

இஸ்ரேல் தீவிரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதில் தீவிரமாக இருக்கிறது என்றால், அது மேற்குக் கரைப்பகுதி மற்றும் காசாவில் உள்ள தன்னுடைய 35 ஆண்டு முறைகேடான ஆக்கிரமிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்கும். அவ்வாறு தனது விருப்பத்தினைச் செயலில் காட்டாதவரை அமைதிக்கான இஸ்ரேலின் குரல் வெற்றுக் கூச்சலாகவே இருக்கும். மேலும் படை பலத்தின் மூலம் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் அதன் முயற்சி அதற்குப் பாதகமாகவே முடியும்.

இரண்டாவது: பாலஸ்தீனத்துக்கு எதிரான இஸ்ரேலின் போர்,அமெரிக்காவின் இராணுவ உதவி, மற்றும் பண உதவி இல்லாமல் சாத்தியமில்லை. ஒரு வருடத்திற்கு 3 பில்லியன் டாலர்கள் இஸ்ரேலுக்கு நேரடி உதவியாக கிடைக்கிறது. உலகம் முழுவதுமே இஸ்ரேலின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக இருக்கும் போது, அமெரிக்க அரசு, இஸ்ரேல் பன்னாட்டுச் சட்டத்தை மீறுவதற்கு ஏதுவான அரசியல் நெறிமுறைகளையும் பாதுகாப்பையும் கொடுக்கிறது. இஸ்ரேலின் குறிப்பிட்டச் சில கொள்கைகள் எப்போதாவது அமெரிக்கத் தலைவர்களால் சிறிது விமர்சிக்கப்படுகின்றன. சமீப நாட்களில் படைகளைத் திரும்பப் பெறுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை இஸ்ரேல் ஏற்காததால் விமர்சனங்கள் அதிகரித்துள்ளன. ஆனால் இஸ்ரேலினால் அமெரிக்க உதவியோடு உலகளாவிய கருத்தினை நிராகரிக்க முடியும் (இஸ்ரேலின் ஆக்கிரமிப்பை நிறுத்தக்கோரும் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் முடிவையும் சேர்த்து)

லிகுத் கட்சி மற்றும் ஷாரோன் அரசின் அளவுக்கு அதிகமான வன்முறையிலிருந்து அமெரிக்க அதிகாரிகள் தற்போது தம்மை விலக்கிக் கொண்டு விட்டனர். ஆனால் தொழிற்கட்சி ஆட்சியில் இருந்திருந்தால் எல்லாம் நன்மையாகவே நடந்திருக்கும் என்று நினைப்பது முட்டாள்தனமாகும். இஸ்ரேலின் இரண்டு முக்கியக் கட்சிகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளில் கருத்து வேறுபாட்டினை விட செயற்பாணியிலேயே அதிக வேறுபாடுகள் உள்ளன. ஆக்கிரமிக்கப்பட்டப் பகுதிகளில் உள்ள குடியேற்றங்களைப்



படிப்பகம்

www.padippakam.com



பற்றிய பிரச்சினையினை எடுத்துக் கொள்ளுங்கள். இஸ்ரேல் அவசியமாகவே அமைதியை வேண்டு கிறது என்று மீண்டும் மீண்டும் தெரிவிக்கப்படுகிறது. அது உண்மையானால் பத்து ஆண்டுகளுக்கு முன் துவங்கிய ஒஸ்லோ அமைதி நடவடிக்கைக்குப் பின் மேற்குக் கரைப்பகுதி மற்றும் காசாவில் உள்ள இஸ்ரேலிய குடியிருப்புகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காகியிருப்பது ஏன்? அமைதியான தீர்வுக்கு அக் குடியிருப்புகளே மிகப்பெரிய தடை என்ற நிலையில், அமைதி நடவடிக்கை நடந்து கொண்டிருக்கும்போது இஸ்ரேலிய அரசுகள் (தொழிற்கட்சி மற்றும் லிகுத் கட்சி அரசுகள்) தாங்கள் முறை கேடாக ஆக்கிரமித் துள்ள பகுதிகளில் தங்கள் குடியிருப்புகளை விஸ்தரிப்பது ஏன்?

பன்னாட்டுச் சட்டத்திற்குரிய மதிப்பு கொடுக் கும், ஒரு பன்னாட்டு அமைப்பின் கீழ் மத்திய கிழக்குப் பகுதியிலேயே நடக்கும், அமைதிப் பேச்சு வார்த்தையே, மத்திய கிழக்கில் போருக்கு இறுதித் தீர்வாகும். உலகம் முழுவதும் அதிவேகமாக வளர்ந்து வரும் ஆயுத பெருக்கத்தைக் குறைப்பதற்கு அதன் ஒரு கட்டமாக, ஒவ்வொரு பகுதியிலும் ஆயுதங்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் (ஆயுதங் களின் முன்னணி விற்பனையாளர் அமெரிக்காவே) ஆயுத விற்பனையைக் குறைக்கும் முயற்சிகளைத் தடுக்காமல் இருப்பதே அமெரிக்கா இதற்களிக்கும் மிகப்பெரிய பங்காகும்.

இஸ்ரேலுக்குத், தான் கொடுக்கும் உதவியைப் பயன்படுத்தித் தற்போதுள்ள நெருக்கடியைப் போக்க அமெரிக்கா உதவ வேண்டும். தெளிவான முடிவு ஒன்றினை அறிவிக்க அமெரிக்க அரசுக்கு, மக்கள் நெருக்கடி கொடுக்கவேண்டும். தனது காட்டு மிராண்டித் தனமான தாக்குதலை நிறுத்துவதோடல் லாமல் தனது ஆக்கிரமிப்புகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க இஸ்ரேல் அர்த்தமுள்ள முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு ஒத்துக் கொள்ளாத வரை இஸ்ரேலுக்குக் கொடுக்கும் ஆதரவை (உதவியை) அமெரிக்கா நிறுத்திக் கொள்ளவேண்டும்.

இதை நாம் செய்யத்தவறினால், பாலஸ்தீனிய நகர் ஒன்றினுள் பாயும் அடுத்த ஏவுகணையிலும், பாலஸ்தீனிய வீடு ஒன்றினுள் வீசப்படும் அடுத்த வெடி குண்டிலும், ஒரு அப்பாவி பாலஸ்தீனியனை வீழ்த்தும் துப்பாக்கித் தோட்டாவிலும் அமெரிக்கர் களின் பங்கு இருக்கிறது என்பதை நம்மால் மறுக்கமுடியாது.

தமிழில் : வாசீசன்

*நன்றி :'Hindu', 21-04-2002*

## சர்வபள்ளி கோபால், 1923 – 2002

## பெரும் வரலாற்றறிஞரின் மறைவுக்கு அஞ்சலி

டாக்டர் எஸ். கோபால் அவர்கள் ஏப்ரல் 19 ஆம் நாள் மருத்துவமனையில் காலமானார்.

அவர் முன்னாள் இந்திய ஜனாதிபதியும், தத்துவ அறிஞருமான டாக்டர் எஸ்.இராதாகிருஷ்ணன் அவர்களின் மகனாவார். அவர் தன் வாழ்நாள் வரை சுதந்திரமானவராகவும், தேசப்பற்றுள்ள வராகவும் வாழ்ந்தவர். ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகத்தில் 'தெற்காசிய வரலாற்றை'ப் போதிப் பவராகப் பணியாற்றி இந்தியா திரும்பிய பின் ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். ''இவர் வருகையால் 'வரலாற்று ஆய்வுமய்யம்' மிகச் சிறப்பாக வளர்ச்சியடைந்தது. அவர் ரொமிலா தாபர், பிபன் சந்திரா ஆகிய வரலாற்று அறிஞர் களுடன் இணைந்து வரலாறு கற்பித்தலிலும், ஆய்வு முறையிலும் ஒரு புதிய பார்வையை உருவாக்கினார். அவர், கிறிஸ்டோபர் ஹில், எரிக் ஹாப்ஸ்வாம் போன்ற மிகச் சிறந்த வரலாற்று அறிஞர்களுடன் நட்பு கொண்டிருந்தார்''.

அவரது ஆரம்பகால வரலாற்று ஆய்வுகள் 'காலனி ஆதிக்க வரலாறு' பற்றியது. இத்துறை யில் அவரது ஆய்வுகள் மிகச்சிறப்புடையதாகத் திகழ்கிறது. அவர் நேருவின் வாழ்க்கை வரலாற்றையும், அவரது தந்தையின் வாழ்க்கை வரலாற்றையும் எழுதியுள்ளார். ஆக்ஸ்போர்டு வெளியிட்ட 'நேருவின் தேர்ந்தெடுக்கப்பட்டப் படைப்புகளின்' பதிப்பாசிரியராக இருந்திருக் கிறார். ''இந்திராகாந்தியின் அவசர கால நடவடிக் கையை எதிர்த்தவர். அதை அறிவுச் சுதந்திரத் திற்கு எதிரானதாகக் கருதினார்''. அவர் அவரது தந்தையைப் பற்றி எழுதிய வாழ்க்கை வரலாற்று நூலை, சிறந்த நூலாகக் கருதுகிறார் வரலாற்ற றிஞர் கே.என்.பணிக்கர்.



படிப்பகம்

www.padippakam.com

# கட்டுரையாளர்கள் பற்றிய குறிப்புகள்

**1. தியோடோர் ஷானின்**

இவர் மான்செஸ்டர் பல்கலைக் கழகத்தில் சமூகவியல் பேராசிரியராகப் பணிபுரிந்தவர். Late Marx and Russian Road, The Awkward Class, Peasants and Peasant Societies, The Rules of the Game, Medals in Scholarly Thought ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

**2. இர்ஃபான் அபிப்**

மார்க்சிய வரலாற்று அறிஞர். அலிகார் பல்கலைக் கழகத்தில் சிறப்பு வரலாற்றுத்துறைப் பேராசிரியராக இருக்கிறார். இவர் Agrarian system of Mughal India 1556-1707, An Atlas of the Mughal Empire, Essays in Indian History ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

**3. டாம் மெய் சனெல்டர்**

இவர் கலிபோர்னியா அரசு பல்கலைக் கழகத்தில் சமூகவியல்துறைப் பேராசிரியராகப் பணி புரிகிறார்.

**4. சமிர் அமின்**

எகிப்தியரான இவர் தொடர்ந்து Poitiers, Dakar, Vincennes ஆகிய பல்கலைக் கழகங்களில் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார். Third World Forum அமைப்பின் இயக்குனராக இருந்து வருகிறார். இவர், The Law of Value and Historical Materialism, The Arab Nation, Future of Maoism, Capitalism in the Age of Globalisation ஆகிய நூல்களை எழுதியுள்ளார்.

**5. திபங்கர் குப்தா**

இவர் ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் சமூகவியல்துறைப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். Context of Ethnicity, Political Sociology in India, Interrogating caste, Mistaken Maoism ஆகிய நூல்களை எழுதியுள்ளனர்.

**6. எரிக் ப்ராம்**

இருபதாம் நூற்றாண்டின் மிகச் சிறந்த மனிதநேய வாதியாகவும், உளவியல் அறிஞராகவும், சமூக தத்துவக் கோட்பாட்டாளராகவும் விளங்கியவர். மார்க்சின் எழுத்துகள் மீது மிகுந்த அக்கறை கொண்டவர். மார்க்சையும், பிராய்டையும், இணைத்துப் புதிய சமூக கோட்பாட்டை உருவாக்கியவருமான இவர் ஜெர்மனியில் பிறந்தவர். இவர் பின்னாளில் மெக்சிகோவில் உள்ள தேசிய பல்கலைக்கழகம், அமெரிக்காவில் உள்ள பென்னிங்டன் கல்லூரி, யேல் பல்கலைக்கழகம், மிச்சிகன் அரசுப் பல்கலைக்கழகம், நியூயார்க் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் உளவியல் பகுப்பாய்வு (Psycho- analysis) துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். மார்ச் 1980 ஆம் ஆண்டு மரணமடைந்தார். Fear of the freedom, The sane Society, The Art of Loving, The Revolution of Hope, Man for Himself, Beyond the chains of lullusion போன்ற பல நூல்களை எழுதியவர்.

**7. எர்னஸ்ட் மேண்டல்**

இவர் Free University of Brussels (Flemish Section) இல் அரசியல் - அறிவியல் துறைப் பேராசிரியராகப் பணிபுரிகிறார். Marxist Economic Theory, Late Capitalism, Revolutionary Marxism Today ஆகிய நூல்களை எழுதியவர்.

**8. பார்பரா டெய்லர்**

இவர் Eve and the New Jerusalem: Socialism and Feminism in the Nineteenth Century என்னும் நூலை எழுதியவர்.

**9. கோபால் குரு**

இவர் பூனா பல்கலைக்கழகத்தில் அரசியல் மற்றும் பொது நிர்வாகம் ஆகிய துறைகளில் பேராசிரியராகப் பணிபுரிகிறார்.

**10. ஃபெங்லென் வங்**

இவர் சீனாவில் வெளிவரும் ''உலக இலக்கியம்'' என்னும் இதழின் ஆசிரியர். விமர்சகராக, மொழிபெயர்ப்பாளராகப் பலதுறைகளில் இயங்குகிறார். Institute of Foreign Literature of the Chinese Academy of Social Sciences இல் விரிவுரையாளராக பணியாற்றுகிறார்.

**11. நித்தியானந் ஜெயராமன்**

இவர் சுயேச்சையான பத்திரிக்கையாளர். சுற்றுப்புறச் சூழலில் நிகழும் குற்றங்களைக் குறித்து ஆய்வு செய்து வெளியிடுபவர்.

**12. லெஸர் ஆர் பிரௌன்**

இவர் வாஷிங்டனில் உள்ள Earth Policy Insitute இன் தலைவராக இருக்கிறார். Eco - Economy : Building an Economy for the Earth என்னும் நூலை எழுதியுள்ளார். இந்த நூலிலிருந்து எடுக்கப் பட்டப் பகுதிதான் இங்கு மொழிபெயர்த்து வெளியிடப்பட்டுள்ளது.

**13. டி.கே.ஓமன்**

இவர் ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தில் சமூகவியல் துறைப் பேராசிரியராகப் பணிபுகிறார். Alien concepts and south Asian Reality: Responses and Reformulations, Citizenship and National Identity: From Colonialism to Globalism, ஆகிய நூல்களை எழுதியுள்ளனார்.

**14. ராபர்ட் ஜென்சன்**

டெக்ஸாஸ் பல்கலைக் கழகத்தின் இதழியல் (ஜர்னலிசம்) பேராசிரியர்.



படிப்பகம்

www.padippakam.com

## விழுதுகள் பதிப்பகத்தின் வெளியீடுகள்

1. ரோசா லுக்சம்பர்க் (வாழ்க்கை வரலாறு) — 30.00
   – ராயன்

2. இன்றும், என்றும் (கவிதை) — 35.00
   – பழமலய்

3. 150 ஆண்டுகளுக்குப்பிறகு கம்யூனிஸ்டு அறிக்கை — 12.00
   தமிழில் : நா. தர்மராஜன். எம்.ஏ.

4. பாண்டவபுரம் (மலையாள நாவல்) — 65.00
   – சேது
   தமிழில் : குறிஞ்சிவேலன்

5. மார்க்சிய சமூகவியலின் வளர்ச்சியும் — (அச்சில்)
   இன்றைய பிரச்சினைகளும்
   – டாம் . பாட்டமோர்
   தமிழில் : சிங்கராயர்

6. புரட்சிக்குள் புரட்சி? — (அச்சில்)
   –ரெஜி டெப்ரே
   தமிழில் : சிங்கராயர்

7. உலகமயமாக்கலும், பெண் தொழிலாளர்நிலையும், — (வ.இ)
   தமிழில்: பூவுலகின் நண்பர்கள்

8. பண்டைய இந்திய மருத்துவம் — (வ.இ)
   P. குடும்பய்யா
   தமிழில்: ஜார்ஜினா பீட்டர்


9. குலக்குறியும், விலக்கும் — (வ.இ)
   –சிக்மண்ட் ஃப்ராய்டு
   தமிழில் : கோபிகிருஷ்ணன்

வ.இ. வர இருக்கிறது

தொடர்புக்கு
விழுதுகள் பதிப்பகம்
18, திருநகர் முதல் தெரு,
திருவொற்றியூர்,
சென்னை – 600 019.

படிப்பகம்

…pakam.com




படிப்பகம்